


# மூச்சு

மலரன்னை

# மூச்சு

மலரன்னை

**மூச்சு**
(சிறுகதைத்தொகுதி)
மலரன்னை
முதற்பதிப்பு: 2023 புரட்டாதி
© மலரன்னை
அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன்
வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய்
பக்கம்: 154
விலை: 750.00
அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

**Moochu**
(Collection of stories)
Malaranai
First Edition: 2023 September
©Malaranai
Cover Designed by K.Bharaneetharan
Published by Jeevanathy, Kalai aham, Alvai
Pages: 154
Price: 750.00
Printed at Baranee Printers, Nelliady.

ISBN:

**ஜீவநதி வெளியீடு - 290**

# உள்ளே...

1. ஒளி தரும் கரங்கள்
2. மாற்று மோதிரம்
3. தானம்
4. பழியாரது
5. பவிசு
6. நெறி
7. கூர்முள்
8. நிரையும் நிராசையும்
9. பிரதி மார்க்கம்
10. அமங்கலி
11. விழல் வேட்கை
12. மூச்சு
13. பச்சைக்கொடி
14. படிக்கற்கள்
15. முளைவிடும் உணர்வுகள்
16. பக்கங்கள் இரண்டு
17. இலைமறைகாய்
18. நிமிர்வு
19. பயன்தரு மாமரங்கள்
20. சுய நிர்ணயம்
21. கோடரிக் காம்பு

# என்னுரை

*வாசக நேயர்களுக்கு வணக்கம்*

*"மூச்சு" எனும் தலைப்பினாலான எனது எட்டாவது சிறுகதைத் தொகுதி மூலம் உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்வடைகிறேன். ஐம்பதிலும் எண்பதிலும் என்னால் புனைவுருவாக்கம் செய்யப்பட்ட சிறுகதைகள் இதில் அடங்கியிருப்பது தான் இந்தத் தொகுதிக்குரிய சிறப்பம்சமாகும். இற்றை வரைக்கும் நான் எழுதிய இருநூற்றிப் பதினைந்துக்கும் மேற்பட்ட சிறுகதைகளில் நூற்றியறுபத்தைந்து சிறுகதைகள் எனது எட்டு சிறுகதைத் தொகுதிகள் மூலம் ஆவணப்படுத்தப்பட்டு இருப்பது மனநிறைவைத் தருகிறது. சுமார் ஐம்பது வரையிலானவை ஆவணப்படுத்த முடியாதவாறு அழிந்து போய்விட்டமை மனவருத்தத்துக் குரிய விடயம். எது எப்படியிருப்பினும் எதிர்வரும் காலத்தில் என் உடல் நலம் பாதிப்புக்குள்ளாகாமல் இருக்குமேயானால் மற்றுமொரு தொகுதி மூலம் நேயர்களாகிய உங்களைச் சந்திப்பேன் என்பது திண்ணம்*

*தொடர்ந்தும் நான் எழுத வேண்டும் என்ற உந்துதலை எனக்கு ஏற்படுத்தி வரும் என் பிரிய மைந்தர்கள் இருவர் என்னைத் தட்டிக் கொடுத்து ஊக்குவித்து வருகின்றமையை இங்கு நான் குறிப்பிட்டேயாக வேண்டும். எனது எழுத்துப் பதிவுகளுக்கு பின்னணியாக விளங்கும் மைந்தர்களான சுஜந்தனுக்கும் பரணீதரனுக்கும் எனது மனமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஊக்குவிப்பது அவர்களது இலக்கிய வேட்கை. ஆக்கங்களை உருவமைப்பது எனது கடமை.*

*"மூச்சு" எனும் இச்சிறுகதைத் தொகுதியில் அடங்கியுள்ள சிறுகதை களைப் பிரசுரித்த சஞ்சிகைகளுக்கும், அவற்றுள் சிலவற்றை மீள் பிரசுரம் செய்த பத்திரிகைகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.*

*மேலும் இத்தொகுதியை அழகுற அச்சமைத்து, அட்டைப் படத்தினையும் வடிவமைத்த மைந்தன் பரணீதரன் என்றும் என் இதயத்தில் நன்றியறிதலுடன் கூடிய பாராட்டுக்குரியவர்.*

*எழுதுவது என் மூச்சான கடமை. விமர்சிக்க வேண்டியது வாசகர்களே! அது உங்களது உரிமை*

*நன்றி*

அற்புதராணி காசிலிங்கம்
(மலரன்னை)

# ஒளி தரும் கரங்கள்

*மாசி மாதத்து ஒரு காலைப் பொழுது. மூசிப் பெய்த மாசி மாதத்திற்கே உரிய பனி, பகலவனின் கதகதப்பான கதிர்களால் உறிஞ்சப் பட, பூமியைச் சூழ்ந்திருந்த குளிர்ப் போர்வை களையப்பட்டு, இதமான வெப்பத்தின் தழுவல் மானிட உடல்களுக்கு இதமளித்தது.*

*“மில்லர்” என்ற அடைமொழி மூலம் அவ்வூர் மக்களால் அழைக்கப்பட்டு வரும் கனக சபாபதி, முற்றத்து மாவின் கீழ் போட்டிருந்த சாய் மனையில் சரிந்திருந்து இளவெயிலில் குளித்துக் கொண்டிருந்தார். இதமான கதகதப்புடன் கூடிய வெப்பம் அவரது மேனியைத் தழுவியதால் கிடைத்த சுகத்தில் அவர் மெய்மறந்திருந்த வேளை, வெளியே வந்து எட்டிப்பார்த்த மனைவி சாந்தாவின் குரல் அவரை உலுப்பியது.*

*“என்னப்பா உந்த பனி வெய்யிலுக்கை இருந்து கொண்டு என்ன செய்யிறியள். மணி எட்டரையாகப் போகுது. சாப்பிட வேணும் என்ற எண்ணம் கூட இல்லையே?”*

*“ம்!...” என்றொரு பெருமூச்சை வெளிப் படுத்தியவர் சலிப்புடன் சொன்னார்.*

*“நாற்பது வருசமாய் மில்லோட பொழு தைக் கழிச்சநான். ஓடியாடி எத்தனை வேலை யளைச் செய்திருப்பன். இப்ப... இஞ்சை ஊரோட வந்து சும்மா இருக்கிறதெண்டா... எனக்கு*

பைத்தியமே பிடிச்சிடும் போல இருக்கு”

“இதென்னப்பா உங்கட கதை. உங்களுக்கு வயதும் எழுபதாகீட்டுது. பத்தாததுக்கு சலரோகம் வேற. இன்னும் உங் களால உழைக்க ஏலுமே. பேசாம வீட்டில இருந்து ஓய்வெடுங்கோ என்று சொல்லித்தானே தம்பி மில்லைப் பொறுப்பெடுத்துக் கொண்டு உங்களை இஞ்சை விட்டவன். இப்பதான் எங்களுக்கும் ஊரோட இருக்கிற பாக்கியம் கிட்டியிருக்கு”

“நல்லாய்ச் சொன்னீர். உமக்கென்ன ஊரெல்லாம் சொந்தம் பந்தமென்று நாளுக்கு ஒரு வீடாய்ப்போய் பொழுதைப் போக்குறீர். நான் என்ன செய்யிறது. பேப்பரைத் தன்னும் வாசிப்பமெண்டால் எழுத்துத் தெரியுதில்ல. கண்ணை மறைக்குது.”

கணவனின் ஆதங்கத்தைப் புரிந்துகொண்டவளாய் சாந்தா கூறினாள்.

“மெய்யேப்பா. இந்த முறை கோபி வரேக்க உங்கட கண்ணை ஒருக்கா கொண்டு போய்க் காட்டுவமே?”

கனகசபாதிக்கும் மனைவியின் கூற்று சரியென்றே தோன்றியது.

அடுத்து வந்த வார இறுதி நாட்களில் அவர்களது மகன் கோபி வந்தபோது, தவறாமல் தந்தையை அழைத்துப் போய் “கனகா கண் மருத்துவமனை”யில் காட்டினான். அவருக்கு இரண்டு கண்களிலும் “கற்றார்க்ற்” உருவாகி இருப்பதால்த் தான் பார்வையை மறைக்கிறது என்றும் அதற்கு பரிகாரம் சத்திர சிகிச்சை தான் என்றும் பரிசோதனையின் பின் அறிய முடிந்தது. சத்திர சிகிச்சை என்றவுடன் முதலில் பயம் ஏற்பட்ட போதிலும் அங்கு கடமையில் இருந்த டாக்டரும் மற்றும் தாதிமாரும் அவருக்குத் தெளிவூட்டிய பின் அவர் சம்மதிக்க வேண்டியதாயிற்று. இருந்தாலும் மனப்பயம் முற்றாக நீங்கவில்லை.

ஒருவாறு சத்திர சிகிச்சைக்கென நிர்ணயித்த நாளும் வந்தது. கனகசபாபதியாருக்கோ சத்திரசிகிச்சையின் போது கண் எப்படி யெல்லாம் வலிக்கப் போகிறதோ என்ற எண்ணத்தைத் தவிர, சிந்தனை வேறெதிலும் லயிக்க மறுத்து விட்டது. அன்று சத்திர சிகிச்சைக் குட்படுத்தப் போகிறவர்களை எல்லாம் தயார்ப்படுத்தி அங்கு போடப்பட்டிருந்த வாங்குகளில் அமர வைத்தனர். கடமை யில் இருந்த தாதியரும், உதவியாளர்களும். படபடக்கும்

*இதயத்துடன் அமர்ந்திருந்த கனகசபாபதியர் மற்றைய நோயாளர்களை ஒருதரம் ஏறிட்டுப் பார்த்தார். அவர்களது முகங்களிலும் கலக்கமும் பீதியும் இருப்பதை அவதானிக்க முடிந்தது. மனதை திடப்படுத்திக் கொண்டு காத்திருப்பதைத் தவிர வேறு வழி இருப்பதாக அவருக்குத் தோன்றவில்லை.*

*திடீரென அவரது பெயர் அழைக்கப்பட்டது. அவர் இருந்த இடத்தில் இருந்தவாறே "நான் தான்" என குரல் கொடுத்தார். அவரது கையில் ஒரு பையையும், கண்ணுக்குள் மாற்றப்போகும் லென்ஸ்ஸையும் கொண்டு வந்து கொடுத்தாள், ஒரு தாதி.*

*"ஐயா! இதைக் கவனமாய் கையில வைச்சிருங்கோ. ஒப்ப ரேசனுக்கு கூப்பிடுவனம். அப்ப கையில கொண்டு போக வேணும்"*

*அவருக்கு வாயில் வார்த்தைகள் வரவில்லை. தயக்கத்துடன் தலையை மட்டும் ஆட்டினார்.*

*தாதிக்கு அவரது நிலமை புரிந்திருக்க வேண்டும். அவரை ஆறுதல்படுத்தும் வார்த்தைகளைக் கூறினாள்.*

*"ஐயா பயப்பிடுறீங்கள் போல இருக்கு. அது ஒரு பிரச்சினையு மில்லை. ஒரு ஐஞ்சு நிமிசத்தில செய்து விட்டிடுவினம். இஞ்சை பாருங்கோ. அந்த அம்மா செய்து கொண்டு வந்திட்டா."*

*கனகசபாபதி, தாதி காட்டிய பெண்ணை திரும்பிப் பார்த்தார். என்ன அதிசயம். கண்ணை மூடிக்கட்டுப் போட்டிருக்கவில்லை. சாதாரணமாக அந்தப்பெண் அமர்ந்திருந்தார். அவரது மனதிலும் தென்பு பிறந்தது. எனினும் அவரது முறை வந்து அவரை சத்திர சிகிச்சைக் கூடத்திற்கு அழைத்துப் போனபோது, அவரது மனம் அவர் வசம் இல்லை. இறை நாமங்கள் அங்கு வரிசையாக வந்து போயின.*

*ஒருவாறு அவர் சத்திரசிகிச்சைக்கான பிரத்தியேக கட்டிலில் ஏறிப்படுத்துக் கொண்டார். கண்ணை மட்டும் புற நீங்கலாக விட்டு மேனியைப் போர்த்தி விட்டார்கள்.*

*"ஐயா! இங்க லைட்டைப் பாருங்கோ"*

*கண் அவர்களது கட்டளைக்கு கீழ்ப்பணிய அவரது சிந்தையில் அவரது குலதெய்வமாகிய நாகபூசணி அம்பாள் நிறைந்திருந்தாள்.*

*என்ன ஆச்சரியம். சிறிது நேரத்தில் போர்வை விலக்கப் பட்டது.*

“ஐயா! எழும்பி வாங்கோ”

உதவியாள் அவரை அழைத்து வந்து மீண்டும் அதே வாங்கில் இருத்தினான். கனகசபாபதியாரின் பார்வையில் ஒரு மாற்றம். திடீரென எங்கும் வெளிச்சம் பரவியிருப்பது போன்றதோர் உணர்வு. முன்னர் மங்கலாகத் தெரிந்த பொருட்களெல்லாம் பிரகாசமாகவும் துல்லியமாகவும் கண்ணுக்குத் தெரிந்தன.

“பூ... இவ்வளவுதானா. இதுக்குத்தானா நான் பயந்து தொலைத்தேன்”

மனம் எண்ணிக் கொண்டது.

சத்திர சிகிச்சை முடிந்து வந்திருந்தவர்களுக்கு தாதிமார் சில அறிவுறுத்தல்களைக் கூறி வைத்தனர். கனகசபாபதி அவற்றை அவ தானத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார். திடீரென அங்கு ஒரு பரபரப்பு.

“ஒப்பிரேசன் முடிஞ்சு பெரியையா வாறார்”

கனகசபாபதி சத்திரசிகிச்சைக் கூடத்திலிருந்து வெளியே வந்து கொண்டிருந்த டாக்டரை ஒரு கணம் ஏறிட்டுப் பார்த்தார். அவருடன் கூட இரண்டு உதவியாளர்களும் வந்து கொண்டிருந்தனர். வந்த டாக்டர் கனகசபாபதியரை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தவர். சட்டென கேட்டார்.

“ஐயா! உங்கட பேரென்ன?”

அவர் வாய்திறக்க முன் அருகில் நின்றிருந்த தாதி சொன்னாள்.

“கனகசபாபதி”

பெயரைக் கேட்டதும் டாக்டரின் முகத்தில் ஒரு மாற்றம்.

“மாங்குளத்தில் மில் வைச்சிருந்தது நீங்கள் தானே?”

அதிர்ச்சியுற்றவராய் கனகசபாபதி வாய் திறந்தார்.

“ஓம் ஐயா. ஏன் கேக்கிறியள்?”

“உங்களுக்கு றமணன் என்ற பெடியனை ஞாபகம் இருக்குதோ. உங்கட மில்லிலை வேலை செய்தவன்.”

கனகசபாபதி சிந்திக்கத் தொடங்கினார்.

“வடிவாய் யோசிச்சுப் பாருங்கோ”

சொல்லிக் கொண்டே படிகளில் இறங்கத் தொடங்கிய

*வரைப் பின் தொடர்ந்து அவருடைய உதவியாளர்களும் அந்த மாடிக் கட்டடத்தின் கீழ்ப் பகுதியை நோக்கிப் போய் விட்டனர். கனக சபாபதியின் சிந்தனை மட்டும் சுமார் முப்பது வருடங்களை நோக்கிப் பின்னேறத் தொடங்கியது.*

*ஒரு மழைப் பொழுதின் மாலை நேரம். கனகசபாபதி தனது மில்லின் முன் புறத்து மேசையின் முன்னால் அமர்ந்திருந்து அன்றைய கணக்கு வழக்குகளில் மூழ்கியிருந்தவேளை. பெண்குரலொன்று அவரது கவனத்தைத்திருப்ப நிமிர்ந்து பார்த்தார்.*

*கையில் ஒரு குழந்தையுடன் கலைந்த தலையும் இழிந்த கோலமுமாக ஒரு பெண் நின்றிருந்தாள்.*

*“ஐயா! உங்களைக் கடவுளாய் நம்பித்தான் நான் வந்திருக் கிறன். இல்லை எண்டு மட்டும் சொல்லிப் போடாதையுங்கோ”*

*பீடிகையுடன் வந்த அவளது வார்த்தைகளைக் கேட்டதும், ஒரு கணம் திகைத்தவராய் அவளைப் பற்றி விசாரிக்கத் தொடங்கினார்.*

*அவர்கள் மன்னகுளத்தில் யாரோ ஒரு செல்வந்தருடைய காணியில் கொட்டில் போட்டு வசித்து வருகிறார்களாம். மேசன் வேலை செய்து வந்த அவளுடைய கணவன் வேலைத்தளத்தில் சாரமரத்தில் இருந்து தவறி விழுந்தவன் மண்டையில் அடிபட்டு சிலகாலம் வைத்தியசாலையில் கிடந்து இறந்து போய்விட்டானாம். நிரந்தர குடிகாரரான அவன், அவர்களுக்கென்று எந்தத் தேட்டத்தை யும் தேடி வைத்துவிட்டுப் போகவில்லை. அந்தப் பெண் மூன்று மாத கைக்குழந்தையுடனும் பன்னிரண்டு வயது பையனுடனும் ஒரு வேளை உணவிற்கே வழியின்றி அல்லாடுகிறாளாம்.*

*அவளது சோகக்கதை கனகசபாபதிக்கு மனதில் உறுத்தலை ஏற்படுத்தியது.*

*“பிள்ளை! இப்ப உனக்கு என்ன செய்ய வேணுமெண்டு கேக்கிறாய்?”*

*நேராக விடயத்திற்கு வந்தவரிடம் அவள் மண்டியிட்டாள்.*

*“ஐயா! பெரியமனசு பண்ணி என்ரை பெடியனுக்கு உங்கட மில்லில ஒரு வேலை குடுக்க வேணும்”*

*“என்னென விசர்க்கதை கதைக்கிறாய்? பன்னிரண்டு வயசுப் பெடிக்கு மில்லில நான் என்ன வேலையைப் போட்டுக் குடுக்கிறது?”*

*“ஐயா! அவன் தன்னால ஆன வேலையைச் செய்வான்.*

அதுக்கேற்ற மாதிரி கொஞ்சமோ, நஞ்சமோ சம்பளத்தைப் போட்டுக் குடுத்தியளெண்டால் காணும் நாங்கள் ஒருவேளை கஞ்சியாவது குடிப்பம். அந்தப் புண்ணியம் உங்களுக்குக் கிடைக்கும்."

அவளுடைய மனச்சங்கடம் அவருக்குப் புரிந்தது. சிறிது நேரம் சிந்தித்தார்.

"சரி. பெடியனைக் கூட்டிக் கொண்டு வா. பாப்பம்"

அவர் பச்சைக் கொடி காட்டியதும், அவள் வாசலை நோக்கி குரல் கொடுத்தாள்.

"ரமணன்! வா அப்பு. ஐயா வரச் சொல்லுறார்."

தயங்கியவாறே அவர் முன் வந்து நின்ற ரமணனைப் பார்த்ததுமே அவருடைய மனதில் அவன் மீது ஒரு பிடிப்பு உண்டா யிற்று. மூக்கும் முழியுமாய் துருதுருவென்றிருந்தான் பையன்.

"தம்பி என்ன வேலை செய்வாய் நீ?"

"ஐயா! நீங்கள் செய்யச் சொல்லுறதைச் செய்வன்"

"ஒரு மூட்டைநெல்லைத் தூக்கச் சொன்னால் தூக்குவியோ நீ"

தயக்கத்துடன் பையன் பதிலளித்தான்.

"என்னால முடிஞ்சதைத் தானே செய்ய முடியும். வேணு மெண்டால் கடகத்துக்குள்ள நெல்லைக் கொட்டிப் போட்டு தூக்கலாம்"

கனகசபாபதிக்கு அவரையறியாமலே சிரிப்பு வந்தது.

"நீ பள்ளிக்குப் போறேல்லையே?"

"போன நான் ஐயா. இப்ப இரண்டு மாசமா அம்மா போக விடாம நிப்பாட்டிப் போட்டா. சாப்பாட்டுக்கடை ஒண்டுக்கு வேலைக்குப் போக, அவை என்னைக் கொண்டு வேலை வாங்கிப் போட்டு சம்பளம் நேர்த்தியாத் தாறதில்ல. அது தான்...."

கனகசபாபதிக்கு எல்லாம் புரிந்து போயிற்று.

"சரி. நாளையிலையிருந்து வேலைக்கு வா பாப்பம்."

பையனின் முகம் மலர்ந்ததைப் பார்த்தும் கனகசபாபதிக்கு உள்ளம் குளிர்ந்தது.

மறுநாள் ரமணன் வேலைக்கு வந்தான். அவனிடம் அவர் கேட்ட முதல் கேள்வி.

“சாப்பிட்ட நீயே?”

“இல்லை ஐயா. தேத்தண்ணி குடிச்சநான்.”

தயக்கத்துடன் வந்தது பதில் முதற்காரியமாக அவர் அவனை அருகிலுள்ள தேநீர்க் கடைக்கு அழைத்துப்போய் உணவு வாங்கிக் கொடுத்து விட்டுத்தான் மறு வேலையாக அவனை கூட்டித் துடைக்கும் வேலை செய்வதற்கு அனுமதித்தார். அவனுடைய உடற்தகுதிக்கு ஏற்றவாறு அவனுக்கு வேலை கொடுத்தார். கணக்கு வழக்குகளில் அவனுக்கிருக்கும் புத்திக்கூர்மையை அவதானித்தவர் மனதில் ஒரு உறுத்தல் ஏற்பட்டது. தனது மகன் கோபிக்கு படிப்பே வரவில்லை. ஓ.எல் கூட அவனால் சித்தியடைய முடியவில்லை. இவனை படிக்க அனுப்பினால் என்ன என்று யோசித்தார். சிந்தனையின் விளைவு...

மறுநாளே றமணனையும் அழைத்துப்போய் அவன்படித்த பாடசாலையிலேயே தொடர்ந்தும் படிப்பதற்கு ஒழுங்கு செய்து விட்டு வந்தார். காலையில் பாடசாலை மாலையில் வேலை என றமணனின் பொழுது போனது. வார இறுதி நாட்களில் முழுநேர வேலை. தினமும் சம்பளமாக நூறு ரூபாயை வேலை முடிந்து போகும் போது கொடுத்து விடுவார்.

ஏழாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த றமணன் ஓ.எல் வகுப்பு வரை முன்னேறி பரீட்சையும் எழுதி விட்டான். பெறு பேறுகளும் வந்தன. எதுவித பிரத்தியேக வகுப்புகளுக்கும் போகாமல் அவன் எல்லாப் பாடங்களிலும் “C” திறமைச் சித்தி பெற்றிருந்தான். கனகசபாபதிக்கு திருப்தியுடன் கூடிய மகிழ்ச்சி.

அந்தச் சமயத்தில் றமணனின் தாய்க்கு ஒரு வீட்டைப் பராமரிக்கும் வேலை யாழ்ப்பாணத்தில் கிடைத்தது. நல்ல சம்பளம் அத்துடன் தங்குமிட வசதி வேறு. றமணன் கனகசபாபதியின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றதுடன் பிரியாவிடையும் பெற்றுக் கொண்டான்.

“றமணன்! எந்தச் சந்தர்ப்பத்திலையும் நீ படிப்பை விட்டிடாத. படிச்சு ஒரு பெரிய ஆளாய் வர வேணும். வருவாய் எண்ட நம்பிக்கை எனக்கு இருக்கு”

கண் கலங்க விடையளித்தார், அவர்.

காலம் புரண்டது. நாட்டில் போர்ச்சூழல் ஏற்பட்டதால் சுமுக நிலைகள் புரட்டிப் போட்டன. கனகசபாபதியர் மட்டும்

அதற்கு விதிவிலக்காக... என்ன... அவருடைய மில்லை முள்ளிய வளைக்கு நகர்த்த வேண்டியதாயிற்று. வாழ்க்கையிலும் என் னென்னவோ மாற்றங்கள். காலப் போக்கில் அவரது நினைவுகளில் இருந்து றமணன் அற்றுப்போய் விட்டான். அது தான் உண்மை.

“அப்பா!”

மகன் கோபியின் குரல் அவரது சிந்தனையைக் குழப்ப, திடுக்கிட்டவராய் அவர் நிமிர்ந்து பார்த்தார். கையில் மருந்துடன் கோபி நின்றிருந்தான்.

“கண்ணுக்கு விடுற மருந்து எடுத்தாச்சு. வாங்கோ போவம்”

கீழே இறங்கி வந்தவர்களை வாசலில் வைத்து இடை மறித்தாள், ஒரு தாதி.

“பெரிய ஐயா உங்களைக் கூப்பிடுறார்”

கனகசபாபதிக்கு ஒன்று விளங்கிவிட்டது. “இவன் எங்கட றமணன் தான்”

அறைக்குள் நுழைந்தவரை தனது இருக்கையிலிருந்து எழுந்து நின்று வரவேற்றார், பெரிய டாக்டர். அவருக்கு முன் இருந்த இருக்கையில் கனகசபாபதியை அமர வைத்தார்.

“ஐயா! என்னுடைய கல்விக்கு வித்திட்டவர் நீங்கள். அதை நான் என்றைக்குமே மறந்ததில்லை. அதற்குப் பரிகாரமாத்தான் உங்களுடைய பெயரை இந்த மருத்துவமனைக்கு வைத்திருக்கிறன்”

கனகசபாபதி மனம் நெகிழ்தவராய் வாயடைத்து நின்றார்.

“தம்பி! உம்மை படிக்கச் சொல்லி நான் வற்புறுத்தினதுக்கு காரணமே உமது புத்திக் கூர்மையை நான் அப்பவே அளவிட்டது தான். இன்றைக்கு எத்தனையோ பேருடைய கண்களுக்கு ஒளி யூட்டுபவராய் செயல்பட்டுக் கொண்டிருக்கிறீர். அதைப் பார்த்ததும் என்னுடைய மனம் சந்தோசத்தில் நிறைஞ்சு போய்க்கிடக்குது.”

சிறிது நேரம் அளவளாவி விட்டு புறப்படுகையில் றமணனது ஒளி தரும் கரங்களை எடுத்து தனது கைகளிரண்டாலும் கண்களில் ஒற்றிக் கொண்டார், கனகசபாபதி.

“வாறன் தம்பி”

அவரது நா தழுதழுத்தது.

# மாற்று மோதிரம்

இத்தனை காலமும் இந்த பூலோகத்தில் கம்பீரமாக பவனி வந்து கொண்டிருந்த ஓய்வு பெற்ற அதிபர் தருமராசாவின் வீடு இன்று தன் பொலிவை இழந்து சோக வெள்ளத்தில் தத்தளித் துக் கொண்டிருந்தது. சுமார் இரண்டரை வருடங் களாக படுக்கையே தஞ்சமெனக் கிடந்த அவரது உயிர் சுமந்த மேனி இன்று வெற்றுடலாகி நடு ஹாலில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

உற்றார் உறவினர் என பலரும் சவப் பேழையை சுற்றி வளைத்து நின்ற போதிலும் மனைவி மரகதத்தின் அழுகுரல் மட்டும் ஓயாமல் கேட்டுக் கொண்டேயிருந்தது.

“ஐயோ! என்னைத் தனிய விட்டிட்டு போயிட்டியளே. இனி நான் எப்பிடி வாழுறது”

அம்மா அப்படிச் சொல்லி புலம்புவது அவள் ஈன்றெடுத்த பிள்ளைகளுக்குப் பிடிக்க வில்லை. அம்மாவின் கூற்றிலுள்ள உண்மையான தார்ப்பரியத்தை புரிந்து கொள்வதற்கு அவர் களுக்கும் அந்த நிலை ஏற்படும் போது தான் காலம் பதில் சொல்லும்.

குடும்பத்தில் மனைவிக்கு பக்கபலமாக இருப்பதுமட்டுமல்ல. அவளது ஒவ்வொரு அசைவுக்கும் பலமாக கரம் கொடுப்பது கணவனுக்கே உரிய நியதியுமாகும். நோயுற்று படுக்கையில் வீழ்ந்த போதிலும் கணவன் அருகில் இருப்பதையே மனப் பலமாகக் கொண்டு மனைவி

*ஆக வேண்டிய கருமங்களை துணிவுடன் கையாளுகிறாள். ஆனால் இன்று கணவனது பிரிவு அவளை கையறு நிலைக்கு தள்ளிவிட்டது. மனச் சோர்வு உடல் நிலையையும் தளர்த்த அவள் சிறிதுநேரம் மெய்மறந்து கிடக்கிறாள்.*

*தாயின் நிலையைக் கண்ணுற்ற மகள் மதுமிதா, ஒரு குவளையில் தண்ணீரை எடுத்துவந்து அம்மாவின் முகத்தில் தெளிக் கிறாள். நீர் முகத்தில் பட்டதும் மரகதத்தின் உறுப்புகள் உணர்வை மீளப்பெற அவள் கண்களைத் திறந்து பார்த்து சூழலை உணர்ந்து கொள்கிறாள்.*

*ஆனால்... இளவயதிலேயே விதவையாகி விட்ட அவளது மகள் மதுமிதாவின் மனத்தில் விரக்தியுடன் கூடிய வேதனை கொப்பளிக்கிறது. முள்ளிவாய்க்காலில் நடந்த கடைசிக்கட்ட போரில் நான் இரண்டு குழந்தைகளுடன் கணவனை இழந்து விதவை யாக வெளியேறி அம்மா அப்பாவிடம் வந்து தஞ்சமடைந்த போது எனக்கு வயது முப்பத்தொன்பது. இன்று எழுபத்தியாறு வயதில் வாழ் விழந்த அம்மாவினால் அப்பாவின் பிரிவை தாங்க முடியவில்லை இதை எப்படித்தான் கணிப்பது... இது வேறுபட்ட வாழ்க்கையின் தத்துவமா? மொத்தத்தில் இவை எல்லாமே இறைவனின் திருவிளை யாடல்கள் என்று தான் என்னால் கருத்தில் கொள்ள முடிகிறது.*

*காதுக்குள் கேட்ட மணியோசை மதுமிதாவை சுயநினைவுக்கு திரும்ப வைக்கிறது. அவளையறியாமலே அவளது கண்கள் சுற்றுப் புறத்தை ஆராய்கின்றன.*

*அவளது தம்பிமார் இருவரும் ஆசார சீலராய் அப்பாவின் வெற்றுடலைச் சுற்றிதீபம் காட்டி வலம் வர, இறுதிக் கிரியைக்கான நடைமுறைகள் அங்கு ஆரம்பமாகின்றன. அங்கு நடந்தேறிக் கொண்டிருந்த சடங்கு சம்பிரதாயங்கள் அனைத்துமே அவளுக்கு புதியவையாகவும், புதினமாகவும் தோன்றுகிறது. அவளும் ஒரு விதவைதான். ஆயினும் அவளது கணவனுடைய வெற்றுடலைக்கூட அவளால் பார்க்க முடியாத நிலை. எதுவித கிரியைகளுமற்று மொய்க்கும் ஈக்களினால் போர்வையிடப்பட்டு, அதுகளுக்கே உணவாகிப் போன பல நூற்றுக்கணக்கான உடல்களில் ஒன்றாகிப் போன கணவனது நினைவு வந்து அவளது உள்ளுணர்வைச் சீண்ட நெஞ்சம் ஒரு தரம் விம்மித் தணிந்தது.*

*ஒருவாறு ஈமக்கிரியைகள் அனைத்தும் முடிவுற்று அம்மா தன் கழுத்தில் அணிந்திருந்த தாலியைக் கழற்றி மீளாத்துயிலில்*

மூழ்கியிருக்கும் அப்பாவின் மார்பு மீது வைத்தவள் வேதனை தாங்காது புலம்புகிறாள்.

"ஐயோ! என்னைத் தனியாகத் தவிக்கவிட்டு போறியளே"

அருகில் வந்து அம்மாவைக் கட்டித் தழுவிய மதுமிதா, அவளது தோளைப் பற்றியவாறு சொல்கிறாள்.

"அம்மா! உங்களுக்கு நானிருக்கிறன் கவலைப்படாதை யுங்கோ"

இருவரது மனநிலையும் அங்கு ஏகோபித்து ஒருங்கிணைந்த போது கண்ணீரென்னும் வெள்ளம் மடைதிறந்து ஊற்றெடுத்துப் பாய்ந்து தானாக வறண்டு ஓய்ந்தபோது அவர்கள் சுயநிலைக்குத் திரும்பினர்.

தருமராசாவின் பூதவுடல் இறுதி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டதுடன் அவர் இந்தப் பூவுலகத்தில் அவதாரம் எடுத்த உருவமும் அழிந்து போய்விட்டது.

மறு நாள்

சுவரில் சாய்ந்தவாறு கால்களை நீட்டி அமர்ந்திருந்தாள், மரகதம். அவளது தலைமயிர் கலைந்து கிடந்தது. கண்களின் வெறித்த பார்வையோ விரக்தியின் விளிம்பில் குறி எதுவுமற்றமோன நிலையில் சஞ்சரித்துக் கொண்டிருந்தது. எத்தனை நேரம் தான் அப்படி மெய்மறந்திருந்தாளோ... "அம்மா!" என்ற அழைப்புக் குரல் அவளது கவனத்தை ஈர்த்தது. அழைத்தது வேறு யாருமல்ல. அவளது மகள் மதுமிதாவே தான்.

என்ன என்பது போல் மகளது முகத்தை பார்வையால் அலசினாள்.

"உங்களுடைய தாலிக் கொடியையும், அப்பாவின்ரை மோதி ரத்தையும் தம்பி கொண்டு வந்து தந்தவன். எங்கை வைக்கிறது?"

ஒருவாறு வாய்திறந்தாள், மரகதம்.

"தாலிக் கொடியை என்னுடைய அலுமாரி லொக்கரில வை. மோதிரத்தை இஞ்சை தா"

கையில் வாங்கிய மோதிரத்தை வைத்த கண் வாங்காது உள்ளங்கையில் வைத்து புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள், மரகதம். அவளது கண்கள் கண்ணீரில் நனைந்திருக்க அவளது பார்வை தெளிவற்றுக் கிடந்தது மூக்கை உறிஞ்சியவாறே சேலைத்

தலைப்பினால் கண்களை ஒற்றிவிட்டு, மீண்டும் மோதிரத்தின் மீது பார்வையைச் செலுத்தினாள். அவளது எண்ணப்பறவை கட்டுக் கடங் காது எங்கேயோ பறந்து பின்நோக்கிச் செல்லத் தொடங்கிவிட்டது.

அன்று மரகதத்துக்கும் தருமராசாவிற்கும் விவாகப்பதிவு நடைபெறுவதாக நிச்சயிக்கப் பட்டிருந்தது. இன்று தான் நடந்தது போல் அந்த நாள் நினைவுகள் இன்னமும் பசுமரத்தாணி போல் மரகதத்தின் நினைவுகளுடன் இரண்டறக் கலந்திருக்க... அவளது இதயத்திலிருந்து பெருமூச்சொன்று வெளியாகி அவளை ஆசுவாசப் படுத்தியது.

அறைக்குள் மரகதத்துக்கு அலங்காரம் நடந்து கொண்டி ருந்தது. அம்மா, ஒவ்வொரு நகையாக எடுத்து அண்ணியிடம் கொடுக்க, அவள் அதை மரகதத்துக்கு அணிவித்துக் கொண்டி ருந்தாள். திடீரென்று அப்பாவின் குரல் கேட்டது.

"மாப்பிள்ளை வந்திட்டார். இன்னும் அலங்காரம் முடியேல்லையே?

அப்பாவின் குரல் கேட்டதும் அம்மா அரக்கப் பரக்க அவர் களை வரவேற்பதற்காக வாசற்புறம் நோக்கி ஓடினாள். அலங்காரப் பொம்மையாக வீற்றிருந்த மரகதத்தின் மனதில் மாப்பிள்ளை எப்பிடியிருப்பாரோ என்ற எண்ணம் தான் ஓடிக் கொண்டிருந்தது. இவர் தான் மாப்பிள்ளை என்று சொல்லி ஒரே ஒரு தரம் மாப் பிள்ளையின் படத்தை அம்மா காட்டியிருந்தாள். அவ்வளவு தான். அதனை உற்றுப் பார்க்க வேண்டும்என்ற ஆவல் மனதில் இருந்தாலும் அவளால் அவரது படத்தை கூர்ந்து பார்க்க கூச்சம் விடவில்லை.

ஒருவாறு அவளை அழைத்து வந்து மாப்பிள்ளைக்கு அருகில் உட்கார வைத்து விட்டார்கள். பட படக்கும் இதயத்துடன் தலை குனிந்தவாறு அமர்ந்திருந்த அவளால் மாப்பிள்ளையை நிமிர்ந்து பார்க்குமளவிற்கு தைரியம் வரவில்லை. விவாகப்பதிவு ஏட்டில் கையொப்பம் வைக்கும் போது ஒருவாறு அவரது கைகளைப் பார்த்து விட்டாள். பார்த்ததுமே மேனி புல்லரித்தது. நடுங்கும் கரங் களால் தானும் கையொப்பமிட்டு விட்டு அமர்ந்து கொண்டாள்.

அடுத்து மோதிரம் மாற்றும் நிகழ்வு. அவளுக்குப் பின்னால் நின்றிருந்த பெண்களின் சீண்டல் வேறு அவளை நிலை குலைய வைத்தது. அவள் நாணத்துடன் கையைநீட்ட, தருமராசா அவளது கையைப் பிடித்து மோதிர விரலில் மெதுவாக மோதிரத்தைப் போட்டு விட... மின்சாரம் உடலில் பாய்ந்தது போன்ற தவிப்பில்

அவள் காற்றில் மிதந்த அந்த வேளை… அந்த உணர்வுகளை வர்ணிக்க வார்த்தையில்லை.

மரகதத்தின் கைகளில் மோதிரம் தரப்பட்டது. நடுங்கும் கைகளை அவள் கட்டுப்படுத்த முடியாமல் தவித்த போது, தருமராசா தனது கைவிரலை நேராக நீட்டி அவள் சிரமமின்றி அதை அணி விப்பதற்கு ஏற்றதாக நடந்து கொண்டார். இதனை அவதானித்த மரகதத்துக்கு துணிவு ஏற்பட மோதிரத்தை விரலில் அணிவித்து விட்டு அவரை ஏறெடுத்துப் பார்த்தாள். அதேசமயம் தனது கடைக்கண் பார்வையால் அவளை விழுங்கிக் கொண்டிருந்த அவரது கண்களை நேரில் சந்தித்த அந்தக் கணம்… உணர்வுகளின் உச்சத்தில் சங்கமமாகிய அந்த முதற்பார்வை… அவர்களது வாழ்வில் ஆணி வேராகப் பதிந்து போயிற்று.

இப்போது மரகதத்தின் கையில் கிடந்த மோதிரம் அவருடன் வாழ்ந்த ஐம்பத்தாறு வருட வாழ்க்கையை ஒரே கணத்தில் இரை மீட்டுத்தந்த போது அவள் அதை எடுத்து இரண்டு கண்களிலும் ஒற்றிக் கொண்டு, தனது சேலைத்தலைப்பில் முடிந்து கொண்டாள்.

தாயின் இச் செய்கை பிள்ளைகள் மூவருக்கும் புரியாத புதிராகத் தோன்றியது. மூத்தவள் மதுமிதா ஒருவேளை அம்மா அந்த மோதிரத்தை தனது மகன் தர்சனுக்குத் தரப் போகிறாளோ என நினைத்தாள். ஏனெனில் தர்சனுக்கு தாத்தாவிடம் ஈடுபாடு அதிகம். அவர் படுக்கையில் இருந்த நாட்களில் தர்சன் அவரிடம் அடிக்கடி போய் அளவளாவுவது மட்டுமல்ல அவருக்கு விருப்பமான தின் பண்டங்களையும் கொண்டு போய்க் கொடுப்பான். அவரும் அவனைப் பெயர் சொல்லி அழைப்பதில்லை. பேரா என்று தான் கூப்பிடுவார். மதுமிதாவின் கற்பனை இப்படியிருக்க…

மரகதத்தின் மூத்த மகன் மகேந்திரனுக்கும் அப்பாவின் மோதிரத்தில் ஒரு ஈடுபாடு இருக்கத்தான் செய்தது. அந்தக் காலத்தில் மோதிரத்தில் M என்ற பெயர் பொறிக்கும் போது நீலநிற வட்டத் துக்குள் அது ஜொலித்துக் கொண்டிருப்பது வித்தியாசமான ஒரு அமைப்பாக இருந்தது. அதுவே அவனுக்கும் அதன் மீது ஒரு ஆசையை ஏற்படுத்தியதுடன் தனது பெயருக்கும் பொருந்தும் வண்ணம் அமைந்திருப்பதும் ஒரு காரணமாகி விட்டது.

எனினும் கடைக்குட்டி சாரங்கனுக்கு இது விடயத்தில் எந்தவித ஈடுபாடும் இருக்கவில்லை.

தருமராசாவின் எட்டுச் செலவு முடிந்த மறுநாள் காலைப்

பொழுதில் வீட்டிற்கு வருகை தந்திருந்த நெருங்கிய உறவினர்கள் உட்பட, பிள்ளைகள் அனைவரும் ஹாலில் கூடியிருந்தனர். அப்போது ஒரு காலை சற்று விண்டி நடந்தவாறு விதுரன் அங்கே வந்தான். போரின் வடுவாக அவனது கால் ஒன்று செயற்கையானது.

"அம்மா! வரச் சொன்னீங்களாமே"

"ஓம் ராசா. நான் தான் வரச் சொல்லி விட்டநான்"

எல்லோரும் ஆற அமர இருந்து அளவளாவினார்கள். திடீரென மரகதம் குரலை உயர்த்தி கதைக்கத் தொடங்கினாள்.

"நான் தம்பி விதுரனை ஏன் வரச் சொன்ன நான் என்று நீங்கள் எல்லோரும் யோசிச்சிருப்பியள். எல்லாம் காரணத்தோட தான். கொப்பர் இரண்டரை வருசமாய் படுக்கையில கிடந்தவர். இந்த இரண்டரை வருசமும் அவரைக் கவனிச்சது தம்பி தான். என்னவோ அவர் செய்த வேலைக்கு நாங்கள் சம்பளத்தைக் குடுத்தம். ஆனால் அவர் அப்பா மீது காட்டிய பரிவுக்கும், தனது கடமை மேல கொண்ட விசுவாசத்துக்கும் நாங்கள் ஈடாகக் கொடுக்கிறதுக்கு எதுவுமேயில்லை. கடைசி மூச்சு வரைக்கும் அவருடன் கூடவே இருந்து கவனிச்ச இந்தத் தம்பிக்குத் தான் அவருடைய கையில போட்டிருந்த இந்த மோதிரம் போய்ச் சேர வேணும் என்று நான் விரும்புறன். என்ன நான் சொல்லுறது சரிதானே?"

மௌனம் அங்கு பதிலானது. மரகதம் தனது இருக்கையை விட்டு எழுந்து போய் விதுரனுடைய கையில் அந்த மோதிரத்தைக் கொடுத்தாள். விக்கித்துப் போய் நின்றவனிடம் மரகத்தின் இளைய மகன் சாரங்கன் வந்து பத்தாயிரம் ரூபாய் பணத்தைத் திணித்தான்.

"பெற்ற பிள்ளைகள் நாங்கள் செய்ய வேண்டிய கடமையை நீர் ஒரு பிள்ளையாக இருந்து அப்பாவுக்கு செய்திருக்கிறீர். நாங்கள் அதை உயிருள்ள வரை மறக்கமாட்டம். உமக்கு ஏதும் உதவி தேவைப் பட்டால் தைரியமாக வந்துகேளும். எங்களால முடிஞ்சதைச் செய்வம்"

கண்கள் பனிக்க நின்றிருந்தான், விதுரன். அவனது கையில் கிடந்த மரகதத்தின் மாற்றுமோதிரம் ஏமாற்றத்தினால் முகம் வாடிப் போய் நின்றிருந்த மகேந்திரனையும் மதுமிதாவையும் பார்த்துச் சிரித்தது. ஆனால்... உரிய இடத்தில் மோதிரத்தை சேர்த்து விட்ட பூரிப்பில் மரகதத்தின் மனம் நிறைந்து கிடந்தது.

# தானம்

*அன்று சித்திரா பௌர்ணமி தினம். அந்தக் கிராமத்து வாழ் மக்களின் குல தெய்வமாகிய அருள்மிகு நாகபூசணி அம்மனுக்கு அன்று தேர்த் திருவிழா. அம்மனின் சன்னிதானத்தை அந்தக் கிராமமே நிறைத்திருக்க, அலங்கார தேவதையாக தேரில் வீற்றிருந்தவாறு நாகபூசணி அம்பாள் தனது பக்தர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருந்தாள்.*

*வீதி வலம் வந்த பின் இருப்பிடத்தில் தரித்து நின்ற தேரில் வைத்து தமது இஷ்ட தெய்வத்திற்கு அர்ச்சனை செய்ய வேண்டுமென்ற உந்துதலில் மக்கள் வெள்ளம் சுட்டெரிக்கும் வெய்யிலையும் பொருட்படுத்தாது நீண்ட வரிசையில் நின்று கொண்டிருந்தனர். அதே சமயம் வழிபாட்டை நிறைவு செய்தவர்கள் சன்னி தானத்தை விட்டு வெளியேற முற்பட்டபோது கணீரென ஒலித்தது அந்தக் குரல்.*

*"பக்தர்களாகிய பெருமக்களே! அருள்மிகு அன்னையின் தரிசனம் கிடைக்கப் பெற்றதனால் உங்களது உளப்பசி தீர்ந்திருக்கும் இவ்வேளையில் வயிற்றுப் பசியையும் போக்கிக் கொள்வதற்காக உணவு தயார்நிலையில் காத்திருக்கிறது. எனவே அடியார்கள் அன்னதான மடத்திற்கு வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்."*

*அன்ன பூரணி அம்மா ஒலி பெருக்கி மூலம் விட்ட அழைப்பினை செவிமடுத்த மக்கள்*

மடத்தினை நோக்கி நகரத்தொடங்கினர். மண்டபத்தினை நிறைத்திருந்த உணவின் வாசனை பசி வயிற்றுடன் வந்த பக்தர்களின் மனத்தை சுண்டி இழுத்தது. மண்டப வாயிலிலேயே நின்று வரவேற்ற அன்னபூரணி அம்மா அனைவரையும் நிரையில் அமருமாறு சைகை மூலம் பணித்தார்.

பக்தர்களுக்கு முன் போடப்பட்ட இலையில் பரிசாரகர்கள் முதலில் கறிவகைகளைப் பரிமாறிய பின் அமுதை வைத்து பருப்பை யும் அதன் மீது போட்டதும் அன்னபூரணி அம்மாவின் குரல் மீண்டும் ஒலித்தது.

"அம்பாளின் அருட்கடாட்சம் பெற்ற அடியார்களே! வயிராறச் சாப்பிடுங்கள்"

அறுசுவையுடன் கூடிய உணவை கைகள் பிசைந்து வாய்க்குள் திணிக்க அவர்களது பசித்த வயிறுகளும் நிறைந்து போயின. அது மட்டுமல்ல நிறைந்த வயிறுகள் மானசீகமாக அன்னபூரணி அம்மாவை வாழ்த்தவும் செய்தன.

ஒரு பந்தி முடிய மறுபந்தி என மூன்று மணிவரை அன்ன தானம் நீண்டுகொண்டே போனது. அன்னபூரணி அம்மா முகத்தில் ஒரு புன்முறுவலுடன் அவற்றை கண்காணித்துக் கொண்டிருந்தாள். திடீரென அவள் எதையோ நினைத்துக் கொண்டவளாய் மடத்துக்கு வெளியே போய் எட்டிப் பார்த்தாள். சிலர் அங்கு "சொப்பிங்" பை களுடன் நின்றிருந்தனர். உடனே சமையல்காரரை அணுகியவள், "தம்பீ! ஒரு பத்துக்கிலோ அரிசி போட்டு விடுங்கோ" என்று சொன்னாள்.

"அம்மா! அரிசி போட்டு அரை வேக்காடு வெந்திட்டுது"

தருணத்திற்கேற்றவாறு செயற்படும் சமையற்காரனின் செய்கை அவளது மனத்துக்கு இதம் தர மற்றுமொரு கேள்விக் கணையை வீசினாள்.

"தம்பீ! கறி சமாளிக்கக் கூடியதாய் இருக்குமா?"

"அம்மா! பருப்பும் உருளைக்கிழங்கும் சமைக்கிறம்."

"நல்லதாய்ப் போச்சுது"

மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.

வெளியே காத்து நின்றவர்களை அழைத்து அவர்களுக்கு வயிறாற உணவு பரிமாறிய பின் அவர்கள் கையில் கொண்டு வந்திருந்த பைகளையும் உணவினால் நிரப்பி அனுப்பி வைத்தபின்

*தான் அவளது மனம் ஒரு ஓய்வு நிலைக்கு வந்தது. சமையல்காரரை அழைத்தாள்.*

*"தம்பி நீங்கள் முதல்ல சாப்பிட்டிட்டு மீதமாயிருக்கிற சோறு கறிகளைக் குழைத்து வெளியில் நிற்கிற நாய்களுக்கு வைத்துவிட்டு பாத்திரங்களைக் கழுவுங்கோ."*

*அங்கு சாப்பிடுபவர்களுக்கு அன்னபூரணி ஒரு கடும் உத்தரவை விடுவது வழக்கம்.*

*"சாப்பிடுபவர்கள் ஒரு சோற்று அவிழையும்கொட்டக் கூடாது" என்பது தான் அது. எனவே அங்கு கூடும் நாய்களுக்கும் எச்சில் இலையில் மீதமான உணவு கிடைப்பதில்லை. குழைத்த சோற்றை நாய்களுக்கு புறம்பு புறம்பாக இலைகள் மீது வைக்கச் சொல்லிவிட்டு அதுகள் சாப்பிடும் வரை காத்திருந்த அன்ன பூரணிக்கு ஒன்றுமட்டும் புரிந்தது. தனக்கு வைத்த உணவை விட்டு விட்டு பிறிதோர் நாயின் இலையில் வாய்வைக்கும் நாயைப் பார்த்து மனம் பேதலித்தது. இறைவனின் படைப்பில் உருவான உயிரினங் களின் குணவியல்பு பேதங்கள் தான் எவ்வளவு விசித்திரமானவை.*

*"அம்மா!"*

*சமையல்காரரின் அழைப்பு அவளது எண்ணவோட்டத்தைச் சிதைத்தது.*

*"என்ன தம்பி! வேலையெல்லாம் முஞ்சுதா? சமையல் பாத்திரம் எல்லாம் கழுவி, கவிட்டு வைச்சிட்டீங்களா?"*

*"அம்மா! எல்லா வேலையும் கரெக்ற்றாய் முடிஞ்சுது. ஆனால் ஒன்று..."*

*தயக்கத்துடன் இழுத்தவனை முகத்தில் கேள்விக் குறியுடன் நிமிர்ந்து பார்த்தாள்.*

*"அம்மா! எத்தனையோ பேருக்கு பசியாற்றிப் போட்டு நீங்கள் மட்டும் ஒன்றும் சாப்பிடேல்லையே."*

*கட கட வென்று சிரித்தாள், அன்னபூரணி. சிரித்துவிட்டு வாய் திறந்தாள்.*

*"தம்பி! இத்தனை பேருக்கும் சாப்பாடு போட்டதில என்ரை மனமும் வயிறும் நிறைஞ்சு போய்க்கிடக்குது. பிறகு ஏன் சாப்பாடு?"*

*தளதளத்த குரலில் கூறியவள், கண்களைத் துடைத்துக் கொண்டாள்.*

அவர்களது கணக்கைப் பார்த்து தீர்த்து விட்டவள், கால் முகம் அலம்பிக்கொண்டு போய் ஆலயத்தின் வெளி மண்டபத்தி லுள்ள தூண் ஒன்றின் மீது சாய்ந்தவாறு அமர்ந்து கொண்டாள். பகல் திருவிழா ஓய்வுற்று இரவுத் திருவிழாவுக்கான ஆயத்தம் நடந்து கொண்டிருந்தது.

இதமாக வீசிய வயற்காற்று அவளது மேனியைத் தழுவ, காலையிலிருந்து தட்டந்தனியனாய் அவள் சுழன்று அன்னதானத்தை சிறப்புற நடத்திய உடல் அசதியும் சேர்ந்து அவளைத் தாலாட்ட கண்கள் தாமாகவே செருகிக் கொண்டன.

அவளது இளம் பராயத்தில் இதே இடத்தில் இப்படியான ஒரு சூழலில் நடந்தேறிய ஒரு சம்பவம் மூடிய கண்களுக்குள் காட்சியாக விரிந்தது.

அப்பொழுது அன்னபூரணிக்கு வயது ஏழுதான் இருக்கும். அருகிலுள்ள கட்டுடை எனும் கிராமத்திலுள்ள ஒரு சிறு மண்குடில் தான் அவர்களது வசிப்பிடம். வயற்கரையை அண்டிய ஒரு மேட்டு நிலத்தில்த்தான் அவர்கள் வதியும் மண்வீடு அமைந்திருந்தது. அவளுடைய அப்பா ஒரு குடிகாரன். கூலி வேலைக்குப் போவதும் கிடைக்கும் சம்பளத்தில் கண்மண் தெரியாமல் குடித்துவிட்டு வீட்டுக்கு வந்து அட்டகாசம் செய்வதும் தான் அவனது தொழில். அம்மாதான் வயல் வேலைகளுக்குப் போய் உழைத்து வந்து வீட்டில் அடுப்பு மூட்டுவாள் அம்மா வேலைக்குப் போனால்த்தான் அவர்களுக்கு அரை வயிறாவது நிரம்பும்.

திடீரென ஒருநாள் அப்பா தெருவில் விழுந்து கிடப்பதாக அறிந்து அம்மா அங்கே போய்ப் பார்த்தால் அவனுடைய சீவன் போய்விட்டிருந்தது. அதைக் கண்ணுற்ற அம்மா அலறித் துடிக்க வில்லை. ஒரு நீண்ட பெருமூச்சை விட்டாள். நிச்சயம் அது நிம்மதிப் பெருமூச்சாகத்தான் இருந்திருக்கும். அன்னபூரணிக்கும் அழுகை வரவில்லை.

ஆனால் அப்பா போகும் போது இன்னொரு சுமையையும் அம்மாவுக்கு விட்டுப் போயிருந்தார். அது தான் தம்பி இரண்டு மாதக் குழந்தையையும் கையில் வைத்துக் கொண்டு அம்மா வேலைக்கும் போக முடியாமல் திண்டாடினாள். அம்மாவின் அவலநிலை கண்டு அன்னபூரணி அரிவுவெட்டிய வயல்களுக்குப் போய் அங்கு கொட்டிக்கிடக்கும் நெல்மணிகளை பொறுக்கி வந்து அம்மாவிடம் கொடுப்பாள். அவளும் அதைப்பதப்படுத்தி கஞ்சியாக வைத்து

*மகளுக்கும் கொடுத்து தானும் தனது வயிற்றை நிரப்புவாள்.*

*அன்னபூரணி பாடசாலைக்குப் போவது படிப்பதற்காக அல்ல. இடைவேளையின் போது அங்கு கொடுக்கும் பாணை வாங்கியாவது அரைவயிற்றை நிரப்பலாமே என்ற நோக்கத்தில்த் தான். அதை வாங்கியதும் பத்திரமாகப் பொத்தி வைத்து வீட்டிற்குக் கொண்டு வருவாள். அம்மாவுக்கும் பாதியைக் கொடுத்து மீதியைத் தான் சாப்பிடுவாள். இப்படியாக வறுமையின் கொடூரமான கோரப் பிடியில் சிக்குண்டு வாழ்ந்தவள், அவள்.*

*சித்திரை மாதத்து பௌர்ணமி நாள் அன்று. அம்பாள் கோயிலில் சித்திரைக் கஞ்சி வார்ப்பதாக பலர் தங்களுக்குள் பேசிக் கொண்டு கைகளில் பாத்திரங்களுடன் வயல்களின் வரம்பினூடாக நடந்து போய்க்கொண்டிருப்பதை அவதானித்த அன்னபூரணி ஓட்டமும் நடையுமாக வந்து அம்மாவிடம் விடயத்தைச் சொன்னாள்.*

*“பிள்ளை! இந்த பச்சைக் குழந்தையோட என்னால உந்த கொதி வெய்யிலுக்கை போக ஏலாது. நீதான் போற சனங்களோட போய் அங்கை ஊத்திற கஞ்சியிலை வாங்கி நீயும் குடிச்சிட்டு எனக்கும் வாங்கிக் கொண்டு வா”*

*கையில் ஒருகிண்ணத்தைத் தந்துவிட்டாள் அம்மா.*

*அன்னபூரணியின் பிஞ்சுக் கால்கள் வரம்புகளின் மீது வேக மாக நடைபோட, தன்முன்னால் போய்க் கொண்டிருந்த கும்பலுடன் அவளும் இணைந்து கொண்டாள். அம்பாள் கோயிலின் சன்னிதி மக்கள் கூட்டத்தினால் அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டி ருந்தது.*

*ஆதி மூலத்தில் பூசை புனஸ்காரங்கள் ஒரு புறம். முன் மண்டபத்தில் நாதஸ்வரத்துடன் மேளம் முழங்க வாயிலில் பறை மேளம் ஒலிக்க கூடியிருந்த மக்களின் செவிப்பறைகளோ அதிர்ந்த வண்ணமிருந்தன. அன்னபூரணியின் கால்கள் கடுக்கியது அவள் சனக் கூட்டத்திலிருந்து ஒதுங்கி ஒரு ஓரமாகப் போய் நிலத்தில் அமர்ந்து கொண்டாள். கூடவே அவளுடன் சில சிறுவர்களும் வந்து அமர்ந்து கொண்டார்கள்.*

*அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த கோலாகலம் எதனை யும் பொருட்படுத்தாதவனாய் சூரிய பகவான் தனது பவனியைத் தொடர்ந்து உச்சத்துக்கு வர, வெய்யிலின் உக்கிரம் மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தது. அன்னபூரணி மட்டும் அதற்கு*

விதிவிலக்கா... என்ன... காலையில் எதுவுமே உட்கொள்ளாத களை வேறு. கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. அப்படியே நிலத்தில் சரிந்து விட்டாள்.

எத்தனை நேரம்தான் அப்படியே மயங்கிக் கிடந்தாளோ... கண் விழித்துப் பார்த்தபோது அவளருகில் செல்வமணி இருந்தாள். அவளும் அவளுடன் கூடப்படிப்பவள் தான். அவள்தான் தான் கஞ்சிக்கெனகொண்டு வந்த பாத்திரத்தில் தண்ணீரை எடுத்து வந்து அவளது முகத்தில் தெளிவித்திருக்கிறாள்.

"அன்னம்! இந்தாடி இந்த தண்ணியைக் குடி"

மறுப்புச் சொல்லாது அவள் தந்த தண்ணீரை வாங்கி மடக்! மடக்! எனக் குடித்ததும் தான் அவளுக்கு உயிரே வந்தது. அவளது கைகளிரண்டையும் இறுகப் பற்றி தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள், அன்னபூரணி.

திடீரென்று மக்களிடையே ஒரு ஆரவாரம்.

"கஞ்சி ஊத்தத் துவங்கீட்டினம் போல" சொல்லிக் கொண்டே மக்கள் கூட்டம் ஒருவரை ஒருவர் இடித்துத் தள்ளியவாறு முண்டி யடித்துக் கொண்டு முன்னேறிப் போயினர். அன்னபூரணி பயந்து ஒதுங்கி ஒரு ஓரமாக நின்றிருந்தாள். நேரம் கடந்து போனதே தவிர அவளால் ஒரு அடிகூட முன்னேற முடியவில்லை. இடையிடையே மக்கள் கூட்டம் நெரிபட்டு பின்னால் நகர்ந்து அவளை இடித்துத் தள்ளிய போது அவளால் இம்மியளவும் நகரமுடியவில்லை. நின்ற இடத்தை தக்கவைத்துக் கொள்ளுவதே அவளுக்கு பெரும் பாடாக இருந்தது. பொறுமையுடன் காத்திருந்தாள், அன்னபூரணி. கஞ்சியி லிருந்து எழுந்த வாசனைதான் அவளது நாசியை வந்து தழுவியதே தவிர அவளால் கஞ்சிக்கலயத்தை எட்டிப்பார்க்கவும் முடியவில்லை. கஞ்சி வார்ப்பதும் முடிவடைந்துவிட்டது. மக்கள் கூட்டமும் கலைந்து விட்டது. ஏமாற்றத்துடன் நின்றிருந்த அன்னபூரணி நடக்க வும் தென்பில்லாதவளாய் சோர்வுற்ற நிலையில் மெதுவாக வந்து கோயில் வெளிமண்டபத்தின் வாசற்படியில் அமர்ந்து கொண்டாள். கையிலிருந்த வெற்றுப் பாத்திரத்தை வெறித்துப் பார்த்தவள், நிமிர்ந்து அம்பாள் எழுந்தருளியிருக்கும் திசையை நோக்கி பார்வையைத் திருப்பினாள்.

"அம்மாளாச்சி தாயே! ஏழைகளைப் பட்டினி போடுவதுதான் உன் கருணையா? நான் தான் பட்டினியாய்க் கிடந்தாலும் பறவா யில்லை. எந்த நேரமும் பசியால அழுகிற தம்பிக்கு பட்டினியாய்க்

*கிடந்து அம்மா எப்படி பாலூட்டுவா. அந்த பச்சைப் பாலனையும் ஏன் போட்டு வருந்துகிறாய் தாயே"*

*கண்ணீர் மல்க வேண்டி நின்றாள்.*

*அவள் எதிரே யாரோ நடமாடுவது போன்றதோர் பிரமை தோன்ற கண்களைத் திறந்து பார்த்தாள். என்ன அதிசயம். அவள் முன்னால் ஒரு அம்மா நின்றிருந்தாள். கருணையின் வடிவமாய்த் தோன்றிய அந்த முகத்தின் நெற்றியை ஒரு வட்ட வடிவமான குங்குமப் பொட்டு அலங்கரித்திருந்தது.*

*"ஏன் பிள்ளை அழுகிறாய்?"*

*தன்னையறியாமலே அவளை நோக்கி கரங்களைக் குவித்தவள், தனது அவல நிலையை அவளுக்கு எடுத்தியம்பி முற்றாக அவளிடம் சரணடைந்தாள்.*

*"அம்மா! எங்களுடைய வயிற்றுப் பசியைப்போக்க ஏதாவது வழி செய்யுங்கோ"*

*பதிலெதுவும் கூறாமல் கோயிலுக்குள் போன அந்த அம்மா, ஒரு நொடியில் திரும்பி வந்தாள். அவளது கைகளில் அம்மனுக்குப் படைத்த பிரசாதம் இருந்தது. அன்னபூரணி ஆவலுடன் அந்த முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அம்மாளாச்சியே தன்முன் நிற்பதாக ஒரு உணர்வு தோன்றி அவளது மேனியை புல்லரிக்க வைத்தது. சடாரென அவளது கால்களில் விழுந்து வணங்கினாள்.*

*"பிள்ளை! என்ன இதெல்லாம். இந்தா இது அம்மாளாச்சிக்கு படைச்ச பிரசாதம்"*

*பயபக்தியுடன் அம்மா தந்த பிரசாதத்தை தனது பாத்திரத்தை நீட்டி வாங்கிக் கொண்டாள். உணர்ச்சி மேலீட்டினால் அவளது கண்கள் நீரைச் சொரிந்தன. அம்மா அவளது தலையைத் தொட்டு ஆசிர் வதித்தாள்.*

*"இனிமேல் உனது கஷ்டங்கள் நீங்கி விடும்"*

*அம்மாவின் அருள்மிகு வார்த்தைகள் பலித்தன. அன்று மாலையே யாரே ஒரு தம்பதியினர் அவளது வீடு தேடி வந்திருந்தனர். திருமணமாகி பதினைந்து வருடங்களாகியும் தங்களுக்கு குழந்தைப் பாக்கியம் கிட்டவில்லையாம். ஆகாரம் இல்லாமல் நலிந்து கிடக்கும் அவளது தம்பியைத் தங்களிடம் ஒப்படைத்தால் பிள்ளையின் வாழ்வும் சிறக்கும். அத்தடன் எல்லோருக்கும் அது நன்மை தரும் என நயமாக வேண்டினர். என்ன நினைத்தாளோ... அன்னபூரணியின்*

*அம்மா அதற்கு உடனே சம்மதித்து விட்டாள்.*

*"பசியில துடிக்கிற பிள்ளையைப் பார்த்து வயிறு எரிவதை விட எங்கையோ என்ரை பிள்ளை நல்லாயிருக்குது என்று நினைச்சுக் கொண்டே வாழுறது மேல்"*

*மனநிறைவோடு பிள்ளையை அவர்களுக்கு தானமாகக் கொடுத்த போதிலும் கண்கள் நீரைச் சொரியத் தவறவில்லை. பெற்ற மனமல்லவா?*

*அவர்கள் அன்பளிப்பாகத் தந்த சிறு தொகையை வைத்து வறுமை நிலையிலிருந்து அவர்கள் ஓரளவு மீண்டு கொண்டனர். அம்மா சிற்றுணவு தயாரித்து சாப்பாட்டுக் கடைகளுக்கு கொடுப் பதை தனது வழமையாக்கிக் கொண்டாள். அன்னபூரணியோ கல்வியே கருந்தனம் என எண்ணி கவனத்தைச் செலுத்தி தன்னை மேம்படுத்திக் கொண்டாள். ஆம். அன்னபூரணி ஒரு பயிற்றிப்பட்ட ஆசிரியையாக தொழில் புரியத் தொடங்கியதும் அம்மாவுக்கு ஓய்வு கொடுத்து விட்டாள்.*

*ஆயினும் அவள் ஒன்றை மட்டும் மறக்கவில்லை. தொழில் வாய்ப்புக் கிடைத்தபின் ஒவ்வொரு சித்திரா பௌர்ணமி தினத்திலும் அம்பாளின் சன்னிதானத்தில் அன்னதானம் செய்வதன் மூலம் அருள்மிகு அன்னையை நினைவு கூர்ந்து நிம்மதியடைகிறாள்.*

*தான் பெற்ற செல்வம் எங்கேயாவது நலமாக வாழ்ந்து கொண்டிருப்பான் என்ற நம்பிக்கையுடன் அன்னபூரணியின் அம்மா வும் ஒரு நாள் கண்ணை மூடிவிட்டாள். தனி மரமாக வாழ்ந்து கொண்டிருக்கும் அன்னபூரணியோ வசதி இருந்தும் எளிமையான வாழ்க்கையை தனதாக்கிக் கொண்டு ஏழை மக்களுக்கு தேவையறிந்து சேவை செய்வதே தன் பணி எனக் கருதி வாழ்கிறாள்.*

*"ம்...!"*

*நீண்ட நிம்மதிப் பெருமூச்சொன்று அவளது ஆழ்மனதி லிருந்து புறப்பட்டு வெளியேறி அவளை ஆசுவாசப்படுத்துகிறது. கண்களைத் திறந்து பார்க்கிறாள். எதிரே பூசகர் பிரசாதத்தட்டுடன் நிற்கிறார்.*

*"அம்மா! பிரசாதம் எடுத்துக் கொள்ளுங்கோ"*

*அன்னபூரணி அவசரமாக எழுந்து நின்று பணிவுடன் அவர் நீட்டிய பிரசாதத்தை இரு கரங்களாலும் வாங்கிக் கொள்கிறாள். பிரசாதத்தைக் கிள்ளி வாய்க்குள் வைக்க எத்தனித்தவளது கண்களின் முன் அவளது தம்பியின் நலிந்த தோற்றம் வந்து போகிறது.*

# பழியாரது

பங்குனி மாதத்து வெய்யிலின் உக்கிரம் அனைவரையும் வாட்டிவதைத்துக் கொண்டிருந்தது. இதற்கு தேவகி டீச்சர் மட்டும் விதி விலக்கா... என்ன... நெற்றியில் துளிர்த்திருந்த வியர்வை முத்துக்களை தனது கைப்பைக்குள் வைத்திருந்த சிறு கைத்துவாலையை எடுத்து ஒற்றிக் கொண்டவள், அத்துடன் நிற்காது வாயினால் ஊதி காற்றை வெளியேற்றி தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டாள்.

இதற்கிடையில் மாணவர்கள் தங்களது சில்மிசங்களைத் தொடங்கி விட்டார்கள். தேவகி மேசையில் தட்டி அவர்களை அதட்டி அடக்க முயன்றாள். அவர்களது கொட்டம் அடங்கவில்லை. தேவகி அடுத்த ஆயுதத்தை பாவிக்க முற்பட்டாள். கணிதப் பயிற்சி புத்தகத்தை எடுத்து விரித்தவள், அதிலிருந்து சில கணக்குகளை கரும்பலகையில் எழுதினாள்.

“பெல் அடிக்கிறதுக்குள்ள இந்தக் கணக்குகளைச் செய்து என்ரை மேசைக்கு வரவேணும் கொப்பி”

அவளது கடும் உத்தரவுக்கு அடிபணிந்த மாணவர்கள் மும்முரமாக செய்கையில் ஈடுபட்டனர். தேவகி வந்து தனது கதிரையில் அமர்ந்து கொண்டாள். அவளது மனம் என்னும் சிந்தனைப் பறவை, கட்டுக்கடங்காது எங்கெல்லாமோ சிறகடிக்கத் தொடங்கிவிட்டது.

வழமையாக அவள் காலையில் சமையலை முடித்து வைத்து விட்டுத்தான் வேலைக்குப் புறப்படுவது வழக்கம். ஆனால் இன்று அது சாத்தியப்படவில்லை. அவளுக்கு அது பெரும் உறுத்தலை ஏற்படுத்தியது தான் அவளது நிலைதடு மாற்றத்துக்கு காரணம். இத்தனைக்கும் வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட் களை தேவைக்கு அதிகமாகவே அள்ளி வந்து போட்டிருந்தான். அவளது கணவன் முகுந்தன். ஆனால்... அவற்றை சமைப்பதற் கான எரிபொருள் சில நாட்களுக்கு முன்பாகவே தீர்ந்து போய்விட்டது. எரிவாயு கொள்கலன் ஒன்றை வாங்கி விடலாம் என முகுந்தனும் எவ்வளவோ பிரயத்தனப் பட்டான். உத்தேச விலைக்கு மேலதிகமாக பணத்தைச் செலுத்தி வாங்குவதற்கும் அவன் தயார்தான். ஆனால்... பொருள் தான் கிடைக்கவில்லையே.

நேற்றுக்கூட எரிபொருள் நிலையத்தில் வைத்து விநியோகிப் பதாக அறிந்தவன் உடனே வேலைக்கும் லீவுபோட்டு விட்டு கொள்கலனையும் எடுத்துக் கொண்டு ஓடோடிப்போய் நீண்ட வரிசையின் பிற்பகுதியில் நின்று கொண்டான். பகல் ஒரு மணிக்குத் தான். விநியோகிக்ககத் தொடங்கினார்கள். மனத்தில் துளிர்த்த நம்பிக்கை தந்த உத்வேகத்தில் அவனுக்கு வெய்யிலின் சகிப்புகூட ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. தவிர வரிசையில் நின்றவர்களில் அநேகமானோர் பெண்களே. பாதிப்புக்குள்ளாவதும் அவர்தானே. ஆமை வேகத்தில் வரிசை நகர்ந்தது. முகுந்தனுக்கு முன்னால் வரிசையில் இன்னும் ஏழு பேர்கள் தான் நின்றிருந்தனர். இனியென்ன இன்னும் சிறிது நேரத்தில் எரிவாயு கைக்கு கிடைத்து விடும். துள்ளிய மனத்தை கட்டுப்படுத்தியவனாய் தனது கால்சட்டைப் பையிலிருந்த கர்சீப்பை எடுத்து முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டான்.

திடீரென வரிசையில் ஒரு சலசலப்பு. எட்டிப் பார்த்தான். ஒருவர் கம்பீரக்குரலில் சொல்லிக் கொண்டிருந்தார்.

“இண்டைக்கு காஸ் தீர்ந்து போச்சு. இனி அடுத்த கட்டத்துக்குத்தான்”

கேட்ட மாத்திரத்தே முகுந்தனுக்கு மேனி சிலிர்த்து உச்சக் கட்ட ஆத்திரத்தில் அவன் மிதந்தான். கை கால்கள் உதறலெடுக்க நடுங்கும் உதடுகள் வார்த்தைகளை வெளியிட்டன.

“இப்பிடிச் சொன்னால் எப்பிடி. நாங்கள் எத்தினை மணித்தி யாலம் இந்த வெய்யிலுக்கை கால்கடுக்க நிண்டிருக்கிறம்”

அவரும் விடவில்லை.

"இதுக்கெல்லாம் கோபப்பட்டு ஒன்றும் பிரயோசனமில்லை. அடுத்த முறைக்கு நாங்கள் டோக்கன் குடுத்துத்தான் குடுக்கப்போறம். அப்ப இப்படிப்பட்ட பிரச்சினைவராது. போங்கோ போயிட்டு அடுத்த முறைக்கு டோக்கனோடு வாங்கோ"

ஏமாற்றத்துடன் முணுமுணுத்தவாறு கூட்டம் கலைந்தது. வீட்டிற்கு வந்த முகுந்தன் தனது ஆற்றாமையின் வெளிப்பாட்டை தேவகி மீது காட்டினான்.

கணவனின் வரவை ஆவலோடு காத்திருந்த வளுக்கு கிடைத்தது சாட்டையடியாய் அவனது வாயிலிருந்து தெறித்த வார்த்தைகளே.

"எத்தினை தரம் நான் சொன்னநான். குசினிக்கு புகைக்கூடும் அடுப்பும் கட்டாயம் தேவையெண்டு. என்ரை பேச்சைக் கேட்ட நீரே. ஒற்றைக்காலில நிண்டு மேடையும் அலுமாரியும் தான் வேணு மென்று சுட்டினநீர். இப்ப... அடுப்பு இருந்திருந்தால் இப்பிடி அவலப்படுற நிலைமை வருமே?... நான் எப்பிடி யெண்டாலும் விறகு கொண்டு வந்திருப்பன். நிம்மதியாய் நாங்கள் சமைத்து சாப்பிட்டி ருக்கலாம்."

கணவனின் கூற்றில் நியாயம் இருப்பதாக ஒருகணம் தேவகிக்கு தோன்றிற்று. கண்களை நீர்மறைக்க செய்வதறியாது திணறினாள். இவ்வளவு காலமும் அடுப்பு, நெருப்பு, கரி என்றில்லா மல் நிம்மதியாகத்தானே வாழ்ந்தோம். மின்சார வசதியும், காஸ் அடுப்பும் கைகொடுத்தது. திடீரென எப்படி இந்த அவலநிலை உருவானது?

அவளது சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைக்குமாப்போல் பாடசாலை மணி ஒலித்தது. தேவகி உஷாரடைந்தாள்.

"பிள்ளைகள்! நாளைக்கு எல்லாரும் கணக்கு களைச் செய்து கொண்டு வந்து கொப்பிகளை என்ரை மேசையில் அடுக்கவேணும். என்ன... விளங்கிச்சுதா?"

"ஓம் மிஸ்"

அது இடைவேளை நேரமாதலால் அனைத்து மாணவர்களும் வகுப்பறை விட்டு வெளியேறினர். அவர்கள் வெளியேறும் வரை காத்திருந்த தேவகி, அதிபரின் அலுவலக அறையை நோக்கி

நடந்தாள். அரை நாள் லீவுக்கான விண்ணப்பத்தை எழுதிக் கொடுத்து விட்டு தனது உந்துருளியை எடுத்துக் கொண்டு வீடு நோக்கிப் புறப்பட்டாள். வயிற்றுக்குள் ஏதோ பிசையுமாப்போல் உணர்வு ஏற்பட்டதும்தான் தான் காலையில் எதுவும் சாப்பிடவில்லை என்பது ஞாபகத்திற்கு வந்தது. பிள்ளைகளுக்கு பாணில் ஜாமைத் தடவிக் கொடுக்கும் போது நானும் ஒரு துண்டைக் கடித்திருக்கலாம். ஏங்கிய மனத்தில் ஒரு புதிய சிந்தனையும் தோன்றியது.

"நான் போற வழியில்த்தானே மணியத் தாரின்ரை சாப்பாட்டுக் கடையும் இருக்குது. இண்டைக்கு அதிலை இரண்டு பார்சலை வாங்கிக் கொண்டு போனால் என்ன... சுலபமாய் எல்லாருடைய பசியும் தீர்ந்திடும்"

இதுவரையில் தேவகி சாப்பாட்டுக் கடையை நாடியவளல்ல. ஆனால் மணியத்தாரின் கடையில் நிறையப்பேர் முண்டியடித்து சாப்பாடு வாங்குவதை அவள் போய் வரும்போது கண்டிருக்கிறாள். உந்துருளி பிரதான வீதியால் திரும்பி முகப்பிலுள்ள மணியத் தாரின் கடைக்கு எதிர்ப்புற தெருவோரத்தில் நிறுத்தப் பட்டது. தேவகி தனது "ஹாண்ட்பாக்"கை எடுத்துக் கொண்டு திரும்பிப்பார்த்தாள். எதிர்ப்புறத்திலிருந்த கடை பூட்டிக்கிடந்தது. வழமையாக முண்டி யடிக்கும் வாடிக்கையாளர்களைக் காணவில்லை. ஆங்காங்கே ஓரிருவர் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந் தனர். அவர்களை நெருங்கிய தேவகி விசாரித்தபோது கிடைத்த செய்தி இதுதான். இரவு மின்சாரம் தடைப் பட்டிருந்த நேரத்தில் யாரோ கடையை உடைத்து உள்ளே பாவனையிலிருந்த எரிவாயு சிலிண்டரை எடுத்துக் கொண்டு போய் விட்டார்களாம்.

கேட்டபோது தேவகிக்கு தலை சுற்றியது. கையில் பணம் இருந்தாலும் பட்டினியால் வாட வேண்டிய நிலை. ஏன் இந்த அவலம். அவளுக்கு எல்லாமே புரியாத புதிராயிருந்தது. வீட்டிற்கு வந்து சேர்ந்தவள். பச்சைத் தண்ணீரை எடுத்து மடமட வென்று குடித்தாள்.

மனம் குறுகுறுத்தது. கணவனும் பிள்ளைகளும் வரப் போகிறார்கள். அவர்களுக்கு உணவு தயாரித்து வைக்க வேண்டும். என்ன செய்யலாம். மனம் தீவிரமாக வேலை செய்தது. வேகமாகப் போய் உடைமாற்றி கால்முகம் அலம்பி வந்தவள் எதையோ நினைத்துக் கொண்டவளாய் சமையலறைக்குள் நுழைந்து மின் பொத்தானை அமத்திப்பார்த்தாள் "பளிச்" சென ஒளி பரவியது.

ஓஹோ... கறண்ட் இருக்குது. அரிசியைக் கழுவி றைஸ் குக்கரில் போடுவோம் என்ன நினைத்தவள் மின்சாரமாக செயற்பட்டாள். மனதுக்கு சிறிது நிறைவாக இருந்தது. அடுத்தது கறி வைக்க வேண்டியது தான்.

போன மாதத்துச் சம்பளத்தில் அவள் ஒரு மண்ணெண்ணெய் குக்கரை மும்மடங்கு விலை கொடுத்து வாங்கியிருந்தாள். எரிவாயு தீர்ந்த சமயத்தில் அது தான் அவளுக்கு கைகொடுத்தது. ஆனால்... அதற்கு நிரப்பி பாவிப்பதற்கு மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை. சென்ற வாரம் குடும்பக்கார்ட்டுடன் போய் நீண்ட வரிசையில் காத்திருந்து ஐந்நூறு ரூபாய்க்கு வாங்கி வந்த மண்ணெண்ணெய் இப்போது தீரும் பட்சத்திலிருந்தது. அதனை எடுத்து குலுக்கிப் பார்த்தவள் தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

“கொஞ்சம் தான் இருக்குது. இப்போதைக்கு ஒப்பேத்தலாம்”

பருப்பைக் கழுவி அதில் அவிய வைத்தவள், அதற்குள்ளேயே மரக்கறிகளையும் வெட்டிப்போட்டு ஒரு சாம்பாராக்கினாள்.

பதகளித்த மனம் சற்று தேறுதலடைந்தது. இப்போது அவளது கவனம் சோற்றின் மீது திரும்பியது. றைஸ்குக்கரை எட்டிப் பார்த்தவளுக்கு நெஞ்சு பகீரென்றது. மின்சாரம் துண்டிக்கப் பட்டதை அவள் அவதானிக்கவில்லை. மூடியைத் திறந்து பார்த்தால் அரிசி தண்ணீருக்குள் ஊறிப்போய்க் கிடந்தது.

அவள் மனம் தளரவில்லை. மற்றவர்களது பசியைப் போக்கவேண்டும் என்ற வேகத்துடன் அரிசியை பானைக்கு மாற்றி மண்ணெண்ணெய் அடுப்பில் வைத்தாள். முடியும் தறுவாயிலிருந்த மண்ணெண்ணெய் அவளுக்கு கை கொடுக்குமா? என்ற தவிப்புடன் காத்திருந்தாள்.

வீட்டுக்குள் கேட்ட சலசலப்பு அவளை சுண்டியிழுத்தது. கணவன் முகுந்தன் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு வந்து விட்டான். இப்போது முகுந்தனின் குரல் அவளுக்கு தெளிவாகக் கேட்டது.

“இஞ்சாரும் தேவகி! “பெற்றோல் ஷெட்டுக்கு மண் ணெண்ணெய் வந்திருக்குதாம். நாளைக்கு குடுக்கப்போகினம் என்று கேள்வி”

இருண்டு போய்க்கிடந்த மனத்திற்குள் ஒரு ஒளிக்கீற்று பரவுவதாக அவள் உணர்ந்தாள் “நாளைக்கு பாடசாலைக்கு லீவு போட்டு விட்டு நேரத்தோடயே போய் டோக்கன் எடுத்து மண் ணெண்ணெய் வாங்க வேணும். அதே சமயம் குடும்ப கார்ட்டையும்

மறந்திடாமல் கொண்டு போறதோடு ஒரு லீற்றர் தண்ணியும் கொண்டு போக வேணும்" மனத்துக்குள் கணக்குப் போட்டுக் கொண்டவாறு தன் முன்னால் கொதித்துக் கொண்டிருக்கும் உலையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ம்!...."

அவளது ஆழ்மனதின் புகைச்சல் இப்போது நெடுமூச்சாக உருவெடுத்து வெளியேறியது. விடையில்லாத கேள்வியொன்று அவளது மனத்தை ஆக்கிரமித்துக் கொண்டது.

# பலிசு

கொதிக்கும் வெய்யிலையும் பொருட் படுத்தாது சைக்கிளின் மிதியை ஊன்றி மிதித்துக் கொண்டிருந்தார், சோமசுந்தரம். அந்தக் கிரா மத்து மக்களால் செல்லமாக "சோமு வாத்தியார்" என அழைக்கப்படும் அவருக்கோ வயது எழுபத்தைந்தைத் தாண்டிக் கொண்டிருந்தது.

வயது முதிர்ந்து விட்டதே என அவரது மனம் சோர்வடைந்து விடவில்லை. இன்னமும் அவருக்கு தனது சொந்த வயலில் விதைத்து அறுவடை செய்து கொண்டு வந்து சேர்ப்பதில் ஒரு தனி இன்பம் கிடைக்கத் தான் செய்கிறது. இதோ இப்பொழுதும் அவர் வயலில் இருந்து தான் வீடு திரும்பிக் கொண்டிருக்கிறார். சிறு போகத்திற்கு அவர் பயிரிட்டிருந்த எள்ளும், சனலும் மதாளித்து வளர்ந்து, வயற்பாத்திகள் பச்சைப் பசேலென செழுமையுடன் இருக்கும் காட்சியை கண்ணுற்றவரின் மனமோ, கொதிக்கும் வெய்யிலிலும் குளிர்ந்து போய்க் கிடக்கிறது.

"கிறீச்! கிறீச்!!"

தொடர்ந்து அவரது காலடிக்குள் இருந்து கேட்ட சத்தம் அவரை துணுக்குற வைக்கிறது.

"செயின்தான் கொறிக்குது போல. சைக் கிளை ஒருக்கா கழுவிப் பூட்ட வேணும்"

வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டார். அவருக்கு சைக்கிளும் ஒரு பிள்ளை மாதிரித்தான்.

அவர் படிப்பித்துக் கொண்டிருந்த காலத்திலேயே இந்த "ரலி" சைக்கிளை புத்தம் புதுசாக கொம்பனியில் இருந்து வாங்கியிருந்தார். அவரது கவனமான பாரமரிப்பினால் இத்தனை வருடங்களாக அது அவருக்கு கைகொடுக்கிறது. மாரி காலம் ஓய்ந்து, நெல் அறுவடை முடிந்ததும் அவரது முதல் வேலை தனது சைக்கிளை கழுவிப் பூட்டுவது தான்.

வீட்டுப் படலைக்குள் நுழையும்போதே அவரது வருகையை சைக்கிளின் சத்தம் காட்டிக் கொடுத்துவிட்டது. ஆளரவம் கேட்டு படலையை எட்டிப் பார்த்த அவரது மனைவி சிவகாமி எதுவும் பேசாமல் உள்ளே போனாள். போனவள் திரும்பி வந்த போது அவளது கையில் செம்பு நிறைய தண்ணீர் இருந்தது.

மனைவி நீட்டிய நீரை வாங்கி மடமடவென குடித்தவர், தன்னை ஆசுவாசப்படுத்தும் நோக்குடன் ஸ்!... அப்பாடா என நீண்டதொரு மெருமூச்சினை வெளியிட்டு விட்டு சாய்மனையில் சாய்ந்து கொண்டார். உடல் ஓய்வைத்தேட, கண்கள் தாமாகவே மூடிக் கொண்டன.

"இஞ்சாருங்கோப்பா."

மனைவியின் அழைப்பு அவரது கண்களை திறக்க வைத்தது. அவரது கைகளுக்குள் ஒரு கவரைத் திணித்தாள், சிவகாமி. அவரது கண்களில் தோன்றிய கேள்விக்கு சிவகாமி பதிலளித்தாள்.

"உவர் எங்கட சைக்கிள் கடை சண்முகம் அண்ணையின்ரை மகன் பெடியன் கொண்டந்து தந்திட்டுப் போறான்"

"சண்முகத்தாரின்ரை பெடியள் வெளிநாட்டிலையெல்லோ. அவங்கள் எங்கை இங்க வந்தவங்களே"

சொல்லிக் கொண்டே கவரைப் பிரித்தார், சோமசுந்தரம். பிரித்தவரின் கண்கள் இமைகண் மூட மறந்து ஆச்சரியத்தால் விரிந்து நின்றன. புதினத்தை அறிந்து கொள்ளும் ஆவலுடன் அருகில் நின்றிருந்த சிவகாமிக்கு கணவனது மௌனம் விரக்தியை ஏற்படுத்த மெதுவாக அவரது வாயைக் கிளறினாள்.

"என்னப்பா "காட்"டில போட்டிருக்கு?"

"அதையேன் கேட்கிறாய் சிவகாமி. எங்கட சண்முகம் எண்பதாவது பிறந்தநாளை "றெஸ்றோரண்ட்"டில கொண்டாடப் போறாராம். அதுக்குத் தான் அழைப்பிதழ் வந்திருக்கு."

“உது கொண்டாடத்தான் பெடியள் வெளிநாட்டிலயிருந்து வந்திருக்கிறாங்கள் போல”

நாடியைத் தோள்பட்டையில் இடித்தவாறே சொன்னாள், சிவகாமி.

“எப்பவாம்?” ஏளனத்துடன் வந்தன வார்த்தைகள்.

“சாமான்கள் எல்லாம் விலையேறிப் போச்சுது. சீவியத்தைக் கொண்டிழுக்கிறதே கஷ்டம் என்று அவனவன் புலம்பிக் கொண்டிருக்கிறான். உதெல்லாம் திடீரென்று வந்த பணம் செய்யிற வேலை”

“உதுக்கேன் நீ புலம்புகிறாய் சிவகாமி. பிறந்தநாள் கொண்டாடுறதும் விடுறதும் அவனவன் இஷ்டம் கண்டியோ. இவ்வளவு காலமும் கஷ்டப்பட்டு உழைச்சு தங்களை ஆளாக்கி விட்ட மனுசனுக்கு பிறந்த நாள் கொண்டாடி சந்தோசப்படுத்த வேணும் என்று பிள்ளையள் நினைச்சிருக்கலாம். விட்டுத்தள்ளு அந்தக் கதையை.”

அத்துடன் அந்த உரையாடலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டு விட்டது.

சோமு வாத்தியார் சண்முகத்தின்ரை பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு அவசியம் போகத்தான் வேண்டுமென தன் மனதுக்குள்ளேயே தீர்மானித்துக் கொண்டார். பாடசாலைக்குப் போய் வரும் பாதையில்த்தான் சண்முகத்தின் சைக்கிள்கடை இருந்தது. வாத்தியாரின் சைக்கிளுக்கும் அடிக்கடி பிரச்சனை வந்து விடுவது வழக்கம். எடுத்ததுக்கெல்லாம் சண்முகத்திடம் போய் விட்டால் போதும். அவரே டயர்களுக்கு காற்றும் பார்த்து “பிறேக்” கையும் பார்த்து ஒழுங்காக்கி வாத்தியாரை சைக்கிளில் ஏற்றி அனுப்பி வைப் பார். முன்பொரு காலத்தில் அவ்வளவு அந்நியோன்யமாகப் பழகிய சண்முகத்தாரின் நினைவுகளை தன் ஆழ்மனதுக்குள் பொத்தி வைத்திருந்தார், வாத்தியார். இப்பொழுது அந்த நினைவுகள் இரை மீள்வதைப் போல் தாமாகவே புரண்டு வந்து அவர் கண்முன் விரிந்தன.

ஒரு அடைமழைப்பொழுது. பாடசாலை விட்டு சோமு வாத்தியார் தனது வீடு நோக்கி விரைந்து கொண்டிருக்கிறார். தெருவில் பாய்ந்து கொண்டிருந்த வெள்ளைத்தைக் கிழித்தவாறு அவரது சைக்கிள் ரயர் உருண்டு கொண்டிருக்கிறது. தற்செயலாக அவரது பார்வை சண்முகத்தின் சைக்கிள் கடைப்பக்கமாக

திரும்புகிறது. கடையின் முன்புறத்தில் நாடிக்கு கைகொடுத்தவாறு சண்முகம் நின்றிருப்பது அவரது கண்ணுக்கு புலப்படுகிறது. சண்முகத்தின் முகத்தில் தோன்றுவது விரக்தியா... அல்லது வெறுப்பா... அல்லது சோகமா... எதுவென்று அவரால் ஊகிக்க முடியவில்லை. என்ன நினைத்தாரோ தனது சைக்கிளை திருப்பி சண்முகத்தின் கடைத்தாவாரத்தில் கொண்டு போய் நிறுத்தினார்.

"என்ன சண்முகம்! சோகமாய் இருக்குமாப் போலத்தெரியது. வாடிக்கை ஒன்றும் வரேல்லையே?"

"அதையேன் வாத்தியார் கேக்கிறியள். இந்த அடை மழைக்குள்ள ஆர் வரப்போகினம். மாதச் சம்பளம், கூடின வருமானம் உள்ளவை பாடு பறவாயில்ல. என்னைப் போல அன்றாடக் காய்ச்சியள் பாடு திண்டாட்டம்தானே. உங்களிட்ட உள்ளதைச் சொல்லுறன் இண்டைக்கு வீட்டில உலை வைக்கவே வழியில்லை."

மனதில்பட்டதை வாத்தியார்நேரிடையாகவே கேட்டு விட்டார்.

"ஏன் சண்முகம்! உழைக்கிற காலத்தில நாலு காசை சேமிச்சு வைக்கிறேல்லையே?"

இப்போது சண்முகம் மூக்கால் அழத் தொடங்கி விட்டார்.

"வாத்தியார்! வீட்டில எல்லாமா ஏழு உருப்படி. நீங்களே சொல்லுங்கோ. அன்றாடம் உழைக்கிறது வயிற்றுப் பாட்டுக்கே மட்டுமட்டாய்த்தான் இருக்குது. அதில எங்கை மிஞ்சுறது?"

ஒரு கணம் வாத்தியார் யோசித்துப் பார்த்தார். சண்முகம் நேர்மையான உழைப்பாளி. வேலைக்கு ஏற்ற கூலிதான் வாங்குவான். தவிர வாடிக்கையாளரை ஏமாற்றிப் பிழைக்கும் எண்ணம் அவனுக்கு வரவே வராது. அதனால்த்தான் ஐந்து பிள்ளைகளோடு இவ்வளவு கஷ்டமும் படவேண்டி இருக்கிறது. சட்டைப்பையில் கையை விட்டார். ஒரு நூறுரூபாய் நோட்டு வந்தது. அதனை அவனிடம் நீட்டினார்.

கை நீட்டி வாங்கிய சண்முகத்தின் கண்கள் கலங்கியிருந்தன. நாத் தழுதழுக்க வந்தன வார்த்தைகள்.

"வாத்தியார்! என்ரை கண்களுக்கு நீங்கள் அந்தக் கடவுளா கவே தெரியிறியள். இந்தக் காசை நான் கெதியில திருப்பித் தந்திடுவன்."

வாத்தியார் அவனை அவசரப்படுத்தினார்.

"நீ திருப்பித் தாறியோ... இல்லையோ. இப்ப நீ போய் இந்தக் காசை மனிசியிட்டைக் குடுத்திட்டு வா. எதையாவது வாங்கி நேரகாலத்துக்கு பிள்ளையளுக்கு சமைச்சுக் குடுக்கட்டும்"

அந்த நாள் நினைவுகள் இன்றும் பசுமையாக வாத்தியாரின் மனதில் நிறைந்திருந்தது.

தொடர்ந்து வறுமையோடு போராடிய சண்முகம் தான் இருந்த வீட்டை ஈடு வைத்து மூத்த மகனை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தார். வீட்டின் கஷ்ட நிலையை உணர்ந்த அவனும் போன இடத்தில் விடா முயற்சியாக உழைத்து அனுப்பியும் வைத்தான். சண்முகம் வறுமை நிலையிலிருந்து படிப்படியாக முன்னேற முடிந்தது. பிரான்ஸ் நாட்டில் ஒருவாறு நிலை கொண்டு விட்டவன், சந்தர்ப்பம் அமைந்தபோது தம்பியாரையும் அங்கு அழைத்துக் கொண்டான். அவர்கள் இருவரும் ஒற்றுமையாக உழைத்து கடைசிப் பெண்கள் மூவரையும் கரை சேர்த்தும் விட்டனர். இது தான் சண்முகத்தின் வாழ்க்கை வரலாறு. இப்போது சண்முகம் சைக்கிள் கடையைப் பூட்டி பத்துப் பதினைந்து வருடங்களுக்கு மேலாகி விட்டது.

சோமு வாத்தியாரும் வேலையிலிருந்து ஓய்வூதியம் பெற்று பதினைந்து வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டன. முன்பென்றால் சண் முகத்தின் கடையைத் தாண்டி பாடசாலைக்கு போய் வரும்போது அடிக்கடி அவர்கள் சந்தித்துக் கொள்வது வழக்கம். இப்போது சண்முகமும் கடையைப் பூட்டி விட்டார். வாத்தியாருக்கும் பாடசாலைக்கு போக வேண்டிய அவசியமும் இல்லை. கடைசியாக போன வருடத்தில் ஒரு நாள் விதானையார் வீட்டில் வைத்து சண்முகத்தைச் சந்தித்ததாக ஞாபகம்.

பணச்செழிப்பு சண்முகத்தை நன்றாக மாற்றியிருந்தது. பிள்ளைகள் அனைவரும் திருமணம் செய்து விட்டதாகவும் எல்லோரும் சிறப்பாக வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் பெருமை யுடன் சொல்லிக் கொண்டார், சண்முகம். இப்போது சண்முகம் பிறந்தநாள் கொண்டாடுவதை கண்டு கவளிக்க வேண்டுமென்பது அவரது மன அவா. மாலை நான்கு மணிக்கு என்று தான் அழைப்பிதழில் போடப்பட்டிருந்தது. மனைவி சிவகாமியிடம் சொல்லிக் கொண்டு சுமார் ஒன்றரை கிலோமீற்றர் தொலைவி லிருக்கும் குறிப்பிட்ட "றெற்றோரண்ட்" நோக்கி அவரது சைக்கிள்

புறப்பட்டு விட்டது.

விடுதியின் வாயிற் புறத்தில் ஆங்காங்கே கார்கள், வான்கள், ஆட்டோக்கள் நின்றிருந்தன. எண்ணற்ற மோட்டார் சைக்கிள்கள் வேறு தெருவின் இரு மருங்கிலும் வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன. வாழ்க்கையில் முதன் முதலாக வாத்தியாருக்கு தனது சைக்கிளைப் பார்க்க கூச்சமாக இருந்தது. இனி என்ன செய்யலாம். வந்தது தான் வந்துவிட்டோம். உள்ளே போகலாமென நினைத்தவராய் நடக்கத் தொடங்கினார்.

உள்ளே... அலங்காரம் பலமாக இருந்தது. நிரை நிரையாக வட்டமேசைகள் போடப்பட்டு அவற்றைச் சுற்றிலும் கதிரைகள் போடப்பட்டிருந்தன. தனக்கு பரிச்சயமான முகம் எதுவும் தெரிகிறதா என வாத்தியார் பார்வையை சுழற்றிப் பார்த்தார். ஊஹூம் எவருமேயில்லை. மெதுவாக காலியாயிருந்த ஒரு கதிரை யில் போய் அமர்ந்து கொண்டார். ஒருவாறு தன்னை சுதாகரித்துக் கொண்டவராய் நிமிர்ந்து நேரே பார்த்தபோது தான் முன்னால் மேடையில் ஒரு அலங்கரிக்கப்பட்ட மேசையின் முன் சண்முகம் அமர்ந்திருப்பதைக் கண்டார். பட்டு வேட்டி, பட்டுச்சட்டை சகிதம் உத்தரியம் மடித்த சால்வையுடன் கம்பீரமாக அமர்ந்திருந்த சண் முகமும் அவனைச் சூழ சரிகை வஸ்திரங்கள் தரித்து நின்ற குடும்பத் தினரும் காட்சியளித்தனர். அவர்களைச் சூழ புகைப்படக்காரர்கள், வீடியோ கமெராக்கள் பளிச்! பளிச்!! சென ஒளியைப் பாய்ச்சி படமெடுத்துக் கொண்டிருப்பதையும் அவதானித்தார், வாத்தியார்.

பலத்த கைதட்டலுடனும் பிறந்தநாள் வாழ்த்துப் பாடலுடனும் சண்முகம் தனது மனைவி சகிதம் என்பதாவது பிறந்த நாள் "கேக்" கை வெட்டியபோது எதுவித உணர்வுமற்ற மரம் போலநின்று அதை வேடிக்கை பார்த்தார், வாத்தியார். எல்லோரும் வரிசைக் கிரமமாக எழுந்து போய் சண்முகத்தை வாழ்த்தி விட்டு வந்தனர். நல்ல வேலையாக அழைப்பிதழில் பரிசுகள் நிராகரிக்கப் படும் என அச்சிடப்பட்டிருந்ததால் வாத்தியார் எதுவும் வாங்கி வரவில்லை. நான் வாங்குவதானால் ஒரு "சேட்"டைத்தான் வாங்கி வந்திருப்பேன். அது இவர்களது தராதரத்துக்கு சரிப்பட்டு வருமா? என மனதில் எழுந்த கேள்வியை நிராகரித்தவராய் அவரும் போய் தனது வாழ்த்துக்களை வாய்மூலம் தெரிவித்தார்.

அவரைக் கண்டதுமே இருக்கையிலிருந்து எழுந்த சண்முகம் கைகூப்பி அவரை வரவேற்று மரியாதை செய்தார். அங்கு கூடி

யிருந்தவர் எல்லோரது மனத்திலும் அது ஆச்சரியத்தை விளை வித்தது. அவர்களுக்குள்ளிருந்த அந்நியோந்நியம் மற்றவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

வாழ்த்திவிட்டு வருபவர்களை விருந்துபசாரத்துக்கு அழைத்துப்போயினர். விதம் விதமான உணவு வகைகள் மேசைகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவரவர் தமக்கு விருப்பமான உணவைப் பரிமாறி எடுத்துக் கொண்டு போய் விரும்பிய இடத்தில் இருந்து சாப்பிடலாம். இது தான் விதிமுறை. வாத்தியார் மற்றவர் களுடன் முண்டியடிக்காமல் ஒரு புறம் ஒதுக்கமாகப் போய் அமர்ந்து கொண்டார். அவரது கண்களோ மற்றவர்களை நோட்டமிட்டுக் கொண்டிருந்தது.

சிலருக்கு எதைச் சாப்பிடுவது என்பதே புரியவில்லை. நூடில்ஸ், இடியப்ப புரியாணி, கொத்து ரொட்டி தவிர இடியப்பம், பிட்டு, ரொட்டி என பட்டியல் நீண்டிருந்தது. மாமிசம், மரக்கறி என கறிவகைகளும் வெவ்வேறு மேசைகளில் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. சிலர் அங்கலாய்ப்புடன் எதை எடுப்பது என முடிவு செய்து கொள்ள முடியாமல் தத்தளிப்பதைப் பார்த்த வாத்தியார் தனக்குள் சிரித்துக் கொண்டார். “மனித மனம் தானே. தடுமாறும் இயல்பு தன்னாலே வரும்”

“ஐயா! ஏன் இருக்கிறீங்கள்? சாப்பிடேல்லையே?”

பரிசாரகள் ஒருவனது குரல் அவரை உலுப்பியது.

“ஐயா! என்ன வேணுமென்று சொல்லுங்கோ. போட்டுத் தாறன்”

“இல்லத்தம்பி. நான் எடுத்துச் சாப்பிடுறன்”

சொல்லிக் கொண்டே எழுந்து போனவர், தட்டை எடுத்து இரண்டு இடியப்பங்களையும், உருளைக்கிழங்கு பிரட்டலையும் பரிமாறிக் கொண்டு வந்து சாப்பிட்டார். அவர் அளவுடன் பரிமாறி உண்டு முடித்ததும் கையலம்பி வெளியே வந்தார். பரிசாரகன் “ஐஸ்கிறீம்” கொண்டு வந்து நீட்டினான்.

“வேண்டாம் தம்பி. நான் ஒரு வாழைப்பழம் சாப்பிடுகிறன்”

அனைவரும் உணவு உட்கொண்டு முடிந்ததும் அறிவித்தல் ஒன்று ஒலிபரப்பாகியது.

“அன்பர்களே! பாட்டுக்கச்சேரி நடைபெறப்போகிறது.

அனைவரும் இருந்து இசையை ரசிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்”

அறிவித்தலைக் கேட்டதும் எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு ஓடிப்போய் இருப்பதற்கு இடம் பிடிப்பதில் மும்முரமாய் இருக்க, வாத்தியார் மட்டும் வாயிலால் வெளியேறினார். தனது சைக்கிளை ஒருவாறு தேடிப்பிடித்து அதில் ஏறி மிதிக்கத் தொடங்கியதும்தான் அவருக்கு நிம்மதி வந்தது.

சைக்கிள் சக்கரங்கள் வீடுநோக்கி சுழன்று கொண்டிருந்தன. அவரது மனமோ பல்வேறு சிந்தனைகளில் உழன்று கொண்டிருந்தது. எத்தனை பெறுமதி மிக்க உணவு வகைகள். அவற்றை அளவாகப் பரிமாறி அருமையாகச் சாப்பிட்டிருக்கலாம். அவரசப்பட்டு அளவுக் கதிகமாக எடுத்து அவற்றை உண்ண முடியாமல் கொட்டிச் சிந்தி சீரழிப்பதைப் பார்க்க என் நெஞ்சு பொறுக்குதில்லை. பசித்தவனுக் குத்தானே உணவின் அருமை தெரியும். பாத்திரமறிந்து பிச்சை போட வேண்டும் என்று ஔவையார் சொன்னது எத்தனை தீர்க்கதரிசன மான கருத்து. இந்த வீண் ஆடம்பரத்தைத் தவிர்த்து யாரும் ஏழை எளியதுகள் அல்லது அனாதை இல்லத்திலுள்ளவர்களுக்கு சாப்பாடு போட்டிருந்தால்... அதுகளுடைய மனம் மட்டுமல்ல வயிறும் வாழ்த்தியிருக்கும். ஏன் சண்முகத்துக்கு தானும் தன் குடும்பமும் பசியால் வாடியது மறந்து போய் விட்டிருக்குமா?

அவரையறியாமலே அவரது கைகள் சைக்கிள் “பிரேக்” கைப் பிடிக்க நிதானத்துக்கு வந்தவராய் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தார். வீட்டு வாசலில் நின்றது சைக்கிள்.

# நெறி

புரையோடிய புண் ஒன்று அவளது நெஞ்சுக் குள்ளிருந்து "சுள்! சுள்!"ளென வலித்துக் கொண்டிருப்பதாக சாரதா உணர்ந்தாள். ஆற்ற முடியாத அந்த வலி அவளை உருக்கி வதைத்துக் கொண்டிருந்தது. வாய் திறந்து எவரிடமும் சொல்லி ஆறுதல் தேட முடியாத வாறு தானே தனது நெஞ்சில் காயத்தை ஏற்படுத்தி விட்டதாக ஒரு தவிப்பு தோன்றியபோது துடிதுடித்துப் போனாள், அவள்.

இப்போது நெஞ்சுக்குள் மட்டுமல்ல. வயிற்றுக் குள்ளும் ஏதோ புகையுமாப்போல் ஓர் உணர்வு கீறிட்டது. படுக்கையை விட்டு மெது வாக எழுந்தாள். இருளுக்குள் தடவியவாறே அருகிலிருந்த மேசையடிக்கு நடந்தாள். மேசை யில் அவள் இரவு படுக்கைக்குப் போகும் போது மூடி வைத்திருந்த தண்ணீர்ச் செம்பை தடவி எடுத்தாள். மடக்மடக்கென தண்ணீரைக் குடித்ததும் வயிற்றுப் புகைச்சல் அடங்கியது.

ஆனால்... மனப் புகைச்சல்... அது அடங்குமா... என்ன மெதுவாக நடந்து வந்து படுக்கையில் சரிந்தாள். அவளது இதயம் மகி மகி என்று துடித்துக் கொண்டிருப்பதை உணர முடிந்தது.

மகி அவள் ஈன்றெடுத்த தலைப்பிள்ளை. மூத்தவன் ஆணாகப் பிறந்து விட்டபோது அவளும் அவளது கணவனும் அடைந்த

மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லையெனலாம். அவனுக்குப் பின் அடுத்தடுத்து இரு பெண்பிள்ளைகளாய் பிறந்த போது அவர்களுக்கு வாழ்வாதாரப் பிரச்சினை தலைதூக்கியது. எப்பாடு பட்டாவது குடும்பத்தை நன்றாக வாழ வைக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத் தோடு சங்கரன் அரேபிய நாடு ஒன்றுக்கு புறப்பட்டுப்போய் விட்ட போது, தனித்து நின்று குழந்தைகளை வளர்க்க வேண்டிய பொறுப்பு அவளுடையதாகியது.

சாரதாவும் சளைக்கவில்லை. வேற்று நாட்டில் கணவன் வியர்வை சிந்தி உழைத்து அனுப்பிய பணத்தில் ஆடம்பரம் எதுவு மற்ற சிக்கன வாழ்க்கையை நடாத்தியது மட்டுமல்லாமல் மிகுதியை வங்கியில் சேமிப்புக் கணக்கில் போட்டு வைத்தாள். பிள்ளைகளான மகிந்தன், சுகிர்தா, சங்கீதா மூவருமே ஆர்வத்துடன் பாடசாலைக் கும், சக மாணவர்களைப் போல் பிரத்தியேக வகுப்பு களுக்கும் போய் வந்தனர். அப்பா அருகில் இல்லாததைத் தவிர வேறெந்தக் குறையும் அவர்களுக்கு இருக்கவில்லை. அடிக்கடி அப்பாவுடன் அலைபேசி யில் கதைத்துக் கொள்வார்கள்.

சில காலமாக மகிந்தனின் போக்கில் மாற்றமிருப்பதாக சாரதாவின் உள் மனதில் ஒரு சின்ன உறுத்தல் இருந்தது. கணவனுடன் அலைபேசியில் கதைக்கும் போது மெதுவாக அவனிடம் முறையிடும் தொனியில் கூறினாள்.

“முந்தியப் போல மகிந்தன் இப்ப சொல் வழி கேக்கிறா னில்லையப்பா. நான் என்ன சொன்னாலும் அதுக்கு மறுப்பு சொல்லுறது. அடிக்கடி அவனுக்கு கோபம் வேற வருகுது. எனக்கு என்ன செய்யிறதென்றே தெரியேல்ல”

சங்கரன் அவளது ஆதங்கத்தை புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. “சாரதா! உதுக்கேன் யோசிக்கிறீர். ஆம்பிளைப் பிள்ளையெண்டா கொஞ்சம் அப்பிடி இப்பிடித்தான் நடந்து கொள்ளுவினம். நீர்தான் தொட்டதுக்கெல்லாம் அவனைப் பேசாமல் கொஞ்சம் அனுசரனையாய் நடந்து கொள்ளப் பாரும். என்ன நான் சொல்லுறது விளங்குதோ?”

சாரதாவுக்கு கணவனது அறிவுரை பிடிக்க வில்லை.

“என்னவோ எனக்குத் தெரியாது. நீங்கள் தான் அவனுக்கு புத்தி சொல்ல வேணும் பேந்து நாளைக்கு என்ரை வளர்ப்புத்தான் சரியில்லை என்று என்னில பிழை சொல்லக் கூடாது. இப்பவே

சொல்லிப்போட்டன்"

மனைவி மூக்கினால் சிணுங்குவதை அவதானித்த சங்கரன் குரலில் சிறிது கடுமை காட்டினான்.

"மகி எங்கை? கூப்பிடும் அவனை நான் கதைக்கிறன்"

"அவன் இப்ப வீட்டில இல்ல. ரியூசனுக்குப் போயிட்டான். வந்தப்பிறகு சொல்லி விடுறன் அப்பா உன்னோட கதைக்க வேணும் என்று சொன்னவரெண்டு"

"சரி சரி நான் வேலைக்கு வெளிக்கிடப்போறன்"

அலைபேசியை அவன் அணைக்கு முன் சாரதா அவசரமாகச் சொன்னாள்.

"சரியப்பா. உங்கட உடம்பைக் கவனிச்சுக் கொள்ளுங்கோ"

"நீரும் தான். பை!"

"ம்!"

நீண்டதொரு பெருமூச்சு சாரதாவிடமிருந்து வெளிப் பட்டது. அதில் கனிவு, பாசம், ஏக்கம் எல்லாமே நிறைந்து கிடந்தது.

அந்தச் சம்பவத்தை இரைமீட்டவளது நெஞ்சில் மற்றுமொரு நினைவு துளிர்விட்டது. ஒரு நாள் காலைப் பொழுது வழமைபோல் பாடசாலைக்குப் பிள்ளைகள் புறப்பட்ட சமயம் சாரதா மூவரதும் சாப்பாட்டுப் பெட்டிகளை நிரப்பிக் கொண்டு வந்து புத்தகப் பைக்குள் வைக்கப் போகும் சமயம், எதிர்பாராத வகையில் மகிந்தன் பிரச்சினையைக் கிளப்பினான்.

"அம்மா! எனக்கு சாப்பாடு வேண்டாம். நீங்கள் காசைத் தந்தியளெண்டால் நான் கன்ரீனில வாங்கிச் சாப்பிடுவன். என்னுடைய பிரண்ட்ஸ் எல்லாம் அப்பிடித்தான் செய்யிறவை"

அவனது வார்த்தையைக் கேட்டதும் சாரதாவுக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

"அந்தளவிற்கு நீ பெரிய ஆளாகீட்டியோ. விருப்பமெண்டா சாப்பாட்டைக் கொண்டு போ. இல்லாட்டி பட்டினி கிடந்து காய் எனக்கொண்டும் கவலையில்லை"

வார்த்தைகளை அள்ளி வீசினாள். அவனோ சற்றும் கிறுங்க வில்லை. தனது புத்தகப்பையிலிருந்த சாப்பாட்டுப் பெட்டியை எடுத்து வெளியே வீசியெறிந்தான். கடகடவென்று புறப்பட்டு

*போயே விட்டான்.*

*சாரதா விக்கித்து நின்றவள், தன்னைப் பார்த்து பயப்பீதியுடன் நின்றிருந்த சுகிர்தா, சங்கீதாவை பாடசாலைக்கு அனுப்பி வைத்தாள். உடனே இந்த விடயத்தை கணவனிடம் முறையிட வேண்டும் என மனம் துடித்தது. எனினும் முடியவில்லை. அவளது கணவன் வேலை செய்யும் இடத்தில் அலைபேசி பாவிக்க முடியாது. அங்கு கட்டுப்பாடுகள் அதிகம். எனவே கணவன் வேலை முடிந்து அறைக்கு வந்து சேரும் வரை காக்க வேண்டியதாயிற்று.*

*மனமோ படபடத்துக் கொண்டிருந்தது. இனி மேலும் மகிந்தனை தனது கட்டுக் கோப்புக்குள் வைத்துக் கொள்ள முடியும் என அவளுக்குத் தோன்றவில்லை. இப்பொழுது சங்கரன் செய்து கொண்டி ருக்கும் வேலைத்திட்டத்தின் ஒப்பந்த காலம் முடி வடைய இன்னும் இரண்டு வருடங்கள் இருக்கின்றன. அவன் வேலை முடிந்து ஊருக்கு வரும்வரை அவளால் தனது குடும்பத்தை ஒழுங்காக நிர்வகிக்க முடியும் என கருதியிருந்த எண்ணத்தில் இடி விழுந்து விட்டதாக அவளது மனம் தவித்தது. எப்படியாவது சமாளித்து இன்னும் இரண்டு வருடங்களையும் கழித்துவிடலாம் என்ற மனத் திடத்தை ஏற்படுத்திக் கொண்டவள், சமையலைக் கவனிப்பதற்காக அடுப்படியை நோக்கி நடந்தாள்.*

*பாடசாலை விட்டு பிள்ளைகள் வீடு வந்து சேர்ந்தார்கள். சாரதா எதுவித மனக்களங்கமும் இல்லாதவளாய் மகிந்தனை சாப்பிட அழைத்தாள்.*

*“மகி! சாப்பாடு போட்டு வைச்சிருக்கிறன். வந்து சாப்பிடு ராசா”*

*அம்மா, அண்ணாவுக்கு முக்கியமளித்து அவனை மட்டும் சாப்பிடக்கூப்பிட்டது பெண்பிள்ளைகளுக்குப் பிடிக்கவில்லை. இருந்த போதிலும் அவர்கள் அதை சகித்துக் கொண்டவர்களாய் வந்து சாப்பிடத் தொடங்கினார்கள். மகிந்தன் மட்டும் வரவில்லை. மீண்டும் சாரதா குரல் கொடுத்தாள்.*

*“மகி! வந்து சாப்பிடு ராசா. இஞ்சை அம்மா உனக்காக காத்துக் கொண்டிருக்கிறன்”*

*அங்கு வந்து எட்டிப் பார்த்த மகிந்தன் பொழியத் தொடங்கினான்*

*“எனக்கு உங்கட சாப்பாடு வேண்டாம்.. பிரண்ட்ஸ் எனக்கு*

ரோலும், வடையும் வாங்கித் தந்தவை. நானும் பிச்சைக்காரன் மாதிரி அவை வேண்டித்தந்ததை சாப்பிட்டு வந்திருக்கிறன். உங்கட சாப்பாட்டை வைச்சு நீங்களே சாப்பிடுங்கோ"

மகனின் வார்த்தைகள் ஈட்டியாகப் பாய்ந்து அவளது உள்ளத்தைக் காயப்படுத்த வாயடைத்து நின்றாள் சாரதா. ஆற்றாமை அவளது கண்களில் நீராய் வடிந்தது. எத்தனை நேரம்தான் அப்படியே மெய்மறந்து இருந்தாளோ... பிள்ளைகளின் குரல் கேட்டு அவள் சுய நினைவுக்குத் திரும்பினாள்.

"அம்மா! நாங்கள் ரியூசனுக்குப் போட்டு வாறம்"

"கொண்ணை எங்கை?"

மெதுவான குரலில் வினவினாள்.

"அவரும் ரியூசனுக்குப் போட்டார்"

கன்னங்களில் காய்ந்திருந்த கண்ணீரை கைகளால் துடைத்துக் கொண்டு எழுந்து போனாள்.

"இப்ப அவர் வேலையால் வந்திருப்பார். இது தான் தருணம் எடுத்து அவருக்கு இஞ்சை நடக்கிற தெல்லாவற்றையும் சொல்ல வேணும்" மனம் நினைத்துக் கொண்டது.

அலைபேசியை எடுத்து கணவனுடன் தொடர்பு கொண்டவள், மளமளவென்ற மனதில் உள்ளதெல்லாவற்றையும் கொட்டித் தீர்த்துவிட்டுத் தான் ஓய்ந்தாள். சங்கரன் தனக்கு சார்பாக எதையாவது சொல்லுவான் என எதிர்பார்த்தவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அவன் சர்வ சாதாரணமாக பதிலளித்தான்.

"சாரதா! மகிந்தன் என்ன இன்னும் சின்னப் பிள்ளையே. வாற ஆவணியில அவனுக்கு பதினைந்து வயசாகுது. அவனுக்கும் சிநேகிதப் பொடியங்களோட சேரந்து கன்ரீனில சாப்பிட வேணும் என்று ஆசை இருக்கலாம். அதுக்கு நீர் குறுக்கை நிற்காதையும் சாப்பாடு கட்டிக் குடுத்து மினக்கெடாமல் ஒவ்வொரு நாளும் காசைக் குடுத்துவிடும். அவன் விரும்பினதை வாங்கி சாப்பிடட்டும்."

"இதென்னப்பா உங்கட கதை. பிள்ளை கெட்டுப் போறதுக்கு நீங்களே வழி சொல்லிக் குடும்பியள் போல. இஞ்சை இப்ப ஊர் உலகமே கெட்டுப்போய் கிடக்கு. உது சரியான பிழை. இஞ்சை நடக்கிற சீர்கேடுகளை நீங்கள் அறிய மாட்டியள். என்ரை பிள்ளை நல்லவனாய் இருக்க வேணுமெண்டுதானே நான் விரும்புவன். அது

*ஏன் உங்களுக்கு விளங்குதில்ல”*

*தன் மனதில் உள்ளதை அவனுக்கு புரியவைக்க முயன்றாள். அவளுக்கு கிடைத்ததோ தோல்விதான். சங்கரனுக்கு பிள்ளைப் பாசமா அல்லது தான் இத்தனை தூரம் கடல் கடந்து வந்து பாடு பட்டு உழைப்பது பிள்ளைகளுக்காகத்தானே என்ற எண்ணமோ… யார் கண்டது.*

*இன்னொரு நாள் சாரதா தன்னை மறந்து கதைப்புத்தக மொன்றில் லயித்திருந்த சமயம் சங்கீதா வந்து அவளது காதருகில் கிசுகிசுத்தாள்.*

*“அம்மா! அண்ணா பாக்கு வைச்சு சாப்பிடுறான். நான் சொல்லுறது பொய் என்றால் வந்து பாருங்கோவன்”*

*அவளது கையைப்பிடித்து இழுத்தாள். இதற்கிடையில் சுகிர்தாவும் வந்து அவளுடன் இணைந்து கொண்டாள்.*

*“ஓமம்மா. அன்றைக்கும் அவன் சாப்பிட்டதை நான் கண்ணால கண்டநான். நான் உங்களிட்ட சொல்லப் போறன் என்று சொல்ல அவன் என்ரை தலையில் குட்டிப் போட்டான்”*

*“அவனை நான் கவனிச்சுக் கொள்ளுறன். இப்ப நீங்கள் போய் விளையாடுங்கோ”*

*சமாதானப்படுத்தி அவர்களை அனுப்பியவளின் மனம் துணுக்குற்றது. அன்றைக்கு பக்கத்து வீட்டு கமலாக்கா சொன்னது ஞாபகத்தில் வந்தது.*

*“பள்ளிக்கூடத்துக்கு தனிய பிள்ளையளை அனுப்ப யோசினை யாக் கிடக்கு. போற வழியில் இருக்கிற கடையில எதுவோ பாக்கு விக்கிறாங்களாம். அதை வாங்கிச் சாப்பிட்டா தினமும் சாப்பிடச் சொல்லுமாம். பாக்கில ஏதோ போதை கலந்திருக்காமடி பிள்ளை. அது பிள்ளையின்ரை மூளையைப் பாதிச்சுப் போடுமாம். உங்கினை கதைச்சினம். நாங்கள் பயந்து பிள்ளையளை மோட்டச் சைக்கிளிலை தான் கொண்டு போய் விடுறதும் ஏத்துறதும். அந்தளவுக்கு காலம் கெட்டுப் போய்க்கிடக்கு. நீயும் கவனமாய் இருந்து கொள்.”*

*அதையும் இதையும் சம்பந்தப்படுத்திப் பார்த்தவளுக்கு நெஞ்சு பகீரென்றது. நெருக்கமாக மகிந்தனது செயற்பாடுகளை அவதானிக்கத் தொடங்கினாள். பிரத்தியேக வகுப்புகளுக்கு அவன்*

சமூகமளிப்பதில்லை என ஒரு செய்தி அவளது காதுகளுக்கு நாரசமாக வந்து விழுந்தது. இப்போதெல்லாம் அவள் கணவனிடம் மகிந்தனைப்பற்றிய விடயம் எதனையும் சொல்வதில்லை. சொல்லித் தான் என்ன பயன். அது விழலுக்கு இறைத்த நீராயிற்றே

நாளுக்கு நாள் வீட்டில் மகிந்தனது பிரச்சினை அதிகமாகிக் கொண்டே போனது. சில்லறை சில்லறையாக காணாமல் போய்க் கொண்டிருந்த பணம் அவளது அலுமாரி லாச்சி வரை நெருங்கி விட்டது. வெளியில் சொல்லிக்கொள்ள முடியாமல் அவள் அனலிடைப் புழுவாகத் துடித்தாள். கணவனிடம் இறுதியாக ஒன்று சொன்னாள்.

“என்னால இனி பொறுக்க முடியாதப்பா. ஒன்றில் அவன் திருந்த வேண்டும். அல்லது நான் உயிரோட இருக்கக்கூடாது.”

சங்கரனது பொறுமையும் எல்லை மீறி விட்டது.

“சாரதா! அவன் எல்லை மீறிப் போய்விட்டதை என்னால் இப்போது தான் உணர முடிகிறது. அவனைத் திருத்துவதற்காக நீர் என்ன நடவடிக்கை எடுத்தாலும் நான் கேட்கப்போறதில்லை. ஆனால் ஒன்று மட்டும் சொல்லுறன் நீர் தப்பான முடிவெடுத்து என்னையும் பிள்ளைகளையும் அந்தரிக்க விட்டிடாதையும், உம்மைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுறன்”

இருவரது கண்களும் குளமாகியது.

சாரதா தீவிரமாகச் சிந்தித்தாள். அவளுக்கு வேறு வழி தெரிய வில்லை. சரியான சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தவள் ஒரு நாள் மகிந்தனை காவல்த்துறையிடம் காட்டிக் கொடுத்து விட்டாள். அவனுடன் சேர்த்து இரு நண்பர்களையும் கைது செய்து கொண்டு போனார்கள். தீவிர விசாரணையின் பின் அவர்கள் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பப்பட்டார்கள். மாணவப்பருவமும் வயதும் அனு கூலமாயிருந்த படியால் அவர்களுக்கு சிறைத் தண்டனையிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டது. மகிந்தன் திருந்தி ஒரு நல்ல பிரசை யாக வந்து கல்வியைத் தொடருவான் என்பது அவளது அசைக்க முடியாத நம்பிக்கை.

“இவளும் ஒரு தாயே” என சிலர் அவளைப் பழித்தார்கள். ஒரு தாயாக தன் பிள்ளையை நன்றாக வாழவைப்பதற்கு இதுதான் சிறந்த வழி என அவள் கருதினாள். உண்மையும் அதுதான். தவறு எங்கு நடந்தாலும் அது திருத்தப்பட வேண்டும் பிள்ளைகள் தீய வழி யில்

போய் கெட்டு அழிவதை கண்டும் காணாமலும் மறைத்து வைக்கும் பெற்றோரின் செய்கை சுய கௌரவம் என்ற போர்வைக்குள்ளிருந்து ஒருநாள் அம்பலத்துக்கு வந்துதான் தீரும். இதனால் பாழாய்ப் போவது எமது இளம் சந்ததிதான்.

மொத்தத்தில் அற்ப ஆதாயத்திற்கு ஆசைப்பட்டு போதைப் பொருட்களை விநியோகிக்கும் வியாபாரிகள் தங்களது தவறை உணர வேண்டும். எமது இளம் சந்ததியினரை சீரழிக்க உறுதுணையா யிருப்பது மன்னிக்க முடியாத மகாபாவம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

சாரதாவின் சிந்தனை சுற்றிச் சுழன்று ஒரே திசையில் வட்ட மடித்துக் கொண்டிருக்க கடல் கடந்து வாழும் சங்கரனது நினைவோ மகிந்தன் சரியான இடத்தில் தானே சேர்க்கப்பட்டிருக்கிறான். தண்டனைக் காலம் முடிந்துதும் நல்லதொரு பிள்ளையாக மீண்டு வந்திடுவான்.

காலம் அவனுக்கு நல்ல பாடத்தைக் கற்றுக் கொடுக்கும் என நினைத்து தன்னைத்தானே தேற்றிக் கொண்டாள்.

“ஹொய்ங்! என நுளம்பொன்று சாரதாவின் காதில் ரீங்கார மிட்டு அவளது நினைவுகளை கலைத்தது.

“ஐயோ என்ரை பிள்ளை நுளம்புக்கடியில கிடந்து அவதிப் படுறானோ போர்த்திக் கொண்டு படுத்திருப்பானோ...” பெற்ற மனம் கிடந்து தவித்தது. என்ன கஷ்டத்தைப் பட்டாலும் என்ரை பிள்ளை நெறி தவறாதவனாய் திருந்தி வந்து என்னை “அம்மா!” என்று கூப்பிட்டு அன்பு பாராட்ட வேண்டும்.

நினைவு தந்த இதமான வருடலில் அவள் கண்ணயர்ந்து போனாள்.

# சுவர்முள்

நடுநிசி நேரம் மழை சோ வென பொழிந்து கொண்டிருந்தது. இதமான குளிர்காற்றின் தழுவலால் போர்வைகளுக்குள் தம்மை நுழைத்துக் கொண்டவர்களாய் அனைத்து மக்களும் மெய் மறந்து துயின்று கொண்டிருந்தனர். மாதவி மட்டும் அதற்கு விதிவிலக்கானவளாய் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். அவளை அணைக்க மறுத்த நித்திராதேவி எங்கேயோ ஓடி ஒளிந்து கொண்டு விட்டாள்.

இன்று திடீரென அவளை உலுப்பிக் கொண்டிருக்கும் மன உளைச்சலுக்கு காரணம் அன்று அவள் படித்த வாரமலர் தான். கடந்த முப்பது வருடங்களாக அவள் தன் ஆழ் மனதில் புதைத்து வைத்திருந்த வேட்கையை அந்த பத்திரிகைச் செய்தியும் அதில் பொறிக்கப்பட்டிருந்த நிழற்படமும் தான், கிளறி விட்டிருந்தன.

அவளையறியாமலே அவளது மனம் இளமைப்பருவத்தை நோக்கித் தாவியது.

அப்போது மாதவி பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டில் பயின்றுகொண்டிருந்தாள். அங்கு நடைபெறும் நிகழ்வுகளுக்கெல்லாம் இறுதி ஆண்டில் பயிலும் சிவசங்கர் என்ற மாணவன் தலைமை தாங்குவது வழக்கம். மேடையில் அவன் அடிக்கடி நடத்தும் சொற்பொழிவைக் கேட்டு அவள் மெய்மறந்திருக்கிறாள். அவனுடைய நாவன்மையை எண்ணி நயந்திருக்கிறாள்.

*சந்தர்ப்பம் அவளையும் ஒருநாள் மேடையேற வைத்தவிட்டது.*

*சிறு வயதிலிருந்தே சங்கீதத்தில் ஆர்வம் காட்டிய மாதவியை அவளுடைய அப்பா, பிரத்தியேக வகுப்புகளுக்கு அனுப்பி அவளுடைய இசை ஞானத்தை வளர்த்திருந்தார். மாதவி கந்த சாமியின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்வு ஆரம்பமாகும் என்ற அறிவிப்பாளரின் வார்த்தைகள் செவிகளை வந்தடைய படபடக்கும் இதயத்துடன் மாதவி மேடையேறினாள். மனத்தில் திடத்தை வரவழைத்துக் கொண்டு ஒலிவாங்கியின் முன் போய் நின்றதும், கணீரென ஒலிக்கத் தொடங்கியது அவள் குரல்.*

*நிசப்தமான மண்டபத்தை நிறைந்த அந்த தேனிசை மழையைப் பொழிந்து கொண்டிருந்த குரலுக்குரியவளைப் பார்த்து விட வேண்டும் என்ற ஆவலுடன் அங்கு கூடியிருந்தவர்கள் பார்வை யைச் சுழற்ற, பாடி முடித்த மாதவியோ தற்செயலாக தனது பார்வையை வலது புறம் திருப்பினாள்.*

*என்ன அதிசயம் அங்கு நின்றிருந்த சிவசங்கர் தனது கடைக் கண்ணால் அவளையே விழுங்கிக் கொண்டிருந்தான். எதிர்பாராத இந்த கண்களின் திடீர் சந்திப்பினால் ஒரு கணம் இருவருமே நிலை குலைந்து போயினர். மின்சாரம் பாய்ந்த தனது மேனியை ஒருவாறு சுதாகரித்துக் கொண்டவளாய், மேடையை விட்டு இறங்கி நிலைமை யைச் சமாளித்தவள், மாதவி தான்.*

*ஓய்வு கிடைக்கும் சமயங்களில் வாசிகசாலையில் தான் தனது பொழுதைக் கழிப்பாள், மாதவி. தமிழை பிரத்தியேக பாடமாக பயிலும் அவளுக்கு இலக்கியப் புத்தகங்களைத் தேடி அவற்றை ஆராய்ந்து ஆய்வு செய்யவேண்டிய அவசியம் இருந்தது. அன்றும் அப்படித்தான் ஒரு ஆய்வுக்காக “கம்பராமாயணம்” அவளுக்குத் தேவைப்பட்டது. வாசிகசாலையிலுள்ள புத்தக அடுக்கில் அவள் ஒவ் வொரு புத்தகமாகத் தேடி ஆராய்ந்து கொண்டிருந்தாள். “சட்”டென அவளது கண்களில் “கம்பராமாயணம்” என்ற எழுத்துக்கள் பொறி படவே, சடாரென அந்தப் புத்தகத்தை அடுக்கிலிந்து எடுப்பதற்காக இழுத்தாள்.*

*என்ன அதிசயம். அதே புத்தகத்தை எதிர்முனையிலிருந்து யாரோ இழுத்துக் கொண்டிருப்பதை அவளால் உணர முடிந்தது. தலையை உயர்த்தி எதிர்த்திசையை நோக்கியவளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அது வேறு யாருமல்ல. சிவசங்கரே தான்.*

*"ஸாரி!"*

*அவளையறியாமலே வாய் முணுமுணுத்தது. அவளைப் பார்த்து முறுவலித்த சிவசங்கர், "மாதவி! நீங்களே எடுத்துக் கொள்ளுங்கோ. நான் அடுத்த முறைக்கு எடுக்கிறன். இப்ப எனக் கொன்றும் அவசரமில்ல."*

*சிவசங்கர் அவளுக்காக அந்தப் புத்தகத்தை விட்டுக் கொடுத்த தும் மாதவிக்கு அவன் மீதுள்ள அபிமானம் அதிகரித்தது. அதன் விளைவாக அவர்கள் இருவரும் அடிக்கடி வாசிகசாலையில் சந்தித்து அளவளாவத் தொடங்கினர். இலக்கிய நூல்களை அலசி ஆராய்ந்து, தமது விமர்சனங்களையும் வெளியிட்டு பொழுது போக்குவதில் இனிமையுற்றனர்.*

*காலப்போக்கில் அவர்கள் இருவரது இதயங்களிலும் காதல் எனும் அரும்பு துளிர்விடத் தொடங்கிய போது சிவசங்கர் தனது பட்டப்படிப்பை நிறைவு செய்து கொண்டு பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறும் வாய்ப்புக் கிட்டியது. இத்தனை காலமும் மாதவியைத் தனது நண்பியாகக் கருதி பழகி வந்த சிவசங்கருக்கு அப்போது தான் உறைத்தது. தான் அவள் மீது கொண்டிருப்பது காதல் தான் என்பதை அவளது உணர்வுகள் உணர்த்தியபோது அவன் தயங்கவில்லை. நேரிடையாக அவளிடம் போய் தனது காதலை வெளிப்படுத்தினான்.*

*நாணத்துடன் தலை குனிந்து நின்றவளின் மௌனமே அங்கு சம்மதமானது. பிறகென்ன இவரது இதயங்களிலும் முளைவிட்ட அரும்பை, வார இறுதி நாட்களில் பொது நூலகத்தில் சந்திப்பதன் மூலம் பயிராக வளர்த்து விட்டனர். இனிமையான அந்த நாட்களின் நினைவுகள் பசுமையாக இன்றுவரை அவர்களது இதயத்தில் நிலைத்து நிற்பவை.*

*சிவசங்கர் ஆசிரிய நியமனம் பெற்று நாட்டின் தென் பகுதிக்குப் போய்விட்டாலும் வார இறுதி நாட்களில் ஊருக்கு வந்து அவளை சந்திக்கத் தவறுவதில்லை. வருடங்கள் சில ஓடி மறைந்தன. மாதவியும் தனது கல்வியைப் பூர்த்தி செய்துவிட்டு வடபகுதி யிலுள்ள ஒரு பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரியத் தொடங்கினாள்.*

*இதற்கிடையில் திருமண வயதை எட்டிவிட்ட சிவசங்கருக்கு வீட்டில் பெண் பார்க்கும் படலம் ஆரம்பமாயிற்று. இதனையறிந்த*

*சிவசங்கர் தனது காதலை பெற்றோரிடம் வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. மாதவியிடம் எந்தக் குறையும் இருப்ப தாக அவனுக்குத் தெரியவில்லை. படிப்பில்லையா... அழ கில்லையா... பண வசதியில்லையா... அந்தஸ்த்தில்லையா... அவளுடைய அப்பா அரசாங்கத்தில் பெரிய பதவியிலிருக்கிறார். இலகுவில் வீட்டாரின் சம்மதம் கிடைத்துவிடும் என மனப்பால் குடித்தவனுக்கு கிடைத்ததே அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி.*

*மாதவியின் குடும்பத்தைப்பற்றி விசாரிக்கப்போய் வந்த மாமா சொன்ன தகவல் நிலைமையை முற்றாக மாற்றியமைத்து விட்டது. அம்மா பச்சைக்கொடி காட்டுவாள் என எதிர்பார்த்திருந்த சிவசங்கரின் மீது அவள் போர்க்கொடி தொடுக்க முனைந்தாள்.*

*"தம்பி! நீ என்ன நினைச்சுக் கொண்டிருக்கிறாய் உன்ரை மனதில நாங்கள் யார்? அவையள் ஆர்? கேவலம் நாங்கள் கை நனைக்கக்கூடிய இடமே அது. எக்கணம் எங்கட ஆக்கள் அறிஞ்சின மெண்டால் எங்களையும் தள்ளி வைச்சிடுவினம் கண்டியோ சம்மந்தம் செய்யிறது... சாதி சனம், குலம் கோத்திரம் பாத்துத்தான் செய்ய வேணும். உனக்கு வாழ்க்கை என்றதுகேலிக்கூத்தாய் தெரியுதோ."*

*அம்மா பொரிந்து தள்ளிக் கொண்டே போனாள்.*

*அவனுக்கோ கண்கள் இருண்டு கொண்டு வந்தன. மெதுவாக அருகிலிருந்த கதிரையில் அமர்ந்து கொண்டான். விறைத்த தலையை இரு கைகளாலும் பொத்திப் பிடித்துக் கொண்டவன், நிமிர்ந்து அம்மாவைப் பார்த்துக் கூறினான்.*

*"அம்மா! தெரிந்தோ தெரியாமலோ நான் அவளை விரும்பிப் போட்டன். வாழ்ந்தால் நான் அவளோட தான் வாழுவன். இல்லாட்டி..."*

*அவன் சொல்லி முடிப்பதற்குள் அம்மாவின் வாயிலிருந்து எள்ளும்கொள்ளும் வெடித்தது.*

*"போடா போ. போய் நீ அந்த சாதியில குறைஞ்சவளைக் கலியாணஞ் செய்து நல்லாய் வாழ்ந்திடுவியோ என்று நானும் பாக்கிறன். நீ அப்பிடிப் போயிட்டால் உன்ரை தங்கச்சியவை இரண்டு பேரையும் நான் ஆருக்கு கட்டிக்குடுக்கிறது. யார்தான் வருவினம். நான் அதுகளை ஆத்திலை குளத்திலை தள்ளிப்போட்டு நானும் விழுந்து சாகிறன்."*

அம்மாவின் கண்கள் சொரிந்த நீர் அவனது மனதை சலவை செய்யத் தொடங்கியது. இரவு முழுவதும் அவனது மனம் என்ற நீதிமன்றத்தில் விசாரணை தீவிரமாக நடைபெற்று இறுதியில் ஒரு தெளிவான முடிவுக்கு வந்தான். விளைவு....

வார இறுதியில் அவன் மாதவியைச் சந்தித்த போது தனது உள்ளக் கிடக்கையை ஒருவாறு அவள் முன் போட்டு உடைத்து விட்டான்.

சற்றும் எதிர்பாராத இந்த ஏமாற்றம் நிறைந்த வார்த்தைகள் அவளது இதயத்தின் ஆழத்தில் ஒர் கூர்முள்ளாகப் பதிந்துவிட வேதனையில் துடிதுடித்துப் போனாள், மாதவி. வேதனையின் வடிகாலாக கன்னத்தில் உதிர்ந்து கொண்டிருந்த கண்ணீரையும் துடைக்க லாயக்கற்றவளாக அமர்ந்திருந்த மாதவியை சிவந்த கண்களுடன் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான், சிவசங்கர். கைகள் அவளது கண்ணீரைத் துடைக்கவென விழைந்த போதிலும் மனதை கட்டுப்படுத்திக் கொண்டான்.

“அவளுடைய கண்ணீரைத் துடைப்பதற்கு எனக்கென்ன உரிமை இருக்கிறது?“

தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

அன்று அவர்களது கடைசிச் சந்திப்பு

“மாதவி! வாழ்க்கையில் நான்காதலித்த ஒரே பெண் நீர் தான். என்னுடைய இதயத்தில் உம்மைத் தவிர வேறு எவருக்கும் இடமில்லை.”

அழுது ஓய்ந்த மாதவியின் வாயிலிருந்து விரக்தியுடன் வந்தன வார்த்தைகள்.

“மற்றவர்கள் வாழ்க்கையில் ஒன்று சேர்ந்து வாழுவார்கள். நாங்கள் பிரிந்து வாழப்போகிறோம். வேறுபாடு அதுதான்”

வலிந்து முகத்தில் சிரிப்பை வரவழைத்தவாறே இருவரும் பிரிந்தனர்.

வேதனையில் தோய்ந்த அன்றைய இரவு மாதவியின் மனதில் நீண்ட சோதனையை ஏற்படுத்தியது. சாதி இரண்டென்று ஔவை யார் சொன்ன வாக்கு பொய்யானதா. மனித குலத்தில் சாதிஎன்ற பிரிவினை யாரால் வகுக்கப்பட்டது. அனைவரது உடலிலும் ஓடும் இரத்தத்தின் நிறம் சிவப்புத்தானே. கடவுளே! ஏன் எங்கள் இருவரதும்

தூய்மையான காதலைப் பிரித்தீர்கள்?

வெந்து மாய்ந்தது மனம். அதே சமயம் அவளது மனத்தில் மற்றுமொரு சம்பவம் நிழலாடியது. அவளுடன் ஏ.எல் வகுப்புவரை ஒன்றாகப் படித்த வசந்தனை சென்ற வாரம் கோயில் திருவிழாவில் சந்தித்திருந்தாள், அவள்.

“மாதவி! மீற் மை வைப் மோனிக்கா”

வசந்தன் கூற, அந்த வெள்ளை இனப் பெண்ணும் சிநேக பூர்வமாக கையை நீட்டினாள். அவளது கையைப் பற்றிக் குலக்கிய வாறே மாதவியும் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தாள்.

வசந்தன் ஏ.எல் படிப்பு முடியுமுன்னரே அவனது மாமாவின் அனுசரணையுடன் அவுஸ்திலேரியாவுக்கு போய் விட்டான். அவர்களது கலப்புத் திருமணத்தை இந்த சமூகம் ஏற்றுத்தானே இருக்கிறது. ஒருவேளை நானும் சங்கரும் இந்த சமூகத்தை எதிர்த்து நிற்கத் திராணியற்றவர்களாய் போனதால்த்தான் இந்த பிரிவினை வாழ்க்கை எம்மை ஆட்கொண்டதோ…

மாதவியின் எண்ணங்கள் இப்படிச் சுழன்று கொண்டிருக்க… அங்கே சிவசங்கரின் மனதில் ஒரு பெரும் பூகம்பமே உருவாகி அவனை ஆட்டிப் படைத்தது.

அவனுடைய அப்பா அவன் சிறு பையனாயிருக்கும் போதே இறந்து போனார். அம்மாதான் ஆசிரியத் தொழிலையும் கவனித்துக் கொண்டு அவனையும் தங்கைமார் இருவரையும் வளர்த்தாள். இந்தக் குடும்பத்தில் மூத்தவனாகப் பிறந்த நான் அதற்குப் பிரதியுபகாரமாகச் செய்ய வேண்டிய கடமை எனது தங்கைமார் இருவரையும் நல்ல இடத்தில் வாழவைப்பது தான். அதை நிறைவேற்றுவதற்காக எனது வாழ்வையே நான் தியாகம் செய்ய தீர்மானித்து விட்டேன். ஆனால் மாதவி…

மாதவியின் அப்பாவுக்கு பதவி உயர்வுடன் வேலை மாற்றம் கிடைத்து தலை நகருக்குப் போய் விட மாதவியும் இடமாற்றம் பெற்றுக் கொண்டுபெற்றோருடன் போய்விட்டாள். ஊரில் இருந் தால் சிவசங்கரை சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடுமோ என்ற ஆதங்கமும் இருந்தது தான் காரணம். இந்த முப்பது வருடங் களில் அவள் கற்பனை உலகில் சஞ்சரித்துநிறையவே இலக்கியப் படைப்புக்களை உருவாக்கியிருக்கிறாள். அதில் மன அமைதியும் அடைந்திருக்கிறாள். ஆனால்… திருமண வாழக்கையை ஒதுக்கித்

*தள்ளி விட்டவளை எண்ணி யெண்ணி ஏக்கத்துடன் பெற்றவர்கள் இருவருமே ஒருவர் பின் ஒருவராக போய்ச் சேர்ந்துவிட்டனர். எனினும் மாதவி தனது தங்கைக்கும், தம்பிக்கும் நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுத்ததுடன் ஒரு தாயின் இடத்திலிருந்து அவர்களைக் கவனித்து வருகிறாள்.*

*முப்பது ஆண்டுகள் புரண்டு விட்டன. மாதவி ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டாள். வெள்ளவத்தையில் அமைந்துள்ள சொந்த வீட்டில் ஒரு தனி மரமாக மாதவி. அவளுடன் அவளது தங்கையின் மகளான கலைவாணி தங்கியிருந்து தனது மருத்துவக் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறாள்.*

*இத்தனை காலமும் அமைதியாக வாழ்ந்து கழித்தவளின் மனதில் இன்று அவளது பார்வைக்கு கிட்டிய சிவசங்கரின் படம் சலனத்தை ஏற்படுத்தி விட்டது. வயதிற்கேற்ற முதுமை இழை யோடிய முகத்தோற்றம் அவளை சஞ்சலப்படுத்தியது.*

*“முப்பது வருடங்களுக்குப் பிறகும் அவர் கட்டிளம் காளையாகவா இருப்பார்?”*

*தன்னைத்தானே கேட்டுக் கொண்டதுடன் நின்று விட வில்லை. படுக்கையிலிருந்து எழுந்தவள் நேராக நிலைக்கண்ணாடி யின் முன் நின்று தனது தோற்றத்தை ஒருகணம் உற்றுப்பார்த்தாள். கண்களின் கீழ் கருவளையம் தோன்றியிருப்பதை அவதானித்த வளுக்கு சற்று ஆறுதலாயிருந்தது.*

*“நானும் கிழவியாகத்தானே போய்விட்டேன்”*

*கைகளிலுள்ள தசையைக் கிள்ளிப் பார்த்தாள். இறுக்கம் தளர்ந்து சோர்ந்து போயிருந்ததை உணர்ந்தவளது வாய் முணு முணுத்தது.*

*“எங்கள் இருவருக்குமே வயது போய்விட்டது.”*

*மனதில் மற்றுமொரு விடயம் தோன்றி அவளைப் பெருமைப் படுத்தியது. போரினால் பாதிக்கப்பட்ட அனாதைச் சிறுவர்களுக் கென ஒரு இல்லம் அமைத்து அதனை நிர்வகித்து வருவதாக செய்தி யில் பிரசுரிக்கப்பட்டிருந்தது தான் அதற்கு காரணம். ஓடிப்போய் தலைமாட்டில் வைத்திருந்த பத்திரிகையை எடுத்து அதன் முன் பக்கத்தை ஆராய்ந்தவளது கண்கள் முன் வானளவாக உயர்ந்து நின்றான், சிவசங்கர்.*

*அவளது சிந்தனைச் சிதறல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்குமாப் போல் "பெரியம்மா!" என அழைத்துக் கொண்டே கலை வாணி வந்தாள்.*

*"இண்டைக்குப் பகல் பத்துமணிக்கு கல்யாண வீட்டுக்குப் போக வேணும். ஞாபகமிருக்குதா?"*

*அப்போது தான் மாதவிக்கு உறைத்தது. தன்னுடன் கற்பித்த ஆசிரியை சரளாவின் மகளுக்கு இன்று சரஸ்வதி மண்டபத்தில் திருமணம். திருமணத்திற்குப் போகாவிட்டால் சரளாவிடம் தப்ப முடியாது. அதே சமயம் கலைவாணியின் சிநேகிதியின் அக்காதான் மணப்பெண். எனவே இருவருமாக ஒன்பது மணிபோல் ஆட்டோ ஒன்றில் புறப்பட்டுப் போயினர்.*

*மண்டபமே சனத்திரளால் நிறைந்திருந்தது. மாதவியும் கலைவாணியும் தங்களுக்கென ஒரு இடத்தைத் தேடிப்பிடித்து அதில் அமர்ந்து கொண்டனர். சமய சம்பிரதாயங்கள் நிறைவேறி திரு மாங்கல்ய தாரணம் நடைபெற்றதும் மணமக்களை வாழ்த்தும் நிகழ்வு அமோகமாக ஒரு புறம் நடைபெற, மறுபுறத்தில் விருந்துப சாரம் இடம் பெற்றுக் கொண்டிருந்தது.*

*மாதவியும் கலைவாணியும் தங்களுக்கு தேவையான உணவை தட்டில் பரிமாறிக் கொண்டு போய் வசதியாக ஓரிடத்தில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு நேரெதிர் வரிசையில் அமர்ந்திருந்த சிவராதாவை அப்போது தான் மாதவி அவதானித்தாள். சிவராதா, சிவசங்கரின் தங்கை மாதவியுடன் முன்னொரு காலத்தில் ஒரே பாடசாலையில் கூடப்படிப்பித்தவள்.*

*சட்டென மாதவியின் மனத்தில் ஒரு மின்னல் தோன்றி மறைந்தது. சாதி, சனம், சபை, சந்தி என்றெல்லாம் வாயடிக்கிறார் களே. அந்த நிலை மலையேறிப் போய்விட்டதா?....*

*அவளது மனதில் ஆழத் தைத்திருந்த கூர்முள் சற்றுத் தளர்ந்து போய்விட்டதாக ஓர் உள்ளுணர்வு அவளுக்கு உணர்த்தி நின்றது.*

# நிரையும் நிராசையும்

ஒரு அமைதியற்ற காலை நேரத்தில் அந்த பெற்றோல் நிலையத்தின் முன்பாக நீண்டதொரு வரிசை முளைத்திருந்தது. கல்வியங்காட்டிலிருந்து தொடங்கிய வாகன வரிசை வளைந்து நெளிந்து திரும்பி சட்டநாதர் வீதியூடாகப் போய்த் திரும்பி இராமலிங்கம் வீதிவரை நெடுத்திருந்தது. ஆட்டோக்கள், மோட்டார்கார்கள், மோட்டார் சைக்கிள்கள் என பலவிதமான வாகனங்களும் பெற்றோல் நிரப்புவதற்காக மன உத்வேகத்துடன் காத்திருந்தன. அங்கு கூடியிருந்த வாகன சாரதிகளின் மனோநிலையை எவராலும் கணிக்க முடியாது. அவர்களது மனக்கிடக்கையை தங்களுக்குள்ளே உரையாடுவதன் மூலம் அவர்கள் வெளிப்படுத்திக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிந்தது.

“இண்டைக்காவது பெற்றோல் கிடைச்சாத்தான் ஏதாவது உருப்படியாச் செய்யலாம். நாலைஞ்சு நாளாய் பெற்றோல் கிடைக்காமல் தொழில் பட்டுப்போய்க்கிடக்கு”

மீன் வியாபாரியான காந்தன், அருகில் நின்றிருந்தவரிடம் பேச்சுக் கொடுத்தான். அவனை ஏறெடுத்துப்பார்த்து எடை போட்டவாறு பதிலளிக்கும் விதத்தில் அவரும் ஒரு கேள்வியைக் கேட்டார்.

“தம்பி என்ன தொழில் செய்யிற நீர்?”

“வெள்ளனக் காத்தால பாஷையூரில போய் மீன் வாங்கிக்கொண்டு போய் கோப்பாய்,

*சிறுப்பிட்டி என்று கிராமங்களுக்கு உள்ளை கொண்டு போய்க் குடுக்கிறனான். எனக்கென்று வாடிக்கையாய் வாங்கிற சனங்கள் காத்திருக்கும் கண்டியளோ. அதுகளும் ஏமாந்து போயிருக்கும். அதுதான் என்னுடைய கவலை.”*

*“ஏன் தம்பி. நான் கேக்கிறன் என்று பிழையாய் நினைக்காதையும். சைக்கிளிலை போயும் தொழில் செய்யலாம் தானே?”*

*அவருடைய கேள்வி காந்தனுக்கு எரிச்சலை மூட்டியது.*

*“ஓ!... நீங்கள் சொல்லுறதும் சரிதான். இப்ப ஆரிட்ட சைக்கிள் நிக்குது. எல்லாருக்கும் வசதியான வாழ்க்கை வளத்தை காட்டிப் போட்டு... திடீரென்று இப்பிடிச் செய்தால் நாங்கள் என்ன தான் செய்து வாழுறது. பெற்றோலைத் தந்தால் எங்கட சீவியம் போகும் தானே. அதை விடுவம். ஐயா என்ன அரசாங்க உத்தியோகமோ?...”*

*“சாய்ச்சாய் அப்பிடி ஒண்டுமில்லை. நான் ஒரு கடை வைச்சிருக்கிறன். சின்னக்கடைதான். அங்கினை அரிசி, மா, சீனி, எண்ணெய் எண்டு சாமான்களை மோட்டச்சைக்கிளிலை தான் கட்டிக்கொண்டு வாறனான். இப்ப மரக்கறிகள் தட்டுப்பாடு எண்டிட்டு மருதனார் மடம் போய்த்தான் வாங்கியந்து வியாபாரம் செய்யிறனான். அதிலை வாற சொற்பலாபம்தான் எங்கட சீவியம். இப்பதான் எனக்கும் ஒரு யோசினை வருகுது.”*

*“என்ன வாக்கும்?”*

*“நான் முந்தி ஓடித்திரிஞ்ச சைக்கிளை கவனிக்காமல் விட்டிட்டன். மூலைக்கை கறள் பிடிச்சுப் போய்க் கிடக்கிறதை வெளியில் எடுத்து ஒரு சைக்கிள் கடைக்காரனிட்டைக் குடுத்து கழுவிப் பூட்டுவம் என்று நினைக்கிறன்.”*

*“நல்ல ஐடியாதான். அதை முதலில் செய்யுங்கோ”*

*நிரையில் நின்றவாறே இருவரும் நெருக்கமாகி விட்டார்கள். முன்னாலிருந்து அவர்களைக் கடந்து போய்க்கொண்டிருந்த ஒருவர் சொல்லிக்கொண்டே போனார்.*

*“பௌசர் வந்திட்டுது. இனி இவங்கள் எத்தினை மணிக்கு குடுக்கப் போறாங்களோ...”*

*காந்தனதும் அவனது புது நண்பரதும் முகங்களில் ஒரு நிம்மதியுடனான புன்முறுவல் தோன்றி மறைந்தது.*

*“அப்பாடா... இனிப்பயமில்லை. குடுக்கத் தொடங்கினால்*

மளமளவென்று குடுத்திடுவாங்கள். எப்படியும் மதியச் சாப்பாட்டுக் காவது வீட்டுக்குப் போயிடலாம்."

நண்பரின் வார்த்தை காந்தனுக்கும் ஆறுதலைத் தந்தது. நேரமோ காலை பத்துமணியைத் தாண்ட வெய்யிலின் உக்கிரம் அங்கு தலைதூக்கத் தொடங்கியது. அவனையறியாமலே காந்தனின் வாய் புறுபுறுத்தது.

"இன்னும் எத்தினை நேரம்தான் இந்த சீற்றிலையிருந்து அவியிறதோ. அப்பப்பா... எரிச்சல் தாங்கமுடியவில்லை."

மோட்டார் சைக்கிளின் இருக்கையை விட்டு கீழே இறங்கி நின்று கொண்டான். அவனது செயலை அவதானித்த நண்பரும் இறங்கினார்.

"தம்பி! ஒருக்கா என்னுடைய சைக்கிளையும் கவனிச்சுக் கொள்ளும். நான் உதில இருக்கிற கடைக்கு போட்டு வாறன்."

நண்பர் சுட்டிக்காட்டிய கடையை நிமிர்ந்து பார்த்தான், காந்தன். தெருவின் மறுபக்கத்தில் இருந்தது அந்த தேநீர்க்கடை. அதைக் கவனித்ததும் காந்தனின் வயிறு புகைந்து பசிக்கும் நிலையை அவனுக்கு உணர்த்தியது. அவனால் எதுவும் செய்ய முடியாத நிலை. அவன் வீட்டிலிருந்து புறப்படும் போது கையிருப்பில் கிடந்த பணத்தை யெல்லாம் பொறுக்கி கணக்காக ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் தான் கொண்டு வந்திருந்தான். இன்று பெற்றோல் கிடைத்தாலும் நாளைக்கு முதலீடு செய்து தொழில் செய்வதற்கு அவனிடம் பணம் எதுவும் இருக்கில்லை. நான்கைந்து நாட்களாக தொழில் குன்றிவிட்ட தால் வருமானம் எதுவுமின்றி சீவியத்தைக் கொண்டிழுக்க வேண்டியதாயிற்று. விலைவாசிகள் மலைபோலல்லவா எகிறிக் கிடக்கிறது. இப்போதைக்கு பெற்றோல் கிடைத்து விட்டால் போதும் எவரிடமாவது கைமாற்றாக வாங்கி தொழில் தொடங்கி விடலாம். மனம் சற்று சாந்தியடைந்தது.

"தம்பி இந்தாரும் ஒரு றோல் சாப்பிடும். நான் சாப்பிட்டிட்டு உமக்கும் வாங்கிக்கொண்டு வந்தனான்."

"ஏன் ஐய்யா உங்களுக்கு உந்த வேலை"

சிணுங்கியவன், அவரிடமிருந்து பொட்டலத்தை வாங்கக் கையை நீட்டியது தான் தாமதம். மின்னலென ஒரு நாய் பாய்ந்து அவர்களது கையிலிருந்த பொட்டலத்தை வாயில் கவ்வியவாறு சனக் கூட்டத்துக்குள் ஓடி மறைந்தது.

"அடீக்!" என தாயை விரட்டவும் மறந்து இருவரும் திகைத்து நிற்க, உணவைக் கண்டதும் நாவில் ஊறிய எச்சிலை விழுங்கி காந்தன் ஓரளவு நிலைமையை சமாளித்தான்.

"ஐயா! எனக்கு அல்சர் இருக்குது. நான் எண்ணெய் சாப்பாடு சாப்பிடுவதில்லை. தண்ணியைத் தந்தியளெண்டாக் காணும். குடிச்சால் விடாய் அடங்கீடும்".

நண்பரது கையிலிருந்த தண்ணீர்ப்போத்தல் கைமாற, காந்தனது தாகமும் தீர்ந்தது. தனது துரதிர்ஷ்டத்தை மனதுக்குள் நினைத்து மறுகிக் கொண்டான். கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலை.

திடீரென முன்னால் நின்றிருந்த கூட்டத்தில் ஒரு சலசலப்பு. என்னவென்று விசாரித்ததில் அரச உத்தியோகத்தர்களுக்குத்தான் முன்னுரிமை என்று சொல்லி பெற்றோல் அடிக்கிறார்களாம். அப்படியாயின் அதிகாலை இரண்டு மணிக்கே வந்து காத்திருந்த எங்களது நிலை என்ன என கேள்வியெழுப்பி பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்களாம். காந்தனுக்கு அவர்களது செயல் சரி என்றுதான் தோன்றியது. ஆனால் அவனது புது நண்பர் அதையிட்டு அலட்டிக் கொள்ளவில்லை. ஏதோ பெற்றோல் கைக்கு கிடைத்தாலே போதும் என்பது அவரது நிலைப்பாடு. ஏனெனில் அவர் முன்னரும் ஒரு வரிசையில் காத்திருந்து ஏமாற்றம் அடைந்தவராம் காந்தனுக்கு சொல்லிக்கொண்டிருந்தார்.

"என்ன இருந்தாலும் ஒருநாள் பொழுதை வீணாக்கி, வெய்யிலில் கிடந்து துடித்து, நாவறண்டு, அலைக்கழிந்து வெறுங்கையோடு வீடு திரும்புவதென்றால்.... அது பட்டால்த்தான் தெரியும்."

அப்பாடா... ஒருவாறு நிரை அசையத் தொடங்கியது. ஆமை வேகத்தில் அவர்களும் சைக்கிளை மெதுமெதுவாக உருட்டுவதும், பின்னர் சிறிதுநேரம் காத்திருப்பதுமாய் காலமும் கூடவே ஊர்ந்து கொண்டிருந்தது.

உச்சத்தில் இருந்த சூரியன் மேற்கு வானை நோக்கி சரியத் தொடங்கினான். அவ்வேளையில்த்தான் ஒரு சம்பவம் நடந்தது. மெல்லென ஊர்ந்து வந்த நிரை சட்டென ஸ்தம்பித்துவிட்டது. இத்தனை நேரமும் வாகனங்களுக்கு பெற்றோலை நிரப்பிக் கொண்டிருந்தவர்கள், தங்களது வயிற்றை நிரப்புவதற்காக இடைவேளை விட்டிருக்கிறார்களாம். யாரோ வாயில் வந்தபடி அவர்களைத்

திட்டுவது காந்தனது காதுகளில் கிட்டியது.

"அன்னம் தண்ணியில்லாமல் இத்தனை பேரையும் கொதி வெய்யிலுக்கை விட்டிட்டு அவை தங்கட பசி தீர்க்கப் போயிட்டினம். இது கடவுளுக்கே அடுக்காது."

ஆவேசத்துடன் ஒலித்த குரலைக் கேட்டு மற்றொருவன் சீறினான்.

"வேணுமெண்டால் ஆளையாள் மாறிப்போய் ஒவ்வொருத்தராய் சாப்பிட்டிட்டு வரலாமே. இஞ்சை வேலை போய்க்கொண்டிருக்கும்"

இப்படியாக பலவிதமான கருத்துகள் காதுக்குள் நுழைய காந்தனோ பேசவும் திராணியற்றவனாய் சைக்கிளில் சரிந்திருந்தான்.

"தம்பி! சோடா குடியுமன்."

நிமிர்ந்து பார்த்தான், காந்தன். ஒரு நடுத்தர வயதுக்காரர் அவன் முன் ஒரு சோடாப் போத்தலை நீட்டினார். நீட்டியது மட்டுமல்ல, கனிவுடன் வந்தன, வார்த்தைகள்.

"நானும் அப்ப இருந்து பார்க்கிறன். ஒரு தண்ணியும் குடிக்காமல் ஏதோ யோசனையோட இருக்கிறீர். பெற்றோல் கிடைச்சா வாங்கிக் கொண்டு போவம். கிடைக்காட்டி அடுத்த முறையும் கியூவில் போய் நிற்பம். உதுக்கேன் யோசிக்கிறீர்"

வலுக்கட்டாயமாக அவனது கையைப் பிடித்து திணித்தார். மகுடிக்கு கட்டுண்ட நாகம் போல காந்தனும் அதனை வாங்கி மடமடவென்று குடித்தான். வயிறு குளிர்ந்தது. தாகம் தீர்ந்தது.

"நன்றி ஐயா"

அவர், அவனது முதுகில் தட்டிவிட்டுப்போனார். ஒரு தந்தையின் பாசமிகு அரவணைப்பை அவனால் உணர முடிந்தது. வரிசையும் மெதுமெதுவாக நகர்ந்து கொண்டேயிருந்தது. இப்போது பௌசர் கண்ணுக்குத் தெரியுமளவு தொலைக்கு அவர்கள் வந்துவிட்டார்கள்.

"தம்பி! ஓரளவு கிட்டவாய் வந்திட்டம். இண்டைக்கு எப்படியும் அடிச்சுப் போடலாம் என்று நினைக்கிறன்."

"நானும் அப்பிடித்தான் நினைக்கிறன் ஐயா."

நண்பர்கள் இருவருக்கும் புதுத்தென்பு பிறந்துவிட்டது. இத்தனை நேரமும் சோர்வுடன் காணப்பட்டவர்கள் சற்று உஷாரடைந்தனர். இருள் கவிந்துவிட்ட போதிலும் ஆங்காங்கே வீதி

விளக்குகள், விற்பனை நிலையங்கள் என்பன ஒளி பரப்பிக் கொண்டிருந்தன. காந்தன் எட்டி தன் முன்னால் நிற்பவர்களை எண்ணத் தொடங்கினான். சரியாக எட்டுப்பேர் வாகனங்களுடன் நின்று கொண்டிருந்தனர். அவர்களில் ஒவ்வொருவராக எரி பொருளை நிரப்பிக்கொண்டு போவதை படபடக்கும் நெஞ்சுடன் வைத்தகண் வாங்காது கணக்கிட்டுக் கொண்டிருந்தவனுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது.

"எயர் இழுத்திட்டுதாம்"

ஒரு குரல் பெரிதாக ஒலித்தது. நிரையில் நின்றவர்கள் கலைந்துபோவதை வெறித்த கண்ணுடன் பார்த்திருந்தான், காந்தன். மனதுக்குள் கரும்பாறை ஒன்று இறங்கி அழுத்துவதை அவனால் உணர முடிந்தது. அந்த ஒரு கணத்தில் இந்த உலகமே அழிந்து விடக் கூடாதா என மனம் எங்கியது.

சித்தம் கலங்கி நின்றவனை ஒரு குரல் ஆசுவாசப்படுத்தியது.

"தம்பி! இனி இதில நின்று என்ன பிரயோசனம். வாரும் வீட்டை போய் குளிச்சு சாப்பிட்டிட்டு கையைக் காலை நீட்டி படுப்பம். அப்பதான் இன்றைக்கு நாள் முழுவதும் வெய்யிலுக்கை நின்று தூங்கின அலுப்பில் கொஞ்சமாவது தீரும்"

நண்பர் கூறிய வார்த்தைகள் அவனது காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. மலைத்து நின்றவனைத் தொட்டு உலுப்பிவிட்டு அவர் வீடு நோக்கி புறப்பட்டுவிட்டார். காந்தனின் மனமோ புழுங்கியது.

அவருக்கென்ன... அவர் சொல்லிப்போட்டுப் போறார். அவருக்கு வீட்டில் சாப்பாடு காத்திருக்கும். ஆனால்... என்னுடைய நிலை. காலையில் அவன் புறப்படும்போது மனைவி புலம்பிக் கொண்டிருந்தது ஞாபகத்தில் வந்தது.

"இண்டைக்கு சோத்துக்கு அரிசி இல்லையப்பா. என்னெண்டு பிள்ளையளைச் சமாளிக்கிறதென்றுதான் யோசினையாய்க் கிடக்கு"

அங்கலாய்த்தவாறு கூறிய மனைவியின் முகம் இப்போது அவனது கண்முன் வந்து நின்றது. சைக்கிளில் ஒரு துளி பெற்றோல் கூட இல்லை. இனி அதை உருட்டிக்கொண்டுதான் வீடுவரை போக வேண்டும். உருட்டுவதற்கு அவனது உடலில் வலு இருப்பதாகத் தோன்றவில்லை. சட்டைப்பையைத் தடவிய போது அதற்குள் இருந்த ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் பணம் கனத்தது. எதற்கும்

*பிரயோசனப்படாமல் இருக்கிறேனே என்று அது கூறுவது போன்ற தொரு பிரமை அவனை ஆட்கொண்டது.*

*"இந்தப்பணத்தை எடுத்து இன்றைய பசியைப் போக்கலாம். நாளைய நிலை?... அது பிறகு பார்த்துக்கொள்ளலாம்"*

*மனம் ஒரு முடிவுக்கு வரவும் அவன் தனது பலத்தையெல்லாம் திரட்டி மோட்டார் சைக்கிளை வீடு நோக்கி உருட்டத் தொடங்கினான்.*

*"இண்டைக்கு நாள் முழுதும் இஞ்சை நிண்டு காய்ஞ்சதுக்கு வீட்டில நின்றிருந்தாலும் நேற்றைக்கு கொத்திப்போட்டு விட்ட குறை நிலத்தை கொத்தியிருந்தாலாவது நாளைக்கு மரவள்ளித் தடியை நட்டிருக்கலாம்."*

*சலிப்புற்ற மனத்தில் சிறிது தென்பு பிறந்தது.*

# பிரதி மார்க்கம்

"அரவணைக்கும் கரங்கள்" அந்தப் பெரிய மாடிக் கட்டிடத்தின் முனைப்பு பகுதியில் பொறிக் கப்பட்டிருந்த அந்த வாசகம் தெருவால் போவோர் வருவோரது கவனத்தை ஈர்த்துக் கொண்டிருந்தது. இத்தனைக்கும் அது பிள்ளைகளால் கைவிடப் பட்ட முதியவர்களின் வாழ்வகம் அல்ல. மாறாக முதுமைப் பருவத்தில் தமது பெற்றோர் வளமாக வாழவேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளுடன் தம்மால் அவர்களை வைத்துப் பராமரிக்க முடியாத நிலையில் அரவணைக்கும் கரங்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் தான். அப்படிப்பட்ட ஒரு உன்னதமான சேவையை அரவணைக்கும் கரங்கள் வழங்கிக் கொண்டிருக்கிறது.

அந்த வாழ்வகத்தின் ஒரு உறுப்பினராக ஜெயமணி அம்மா, கடந்த நான்கு வருடங்களாக இருந்து வருகிறார். எண்பத்தி நான்கு வயதை அண்மித்துக் கொண்டிருக்கும் அவரால் எழுந்து நடமாட முடியாது. பராமரிப்பாளரின் உதவி யுடன் சக்கர நாற்காலியில் அந்த மனைஅமைந் திருக்கும் வளாகத்தினுள் பவனி வருகிறார். பிள்ளைகள் அருகில் இல்லை என்பதைத்தவிர வேறெந்த மனக்கவலையும் அவருக்கிருப்பதாகத் தெரியவில்லை.

ஜெயமணி அம்மாவுக்கு இதமாக பொழுது போய்க் கொண்டிருக்கிறது. ஆனால்... மாதா மாதம் வெளி நாட்டிலிருக்கும் மகள் சுலோசனா

விடமிருந்து வாழ்வகத்தின் கணக்கிற்கு பணம் வந்து கொண்டிருப் பதை அவர் அறிந்திருப்பாரோ... என்னவோ...

வழமை போலவே அன்றைய பொழுதும் விடிகிறது. சாளரத் தினூடு அறைக்குள் புகுந்த சில்லென்ற தென்றல் ஜெயமணியின் முகத்தை வருட, ஆழ்ந்த நித்திரையில் மூழ்கியிருந்த அவள் விழிப்புப் பெற்றவளாய் கண் விழிக்க... அவள் முன்னால் புன் சிரிப்பு தவழும் முகத்துடன் வாழ்வகத்தின் பொறுப்பாளரான சாரதாம்பாள் நின்றிருந்தார்.

"பிறந்த நாள் வாழ்த்துக்கள். ஜெயமணி அம்மா"

தூக்கக் கலக்கத்தில் ஒன்றும் புரியாமல் விழித்த ஜெயமணி, தன்னைச் சுதாகரித்துக் கொண்டவளாய் அவருக்கு நன்றி சொன்னாள்.

பொறுப்பாளர் அப்பால் நககர்ந்ததும் பராமரிப்பாளர் வந்து ஜெயமணியை கட்டிலில் இருந்து சக்கர நாற்காலிக்கு மாற்றி குளிய லறைப்பக்கமாக அழைத்துப் போனாள். அங்கே... அவளைகாலைக் கடன் கழிக்கப்பண்ணி, பல் துலக்கி முகம் கழுவி, லேசான வெந்நீரில் குளிப்பாட்டி புது உடை அணிவித்து விட்ட போது ஜெயமணி அவரைப் பார்த்துக் கேட்டாள்.

"சோச்சு அனுப்பி விட்டவளோ இந்தப் புதுச்சட்டை"

சுலோசனாவை அவரது வாய் சோச்சு என்று தான் உச்சரிக்கும்.

பராமரிப்பாளர் அவளைத் தயார்ப்படுத்தி சாப்பாட்டு மாடத் திற்கு அழைத்து வந்தாள். அங்கே வாழுகின்ற மற்றைய முதியவர் களும் தயராகி அவளுடைய வரவுக்காகக் காத்திருந்தனர். அவர்களுள் நடக்கக் கூடியவர்கள் மட்டும் எழுந்து வந்து அவளை வாழ்த்திச் சென்றனர். நடக்க இயலாதவர்கள் இருந்த இடத்திலிருந்தே வாழ்த்துத் தெரிவித்தனர். பொறுப்பாளர் கூறினார்.

"இன்று தனது எண்பத்தி நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடும் ஜெயமணி அம்மாவின் உடல் நலத்திற்காக நாம் இறைவனைப் பிரார்த்திப்போம்."

இரண்டு நிமிட மௌனத்தின் பின் எல்லோருக்கும் காலை உணவு பரிமாறப்பட்டது. ஜெயமணியின் மனம்மட்டும் மகள் சுலோசனாவை வட்டமிட்டது.

“சோச்சு எனக்கு எல்லாத்தையும் பாத்துப்பாத்து செய்யிறாள். ஆனால்... அவள் மட்டும் நேரில வந்து என்னைப் பார்க்கிறாளில்லை”

ஏம்பலித்தது மனம்.

அன்று இரவே சுலோசனா காணொலிமூலம் அம்மாவைத் தரிசித்தாள்.

“அம்மா! சுகமாய் இருக்கிறியளே?”

சுலோசனாவின் குரல் நெகிழ்ந்தது.

“ஓமடி பிள்ளை. உன்னைத்தான் நேரில பாக்கக் கிடைக்கேல்ல. அந்தத் தவனம் தான் எனக்கு. வேறை ஒன்றுமில்ல”

சிறிது நேரம் தாயையே வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள், சுலோசனா. மனம் பின்நோக்கி பாயத் தொடங்கியது.

***

நாங்கள் மூன்று பெண் பிள்ளைகள். அப்பாவும் சின்ன வயதிலேயே இறந்து போக, அம்மா தன்னந்தனியனாய் இந்தச் சமூகத்தில எதிர்நீச்சல் போட்டு எங்களை வளர்த்து ஆளாக்க என்ன பாடுபட்டிருப்பா என்பதை நேரில் பார்த்து அனுபவித்தவள், நான்.

விடியப்புறம் படுக்கையால எழும்பினது தான் தாமதம். அம்மா கிளம்பிப்போய் விடுவா. வசதியுள்ளவையின்ரை வீடுகளில போய் வேலை செய்து குடுக்கிறது தான் அம்மாவின்ரை வேலை. பெரியக்கா எங்களுக்கு வெறும் தேத்தண்ணி போட்டுத் தருவா. நாங்கள் அதைக் குடிச்சிட்டு பள்ளிக்கூடம் போக வெளிக்கிட்டு அம்மாவைப் பார்த்துக் கொண்டு நிற்பம். அம்மா அரக்கப்பறக்க ஓடி வருவா.

“இந்தாங்கோடி பிள்ளையள். இதிலை இருக்கிறதை மூண்டு பேருமா பங்கிட்டு சாப்பிட்டிட்டு பள்ளிக்குப் போய்ச் சேருங்கோ.”

அம்மா தந்த பொதியில் இருப்பதை அது என்னவாக இருந்தாலும் மூன்று பேருமாய் வாயில போட்டுக் கொண்டு ஓட்டமும் நடையுமாய் பள்ளிக்கூடத்திற்குப் போய்விடுவம். அம்மா எதுவும் சாப்பிடாமலேயே கிளம்பி விடுவா.

“இண்டைக்கு பென்சனியர் ஐயா வீட்டில பத்துக்கொத்து

அரிசி நனைய விடுறதாய்ச் சொன்னவை. அதை இடிச்சு வறுத்து முடிய எத்தினை மணி ஆகுமோ…" ஏக்கத்துடன் தனக்குள் சொல்லிக் கொள்ளுவா.

பள்ளிக்கூடம் விட்ட உடன நாங்கள் மூன்று பேரும் வீட்டை வந்து அம்மாவுக்காகக் காத்திருப்பம். பொழுது சாயிற நேரம் தான் அம்மா கையில சில பொருட்களோட வருவா. அம்மா வரயுக்கை அக்கா அடுப்பில உலை வைச்சு எரிச்சுவிட்டிருப்பா. அம்மா கொண்டு வந்த அரிசியை உடனயே கழுவி உலையில போடுவா அக்கா.

அம்மா சுவரில முதுகைச் சாய்த்தபடி அப்பிடியே கொஞ்ச நேரம் இருப்பா. இயலாமை அவவின்ரை முகத்தில அப்பட்டமாய்த் தெரியும். அக்கா தேங்காய் துருவிக் கொடுப்பா. அம்மா அப்படியே இருந்த இடத்திலேயே கறியைக் கூட்டிக் கொடுப்பா. அரிசி வடித்தது தான் தாமதம். அக்கா வடித்த கஞ்சிக்குள்ள உப்புப் போட்டு ஆத்தி முதல்ல அம்மாவுக்கு ஒரு பேணி வாத்துக் குடுப்பா. எங்களுக்கும் தந்திட்டு தானும் குடிப்பா. அப்பாடா… அந்தக் கஞ்சிக்குத்தான் எந்தளவு சக்தி. கஞ்சியைக் குடித்ததும் தான் அம்மா சிறிது தென்பு வந்து குளிக்கிறதுக்குப்போவா. காலையில இருந்து வியர்க்க விறு விறுக்க வேலை செய்த அலுப்பு மட்டுமல்ல. வியர்வை நாற்றமும் அகன்று போக புத்துயிர் பெற்றவளாய் அம்மா நெற்றியில் மூன்று திரு நீற்றுக்குறியுடன் அடுப்படிக்குள் வருவா. அதற்கிடையில் அக்கா கறியையும் கொதிக்க வைத்து இறக்கி விட்டு அம்மாவுக்காக காத்திருப்பா.

அம்மா எங்கள் மூன்று பேருக்கும் தட்டுகளில் சோற்றைப் போட்டு கறியையும் பரிமாறியதும் நாங்கள் ஆவலுடன் அதை எடுத்து சாப்பிடத் தொடங்குவோம். எங்களுடைய பசிக்கும் வயிறு உணவைத்தான் தேடுமே தவிர அதன் ருசியைப் பற்றி நாங்கள் கவலைப்பட்டதேயில்லை.

"அம்மா! நீங்களும் போட்டுச் சாப்பிடுங்கோவன்"

அக்கா தான் சொல்லுவா.

"எனக்கு வேலை செய்யிற இடத்தில மதியம் சாப்பாடு தந்தவை பிள்ளை. உங்களை விட்டிட்டு சாப்பிட மனமில்லாவிட்டா லும் சாப்பிட்டுத் தென்பாய் இருந்தாத்தானே மிச்சமிருக்கிற வேலை யையும் செய்யலாம் என்று நினைச்சுக் கொண்டு அள்ளிப் போட்டது

தான்."

அம்மாவின்ரை ஆதங்கத்தைப் புரிஞ்சு கொள்ளுற மனப் பக்குவமோ, வயசோ எனக்கு அப்ப இல்லை. அம்மாவுக்கு அக்கா வால கிடைச்ச ஆறுதலும் கடவுளுக்கு பொறுக்கவில்லைப் போலும். திடீரென்று வந்த காய்ச்சல் அவளுடைய உயிரையே குடிக்கும் என எவருமே எதிர்பார்க்கவில்லை. சோகத்தில அம்மா ஒரேயடியாய் சுருண்டு போனா. எங்களாலையும் தான் அக்காவின் இழப்பைத் தாங்க முடியவில்லை.

இரவெல்லாம் அம்மா நித்திரையில்லாம அழுது கொண்டே இருப்பா. விடிஞ்சதும் எழும்பி வேலைக்குப் போயிடுவா. பாவம் அம்மா. சோகத்தில கூட துவண்டு கிடக்க முடியாத நிலைமை. எங்களுக்கு எப்படியாவது ஆகாரம் கொடுக்க வேணுமென்ற அங்க லாய்ப்புடன் தனது உடலை வருத்தி எரியும் மெழுகு திரியாக உருகிக் கொண்டிருந்தாள். வளர வளர எனக்கும் அம்மாவின் கஷ்ட நிலை விளங்கத் தொடங்கியது.

எப்படியாவது வாழ்க்கையில் நாங்கள் முன்னேறி அம்மாவை வளமாக வைத்திருக்க வேண்டும் என நாங்களிருவரும் கங்கணம் கட்டிக் கொண்டோம். சின்னக்கா ஓர்மத்துடன் படித்து ஏ.எல் வரை வந்தவளுக்கு பல்கலைக்கழக அனுமதி கிட்டவில்லை. பாடசாலை யில் பயிலுனர் ஆசிரியராக வேலை செய்யும் வாய்ப்பு அவளுக்குக் கிட்டியது. உடனேயே அம்மாவை வேலைக்குப் போவதிலிருந்து தடுத்தது தான் எங்களது முதல் வேலையாயிருந்தது. அக்கா ஒருவாறு முன்னேறி பயிற்றப்பட்ட ஆசிரியையாக நியமனம் பெற்றாள். அத்துடன் எங்களுடைய வறுமைநிலை களைந்தெறியப்பட்டது.

என்னாலும் ஏ.எல் வகுப்புக்கு மேல் முன்னேற முடியவில்லை. ஒரு புடவைக் கடையில் விற்பனையாளராக சொற்ப சம்பளத்திற்கு வேலை பார்க்கத் தொடங்கினேன். அம்மாவுக்கு இப்போது ஒரு புதுக்கவலை தலைதூக்கத் தொடங்கியிருந்தது. எங்களிருவருக்கும் கல்யாணம் செய்து வைக்க வேண்டுமென்பது தான் அது.

"அம்மா! கவலைப்படாதையுங்கோ. படைச்சவன் எங்களுக் கொரு வழி அமைக்காமலா விட்டிருப்பான்"

அம்மாவைத் தேற்றுமுகமாக அவரது கைகளை எடுத்து வருடியவாறு கூறுவேன். அம்மாவின் உள்ளங்கைகள் உலக்கை பிடித்ததனால் தடித்து சொற சொற வென்றிருப்பதை உணர்ந்ததும்

என் இதயம் நெகிழ்ந்து போகும். அதேசமயம் எனக்காக ஒருவன் காத்திருக்கிறான் என்ற உண்மையை அம்மாவிடம் வெளியிட முடியாமல் தவிப்பு என்னை ஆட்கொள்ளும்.

ஆம். என்னோடு படித்த பாஸ்கரனும் நானும் ஒருவரை யொருவர் உயிருக்குயிராக நேசிக்கிறோம். நாட்டின் சீரற்ற நிலையை காரணம் காட்டி உயிரைப் பணயம் வைத்து படகேறிய பாஸ்கரன் ஒருவாறு கிறிஸ்மஸ் தீவை அடைந்து விட்டான். இறைவன் அருளால் அவனுக்கு அங்கு அகதி அந்தஸ்த்தும் கிடைத்திருந்தது.

கடவுள் அம்மாவின் மீது கருணை காட்டினாரோ என்னவோ அக்காவுக்கு ஒரு தாரமிழந்த மாப்பிள்ளையின் குறிப்பு பொருந்தி வந்தது. கடலலையில் சிக்குண்டு தவித்த எங்களுக்கு கிடைத்த ஒரு துடுப்பாகக்கருதி நாங்கள் அதனை இறுக பற்றிக் கொண்டோம். அத்தான் ஒரு பட்டதாரி ஆசிரியர். கொழும்பில் அவர் பிரத்தியேக வகுப்புகள் நடத்திக் கொண்டிருப்பதால் அங்கு தான் வாழ வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக் கொண்டுஅக்காவும் வேலைக்கு மாற்றம் எடுத்துக் கொண்டு அங்கேயே போய்க்குடியேற வேண்டியதாயிற்று.

எங்களிடம் இருந்ததெல்லாம் இரண்டு பரப்புக் காணியும் அதில் அமைந்திருந்த குடியேற்றத்திட்ட வீடும்தான். நானே வற் புறுத்தி அதை அக்காவுக்கு சீதனமாக எழுதிக் கொடுக்க வைத்தேன். அம்மா என்னயிட்டுக் கவலையடைந்தபோது தான் நான் அவளிடம் எனது காதலை வெளியிட்டேன்.

கால ஓட்டத்தில் பாஸ்கரன் என்னையும் சிட்னிக்கு அழைத்துக் கொண்டான். உணவகம் ஒன்றில் வேலை. ஒருவாறு எங்களுடையகாலம் போய்க் கொண்டிருந்தது. அக்காவின் குழந்தைப் பேற்றுக்கு கொழும்பிற்கு போனஅம்மா அங்கேயே தங்க வேண்டிய தாயிற்று. அடுத்தடுத்து இண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்த அக்காவிற்கு அம்மாவின் உதவி அவசியமாக இருந்ததால் அம்மாவும் அவர்களுடனேயே தங்க விருப்பப்பட்டாள். அவர்கள் வேலைக்குப் போய்வர வீட்டு வேலைகள் குழந்தைகள் பராமரிப்பு என அம்மாவின் பொழுதும் இதமாகக் கழிந்ததால் அவளும் அவர்களை விட்டு என்னுடன் வர விரும்பவில்லை.

“சோச்சு! சாகிற காலத்தில பிளேனில ஏறி பறக்கிறதை நினைச்சா பயமாயிருக்குதடி. நான் இஞ்சை கொக்காவோடயே இருந்திடுறனே”

அடிக்கடி அம்மாவோடு அலைபேசியில் கதைப்பதை வழக்கமாக்கிக் கொண்டு மனதையும் தேற்றிக் கொண்டேன். அக்காவின் பிள்ளைகளும் வளர்ந்து இப்போது பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தார்கள். என்னுடைய மகனும் பல்கலைக்கழக புகுமுக வகுப்புவரை முன்னேறியிருந்தான்.

திடீரென ஒரு நாள் அக்காவின் அலைபேசி அழைப்பு வந்தது.

“சுலொசனா! அம்மாவால துப்பரவா ஏலாமக் கிடக்கு. நடக்கிறதோ இல்லை. படுத்த படுக்கை தான். இஞ்சை பிளாட்ஸ்ஸல வைச்சுக் கொண்டு நான் என்ன செய்யட்டும். அவவை படுக்கையில வைச்சுப் பார்க்கிறதுக்கு ஆரையும் ஒழுங்கு பண்ணலாம் என்று பார்த்தா... இந்த முட்டு வீட்டுக்கை வசதியும் இல்லை. நான் என்ன செய்யிறதென்று தெரியாமல் தலையைச் பிச்சுக் கொண்டிருக்கிறன்”

என்னையறியாமலே மனதில ஒரு உறுத்தல்.

இத்தனை காலமும் அம்மாவைக் கொண்டு வேலை வாங்கி சுகமெடுத்தவை. அம்மாவுக்கு ஏலாதென்று கண்டதும் அவவை வைச்சுப் பார்க்கிறதுக்கு பின்னடிக்கினம். என் மனதில் ஒரு கறுவியம் ஏற்பட்டது.

“அக்கா! ஒரு கிழமைக்கு பொறுத்துக்கொள். அதுக்குள்ள டிக்கட் போட்டு நான் அங்கை வந்து எல்லா ஒழுங்கையும் செய்யுறன். அது வரைக்கும் அம்மாவைக் கவனமாய்ப் பார். என்ன!”

எனது கணவரிடம் விஷயத்தைச் சொன்னது தான் தாமதம். அவர் உடனேயே அடுத்த பிளைட்டுக்கு டிக்கட் போட்டதுடன் மளமளவென்று எல்லா ஒழுங்குகளையும் செய்து தந்தார். இத்தனை புரிந்துணர்வுள்ள ஒரு இதயத்துடன் இணைந்து நான் சரிபாதியாக வாழ்வதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும் என எண்ணி இறைவனிடம் மண்டியிட்டது என் இதயம்.

இணையத்தளம் மூலம் தொடர்பு கொண்டு “அரவணைக்கும் கரங்கள்” வாழ்வகத்தில் அம்மாவை ஒப்படைப்பதென முடி வெடுத்துக் கொண்டு ஸ்ரீலங்காவிற்கு புறப்பட்டேன். படுத்த படுக்கை யில் கிடந்த அம்மா என்னைக் கண்டதும்சிறிது தென்பு வரப்பெற்றவ ளாய் எனது கழுத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு சோச்சு! சோச்சு! என அழுதாள். அவளைத்தேற்றிய நான் அன்றிரவே வாகனம் ஒன்றை ஒழுங்கு பண்ணி அம்மாவைக் கொண்டு யாழ் நோக்கிப் புறப்பட்டேன்.

சிட்னிக்கு வந்து சேர்ந்த என் மனத்தில் புதிதாக ஒரு சிக்கல் உருவாகியிருந்தது. இத்தனை காலமும் எனது கணவரின் உழைப்பில்த்தான் தஞ்சமடைந்து வாழ்ந்திருந்தோம். இனி அப்படி இருக்க முடியாது. அம்மாவிற்காக மாதாமாதம் ஒரு கணிசமான தொகையை நான் வாழ்வகத்திற்கு அனுப்பியே ஆக வேண்டும். அதற்கு ஒரு வழி தேட வேண்டும் என நான் எத்தனித்த போது எனது நண்பி கலா ஒருயோசனையை முன் வைத்தாள். இங்கேயும் முதியோரைப் பராமரிக்கும் பணிக்கு அதிக சம்பளம் கிடைப்பதாகக் கூறியவள் தனது கணவன் மூலம் ஒரு வேலைவாய்ப்பையும் பெற்றுத் தந்தாள்.

இப்போது நான் அதிகாலையில் எழுந்து எனது வீட்டு வேலைகள், சமையலை முடித்து குளிரூட்டிக்குள் வைத்துவிட்டு ஏழு மணிக்கே புறப்பட்டு விடுகிறேன். பஸ்ஸைப் பிடித்து அந்த மூதாட்டி யின் வதிவிடத்துக்கு நான் வந்து அவவுக்குத் தேவையான அத்தனை பணிவிடைகளையும் செய்து மாலை ஐந்து மணிக்குத்தான் வீடு திரும்புகிறேன். சில சமயங்களில் அந்த அம்மையார் காந்தமாய் இருப் பார் சில வேளைகளில் அவர் எந்தவொரு செயற்பாட்டுக்கும் ஒத்துழைக்க மாட்டார். உணவூட்டும் போது வாயைத் திறக்க மறுப் பார். பானங்களைப் பாருக்கும் போது அவற்றை வாய்க்குள் உறிஞ்சி எடுத்துவிட்டு எனது முகத்திலேயே கொப்பளித்தும் விடுவார். எனக்கு அதையிட்டு மனவருத்தம் ஏற்படுவதில்லை. எனது அம்மாவின் முகத்தை நினைத்ததும் எல்லாமே சுமுகமாகிவிடும். “அம்மா! உனக்காகத்தான். நீ எங்களுக்காகச் செய்த தியாகங்களுக் காகத்தான்” மனம் சொல்லிக் கொள்ளும்.

“என்னம்மா சுலோசனா! அம்மாவையே பார்த்துக் கொண்டு ஏதோ பலமான யோசனையில இறங்கிவிட்டீர் போல”

அவளது கணவரின் குரல் அவளை சுயநினைவுக்குக் கொண்டு வருகிறது. நிமிர்ந்து அம்மாவைப் பார்க்கிறாள். தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும். அம்மாவைப் பார்த்து அவளை ஆறுதல்ப்படுத்தும் வார்த்தைகளைச் சொல்லுகிறாள்.

“அம்மா! இந்த வருசம் நாங்கள் மூன்று பேரும் உங்களைப் பார்க்க வருவம். நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்காமல் சந்தோசமாய் இருக்க வேணும். என்னம்மா.”

குரல் கரகரக்கிறது.

*அம்மா தலையை மட்டும் ஆட்டுகிறாள்.*

*“உங்களுக்கு என்ன வேணும் சொல்லுங்கோ. வரும்போது கொண்டு வாறன்”*

*சாதுவாகச் சிரித்தவள் சொன்னாள்.*

*“சோச்சு! எனக்கு உன்னைப் பார்க்க வேணும் அவ்வளவு தான்”*

*“நான் கட்டாயம் வருவனம்மா. அம்மா! இவரும் பேரனும் உங்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து சொல்லப் போகினமாம். அவையிட்டைக் குடுக்கிறன்”*

*காணொளியில் பார்த்த அம்மாவின் முகம் அவளது மனக் கண்ணில் பதிந்து கிடக்கிறது. மனமோ அங்கலாய்க்கிறது. “நேரமோ பன்னிரண்டைத் தாண்டிவிட்டது. இனியாவது நித்திரைக்குப் போனால்த்தானே வெள்ளன எழும்பி வேலைக்குப் போக முடியும்”*

# அமங்கலி

பாடசாலை மணி அடித்தது தான் தாமதம். சுபத்திரா டீச்சர் தனது ஹாண்ட் பாக்கை எடுத்துக் கொண்டு தரிப்பிடத்தில் விட்டிருந்த உந்துருளியை நோக்கி நடந்தாள். அவளது நடையில் தோன்றிய அவசரத்தை அவதானித்த சக ஆசிரியை மேரி அவளது வாயைக் கிளற முற்பட்டாள்.

"என்ன சுபத்திரா! ஏதோ அவசரமாய் போறீர் போலத் தெரியுது. வீட்டில ஏதும் விசேஷமோ?"

"இல்லை மிஸ். பக்கத்து வீட்டில ஒரு சாமத்திய வீடு. அவைக்கு பொறுப்பா நிண்டு கவனிக்க ஆக்கள் இல்லையாம். என்னை வந்து நின்று எல்லாத்தையும் பார்த்துக் கொள்ளச் சொல்லி கேட்டவை. அதுதான்..."

மேரி அவசரமாக அவளது வார்த்தையைக் குறுக்கறுத்தாள்.

"அவை கேட்டது சரி தானே. நீர் ஒரு அல்லை தொல்லையும் இல்லாம வீட்டில இருக்கிற நீர். அவைக்கு போய் உதவி செய்யிற தால உமக்கும் பொழுதுபோகும். அவைக்கும் வேலைகள் ஒப்பேறும்"

பதிலேதும் சொல்லாமல் சுபத்திரா உந்துருளியை இயக்கி பாடசாலை வாசல் வரை இள வேகத்தில் உருட்டியவள், வாசலைக் கடந்ததும் விரைவாக வீடு நோக்கி பயணிக்கத் தொடங்கி

னாள். அவளுக்காக வீட்டு வாசலில் காத்து நின்ற அம்மாவைக் கண்ணுற்றதும் அவளது முகம் மலர்ந்தது.

"அம்மா! வருண் எங்கை?"

உந்துருளியை உருட்டி வந்து அதன் தரிப்பிடத்தில் விட்டவாறே கேள்விக்கணை தொடுத்தாள்.

"பிள்ளை வந்து சாப்பிட்டிட்டு நித்திரையாய்ப் போனான்"

தாயின் வார்த்தைகளைக் கேட்டு அவளது மனம் நிம்மதி யடைந்தது. கால், முகம் அலம்பி வந்து கடவுளைத் தரிசித்துவிட்டு வந்தவள், நேராகத் தன் அறைக்குள் நுழைந்தாள். அங்கே... வருண் உண்ட களை தீர்க்க அசதியற்று உறங்கிக் கொண்டிருந்தான். சுபத்திரா குனிந்து தனயனின் நெற்றியில் முத்தமிட்டவள், திரும்பி நடந்தாள்.

"சுபா! இன்னும் என்ன செய்து கொண்டிருக்கிறாய். வாவன் பிள்ளை சாப்பிடுவம்"

அம்மாவின் அன்பான வேண்டுகோள் அவளை நெகிழ வைத்தது.

"ஏனம்மா இரண்டு மணி வரைக்கும் சாப்பிடாமல் காத்திருக் கிற நீங்கள்"

சிணுக்கத்துடன் வந்தன வார்த்தைகள்.

"பிள்ளையும் வரட்டும் சேர்ந்து சாப்பிடுவம் என்று தான். அப்பிடிச் சேர்ந்து சாப்பிட்டால்த்தான் எனக்கு மனமும் நிறையும் வயிறும் நிறையும்"

அம்மாவின் இந்த நெருக்கம் அவளுக்கு ரொம்பப்பிடிக்கும். அதே சமயம் அம்மா இல்லாத காலத்தில் நான் எப்படி வாழப் போகிறேன் என்றொரு ஏக்கமும் அவளை கவ்விக் கொள்ள மௌனத் தைத் தழுவிக் கொண்டாள். ஏக்கத்துடன் கூடிய பெருமூச்சொன்று வெளிவந்து அவளை ஆசுவாசப்படுத்தியது.

வருண் மீது அவள் உயிரையே வைத்திருந்தாள். அவளது உடல் பொருள் ஆவி அத்தனையையும் அவனே ஆக்கிரமித்திருந் தான். அம்மாவின் குரல் அவளை திசைதிருப்பியது.

"என்ன பிள்ளை! சோத்தை வைச்சு அளைஞ்சு கொண்டிருக் கிறாய். கறிபிடிக்கேல்லையே?"

*திடுக்கிட்டவளாய் சுபத்திரா அம்மாவை ஒருவாறு சமாளித்தாள்.*

*"இல்லை அம்மா கீரையும் பருப்பும் நல்லா யிருக்குது. நான் தான் ஏதோ யோசினையில இருந்திட்டன்"*

*ஒருவாறு சாப்பாட்டை முடித்துக் கொண்டு சமையலறையை விட்டு கிளம்பவும், வருண் நித்திரையில் இருந்து விழிப்புப் பெற்றவனாய் ஓடி வந்து அவளைக் கட்டிப்பிடிக்கவும் சரியாக இருந்தது.*

*அ...ம்...மா!*

*ஆவலுடன் அழைத்த மகனை இழுத்து மடியில் இருத்தியவள், ஆதரவாக அவனது முதுகைத்தடவிக் கொடுத்தாள். தாயின் அரவணைப்பில் கிடைத்த சுகத்தில் சிறிது நேரம் கண்மூடிக் கிடந்தவன் மெதுவாக அனுங்கத் தொடங்கினான்.*

*"என்ன ராசா. பிள்ளைக்கு என்ன வேணும்?"*

*"இண்டைக்கு ஸ்கூல் விட்ட உடன என்ன நடந்தது தெரியுமோ?"*

*வருண் சட்டென அவளது மடியிலிருந்து குதித்து முன்னால் நின்றான்.*

*"அபியை அவையின்ரை அப்பா வந்து மோட்டார்பைக்கிலை கூட்டிக் கொண்டு போனவர். அவருக்கு முன்னால இருந்து கொண்டு அபி எனக்கு டாட்டா காட்டீட்டுப் போறான்"*

*அவனது கண்களில் ஏக்கத்துடன் கூடிய ஆர்வத் தைக் கண்ணுற்றதும் சுபத்திரா துணுக்குற்றாள். மகனைச் சமாதானப் படுத்தும் நோக்கத்துடன் கூறினாள்.*

*"பிள்ளையை தாத்தா வந்து சைக்கிளிளை கூட்டிக் கொண்டு வந்தவர்தானே காலையில நான் என்ரை குஞ்சை மோட்டச் சைக்கிளில்தானே கொண்டு போய் ஸ்கூலில இறக்கி விடுறநான். பேந்தென்ன"*

*"இல்லையம்மா. அவையின்ரை அப்பா அபியை தூக்கி யெல்லே சீற்றில ஏத்தி தனக்கு முன்னால வைச்சுக் கொண்டு போனவர். எனக்கு அப்பிடி இருந்து போகவேணுமெண்டு ஆசை"*

*"பூ... இவ்வளவு தானே. அதை விட்டுத்தள்ளு. இண்டைக்கு தாத்தா உன்னை கிரவுண்ட்ஸ்க்கு கூட்டிக்கொண்டு போறனெண்டு*

*சொன்னவர். அதை மறந்திட்டியே ராசா.”*

*அந்தப் பிஞ்சு மனதை திசை திருப்புகிறோம் என்ற ஆதங்கம் அவளது நெஞ்சுக்குள் நெருப்பாய் எரிந்தது. என்ன செய்வது. வேறு வழி அவளுக்குத் தெரியவில்லையே.*

*ஒரு நொடியில் வருண் எல்லாவற்றையும் மறந்தவனாய் தாத்தாவுடன் விளையாட்டு மைதானத்துக்கு கிளம்பி விட்டான். அங்கு பலதரப்பட்டவர்களும் பல்வேறு விளையாட்டுகளில் ஈடுபடுவர். அதைப் பார்த்து இரசிப்பதில் வருணுக்கு கொள்ளை பிரியம். திடீரென அவன் தாத்தாவிடம் கேட்பான்.*

*“தாத்தா! நான் எப்ப பெரிய அண்ணாவாய் வளருவன். எனக்கும் அவையைப் போல பந்தை காலால அடிச்சு விளை யாடவேணும் எண்டு ஆசை”*

*“நீ அம்மாவை தாற சாப்பாட்டை வேண்டாம் என்று சொல்லாம வேண்டிச் சாப்பிட்டியெண்டால் கெதியாய் வளர்ந்து பெரிய ஆளாகி விடுவாய், பிற கென்ன.”*

*வருணை அப்பாவுடன் அனுப்பிவிட்டு சுபத்திரா பக்கத்திலுள்ள பேபி அன்ரி வீட்டுக்கு புறப் பட்டாள்.*

*“அம்மா! பேபி அன்ரி வீட்டை ஒருக்கா போட்டு வாறன்”*

*“சரி பிள்ளை. அங்கை கன நேரம் நின்று மினக்கடாம வேளைக்கே வந்திடு என்ன!”*

*சுபத்திராவைக் கண்டதும் பேபி அன்ரியின் அம்மா முகம் மலர வரவேற்றாள்.*

*“வாடிபிள்ளை. உன்னைத்தான் பார்த்துக் கொண்டிருந்த நாங்கள் பயத்தம் பலகாரம் மா குழைக்க வேணும் பதமாய் நீ குழைச்சுக் குடுத்தியெண்டால் மற்றவை உருட்டிப் போடுவினம்.”*

*“பள்ளிக் கூடத்தால வர கொஞ்சம் சுணங்கி போச்சுது அம்மம்மா”*

*சொல்லிக் கொண்டே வேலையில் மும்முரமாக இறங்கி விட்டாள், சுபத்திரா. அங்கு கூடியிருந்த மற்றைய பெண்களும் உதவி செய்ய ஒருவாறு மாவைப் பிசைந்து கொடுத்தாள். தொகையான மாவைப் பிசைந்து எடுத்ததால் அவளுக்கு மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. சற்று ஓய்வெடுக்கலாம் என நினைத்தவளை அம்மம்மா ஓய்ந்திருக்க விடவில்லை.*

“பிள்ளை! ஒருக்கா தேத்தண்ணியைக் கலந்து விட்டியெண்டால் உங்கை நிக்கிற இளமட்டங்கள் உருண்டை பிடிக்கிறவைக்கு கொண்டு போய் குடுத்து விடுங்கள்”

ஒய வழியின்றி சுபத்திரா எழுந்து சமையலறைப் பக்கம் போனாள். அங்கே பேபி அன்ரி நீரைப் கொதிக்க வைத்திருந்தாள். சீனி, பால்மா, தேயிலை என பேபி அன்ரி எடுத்துக் கொடுக்க சுபத்திரா ஒரு பெரும் பாத்திரத்தில் தேநீரைக் கலந்து விட்டாள். அவள் டம்ளர்களில் தேநீரை வார்த்து வைக்க, மற்றவர்கள் வந்து அவற்றை எடுத்துப் பரிமாற சற்றே நேரத்தில் வேலை முடிந்தது.

“டீச்சர்! சாறி பிளவுஸ் தைச்சு வந்திருக்கு. ஒருக்கா வந்து பாருங்கோவன்”

பேபி அன்ரியின் அழைப்பை ஏற்று அறைக்குள் போனவள், அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த துணி மணிகளைப் பார்வையிட்டு மனதில் தோன்றிய விமர்சனத்தையும் கூறி விட்டுப் புறப்பட மாலை நேரம் மணி ஆறாகி விட்டது. அவர்களது வாசலைத் தாண்டும்போது அம்மம்மாவின் குரல் காதில் விழுந்தது.

“நாளைக்கு கொஞ்சம் நேரத்தோட வாடி பிள்ளை”

அவசரத்துடன் விரைந்து நடந்து வந்து வீட்டுப் படியில் ஏறியதும் அம்மாவின் புறுபுறுப்பு கேட்டது.

“நேரத்தோட வா என்று வழிக்கு வழி சொல்லி விட்டநான். மணி ஆறாகிப்போச்சுது. இன்னும் காணேல்ல”

“வந்திட்டன் அம்மா” என்று குரல் கொடுத்தவளுக்கு வருணைப் பற்றிய தவனம் தலைதூக்கியது.

“வருண்! வருண்!!”

தாயின் குரல் கேட்டதும் தனயன் ஓடி வந்து அவளை கட்டிக் கொண்டான்.

“குஞ்சு போய்மேசையில இருங்கோ. அம்மா முகம் கழுவீட்டு வாறன். படிக்க வேணும்”

சற்று நேரத்தில சுபத்திராவும் வருணும் மேசை முன் அமர்ந் திருந்தார்கள்.

“அம்மா! இன்றைக்கு டீச்சர் எனக்கு குடும்பத்திலுள்ளவையின்ரை பெயர்களை எழுத காட்டித்தந்தவ. இஞ்சை பாருங்கோ.

எழுதியிருக்கிறன்"

சுபத்திரா கொப்பியை வாங்கிப் பார்த்தாள். அதில் அப்பாவின் பெயர் தனஞ்சயன் என்று எழுதப் பட்டிருந்தது. ஏனோ சுபத்திராவின் உடலில் ஒருகணம் அனல் பரவியதைப் போன்றதோர் உணர்வில் திளைத்துப் போனாள். வருண் அவளைத் தனது மழலை மொழியினால் குளிர்வித்தான்.

"அம்மா! எனக்கு மட்டும் அண்ணா, அக்கா, தம்பி, தங்கை என்று ஒருத்தருமேயில்லை. எங்கட கிளாசில எல்லாருக்கும் யாராவது ஒருத்தர் இருக்கினம்"

வாய்விட்டுச் சிரித்தாள், சுபத்திரா.

"அதுவா... அது வந்து வருண்குஞ்சு தனிய இருக்கிறதினால தானே எல்லாருக்கும் செல்லமாக இருக்கிறீங்கள். அம்மாக்கு செல்லம், அம்மம்மாவுக்கு செல்லம், தாத்தாவுக்கு செல்லம். கடவுளுக்கும் அது தான் விருப்பம் போல இருக்கு."

சிணுங்கினான், வருண்.

"எனக்கு அது விருப்பமில்லையம்மா, எனக்கு விளையாட ஒரு தம்பி வேணும்"

"யாருக்கு வேணும் இந்த சொக்லேற்"

குரல் கேட்டு இருவரது கவனமும் திரும்பியது. வருண் ஓடி வந்து அம்மம்மாவின் கையில் இருந்த சாக்லேற்றை வாங்கிக் கொண்டான்.

சுபத்திரா நிமிர்ந்து அம்மாவைப் பார்த்த பார்வையில் நன்றி பொதிந்திருந்தது. மென்முறுவலுடன் அம்மா அதனை ஏற்றுக் கொண்டாள்.

அடுத்து வந்த நாட்களிலும் சுபத்திரா பேபி அன்ரி வீட்டுக்குப் போய் அவர்களுக்கு ஒத்தாசையாக சில வேலைகளைச் செய்து வந்தாள். துடினம் மிக்க வருணை சமாளிப்பதற்கு தாத்தாவும், அம்மா வும் மிகுந்த சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.

மறுநாள் பூப்புனித நீராட்டு விழா. அன்று பேபி அன்ரி வீட்டில் குழுமியிருந்தவர்கள் அனைவருக்கும் தலைக்குமேல் வேலை. ஆறு மணியாகியதும் வழமை போல் சுபத்திரா வீட்டுக்குப் புறப் பட்டாள். அம்மம்மா வந்து அவளைத் தடுத்தாள்.

“பிள்ளை! விடிந்தால் சாமத்திய வீடு. இன்னும் பலகாரம் ஒன்றும் பையில போடயில்லை. நீ ஒருக்கால் காட்டிக் கொடுத்தால் நிக்கிற சின்னன் சிறுசுகள் போட்டு வைக்கும்”

“அவளால் அம்மம்மாவின் வேண்டுகோளை தட்ட முடியவில்லை. ஒரு கணம் யோசித்தவள், எப்படியாவது அம்மாவைச் சமாளிக்கலாம் என எண்ணியவளாய் திரும்பி நடந்தாள். அவளுடன் வேறு இருவரும் சேர்ந்து கொண்டனர். சுமார் ஐந்நூறு பாக் வரை பொதி செய்து முடிய நேரமும் எட்டு மணியாகி விட்டிருந்தது.

ஒருவாறு அவர்களிடமிருந்து விடைபெற்று படபடக்கும் இதயத்துடன் வீடு வந்து சேர்ந்தாள். அம்மா அவளுடன் பேசவில்லை. முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாள். வருண் நித்திரைக்குப் போய் விட்டிருந்தான். தன்னிடம் தான் தவறு இருக்கிறது என்பதனை நன்கு உணர்ந்து கொண்டவளாய் தாயிடம் வலிய பேச்சுக் கொடுத்தாள்.

“அம்மா! நான் ஆறு மணிக்கே வெளிக்கிட்ட நான். பலகாரம் எதுவும் பாக் பண்ணயில்லை என்று அம்மம்மா வருத்தப்பட்டுக் கொண்டிருந்தா. அது தான் நின்று செய்திட்டு வர லேட்டாப் போயிட்டுது.”

அடக்கி வைத்திருந்த ஆத்திரம் எல்லாவற்றை யும் வார்த்தைகளாக வீசத் தொடங்கினாள், அம்மா.

“ஆக நீதான் ஒரு ஏமாளி அவைக்குக் கிடைச்சாய் போல இல்லை. நான் தெரியாமலத்தான் கேட்கிறன். அவைக்கும் எங்களுக்கும் அப்படியென்ன பெரிய உறவு கொட்டிக் கிடக்குது. அயலுக்கை பழகினதைத் தவிர வேறையென்ன நெருக்கம்.”

வருண் அவளைப்படுத்தி வைத்த பாடு அப்படி பேச வைத்தது.

தயங்கியவாறே சுபத்திரா வாய் திறந்தாள்.

“அம்மா! அந்தப்பிள்ளை என்ரை வகுப்பிலை தான் படிக்குது. பத்தாம் ஆண்டுக்கு நான் தான் வகுப்பு டீச்சர். இருந்தாலும் நான் இவ்வளவு நேரம் மினக் கட்டது என்னுடைய பிழைதான். இனிமேல் இப்படிச் செய்யமாட்டன். நீங்கள் என்னைக் கோவிக்காதையுங்கோ.”

மகள் மண்டியிட்டதும் தாயின் கோபம் புஸ்ஸென்று அடங்கியது.

“சரி சரி. போய் முகங்கால் கழுவிப் போட்டு வா. சாப்பிட்டிட்டுப் படுத்தால் தானே வேளைக்கு எழும்பி பள்ளிக்கூடம் போகலாம்”

“நாளைக்கு நான் பள்ளிக்கூடத்துக்கு லீவு போட்டிருக்கிறன் என்ற விசயத்தை இப்ப அம்மாவிட்ட சொன்னால் இஞ்சை ஒரு பூகம்பம் தான் வெடிக்கும்: படுக்கைக்குப் போகும் போது மெது வாய்ச் சொல்லுவம்” என மனதுக்குள் நினைத்துக் கொண்டவளாய் குளியலறையை நோக்கி நடந்தாள், சுபத்திரா.

மறுநாள் பொழுதும் விடிந்தது. அம்மாவை ஒருவாறு சமாளித்து வைபவத்திற்கு புறப்படத் தயாரானாள், சுபத்திரா. அதில் ஆச்சரியம் என்னவென்றால் அம்மாவே முன் வந்து அவளுக்கு ஒரு சாறியை தெரிவு செய்து கொடுத்தது தான். அந்த சாறியை சுபத்திராவி னுடைய சின்னக்கா போன வருடம் இந்தியா வுக்கு போய் வந்தபோது கொண்டு வந்து கொடுத்திருந் தாள். வெளிர் மஞ்சள் நிறத்தில் கோப்பி நிறக்கரையுடன் கூடிய சாறியை உடுத்தியதில் சுபத்திராவின் மனமும் நிறைவடைந்தது.

“சின்னக்கா உன்ரை நிறத்துக்கேற்ற மாதிரித் தான் சாறி வாங்கியிருக்கிறாள். வடிவாயிருக்குது சுபா”

மனதில் தோன்றியதை வார்த்தைகளால் வெளியிட்டாள், அம்மா. ஆயினும் அவளது குரலில் ஆற்றாமையும் விரக்தியும் விரவிக் கிடப்பதை சுபத்திரா அவதானிக்கத் தவறவில்லை.

“ம்”... என்ன செய்வது. எல்லாம் என் தலைவிதி

உள் மனம் ஏம்பலித்தது

பூப்பனித நீராட்டுவிழாவில் சுபத்திராவுக்கு அமோக வரவேற்பு காத்திருந்தது.

“வாங்கோ டீச்சர்”

பூரித்த முகத்துடன் மனமார வரவேற்றாள் பேபி அன்ரி. “இவ தான் எங்கட தமிழரசியின்ரை கிளாஸ் டீச்சர்” மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்தினாள். சுபத்திரா பிரசன்னமாகியிருந்த வேளையில் நீராட்டு முடிவுற்று பெண்ணுக்கு அலங்காரம் நடந்து கொண்டி ருந்தது. அவர்களுடைய இனசனங்கள் நிறைந்திருந்த நிகழ்வில் பங்குபற்றுவது மனதுக்கு கூச்சத்தை ஏற்படுத்த சுபத்திரா அங்கே ஓரமாகப் போடப்பட்டிருந்த கதிரை ஒன்றில் அமர்ந்து கொண்டாள்.

சிலர் அவளை அணுகி வந்து கதை தொடுத்தனர். எனினும் அவர்களது சுற்றத்தில் தான் தனித்திருப்பதை அவள் உணர்ந்து கொண்டாள்.

திடீரென அவளிடம் வந்த பேபி அன்ரி அவளது கைகளைப் பற்றி அறைக்குள் அழைப்போனாள். அங்கே... பெண்ணுக்கு அலங்காரம் நிறைவடைந்து பந்தலுக்குப் புறப்பட மற்றைய இளம் பெண்களும் கைகளில் மங்கலப் பொருட்களுடன் ஆயத்தமாக நின்றிருந்தனர்.

“டீச்சர்! நீங்கள் தான் தமிழரசியை பந்தலுக்கு அழைத்துக் கொண்டு போக வேணும்”

பேபி அன்ரி சொல்லி வாய்மூடமுன் அம்மம்மா வின் வாய் நெருப்பை உமிழத் தொடங்கியது.

“பேபி! உனக்கென்ன மூளை பிசகிப் போச்சுதே. இந்தளவு சுமங்கலிப்பொம்பிளையள் இஞ்சை வந்திருக்கினம். அவையளில ஒருத்தியைக் கூப்பிடாமல் இந்த வாழாவெட்டியைப் போய்க் கேட்கிறியே”

சற்று எதிர்பாராத இந்த வார்த்தைகளால் அங்கிருந்தவர்கள் விறைத்து நிற்க சுபத்திராவுக்கு நெஞ்சு பகீரென்றது. மறுகணமே அவளது கால்கள் ஓட்டமும் நடையுமாக வீடு நோக்கி விரையத் தொடங்கின. பதறித் துடித்த இயத்தின் குமுறலெல்லாம் கண்ணீராக உரு வெடுத்து தாரைதாரையாக வழிந்து கொண்டிருந்தது. வீட்டிற்கு வந்தவள் ஓடிப்போய் தனது கட்டிலில் விழுந்து குமுறிக் குமுறி அழுது கதறினாள்.

உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் எனது கணவர் தனஞ்சயன், கண் காணாத தொலை தேசத்தில் மற்றொரு பெண்ணுடன் குடும்பம் நடத்திக் கொண்டி ருக்கிறார். நான் சுமங்கலியா? இல்லை அமங்கலியா?

அவளது மனத்திரையில் கேள்விக்குறி பூதாகரமாய் வியாபித்துக் கொண்டது.

# விழல் வேட்கை

கார்த்திகை மாதத்து கார் கால மேகக் கூட்டங்கள் வான்பரப்பில் பவனி வருவதை கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார், கந்தவனம். வெண் பஞ்சுப் பொதிகளாய் திரண்டிருந்த மேகங்களை இடையிடையே கருமுகில்கள் ஓடி மறைப்பதும் விலகுவதுமாய் தோன்றிய காட்சி அவரது மனதுக்குள் புகுந்து பால்ய வயது பருவகாலத்துக்கு அவரை இட்டுச் சென்றது.

அவருடைய பெற்றோருக்கு இரண்டே குழந்தைகள் தான். ஒன்று அவர். மற்றது அவருடைய அருமைத் தங்கை கண்ணகி. புலர்ந்தும் புலராத காலைப் பொழுதிலேயே அப்பா துயில் கலைந்து தோட்டத்துக்குப் போய் விடுவார். அம்மாவும் எழுந்து வீடு வாசல் பெருக்கி, காலை உணவு தயாரித்து, பிள்ளைகளுக்கும் வைத்துவிட்டு கணவனுக்கும் எடுத்துக் கொண்டு தோட்டத்துக்குப் போய்விடுவாள். போகும் போது அம்மாவின் குரல் அரைத் தூக்கத்திலிருக்கும் கந்தவனத்தின் காதுகளில் வந்து விழும்.

“தம்பி! நீங்கள் இரண்டு பேரும் எழும்பி குளிச்சு வெளிக்கிட்டு.... நான் தட்டில போட்டு மூடி வைச்சிருக்கிற புட்டைச் சாப்பிட்டிட்டு, பள்ளிக்குப் போகேக்க வடிவாய்க் கதவை மூடிப் போட்டு போங்கோ. திறப்பை வழமையாய் வைக்கிற இடத்தில வைச்சிட்டுப் போ. என்ன!...”

அம்மாவின் குரல் தேய்ந்து ஓய்ந்து போவது அவரது காதுகளில் தெளிவற்று வந்து மோதும். தூக்கக் கலக்கம் அவரை அமத்த மீண்டும் கண்ணயர்ந்து போவார். தங்கை கண்ணகி தான் அவரை அரற்றி எழுப்புவாள்.

“அண்ணா! எழும்புங்கோ. பள்ளிக்கூடத்துக்கு நேரம் போகுது. எனக்கென்ன. இண்டைக்கு முருகேசம்பிள்ளை வாத்தி யாரிட்ட நல்ல பிரம்படி தான் வாங்கப் போறம்”

முருகேசம்பிள்ளை வாத்தியாரின் பெயரைக் கேட்டதுமே கந்தவனம் துடித்துப் பதைத்து எழுந்து விடுவார். முன்பொரு நாள் அவரிடம் வாங்கிய அடியின் தழும்பு இற்றைவரை அவரது கையில் துருத்திக் கொண்டிருக்கிறது.

அப்படியே ஒருவருக்கொருவர் அனுசரனையாக வாழ்ந்த காலமது. மாலை வேளைகளில் அவர்கள் வளவிற்குள் ஓடிப்பிடித்து விளையாடுவார்கள். வீட்டு முற்றத்தில் ஒரு மா. அடிவளவில் ஒரு வேம்பு இவையிரண்டுமே தாத்தாவின் காலத்து மரங்களாம். கைகளி னால் கட்டிப்பிடிக்க இயலாத அளவிற்கு பெரு விருட்சங்களாய் கிளை பரப்பி வளர்ந்திருந்தன. அவற்றையும் பரம்பரைச் சொத்து எனக் கருதியவராய் அப்பா அந்த மரங்களை அழிக்க விரும்பவில்லை.

முன்பு அவர்கள் குடியிருந்த மண்வீட்டைத்தகர்த்துவிட்டு இப்போது வசிக்கும் கல்வீட்டைக் கட்டும் போது அம்மா முன்பின் யோசிக்காமல் ஒரு கருத்தைச் சொல்லிவிட்டாள்.

“இஞ்சரப்பா வளவுக்கை இருக்கிற வேம்பைத் தறிச்சு வீட்டுத் தேவையளுக்கு எடுக்கலாம் தானே. அது அடிவளவுக்கை நிண்டு பெரிய தேசத்தையெல்லே மினக்கடுத்துது. அந்த இடத்தில நாலு தென்னம்பிள்ளையை, மாவை, பிலாவை வைச்சு விடலாம்.”

அம்மா சொல்லி வாய்மூட முன் அப்பா சீறி விழுந்தார்.

“உதென்ன உன்ரை விசர்க்கதை. என்ரை பரம்பரைச் சொத்தா இருக்கிற வேப்பமரத்தை தறிக்கிறதென்பது நான் உயிரோட இருக்குமட்டுக்கும் நடக்காது”

அப்பாவின் சினத்தை சீரணிக்க முடியாமல் அம்மா வாய் பொத்தி நின்றாள். எத்தனையோ வருடங்களுக்கு முன் நடந்த அந்தச் சம்பவம் இப்போது அவர்கண் முன் பசுமையாய் விரிந்தது. அதே சமயம் கண்ணகி அந்த மரங்களுக்குப் பின்னால் ஒளிந்தாள் என்றால் அவரால் அவளைத் தேடிப்பிடிக்கவே முடியாது. ஓமக்குச்சியைப்

போன்ற தேகவாகு அவளுடையது. அவள் மரத்துக்குப் பின்னால் சுழன்று சுழன்று அவரது பார்வைக்குப்படாமல் தன்னை மறைத்துக் கொள்ளுவாள். இன்று வான் பரப்பில் அலைந்து திரியும் மேகங்களும் அவற்றை ஊடறுக்கும் கருமுகில்களும் அவரது மனதுக்குள் ஊடறுத்து இனம்புரியாத ஒரு நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

அடி வயிற்றிலிருந்து புரண்டெழுந்த பெருமூச்சொன்று வெளியேறி காற்றுடன் கலந்து சங்கமமாகியபோது சற்று ஆசுவாசமடைந்தவராய் கடந்து போன வாழ்க்கையை அசைபோட முற்பட்டார்.

கால நதியின் ஓட்டத்தில் அவர் கல்வியை சிறப்புறக் கற்று ஒரு கணக்காளராக பதவியேற்றார். கண்ணகியும் தனது முயற்சியினால் முன்னேறி ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியையாக பதவி வகித்துக் கொண்டிருந்தாள். அப்பாவும் அம்மாவும் அவளுக்கு ஒரு நல்ல வரனாகப் பார்க்க முயன்ற வேளை, கந்தவனமும் அதற்கு உறுதுணை யாக இருந்து கதிரேசன் என்ற பட்டதாரி ஆசிரியரை அவளுக்கு மணமுடித்து வைத்தனர். ஊரில் இருந்த பெண்ணைப் பெற்றவர்கள் பலரும் போட்டி போட்டுக் கொண்டு கந்தவனத்திற்குப் பெண்ணைக் கொடுக்க முன்வந்தனர். எனினும் அவர் தனக்குரிய வாழ்க்கைத் துணையை தெரிவு செய்யும் பொறுப்பை அவரது அருமைத்தங்கை கண்ணகியிடமே விட்டு விட்டார். கண்ணகியும் தன்னுடன் கூடப் படித்த தோழியான மகேஸ்வரியைத் தேர்ந்தெடுத்தாள். அவளும் ஒரு பட்டதாரி ஆசிரியை கந்தவனத்துக்கும் தங்கையின் தேர்வு பூரண திருப்பதியைத்தர அவர் மகேஸ்வரியின் கழுத்தில் தாலியைக் கட்டினார்.

காலம் கடுகதியில் சுழன்று கொண்டிருந்தது. கந்தவனத்துக்கு தலைநகரில் வேலை அமைந்ததால் அவர் தனது குடும்பத்தினருடன் அங்கேயே குடியேறி விட்டார். வருடத்தில் ஓரிரு தடவை ஊருக்கு வந்து தங்கையுடன் தங்கிப் போவார். அம்மா அப்பாவுடன் வாழ்ந்த அந்த வீட்டில் தங்கியிருக்கும் போது அவரையறியாமலே அவரது மனம் உற்சாகம் கொள்ளும். இளம் பராயத்து நினைவுகள் அலை அலையாகக் கிளம்பி அவரது உள்ளத்தை ஆட்கொள்ளும் போது அவரது மெய் சிலிர்த்துப் போகும்.

முக்கியமாக தானும் கண்ணகியும் முற்றத்து மாவைச் சுற்றியோ அல்லது அடிவளவு வேம்பைச் சுற்றியோ நகர்ந்து நகர்ந்து ஒளித்துப் பிடித்து விளையாடிய காட்சிகள் இன்றும் அவரது மனதில்

பசுமையாக நிலைத்திருக்கிறது. அந்தப் பென்னாம்பெரிய அடிப் பகுதியைக் கொண்ட மாமரத்தின் பின் கண்ணகி ஒளிந்து கொண்டாள் என்றால் அவளை எட்டித் தொடவே முடியாது. நுழுந்தி நுழுந்தி அவருக்கு போக்கு காட்டிவிட்டு அவள் மாயமாய் ஓடி மறைந்து விடுவாள். எதுவித பொறுப்புக்களோ, சிந்தனைகளோ இல்லாத அந்த இளமைப் பருவம் இனியும் மீண்டு வராதா என்றொரு ஏக்கத்தின் விளைவாக ஒரு நீண்ட பெருமூச்சைத்தான் விட முடியும். இயற்கையின் கோலமதை எவராலும் மீற முடியாததும் ஒரு நியதிதானே.

ஒரு சமயம். கந்தவனத்துக்கு தொழில் ரீதியாக யாழ்ப் பாணத்தில் ஒரு கிழமை தங்கியிருந்து கணக்கு வழக்குகளை மேற் பார்வை செய்ய வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவரும் பெரும் உற்சாகத்துடன் ஊருக்குப் புறப்பட்டார். தொடரூந்திலிருந்து யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் இறங்கியவர், ஆட்டோ ஒன்றைப் பிடித்துக் கொண்டு வந்து வீட்டு வாசலில் இறங்கினார்.

"மாமா!" என அழைத்தவாறு கண்ணகியின் பிள்ளைகள் இருவரும் ஓடிவந்து அவரை கட்டிக் கொண்டனர். ஒருவாறு அவர் களைச் சமாளித்துவிட்டு நிமிர்ந்தவருக்கு அதிர்ச்சியும் ஆச்சரியமும் காத்திருந்தது. பிரமையோ என ஒரு கணம் மனம் நினைக்க, கைகளால் கண்களைக் கசக்கி விட்டு மீண்டும் உற்றுப் பார்த்தார்.

முற்றத்து மாவைக் காணவில்லை. இத்தனை காலமும் நிழல் பரப்பிய விருட்சத்தின் வெற்றிடத்தை நிரப்புமாப் போல் ஒரு கட்டிடம் அரையும்குறையுமாய் எழும்பிக் கொண்டிருந்தது. அவருடைய மனமோ சுக்கு நூறாக நொறுங்கிப் போக, கை கால்கள் செயலிழந்து நின்றன.

விறைத்துப் போய் அப்படியே நின்றிருந்தவரை, தங்கையின் குரல் சுயநிலைக்குத் திரும்ப வைத்தது.

"என்ன அண்ணா அப்பிடியே பார்த்துக் கொண்டு நிற்கிறியள். வாங்கோவன் உள்ளுக்கு"

உடன் பிறப்பின் பாசமான வார்த்தைகள் அவரது உள்ளத் தைத் தீண்டவில்லை. மாறாக எரிமலை ஒன்று பூகம்பமாய் வெடித்து வாயினூடாக அனலைக் கக்கியது.

"கண்ணகி யாரைக் கேட்டு இந்த மாவைத் தறிச்ச நீங்கள்?"

"ஏன் அண்ணா அப்பிடிக் கேக்கிறியள். என்ரை சீதனவளவி

லுள்ள மாவைத் தறிக்கிறதுக்கு நான் யாரைக் கேக்க வேணும். நான் தான் தறிப்பீச்சுப் போட்டு அந்த இடத்தில ஒரு மாடி வீட்டைக் கட்டுவம் என்று பார்த்தன்"

கந்தவனத்துக்கு ஆத்திரத்தினால் தேகம் நடுங்கியது.

"நல்லாய் இருக்குது உன்ரை கதை. இந்தக் காணி உனக்கு சீதனமாய்த் தந்தது தான். ஆனால் இது எங்கட முதுசச் சொத்து. எனக்கும் இதில பங்கிருக்கு. நீ மாமரத்தை தறிக்க முந்தி என்னட்ட ஒரு சொல்லு சொல்லி இருக்க வேணும்"

வார்த்தைகள் தழுதழுத்தன. ஏளனச் சிரிப்பொன்றை உதிர்த்தாள், கண்ணகி.

"அண்ணா! அப்பா அம்மாவை நாங்கள் முந்தி இருந்த மண் வீட்டை இடிச்சுப் போட்டுத்தான் இந்த கல்வீட்டைக் கட்டினவை. எங்கட காணி. நாங்கள் நினைச்சது எதையும்செய்யலாம் என்ற நிலைப்பாடு தானே அது. அதைப் போலத்தான் இதுவும். எனக்கு இரண்டு பொம்பிளைப் பிள்ளையள். அதுகளுக்குத் தேவையானதை நான் தானே தேடி வைக்க வேணும்."

"நல்லாய்த் தேடி வையன். ஆர் வேண்டாம் என்று சொன்னது. இப்ப முற்றத்தில கிடந்த மாவை ஏன் தறிச்ச நீ என்று தான் கேட்கிறன்"

கண்ணகியும் விடவில்லை.

"மா நின்ற இடத்திலதானே வீட்டுக்கு நிலையமும் வந்தது. அப்ப மாவைத் தறிக்காமல் என்னென்று வீட்டைக் கட்டுறது. அது தான் மரத்தை அப்புறப்படுத்திப்போட்டு வீட்டுக்கு அத்திவாரம் போடீச்சநான்"

கண்ணகியின் சமாதானம் அவரது இதயத்தை பற்றி எரிய வைத்தது. உதடுகள் துடித்தன.

"அடி வளவு வேம்பை விட்டு வைச்சிருக்கிறியோ. அல்லது அதையும் அழிச்சுப் போட்டியோ?"

"வேம்பை அடியோட கிளறிப் போட்டு வாழையும் தென்னம் பிள்ளையளும் வைச்சிருக்கிறன்ன. பச்சைப் பசேலென்று என்ன குளிர்மையாய் இருக்குதென்று போய்ப்பாருங்கோ. ஒருக்கா."

கண்ணகி நிஜமானதைத்தான் சொன்னாள். கால மாற்றத்திற் கேற்ப வாழ்வியல் நிலைகளிலும் மாற்றங்கள் ஏற்படுவது வழமை

யானது தான். அதுவே இயற்கையின் நியதி என்பதை கந்தவனம் உணர்ந்தாரில்லை. புத்தி பேதலித்தவராய் வீறு கொண்டு உவர்ப்பான வார்த்தைகளை வீசினார்.

"இனிமேல் இந்த வீட்டு வாசலில் நான் கால் வைக்க மாட்டன். இன்றையோட இந்த வீட்டுக்கும் எனக்கும் உள்ள உறவு முறிஞ்சு போச்சுது. இனி நீ யாரோ. நான் யாரோ."

வாசலை விட்டு தெருவில் இறங்கி நடந்தார், கந்தவனம்.

"அப்பாவைப் போல தான் அண்ணாவும். வீண் வறட்டுப் பிடிவாதம் கொண்டு நிற்கிறார். யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியாத சீவன்கள்"

கண்ணகியின் மனம் அலுத்துக் கொண்டது.

வருடங்கள் சில ஓடி மறைந்தன. அண்ணன் தங்கைக்கு இடையேயான இடைவெளி மட்டும் குறைந்த பாடாயில்லை. இட மாற்றம் பெற்று ஊரோடு வந்த கந்தவனமும் மனைவியும், குழந்தை குட்டியோடு அவர்களது சொந்த இடமான மாவிட்டபுரத்தில் குடியேறினர். இடையிடையே கந்தவனத்துக்கு தங்கையின் நினைவுகள் தலைதூக்கும். அவர் அதை அலட்சியப்படுத்தி விடுவார்.

அவரது மனைவி கொண்டு வந்த சீதனவீட்டின் ஒரு பக்க எல்லையில் ஒரு ஒற்றைப் பனை நின்றிருந்தது. போகம் வந்தால் கற்பகதருவாக காய்த்துக் கொட்டும். தாத்தா நட்ட பனை என அவரது மனைவி அடிக்கடி சொல்லிக் கொள்வாள். கந்தவனத்துக்கும் அதில் ஒரு ஈடுபாடு இருக்கத்தான் செய்தது.

ஒருநாள் பக்கத்து வீட்டுக்காரர் அவரைத் தேடி வந்திருந்தார். சிறிது நேரம் ஊர்ப்புதினங்களை அலசி விட்டு அவர் ஒரு முறைப்பாட்டையும் முன் வைத்தார்.

"அது வந்து பாருங்கோ. உங்கட பக்கத்து வேலிக்கரையில ஒரு உயர்ந்த பனைநிக்குதெல்லே காற்று, மழை என்று வந்தால் அதால எங்கட வீட்டுக்கு பிரச்சனை வரும் போல இருக்கு"

அவரைத் தொடரவிடாமல் இடையில் குறுக்கறுத்தார், கந்தவனம்.

"இல்லை. நான் தெரியாமத்தான் கேக்கிறன். பனை எப்ப நட்டது. நீங்கள் எப்ப வீடு கட்டின. நீங்கள் அத்திவாரம் போடேக்கையே இதையெல்லாம் யோசிக்க வேண்டாமா?"

பக்கத்து வீட்டுக்காரருக்கு தூக்கிவாரிப் போட்டது.

“இல்லைப் பாருங்கோ. நான் இவ்வளவு காலமும் உதைப்பற்றி கவலைப்படாமத்தான் இருந்த நான். இப்ப கொஞ்ச நாளைக்கு முந்தித்தான் கவனிச்சன். அந்த மரத்தில இடையில ஒரு பொந்து இருக்குது. கிளியொன்று அடிக்கடி அதுக்குள்ள போய் வருகுது. நான் நினைக்கிறன் குஞ்சு பொரிச்சிக்குது போல. எக்கணம் அது ஆழமான பொந்தாய் இருந்து தெண்டால் சுழற்றி அடிக்கிற காத்துக்கு மரம் முறிஞ்சு எங்கட கூரைக்கு மேல விழச்சந்தர்ப்பம் இருக்குது கண்டியளோ. அதனால தான் இதுக்கு ஒரு பரிகாரம் தேட வேணும் என்று நினைச்சிட்டு வந்தநான்”

அவரது ஆதங்கத்தை கந்தவனம் புரிந்து கொண்டவராய்த் தெரியவில்லை. ஒரே வார்த்தையில் காய் வெட்டி விட்டார்.

“இயற்கை வளங்ளை அழிக்கிற விசயம் எனக்கு பிடிக்கவே பிடிக்காது.”

முகத்தைத் தொங்கப் போட்டவாறு பக்கத்து வீட்டுக்காரர் போய் விட்டார்.

மாதங்கள் சில உருண்டன. நான்கைந்து நாட்களாக மாரி மழை தொடர்ந்து கொட்டிக் கொண்டே இருந்தது. செம்பாட்டு நிலம் சேறும் சகதியுமாய் புரையோடிப் போய்க் கிடந்தது. விடா மழையின் கெடுபிடியினால் மக்கள் சொல்லொணாத்துயரத்துக்கு ஆளாகினர். அத்துடன் சூறாவளி வீசப்போவதாக வானொலிச் செய்தி வேறு அறிவித்தலைக் கொடுத்தது. இவை எல்லாவற்றையும் அவதானித்த கந்தவனத்தின் மனத்திலும் ஒரு குழப்பம் தோன்றத்தான் செய்தது. அவரையறியாமலேயே அவரது கண்கள் சாரளத்தினூடு பார்வையை வீசி அந்த ஒற்றைப் பனையை அவதானிக்கத் தொடங்கின.

“இந்த சாதாரண காற்றுக்கே பனை சுழன்று ஆடுது. அவங்கள் சொல்லுறது போல சூறாவளியாய் உருவெடுத்தால் என்ன நடக்குமோ... என்னப்பனே! மாவைக் கந்தவனே! நீ தான் துணை”

மனமுருகி வேண்டியபோது கண்கள் தாமாகவே மூடிக் கொண்டன.

அவரது வேண்டுதல் பலித்ததோ என்னவோ... அன்று மாலை மழைத்தூறல் ஓய்ந்து ஓரளவு சுமுக நிலை தோன்றவே, அங்கு வாழ் மக்களும் சற்று நிம்மதியடைந்தனர்.

நடுச்சாமம். இரவு ஒருமணி இருக்கும். பொல பொலவென மழைத்துளிகள் வான் பரப்பிலிருந்து சொரியத்தொடங்கின. சிறு துளிகளாக ஆரம்பித்த மழை சோ என்ற இரைச்சலுடன் கன மழையாகப் பொழிந்து தள்ளியது. பளிச்! பளிச் என மின்னல் ஒளி பாய்ச்சி கண்களைக் கூச வைக்க, இடியோசை காதுகளைச் செவிடாக்கும் வண்ணம் முழங்கித் தள்ளியது. உயிரினங்கள் அனைத்தும் நிலைகுலைந்து தத்தளித்தன.

திடீரென ஊ... என்ற பேரிரைச்சலுடன் காற்று சுழன்றடிக்கத் தொடங்கியது. நித்திரையிலிருந்து விழித்துக் கொண்ட கந்தவனத் துக்கு நெஞ்சுபடபடத்தது. செய்வதறியாது ஒரு கணம் திணறியவர் மறுகணமே தன்னைச் சுதாகரித்துக் கொண்டவராய் செயற்பட முற்பட்ட போது... பாரிய சத்தம் ஒன்று அவரது செவிப்பறைக்குள் வந்து மோதியது.

பொட பொட வென்ற இரைச்சலுடன் கேட்ட ஒலியைத் தொடர்ந்து சடார்!... என வீடே ஒருதரம் அதிர்ந்து ஓய்ந்தது. வீட்டுக் கூரையின் பனை மரங்கள் தெறித்து சின்னா பின்னமாக, ஓடுகள் நொருங்கிச் சிதற, கந்தவனத்தின் இதயம் எனும் தண்டவாளத்தில் புகையிரதம் சட புட என்று ஓடத் தொடங்கியது.

சற்றும் எதிர்ப்பார்க்காத அந்த அதிர்விலிருந்து கந்தவனம் மீண்டெழ இரண்டு நாட்களாயிற்று. மீண்டெழுந்தவர் இன்னமும் கம்பீரமாய்நின்று கொண்டிருந்த அடிப்பனை மரத்தை ஒரு உத்வேகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

“நல்ல வைரமான பனை. இதில தான் மரம் சீவியெடுத்து உடைஞ்சு போய்க்கிடக்கிற கூரைக்கு மாற்ற வேணும்.”

மனம் நினைத்துக் கொண்ட அதே சமயம் மற்றுமொரு உந்துதலும் ஏற்பட்டது.

“இந்த மழையோடையும் சூறாவளிக் காற்றோடையும் தங்கச்சியவை எப்பிடி இருக்கினமோ தெரியேல்ல. ஒருக்கா போய் பார்த்திட்டு வரவேணும்.”

# மூச்சு

*வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. ஏதோ அலுவலாக வெளியே வந்த கோமதி, இருண்டு போய் கிடந்த சுற்றுப்புறத்தைக் கண் ணுற்றதும் வாய்விட்டு புலம்பத் தொடங்கினாள்.*

*"இண்டைக்கு சரஸ்வதி பூசையும் அதுவு மாய் வானமெல்லாம் இருண்டு போய்க் கிடக்குது. எக்கணம் நல்ல மழை கொட்டி எல்லாத்தையும் சீரழிக்கப் போகுது போல"*

*வெளிக்கூடத்தில் சாய்மனையில் சாய்ந் திருந்து பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்த கதிரேசனது காதுகளில் மனைவியின் வார்த்தைகள் வந்து மோதின. மனைவியை ஆற்றுப்படுத்தும் நோக்குடன் அவர் வாய்திறந்தார்.*

*"ஏனப்பா கோமு! நீர் என்ன சரஸ்வதி பூசையை முற்றத்திலையே செய்யப் போகிறீர். வீட்டுக்குள்ள... அதுவும் சுவாமி அறைக்குள்ள தானே பூசையை செய்யப் போறம். மாரி கால மெண்டால் மழை பெய்யத்தானே செய்யும். அதுக்கேன் வருத்தப்படுறீர்?"*

*கோமதி தணிந்து வந்தாள்.*

*"அதுக்கில்லையப்பா. இண்டைக்கு சபேசன் பிள்ளையளைக் கூட்டிக் கொண்டு வாறனெண்டவன். மழை பெய்தால் பிள்ளையள் நனைய வேண்டி வரும். அது தான் யோசிக்கிறன்"*

*சபேசன் அவர்களுடைய இளைய மகன்.*

குடும்பத்தோடு வெளிநாட்டிலிருந்து வந்து மாமியார் வீட்டில் தங்கியிருக்கிறார்கள். அடிக்கடி வீட்டுக்கு வந்து போவார்கள்.

“மழையெண்டால் அவை பஸ்ஸில வராமல் ஒரு ஆட்டோவை பிடிச்சு வரத்தெரியாதே. உந்த விசர் யோசனைகளை விட்டிட்டு நீர் போய் வேலையைக் கவனியும்”

கதிரேசன் மீண்டும் பத்திரிகையில் மூழ்கிப் போனார்.

உள்ளே போன கோமதி பரபரப்புடன் அவர்களது சமையல் காரியை அழைத்தாள்.

“யோகா! பிள்ளை யோகா!”

அடுப்பில் எதையோ வதக்கிக் கொண்டிருந்த யோகா, கையில் எண்ணெய்க் கரண்டியுடன் வந்து எட்டிப்பார்த்தாள்.

“நேரகாலத்தோட சமையல் வேலையை முடி பிள்ளை. அப்பதான் பூசைக்கான ஆயத்தங்களைக் கவனிக்கலாம்.”

அம்மாவின் பேச்சு யோகாவிற்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. “என்ன அம்மா இண்டைக்கு இவ்வளவு அமர்க்களப்படுறா.”

ஒருவாறு பத்து மணிக்கே சமையலை முடித்து விட்டாள் யோகா. அம்மா அவளைச் செய்யச் சொன்ன உணவு வகைகள் அவளுக்கு மலைப்பைத் தந்தன.

“அம்மா! என்னால தனிய இவ்வளவையும் செய்ய முடியும் என்று நான் நம்பேல்ல”

அம்மா ஒரு புன்முறுவலை உதிர்த்து விட்டு சொன்னாள்.

“இப்ப மகளும், மருமகளும் பிள்ளைகளோட வந்திடுவினம். அவை உனக்கு உதவி செய்வினம். நீ பயப்பிடாத பிள்ள.”

யோகாவிற்கு இப்பதான் சற்று நிம்மதியாயிருந்தது. அம்மாவின் மகள் சரளாவை யோகாவுக்கு தெரியும். யாழ்ப் பாணத்தில் ஒரு பெரிய பாடசாலையில் ஆசிரியராக இருக்கிறாள். அவளுக்கு ஆண் ஒன்றும் பெண் ஒன்றுமாக இரண்டு குழந்தைகள்.

ஆனால் அம்மாவின் மருமகளை அவள் இதுவரை கண்டதில்லை. வெளிநாட்டிலிருந்து விடுமுறையில் வந்திருப்பதாகக் கேள்வி. அவளைப் பற்றி மேலதிக விபரம் எதுவும் அவளுக்குத் தெரியாது.

திடீரென அவர்கள் வீட்டில் ஒரு பரபரப்பு. குழந்தை

குஞ்சுகளின் ஆரவாரக் குரலினால் வீடே அதிர்ந்தது. புதினம் அறியும் ஆவல் உந்தித்தள்ள யோகா மெதுவாக ஹோலினுள் எட்டிப் பார்த்தாள்.

“கலை, இசை இஞ்சை ஓடி வாங்கோ”

அம்மா நீட்டிய கைகளுக்குள் அந்த இரு குழந்தைகளும் ஓடி வந்து அவளைக் கட்டிக் கொண்டன. “அப்பம்மா!” ஏக குரலில் அவளை அழைத்தவாறு ஆளுக்கொரு கன்னத்தில் முத்த மிட்டனர். அம்மாவின் முகம் பூரண நிலவாக ஒளிர்ந்தது. வாழ்க்கையில் நாம் இன்பம் என்ற பதத்திற்கு கருத்து தேடுகிறோம். இப்படி யான ஒரு சந்தர்ப்பத்தில் தான் அதன் முழுமையான மகிமை எம் உணர்வுகளில் ஒன்றிப் போகிறது. யோகாவுக்கு இந்த உண்மை புரிந்ததோ என்னவோ அந்தக் குழந்தைகள் மீது பதித்த கண்ணை மீட்டெடுக்க முடியாமல் ஒரு கணம் திணறியே போனாள். அத்தனை அழகான சுட்டிக் குழந்தைகள் பத்து, பன்னிரண்டு வயது மட்டில் மதிக்கலாம். யோகா ஒருவாறு தன்னை சுதாகரித்துக் கொண்டு வேலையைக் கவனிப்பதற்காக விரைந்து சமையலறையை நோக்கி நடந்தாள்.

அவளது எண்ணம் முழுவதையும் அந்தக் குழந்தைகள் நிறைத்திருக்க, அவளது கைகளோ தேங்காயைத் துருவுவதில் ஈடு பட்டுக் கொண்டிருந்தன. அம்மாவும் மருமகளும் சமையலறைக்குள் வந்து கொண்டிருந்தார்கள்.

“மாமி! முதல்ல பொங்கலை வைப்பமோ?”

மருமகள் கேட்டாள்.

“இல்லை வாணி. மோதகத்தை முதல்ல அவிப்பம்”

அம்மா சொல்லி வாய்மூடமுன் யோகா, பயறு அவித்து வைத்த பாத்திரத்தை எடுத்து அவர்கள் முன் வைத்தாள். துருவிய தேங்காய்ப்பூவையும் சர்க்கரைப் பாத்திரத்தையும் எடுத்துக் கொடுத்த போது அம்மா சொன்னாள்.

“இது தான் யோகா. என்னுடைய விசுவாசமான பிள்ளை. எனக்கு எது வேணுமோ அதைத் தானே செய்யும் பக்குவம் இவளுடையது”

அம்மா உள்ளீட்டைக் குழைத்துக் கொடுக்க, யோகா வெளி மாவைக் குழைத்து உருட்டியெடுத்து வளைத்தாள். வாணி மளமள வென்று மோதகத்தைப் பிடிக்க, யோகா அவற்றை அவித்து இறக்கினாள். சொற்ப நேரத்தில் வேலை முடிந்தது.

"பார் மணியும் பன்னிரண்டாச்சுது. இன்னும் சரளா குடும்பத்தைக் காணேல்லை."

மகள் வந்து சேரவில்லை என்ற ஏக்கம் அம்மாவுக்கு.

"சரஸ்வதி பூசை பின்னேரம் தானே. அது தான் அவ ஆறுதலாய் வரலாம் என்று இருக்கிறாவாக்கும்."

வாணி சமாதானம் சொன்னாள்.

யோகா நனைய வைத்திருந்த உளுத்தம் பருப்பைக் கழுவிக் கொண்டிருக்க, வீட்டில் பெரிய ஆரவாரம். என்ன ஏதென்று எட்டிப்பார்த்தால்... சரளா குடும்பத்தோடு பிரசன்னமாகியிருந்தாள். இருவீட்டுக் குழந்தைகளும் மகிழ்ச்சி பொங்க ஓடியாடி விளையாடத் தொடங்கினார்கள்.

யோகா கழுவிக் கொடுத்த உளுந்தை சரளா மிக்ஸியில் போட்டு அரைக்க, வாணி வெங்காயம் மிளகாயை நறுக்க, கோமதி மாவைக் குழைத்து வடை களாய்த் தட்டிப் போட, யோகா அவற்றை சுட்டு எடுத் தாள். ஆளும் பேரும் வேலை செய்தால் அலுப்பிருக் காது என்று சும்மாவா சொன்னார்கள்.

நேரமும் மதியமாயிற்று, கோமதியின் கட்டளைப்படி மதிய உணவை மேசையில் கொண்டு போய் வைத்தாள் யோகா. அவரவர் தங்களது உணவை தாங்களே பரிமாறிக் கொண்டனர். சரளாவின் பிள்ளைகள் இருவரும் யோகாவிடம் வந்து "அள்ளி சாப்பிடு வதற்கு ஸ்பூண் வேணும்" என்று கேட்டு வாங்கிப் போயினர், வாணியின் பிள்ளைகளோ... கையால குழைத்து சாப்பிட்டாத்தான் ருசியா யிருக்கும் என்று சொல்லி அள்ளிச் சாப்பிட்டனர்.

சாப்பிட்டு முடிந்ததும் வாணியின் மகள் இசை யோகாவிடம் வந்தாள்.

"ஆன்ட்டி! கத்தரிக்காய் குழம்பு நல்ல ரேஸ்ற். நீங்க தானே சமைச்ச நீங்க?"

குழந்தையின் பாராட்டைக் கேட்டதும் யோகாவுக்கு தலைகால் தெரியாத புளுகம்.

இதற்கிடையில் வாணியின் மகன் கபிலன் வந்தான்.

"ஆன்ட்டி! பாயாசம் சூப்பர். நான் இரண்டு கப் குடிச்சநான்"

பிள்ளைகளின் மனம் உவந்த பாராட்டு யோகாவை எங்கோ உச்சத்திற்கு கொண்டு போய் விட்டது. அவள் பெற்றெடுத்த

பிள்ளையும் ஒரு நாள் இப்படி நடந்து கொண்டவன் தான். ஆனால்... இன்று அவன் அவளை விட்டு நெடுந்தூரம் போய்விட்டான்.

கண்களில் துளிர்ந்த நீரை சுண்டியெறிந்தாள், யோகா. கூடவே மனக்கவலையையும் தான் "நடந்தவை நடந்து முடிந்தவை யாக இருக்கட்டும். இனி நடக்கப்போவதை எதிர்கொள்ள எம்மைத் தயார் படுத்திக் கொள்வோம்" இதுவே அவளது கொள்கை.

எல்லோரும் சாப்பிட்டு முடித்து விட்டார்கள். யோகா ஒரு தட்டில் உணவைப் பரிமாறிக் கொண்டு வந்தாள், சமையல் அறையில் இருந்து சாப்பிடத் தொடங் கினாள். சரளாவின் பிள்ளைகள் அவளை எப்போதுமே திரும்பிப் பார்ப்பதில்லை. ஏதாவது தேவை ஏற்பட் டால் மட்டும் அதிகாரத் தோரணையில் அவளை நாடுவார்கள், ஆனால் வாணியின் பிள்ளைகள் அப்படியல்ல. அவளையும் அந்தக் குடும்பத்தில் ஒருத்தியாகவே நினைத்து பழகுகிறார்கள். யோகாவுக்கும் அந்தப் பிள்ளைகள் மீது வாஞ்சை அதிகமாக ஏற்பட்டது நிஜம் தான்.

ஏதோ அலுவலாக சமையலறைக்கு வந்த கலையரசி யோகா தனியே இருந்து சாப்பிடுவதை அவதானித்து விட்டாள்.

"ஆன்ட்டி! ஏன் தனிய இருக்கிறீங்கள். நான் வேணு மெண்டால் உங்களுக்கு கத்தரிக்காய் குழம்பு கொண்டு வந்து தாறன். சாப்பிடுங்கோ"

குழந்தையின் பரிவு அவளுக்குள் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி யது. அவளையும் மீறி அவளது உணர்வுகள் கடந்த காலத்தை நோக்கி பாயத்தொடங்கி விட்டன.

அது இறுதிக்கட்ட போர் நடந்து கொண்டிருந்த சமயம். இடப்பெயர்வுகள் பலவற்றைச் சந்தித்த அவர்கள் வலைஞர் மடத்தில் வந்து தஞ்சம் புகுந்திருந்த வேளை. அவர்களது செல்ல மகன் தீபன், "அம்மா! இண்டைக்கு மீன் வாங்கிச் சமைப்பம். எனக்கு சாப்பிட ஆசை யாயிருக்கு" என்று அவளிடம் கூறியதைக் கேட்டுவிட்ட அவளது கணவன் காந்தன் கடற்கரைக்கு புறப்பட்டு விட்டான். யோகாவிற்கோ அதில் துளிகூட இஷ்ட மிருக்கவில்லை. அவன் போன சிறிது நேரத்தில் கடற் கரைப் பிரதேசத்தை நோக்கி கொத்துக் குண்டு மழை பொழியத் தொடங்கிவிட்டது. யோகா துடித்துப் போய் பதறியவளுக்கு வந்தது செய்தி. பிள்ளைக்கு மீன் வாங்கப் போனவனை பிணமாகக் கூட பார்க்க முடியாத பாவியாகி விட்டாள், அவள்.

எப்படியோ பத்து வயதுப் பாலகனுடன் செட்டிகுள முகாமுக்கு வந்து, அங்கிருந்து சொந்த ஊருக்கு வந்து சேர்ந்தாள், யோகா. சொந்த வீடு, வளவு என்று இருந்தபடியால் ஒருவாறு கஷ்டப்பட்டு மகனை வளர்த்தாள். தீபனும் சாதாரணதரம் வரை நன்றாகப் படித்து பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றான். மனம் மகிழ்ந்த யோகா அவனை உயர்தர வகுப்பில் சேர்த்து விட்டாள். அங்கு தான் வந்தது வினை. தீபன் படிப்பில் கவனம் செலுத்தாது கூடாத சேர்க்கையால் சீரழியத் தொடங்கினான். தாயை எள்ளளவும் மதிப்பதில்லை. எந்நேரமும் பணம் தருமாறு இம்சித்து அவளை வருத்திக் கொண்டிருந்தான். வேறு வழியில்லாமல் யோகாவும் வளவை விற்று அவன் கேட்ட போதெல்லாம் பணத்தைக் கொடுத்தாள். விரக்தியில் வாழ்ந்த யோகாவுக்கு பொருள் பண்டம் எதுவும் பெரிதாகக் தெரியவில்லை. பிள்ளை சந்தோசமாக இருந்தால் போதும் என்ற நினைப்பு மட்டுமே மிஞ்சியிருந்தது.

அந்த நிலைக்கு ஒரு நாள் கேடு வந்துவிட்டது. தீபன் சுருக் கிட்டு தற்கொலை செய்து கொண்டு விட்டான். போதைப் பொருளுக்கு அடிமையாகி விட்ட அவனது மூளை பாதிப்படைந்த நிலையில் அவன் இப்படி யொரு முடிவை எடுத்திருக்கலாம் என சிலர் பேசிக் கொண்டார்கள்.

யோகா தனி மரமானாள். வாழவழி தெரியாது தவித்து நின்றவளுக்கு கோமதி அம்மா கை கொடுத்தாள். கோமதியின் சகவாசத்தினால் யோகா தன் கவலைகளை ஓரளவிற்கு மறந்து வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

“ஆன்ட்டி! ஏன் அழுகிறீங்கள்?”

ஒரே கணத்தில் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட யோகா, “இல்லையம்மா கறி நல்லாய் உறைச்சிட்டுது” சொல்லிக் கொண்டே கண்களை துடைத்துக் கொண்டாள்.

“ஸாரி ஆன்ட்டி, நிறைய குழம்பு போட்டிட்டனா?”

“இல்லை செல்லம். என்னுடைய நாக்கில் ஒரு காயம் இருந்தது. அது தான் உறைச்சது குழந்தையை சமாளிப்பதற்குள் அவளுக்கு போதும் போதுமென்றாகி விட்டது.

“யோகா! பிள்ளை யோகா!”

கோமதி அழைக்கவும் யோகா பழைய நினைவு களிலிருந்து முற்றாக விடுபட்டு மிகுதியிருந்த வேலைகளை கவனிக்கத் தொடங்கினாள். சர்க்கரைப் பொங்கலும் பொங்கி, கடலையும்

அவித்தாள். அம்மா அவலைக் குழைத்தாள்.

மாலை நேரம் ஐந்து மணி.

வீட்டில் எல்லோரும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந் தார்கள். கதிரேசன் வீட்டு சுவாமி அறை ஊதுபத்தி, சாம்பிராணி போன்றவற்றின் சுகந்தத்தினால் நிறைந்திருந்தது. சுவாமி படங்கள் அனைத்துக்கும் மாலையிடப்பட்டிருந்த போதிலும், நடுவில் வைக்கப்பட்டிருந்த சரஸ்வதி படத்திற்கு மட்டும் பிரத்தியேக மாக வெள்ளை மாலைகளினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. நாற்புறமும் தோரணங் கள் வேறு கட்டப்பட்டிருந்தன.

கோமதி பொங்கல் தட்டுடன் ஆரம்பித்து வைக்க, மற்றவர்கள் ஏனைய படையல் பதார்த்தங்களைக் கொண்டு வந்து வைத்தனர். அனைவரும் ஆசார சீலர்களாக வந்து இரு மருங்கிலும் நின்றனர்.

கதிரேசன் தோளில் போட்டிருந்த சால்வையை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டார். மனைவி கோமதியைப் பார்த்து பார்வையாலேயே தொடங்கலாமா? என சைகை செய்ய, அவளும் தலையசைத்து ஆமோதித்தாள்.

சபேசன் தேங்காய் உடைக்க, கதிரேசன் சாம்பி ராணித் தட்டை எடுத்து நிறைகுடத்துக்கு புகை காட்டி மற்றைய படங்களுக்கும் காட்டினார். கற்பூர தீபம் காட்டியதும் அனைவரும் தீபத்தைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டனர்.

“தேவாரம் படியுங்கோ”

வாணி படிக்க, சரளாவும் படித்தாள்.

கோமதி கூறினாள்.

“இனி சகலகலாவல்லி மாலை படியுங்கோ”

எல்லோரும் விழி பிதுங்கி நின்றனர். கோமதி மீண்டும் கூறினாள்.

“என்ன யோசிக்கிறியள். படத்துக்கு முன்னால புத்தகம் வைச்சிருக்கிறன். புத்தகத்தை எடுத்து பிள்ளையளிட்ட குடுங்கோ. படிக்கிற பிள்ளையள் தான் படிக்க வேணும்.”

சபேசன் புத்தகத்தை எடுத்துக் கொடுத்தான். அதை வாங்கிக் கொண்ட சரளாவின் மகள் கூறினாள்.

“மாமா! எனக்கு தமிழ் வாசிக்கத் தெரியாது”

*"ஏன்?" ஆச்சரியத்துடன் அத்தனை விழிகளும் விரிந்தன. சரளா வாய் திறந்தாள்.*

*"அண்ணா! அவள் இன்ரநாஷனல் ஸ்கூல்ல தான் படிக்கிறாள். இங்கிலிஷ் மீடியம்."*

*சபேசனின் வாயில் ஒரு ஏளனச்சிரிப்பு*

*"இந்தா கலையரசி! இதைப்படி."*

*எல்லோரது கண்களிலும் ஆச்சரியம். வெளி நாட்டிலிருந்து வந்த பிள்ளை தமிழ் படிக்குமா... அனைவரது மனங்களிலும் கேள்விக்குறி.*

*கணீரென ஒலித்தது கலையரசியின் குரல்*

*"வெண்டாமரைக் கன்றி நின்....*

*நிசப்தத்தில் ஒலித்த குரல் அனைவரது மனத்தையும் நிறைத்தது.*

*வழிபாடு இனிதே நிறைவுற்றது. சபேசன் வாய் திறந்தான்.*

*"நாங்கள் வாழ்வாதாரத்தைத் தேடி வெளிநாடுகளுக்குப் போய் வாழ்ந்தாலும், எங்கட பாரம்பரியத்தை தொலைத்து வாழ விரும்பவில்லை. எங்கட பிள்ளைகள் வேற்று மொழியில் படித்தாலும் வார இறுதியில் தமிழ் வகுப்புகளுக்கு போகினம். நீங்கள் சொந்த நாட்டிலை இருந்து கொண்டே தமிழைப் புறந்தள்ளிப் போட்டு ஆங்கிலத்தைப் படிக்கிறியள். சீ... வெட்கக் கேடு"*

*சரளா சமாளித்தாள்.*

*"இல்லை அண்ணா. அதுகள் இப்ப தமிழிலை படிச்சிட்டு... பிறகு மேல்ப்படிப்பு படிக்க கஷ்டப்படு வினம். அதுதான்...."*

*"சரளா! நீ என்னதான் சொன்னாலும் நான் ஏற்கப்போற தில்லை. தமிழ்தான் எங்கள் தாய்மொழி. அது தான் எங்கள் உயிர் மூச்சு. எங்கையும் வாழலாம். பாரம்பரியம் அழியக்கூடாது."*

# பச்சைக்கொடி

பூமி மாதா இருட்போர்வையை இழுத்து மூடிக் கொண்டிருந்த நேரமது. எனினும் வீடுகளிலும் சரி தெருக்களிலும் மற்றும் இன்னோரன்ன இடங்களிலும் மின் விளக்குகளின் ஒளிர்வு சூழும் இருளை விரட்டியடித்துக் கொண்டிருந்தது. ஒழுங்கைக்குள் பரவியிருந்த இருளைக் கிழித்தவாறு சிவராமன் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒளிக்கற்றையைப் பரப்பியவாறு வீட்டு வாசலில் வந்து நின்றது.

கணவனின் வரவுக்காக வாசற் படியிலேயே காத்திருந்த விமலா ஓடிவந்து "கேற்"றைத் திறந்து விட்டவாறு கேள்விக் கணையையும் தொடுத்தாள்.

"என்னப்பா அம்மாட்டப் போன நீங்களே?"

மனைவியின் கேள்வி சிவராமனுக்கு மனதில் எரிச்சலை ஏற்படுத்தியது.

"மனிசன் களைச்சுப்போய் வரேக்க உதென்ன கேள்வி போய் ரீபோட்டுக் கொண்டு வாரும்"

மனைவியின் மீது சீறிச் சினந்துவிட்டு நேராகத் தனது அறைக்குப் போய் உடைமாற்றிக் கொண்டவன் குளியலறைக்குள் போய் கதவைத் தாழிட்டுக் கொண்டான். குளிர்நீர் அவனது மேனியைத்தழுவி இதத்தைத் தந்த போதிலும் அம்மாவின் நினைவு ஏற்படுத்திய நெருடல்

அவனது மனதை அரித்துக் கொண்டிருப்பதை அவனால் நன்கு உணர முடிந்தது.

அம்மா…

சிறு பராயத்தில் அவனுடைய உலகமே அம்மாதான். ஏனெனில் அவனுக்கு இரண்டு வயதாய் இருக்கும்போதே அவனுடைய அப்பா இறந்து விட்டாராம். அப்பாவின் முகம் தெரியாமலே அவன் வளர்ந்தவன். அவனுடைய அண்ணாவான தவபாலனுக்கு அப்பா சாகும் போது எட்டு வயதாம். அம்மா சொன்னாள். பிள்ளைகள் இருவரையும் வளர்ப்பதற்கு தான் பட்ட கஷ்டங்களை அம்மா அடிக்கடி ஞாபகமூட்டி ஏம்புவதை அவன் அவதானித்திருக்கிறான்.

வாழும் போது அப்பா விவசாயம் செய்த காணியை குத்தகைக்குக் கொடுத்தும் பசு மாட்டை வளர்த்தும் படாதபாடு பட்டுத்தான் சீவியத்தை கொண்டிழுத்ததாகவும், அவள் படும் கஷ்டங்களைக் கண்ஊடாகக் கண்ட அண்ணா தனது கல்வியை பத்தாம் வகுப்புடன் நிறுத்திவிட்டு விவசாயம் செய்தத் தொடங்கி விட்டானாம். பிஞ்சு வயதிலேயே குடும்ப பாரத்தைச் சுமந்தவன் என அண்ணா மீது அம்மாவுக்கு எப்போதும் ஒரு அபிமானம் இருந்ததை சிவா நன்கறிவான். அது எவ்விதத்திலும் அவனது மனதை பாதித்ததில்லை.

கல்வி சிவாவுக்கு கரும்பாக இனித்தது. கல்வியே கருந்தனம் எனப் பயின்று பல்கலைக்கழகம் வரை சென்று ஒரு பட்டதாரி ஆசிரியராகினான். மூத்தவன் தவபாலனுக்கு அம்மா காலாகாலத்தில் ஒரு திருணமத்தைச் செய்து வைத்தாள். அண்ணி தையல்நாயகியும் ஒரு வறிய குடும்பத்தைச் சேர்ந்தவள் தான். பத்துப்பரப்பு தோட்டக் காணிதான் அவளுடைய சீதனம். அண்ணாவுக்கு அது பொருத்த மானதே என அம்மா கருதினாள். இரு குழந்தைகளுடன் அண்ணா வின் வாழ்க்கை சீராகவே போய்க் கொண்டிருக்கிறது.

சிவாவுக்கும் அம்மாவே பெண் பார்த்தாள். பயிற்றப்பட்ட ஆசிரியையான விமலா வீடு வளவு சீதனத்துடன் மனைவியாக வந்து சிவாவின் வாழ்க்கையில் ஒளியேற்றினாள். அவர்களுக்கும் இரு குழந்தைகள். சிவா தனது மனைவி கொண்டு வந்த சீதன வீட்டில் வசதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறான். அம்மா, தான் சீதனமாகக் கொண்டு வந்த வீட்டில் அண்ணா குடும்பத்துடனேயே தங்கி விட் டாள். இடையிடையே சிவா வீட்டிற்கும் வந்து தங்கிப் போவாள்.

சென்ற வருடம் சிவாவின் மகள் தாரணியின் பிறந்தநாளுக்கு வந்திருந்த போது தான் அம்மாவுக்கும் அவனுக்கும் விரிசல் ஏற்பட்டது. அன்று இரவு எல்லோரும் அமர்ந்திருந்து கதைக்கும் போது அம்மா பேச்சைத் தொடங்கினாள்.

"தம்பி சிவா! எனக்கும் வயசு போயிட்டுது. இன்னும் நான் எவ்வளவு காலத்துக்கு இருப்பனோ தெரியேல்ல. நான் சாகமுந்தி ஒரு காரியத்தைச் செய்ய வேணுமென்று நினைக்கிறன்"

"அதென்னம்மா?"

சிவாதான் அம்மாவிடம் கேட்டான். எந்தவித சலனமு மில்லாமல் அம்மா பதிலளித்தாள்.

"நாங்கள் இப்ப இருக்கிறது என்னுடைய சீதன வீடு. என்னுடைய அப்பா, அம்மா எனக்கு சீதனமாய்த் தந்தது. இப்ப வரைக்கும் அது என்னுடைய பேரில தான் இருக்கு. அதை நான் தவபாலனுக்கு எழுதிக் குடுக்கப் போறன். அவனுக்கு பிறந்தது இரண்டு பொம்பிளைப் பிள்ளையளாய்ப் போச்சுது. தவிர அவனுக்கென்று இருந்து சீவிக்கிறதுக்கு. ஒரு வீடும் இல்லை. என்ன சிவா! நான் சொல்லுறது நியாயம் தானே?"

அம்மாவின் கூற்று நியாயமானதென்று விமலாவுக்குத் தோன்றியது. எதிர்பாராதவாறு சிவா சீறி விழுந்தான், அம்மாவின் மீது.

"அதெப்படி எழுத முடியும். அம்மாவின் சொத்து இரண்டு பேருக்கும் தானே பங்கு. நான் ஒருக்காலும் இதுக்கு சம்மதிக்க மாட்டன்"

சற்றும் எதிர்பார்த்திராத அவனது மறுப்பைப் பார்த்து அம்மாவும்நிலைகுலைந்து போனாள்.

"என்ன தம்பி விசர்க்கதை கதைக்கிறாய். வெய்யிலுக்கையும் மழையுக்கையும் தன்ரை உடம்பை வருத்தி, உன்னைப் படிப்பீச்சு இந்த நிலைக்கு ஆளாக்கியதே அவன் தானே"

அம்மாபேசி முடிக்க முன் அவன் பொரிந்து தள்ளினான்.

"ஒஹோ!... உங்கட ஒர வஞ்சகம் எனக்கு இப்பதானே புரியுது. வீட்டை அண்ணனுக்கு எழுதிக் கொடுத்துப்போட்டு என்ரை முற்றம் மிதிக்கிற எண்ணத்தை மட்டும் வைச்சுக் கொள்ளாதையுங்கோ"

வெட்டு ஒன்று. துண்டு இரண்டாக உறவு பிரிந்தது.

அன்றிலிருந்து அம்மா அவனது வீட்டுப் பக்கம் வருவதில்லை. தனது மனச்சாட்சிக்கு களங்கம் ஏற்படாதவாறு வீட்டையும் வளவையும் தவபாலனுக்கு எழுதிக் கொடுத்துவிட்டுஅவனுடனேயே தங்கியும் விட்டாள்.

காலம் புரண்டு கொண்டிருந்தது. தாய் பிள்ளைக்கிடையே ஏற்பட்ட விரிசல் மட்டும் விரிவடைந்துகொண்டே போனது. இளையமகன் சிவாவின் மனப்பான்மையை எண்ணி தாயின் மனம் கூசியது.

"என்னுடைய வயிற்றில் பிறந்த இவனுக்கு எப்படி இந்தக் குறுகிய புத்தி வந்தது.

எண்ணி ஏங்கித் தவித்தவளுக்கு மூத்தவன் தவபாலனதும் அவனது குடும்பத்தினதும் அன்பான அரவணைப்பு சற்று ஆறுதலைத் தந்தது. எனினும் தன்மீது பாசத்தை அள்ளிப் பொழியும் சிவாவின் குழந்தைகளை எண்ணி, அவர்களின் பாச மழையில் மூழ்கி யெழ வேண்டுமென்ற ஆதங்கம் அவளை உள்ளூர அரித்துக் கொண்டேயிருந்தது. காலம் கனியுமென காத்திருந்தாள் அந்தப் பேதை.

ஆனால்... சிவாவுக்கோ அம்மா மீதுள்ள கோபம் தணிந்த பாடாயில்லை. நாளுக்கு நாள் உருவேறிக் கொண்டிருந்தது.

குளித்து விட்டு வந்து சுவாமி தரிசனம் முடித்து திருநீறு அணிந்து வந்த கணவனிடம் சூடான தேநீரை நீட்டியவாறே விமலா சொன்னாள்.

"பிள்ளைகள் இரண்டு பேரும் சொல்லிப் போட்டினம். அப்பம்மா வீட்டிற்கு வந்தால்த்தான் பிறந்தநாள் கொண்டாடுற தாம்."

மனைவியின் வார்த்தைகள் சிவாவுக்கு எரிச்சலைக் கிளப்பின.

"இவளும் பிள்ளைகளோடு சேர்ந்து எனக்கு எச்சரிக்கை விடுகிறாள் போல"

மனதுக்குள் நினைத்துக் கொண்டவன் பதிலேதும் கூறாமல் காலியான தேநீர்க்கோப்பையை மனைவியிடம் கொடுத்துவிட்டு சாதுரியமாக அப்பால் நகர்ந்து விட்டான்.

ஹாலுக்குள் இருந்த சாய்மனையில் அவன் வந்து சாய்ந்து கொண்டதை மேசையில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்த

தாரகனும் தாரணியும் அவதானிக்கவில்லை. சிவராமனின் மனதிலோ பல விதமான நெருடல்கள் தோன்றி அவனை அலைக்கழித்துக் கொண்டிருந்தன.

இந்த வருடம் நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் தாரகன் மாவட்ட மட்டத்தில் முதலிடம்பெற்று சித்தி யெய்தியிருந்தான். அதனைக் கொண்டாடு முகமாக தங்களுக்கு விருந்து அளிக்க வேண்டுமென்று சக ஆசிரியர்களின் வற்புறுத்தலைத் தாங்க முடியாதவனாய் சிவராமனும் அவர்களுக்கு வாக்கு கொடுத்து விட்டான்.

“வாற மாதம் அவனுடைய “பேத்டே” வருகுது. அப்ப பாப்பம்”

ஒருவாறு சொல்லி அவர்களைச் சமாளித்து விட்டான். இடியப்ப புரியாணிக்கு ஓடர் கொடுத்து எடுத்து “கேக்“கையும் வெட்டலாம் என்பது அவனது எண்ணம். அதற்கிடையில் வீட்டில் இருப்பவர்கள் எல்லாரும் ஒன்றுகூடி அம்மாவையும் கூட்டி வந்தால்த் தான் பார்ட்டியே நடக்கும் என அவனையே அச்சுறுத்துமளவிற்கு நிலைமை போய்விட்டது. அம்மாவை மன்னிக்கும் நிலையில் அவனது மனம் இறங்கி வரத் தயாராயில்லை. நிலைமையை எப்படிச் சமாளிப்பது?

அலசி ஆராய்ந்த மனம் அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது. கண்களை இறுக மூடிக் கொண்டவன் தீவிர சிந்தனையில் அமிழ்ந்து பே ானான்.

மேசையில் படித்துக் கொண்டிருந்த பிள்ளைகள் இருவரும் தங்களுக்குள் ஏதோ குசுகுசுவென்று பேசிக் கொண்டார்கள்.

“தாரணி! அப்பா உம்முடைய பேத்டேக்கு பாபிடோல் வாங்கித் தந்தவரெல்லே.”

“ஓ... அது படிக்கிற “மியூசிக்“கைப் பார்த்து என்ரை பிரண்ட்ஸ் ஸெல்லாம் சந்தோசப்பட்டவை. என்ரை குட்டி அப்பா. அச்சா அப்பா”

“காணும். காணும். கதை அளக்கிறதை கொஞ்சம் நிறுத்தும். என்னுடைய பேத்டேக்கு போன் வாங்கித் தரவேணும் என்று கேட்ட நான். பாப்பம் வாங்கித் தாறாரோ என்று.”

“கட்டாயம் வாங்கித் தருவார் அப்பா”

இரண்டாம் வகுப்பில் கற்கும் மழலை தாரணியின் கூற்று அது.

"அப்பா வாங்கித் தந்தாலும் தராமல் விட்டாலும் அப்பம்மா வராமல் நான் பேத்டே கொண்டாட மாட்டன். இது நிச்சயம்"

"அப்ப நீர் என்ன செய்யப் போறீர்?"

"நானோ... நான் பஸ்ஸிலை ஏறிப் போய் பெரியப்பா வீட்டடியில இறங்குவன். அங்கை அப்பம்மா இருப்பாதானே."

"அண்ணா! நீர் தனிய பஸ்ஸில போவீரோ?"

"ஓ... போவன். அதில்ல தாரணி. நான் இன்னொரு ஐடியாவும் வைச்சிருக்கிறன்."

"என்ன ஐடியா. எனக்கு சொல்ல மாட்டீரே?"

"பொறும் சொல்லுறன். கேளும். இப்ப... அப்பம்மா கிழவியாப் போன மாதிரி அப்பாவும் ஒரு நாளைக்கு கிழவனாப் போவார் தானே. அப்ப தான் இருக்குது விசயம்."

"அதென்னண்ணா?"

"நான் அப்பாவை வீட்டில வைச்சு பாக்க மாட்டன். முதியோர் இல்லத்தில கொண்டு போய் விட்டிடுவன். அப்பதான் அவருக்கு விளங்கும்"

கண்களைமூடியவாறு பிள்ளைகளின் சம்பாஷனையைக் கேட்டுக் கொண்டிருந்த சிவராமனுக்கு இதயத்தில் ஒரு கூரியமுள் தைத்து விட்டது போன்றதோர் உபாதையில் துடித்துப் போனான். அவனையறியாமலேயே அவனது மனம் வாழ்க்கைச்சக்கரத்தை சுழற்றிப் பார்க்கத் தொடங்கியது. திடீரென தொண்டைக்குள் எதுவோ திரண்டு வந்து அடைத்துக் கொண்டது போல் ஒரு பிரமை. தொண்டையைச் செருமி தன்னைஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

அண்மையில் கேட்ட செருமல் ஒலி தாரகன், தாரணியை திடுக்கிட்டு திரும்பிப் பார்க்க வைத்தது. "அப்பாவுக்கு நாங்கள் கதைச்சது கேட்டிருக்குமோ?" கிலி கொண்ட தாரகன் எழுந்து மெதுவாக சமையலறைப் பக்கமாக நழுவினான். தாரணி அவனைப் பின் தொடர்ந்தாள்.

சிவராமனுக்கு அது நீண்ட உறக்கமற்ற இரவு. பொழுது விடிந்தபோது சிவராமனது முகத்தில் குழப்பங்கள் நீங்கி அமைதி

*குடிகொண்டிருந்தது. மனைவியை அழைத்து ஒரு விடயத்தைக் கூறினான்.*

*"விமலா! இன்றைக்கு பின்னேரம் மூன்று மணிக்கு கரனுடைய ஆட்டோ வரும். நீரும் பிள்ளைகளுமாய் அண்ணா வீட்டுக்குப்போய் அம்மாவைக் கூட்டிக் கொண்டு வாங்கோ. என்ன!"*

*தாரகனின் காதுகளில் "ஜில்"லென விழுந்தன சிவராமனின் வார்த்தைகள். அவனையறியாமலே கால்கள் தாரணியைத் தேடி ஓடின. அப்பம்மாவைக் கூட்டிக் கொண்டு வாறதுக்கு அப்பா பச்சைக்கொடி காட்டீட்டார்."*

*தாரணியின் காதுகளுக்குள் கிசுகிசுத்தான், தாரகன்.*

*பிறகென்ன. அங்கு ஒரே குதூகலம் தான்.*

# பழக்கற்கள்

*"ஸ்... என்ன வெய்யில்... என்ன புழுக்கம்..."*

*சித்தியின் சலிப்புக்குரல், பாடப் புத்தகத்தில் மூழ்கியிருந்த என்னை, திரும்பிப்பார்க்க வைத்தது. என்னுள்ளம் இங்கே புழுங்கித் தவிப்பது அவளுக்கு எங்கே தெரியப்போகிறது.*

*"கவிதா! நானும் சிந்துவும் கோவிலுக்குப் போட்டுவாறம். வீட்டைக் கவனமாய்ப் பார்த்துக் கொள்."*

*அவளது வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகளில் ஆதிக்கம் தூள் பறந்தது. பதிலெதுவும் பேசாமல் அவளை நிமிர்ந்து பார்த்தேன்.*

*மேகவர்ணக் காஞ்சீபுரம் அவளது கால்களுக்குள் அகப்பட்டு சரசரத்தபோது... என் நினைவில் மின்னலென ஒரு பொறி... அ... ஆம்... அது என் அம்மாவினுடையதுதான். அப்பா வைத்தான் தன் ஆக்கிரமிப்புக்குள் அடக்கி வைத்திருக்கிறளென்றால்... அம்மாவின் உடைமைகளும் அவளது ஆட்சிக்குள் அமிழ்ந்து போய்விட்டன போலும். நினைத்ததும் என்னுடல் தகித்தது.*

*"அம்மா! பூங்காவனத்துக்கு மேகலாவும் சரிதாவும் வாறவெண்டவை அவையோடபோய் ஐஸ்கிறீம் குடிக்க விடவேணும் என்ன...!"*

*சிந்துவுக்கு ஐந்துவயது தான் ஆகிறதென்றாலும் ஆடம்பரப்போக்கில் அம்மாவுக்குச்*

சற்றும் சளைத்தவளல்ல. எனது அப்பாவைப் பங்குபோட்டு, அவரைச்சுருட்டி வளைந்துத் தன் கைக்குள் போட்டுக்கொண்டிருப்ப தாலோ என்னவோ எனக்கு அவளை அறவே பிடிக்காது. எதேச்சை யாக அவளது கழுத்தை அவதானித்தேன். என் மேனியெங்கும் அனலாகப் பரவியது.

டென்மார்க்கிலிருக்கும் எனது சின்னமாமா. தன் தங்கையின் மகளான எனக்கென்று ஆசையோடு வாங்கி அனுப்பிய அந்த அழகான தங்கச்சங்கிலி அவளது கழுத்தில் மின்னிக் கொண்டிருந்தது.

என்னையறியாமலே எனது பற்கள் நறநறுத்தன ஆக்கிர மிப்பு... ஆக்கிரமிப்பு... இந்த ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடவே முடியாதா...

என்னைப் பெற்ற தாயை நான் இழந்ததும் இந்த ஆக்கிரமிப்பு என்ற போர்வைக்குள் தான். எங்கள் மண்ணை ஆக்கிரமிக்க வந்தவர் களின் அட்டூழியப்போக்கும். அடாவடித்தனமும் என் இதயத்தில் ஆழப்பதிந்துவிட்ட ஈட்டி சாதாரண ஈட்டியாயிருத்தால் அதனை இலகுவில் பிடுங்கி எறிந்துவிட நினைக்கலாம். ஆனால்... அது என் உயிர் மூச்சையே தன்னுள் அமிழ்த்தி வைத்திருக்கும் பொறியாயிற்றே.

அம்மா... அம்மா... அம்மா...

என் உயிர்மூச்சின் நாதமாய் ஒலிந்துக்கொண்டிருக்கும் வார்த்தை அது.

“கீச்... கீச்...”

திடீரெனக் கேட்ட அவலக் குரல் வந்த திசையை நோக்கி என் கால்கள் விரைகின்றன. மதிலுக்கு மேலால் தலையை நீட்டி எட்டிப் பார்க்கிறேன்.

வேட்டைக்காரன் ஒருவனது கையிலிருந்த முயலொன்று கால்களை உதறி. உயிருக்குப் போராடியவாறு குரலெழுப்புகிறது. அவனைச் சுற்றி இன்னும் நான்கைந்து பேர் கைகளில் தடிகள் பொல்லுகளுடன் இயமகிங்கரர் போல் நின்று கொண்டிருக்கின்றனர். சுற்று மதிலால் வேலியிடப்பட்டிருந்த அந்த வெளிவளவிற்குள் அத்துமீறி நுழைந்து அட்டகாசம் பண்ணிக் கொண்டிருந்த அந்த வேட்டைக்காரர்களைக் கண்டு ஒரு கணம் என்னுடலும் உள்ளமும் சிலிர்த் தெழுகிறது. மறுகணம் அவன் கையிலிருந்த முயலை ஓங்கி மதிலுடன் அறைய முற்பட்டபோது... என்னை யறியாமலே என் கண்கள் இறுகமூடிக் கொண்டன.

மரண ஓலம் ஒன்று வானளாவ ஒலித்து நிரந்தரமாய் அடங்கிப்போனது.

இதயம் படபடக்க கால்கள் வெடுவெடுத்து அவ்விடத் திலேயே அமர்ந்து... நான் மதில்மேல் சாய்ந்து கொண்டேன். எங்களது வாழ்வில் நடந்த அந்தக் கோரச் சம்பவம் என் கண்முன் விரிந்தது.

குடாநாட்டை சூரியக்கதிர்கள் சுட்டெரித்து ஓய்ந்திருந்த நாட்கள் அவை. தென்மராட்சியில் இருந்து எங்கள் சொந்த வீட்டிற் குத் திரும்பி வந்துவிட்டதில் ஒரு திருப்தி. மாலை ஆறுமணிக்கெல் லாம் ஊரே “கப்சிப்” பென அடங்கிப் போய்விடும். அதன்பின் அவர் களது நடமாட்டம் அதிகரிக்கும். சுற்றிவளைப்புகளும். தேடுதல் வேட்டைகளும் அடிக்கடி நடக்கும் சம்பவங்களாகிவிட்டன. இடை யிடையே காணாமற்போனவர்களின் செய்தி காற்றோடு கிசுகிசுக்கும். எங்கள் வீட்டிலும் இப்படியொரு சம்பவம் நடக்குமென எவருமே எழுத் எண்ணிப் பார்த்திருக்க முடியாது.

ஒருநாள் இரவு நடுச்சாமத்தில் வீட்டின் கதவு தட்டப்படும் ஓசை கேட்டு அப்பா. அம்மா. நான் மூவரும் திடுக்கிட்டு விழித்தோம். மீண்டும் கதவு தட்டப்பட்டது. திகிலுடன் நான் அம்மாவை இறுகக் கட்டிப்பிடித்துக் கொண்டேன். அம்மா கைகளைப் பிசைத்தவாறு அப்பாவைப் பார்க்க. அவர்போய் கதவைத் திறந்தார். திறந்ததுதான் தாமதம் அவரைத் தள்ளிக்கொண்டு மூவர் உள்ளே நுழைந்தனர்.

“எல்.ரீ.ரீ. இங்க வந்ததா?”

ஒருவன் விசாரிக்க, மற்றைய இருவரும் “டோர்ச்” விளக்கில் ஒளியைப் பாய்ச்சி வீடெங்கும் சல்லடை போட்டனர்.

“இல்ல சேர். எங்களுக்கு ஒன்றும் தெரியாது”

அப்பா உளறினார்.

சளாரென அவரது கன்னத்தில் ஓர் அறை விழுந்தது. அடியின் தாக்கத்தினால் நிலை தடுமாறியவர் தன்னைச் சுதாகரித்துக்கொண்ட போது... மற்றொருவன் துப்பாக்கியின் முனையை அவரது நெஞ்சின் மேல் வைத்தான்.

“ஐயோ! அவரை ஒண்டுஞ் செய்து போடாதையுங்கோ”

இது அம்மாவின் அபயக்குரல். ஓங்கி ஒலித்த அம்மாவின் குரல்கேட்டு அயலவர் எவரும் எட்டிப்பார்க்கவில்லை. அன்றைய நிலைமை அப்படி, எவரும் எட்டிப்பார்த்தால் முட்டி உடைபட்டு

*மூச்சை இழக்கவேண்டிவரும்.*

*சடாரென ஒருவன் அம்மாவைப் பிடித்து இழுத்தான். நான் அழுதவாறு அம்மாவை இறுகப்பற்றிக் கொண்டேன். ஒருவன் அப்பாவைத் துப்பாக்கிமுனையில் வைத்திருக்க மற்றைய இருவரும் அம்மாவைத் தரதரவென இழுத்துப்போயினர். படலையை அடைந்ததும் அம்மாவிடமிருந்து பிரித்து என்னைத் தள்ளிவிட நான் மண்டை அடிபட விழுந்துபோனேன்.*

*"ஐயோ! என்ரை பிள்ளை."*

*அதுதான் நான் அம்மாவிடமிருந்து கேட்ட கடைசிக்குரல். மயக்கம் தெளிந்து விழித்துப்பார்த்தபோது, அப்பா மட்டும் அருகிலிருந்து அழுது கொண்டிருந்தார். ஒன்பது வயதுதான் என்றாலும் என்னால் நிலைமையை ஓரளவுக்குப் புரிந்து கொள்ளமுடிந்தது.*

*கதறியழுவதைத்தவிர வேறுவழி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அப்பாவின் நிலையும் அதுவாகத்தானிருந்தது.*

*அம்மாவின் நினைவோடு அப்பாவும் நானும் காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தோம். அம்மாவை இழந்து சரியாக ஒரு வருடம் கூட ஆகவில்லை. ஒரு நாள் பர்வதப்பாட்டி அப்பாவிடம் வந்தாள்.*

*"தம்பி! நடந்தது நடந்து போச்சு. இனி நீ தனிய இருந்து உந்தப் பொம்பிளைப் பிள்ளையை என்னெண்டு வளர்க்கப்போறாய். உனக்கென்ன வயசேபோவிட்டுது. நீ சரி எண்டு சொல்லு. உனக்குப் பொம்பிளை நான்கொண்டு வாறன்". சொல்லோடு நிற்கவில்லை எப்படியோ அப்பாவையும் சம்மதிக்க வைத்து தனது உறவினரான சித்தியை அப்பாவுக்கு இரண்டாம் தாரமாக்கிவிட்டாள். அகம்பாவம் பிடித்த அவளால் நான் படும் துன்பம்... அப்பப்பா... வேண்டாம் அந்த வேதனை. அது என்னுடனே அமிழ்ந்து போகட்டும். "தங்கச்சீ!"*

*சிந்தனையில் மூழ்கிப் போயிருந்த என்னை ஒரு இனிய குரல் இவ்வுலகுக்கு மீட்டது. அவசரமாக கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தேன்.*

*"தங்கச்சீ! றஞ்சிதா எண்டு ஆரும் இந்த ஒழுங்கைக்க இருக்கினமே?"*

*நீளக்கால் சட்டை, சட்டை அணிந்திருந்த அந்த அக்காவைப் பார்த்ததும் என்னுள்ளத்தில் இனந்தெரியாத பரவசம் ஆட்கொண்டது.*

*"எங்கட வீட்டுக்குப் பின்வீடு தான். வாங்கோ. கூட்டிக்*

*கொண்டு போய்விடுறன்"*

*அக்கா, என்னுடன் இணைந்து நடந்து வந்தபோது, கால மெல்லாம் அவளோடு நடக்கவேண்டும் என்று ஓர் உந்துதல் என்னுள் தோன்றியது.*

*"தங்கச்சி! எத்தினையாம் வகுப்புப் படிக்கிறியள்?"*

*"ஓ.எல். றஞ்சி அக்கா உங்களுக்குச் சொந்தமோ?"*

*அவவுடன் நிறையக் கதைக்க வேண்டும் போலிருந்தது. கேள்விக்கணையொன்றைத் தொடுத்தேன்.*

*"இல்லை. அவவும் நானும் ஒன்றாய்ப் படிச்ச நாங்கள்" அதற்கிடையில் றஞ்சி அக்காவின் வீடு சமீபித்துவிட்டது. குரல் கொடுத்தேன்.*

*"றஞ்சி அக்கா! றஞ்சி அக்கா!!"*

*வெற்று நெற்றியும், வீங்கிய முகமுமாக ரஞ்சி அக்கா வந்து எட்டிப்பார்த்தா. அவவைப் பார்த்த எனக்கு என்னவோ போல் இருந்தது.*

*"அக்கா! பார்த்தீபன் எங்கை?"*

*"உங்கை வீட்டிலைதான் அழுது கொண்டு இருக்கிறான்"*

*"ஏன் அக்கா அடிச்ச நீங்களே"*

*"இல்லை கவிதா உங்கை விளையாடப்போன இடத்தில... பர்வதம் மாமி அவனை "அறுதலி வளர்த்த பிள்ளை" எண்டு பேசிப்போட்டாவாம்"*

*அவவின் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வழிந் தோடியது. நிலைமையைச் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு.*

*"றஞ்சி அக்கா! உங்களைத் தேடி ஒரு அக்கா வந்திருக்கிறா அதுதான் வீடுகாட்ட வந்ததான்"*

*சொல்லிவிட்டு ஒரே ஓட்டமாக வீடு வந்து சேர்ந்தேன். அதற்கிடையில் சித்தி வந்துவிட்டால் அவளிடம் அகப்பட்டு நான் கண்ணீர்விடவேண்டி வந்துவிடும். எனக்கு றஞ்சி அக்காவை நினைக்க அனுதாபம் பொங்கியது. அவவின் கணவனும் அம்மாவைப் போல அந்த ஆக்கிரமிப்பாளரின் கைகளில் அகப்பட்டு, காணாமற் போனாவர்தான். றஞ்சி அக்காவிற்கு ஏதோ சுகயீன மென்று அவர் தனது அம்மாவின் வீட்டிலிருந்து இரண்டு உணவுப் பொதிகளைக் கொண்டு வந்ததுதான் அவர் செய்த குற்றம். எல்.ரீ.ரீ.க்கு சாப்பாடு*

கொண்டு போனதாகச் சொல்லி அவரையும் கொண்டுபோய் விட்டார்கள்.

பார்த்தீபனுக்கு அப்பாவைத் தெரியாது. அவன் வயிற்றி லிருக்கும் போது இந்தச்சம்பவம் நடந்துவிட்டது. றஞ்சி அக்கா இப்படி எத்தனையோ சோதனைகளுக்கு மத்தியில் எதிர்நீச்சல் போட்டு வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறா. என்னுடைய அப்பாவின் மீது அனுதாபம் காட்டி, அவருக்கு வலுக் கட்டாயமாக ஒரு கலியாணத்தைச் செய்து வைக்க முன்நின்ற இந்தச் சமுதாயம். றஞ்சி அக்காவைப் பற்றியோ, அவவின் குழந்தையைப்பற்றியோ எள்ளளவும் கவலை கொள்ளவில்லை ஏன்.?

என்ன தான் முற்போக்குவாதம் பற்றிக் கதையளந்தாலும் இங்கு பெண்ணுக்கு ஒரு நீதி. ஆணுக்கொரு நீதி இது தான் இன்றைய நடைமுறையில் நான் கண்ட உண்மை ஆனால் இந்த அக்காவைச் சந்தித்த பிறகு... என்னுள் ஒரு நம்பிக்கை துளிர்விட ஆரம்பித்திருக் கிறது. இந்தச் சமுதாயத்தின் கணிப்பிலிருந்து பெண் மாறுபட்டவ ளாய் தன்னை ஒரு நேர் வழிப்பாதையில் இட்டுச்செல்ல முடியும். என் இதயத்தின் அடித்தளத்தில் ஆழப்பதித்திருந்த ஈட்டியின் வடு இலட்சிய வேட்கையாக வீறுகொண்டெழுந்த போது ஆக்கிரமிப்பை அழித்தொழிக்க வேண்டுமாயின் நாம் வலுவுள்ளவர்களாக் எம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். பெண்கள் மனத் துணிவுடன் அணிதிரண்டால் சமுதாயத்தின் ஒடுக்கு முறையிலிருந்து விடுதலை பெறலாம். ஆண், பெண் என்ற வேறுபாடுகளை மறந்து அனைவரும் ஒன்று திரண்டால் ஆக்கிரமிப்புக்களை அழித்தொழித்து சுதந்திரக் காற்றில் சுகித்திருந்து சுபீட்சமடையலாம். இப்படி என்னுள் பல சிந்தனைகள் உயிர் பெறத்தொடங்கின.

றஞ்சி அக்கா வீட்டிற்கு அடிக்கடி அந்த அக்கா வந்து போய்க் கொண்டிருந்தா. அவ்வேளைகளில் அவவைச் சந்தித்து அளவளாவுவ தில் எனக்கொரு தனி இன்பம் கிடைத்தது. இவ்வளவு காலமும் கிழக்கு மாகாணத்திலும் வன்னியிலுமாக இருந்து எதிரியின் ஆக்கிரமிப்புகள் பலவற்றை முறியடிப்பதில் பங்கேற்று, தற்போது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் தன்னுடைய சொந்த ஊருக்கு அவா வந்திருப்பதாக அறிந்தேன். அவவின் உடலெங்கும் பல விழுப் புண்களை ஏற்ற வீரத்தின் சின்னங்களைக் கண்டு நான் மெய் சிலிர்த்துப்போனேன். இத்தனை நாள் என்னுள் மூண்டிருந்த இலட்சியத் தீ கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது.

தக்க தருணம் பார்த்து ஒரு நாள் நான் பாடசாலை மூடியதும் அவர்களது இருப்பிடத்தைத் தேடிப்போய் எனது நிலைப்பாட்டை அவர்களுக்கு விளக்கினேன். அங்குள்ள அக்காமார் அனைவரும் என்னை அன்போடு அரவணைத்து அளவளாவினார்கள். இத்தனை காலமும் கொதித்துக் கொண்டிருந்த என்னிதயம் குளிர்ந்தது. பொறுப்பாளராயிருந்த அக்கா என்னிடம் வந்தா.

"தங்கச்சீ! கல்விதான் எங்கட மூலதனம் ஆக்கிரமிப்பாளர் எங்களுக்குக் கல்வியில பாகுபாடுகாட்டியதாலயும் தமிழ் இனத்தை நசுக்க வேண்டுமென நினைத்ததாலயும் தான் எங்கட இளைஞர்கள் யுவதிகள் விழிப்புணர்வு பெற்று இப்படியான ஒரு போராட்டத்தையே முன்னெடுத்தார்கள். உம்முடைய தாகம் எங்களுக்குப் புரியுது. உமக்கு இப்ப பதினைந்து வயது தானே. இப்ப நீர் போய் கவனமாய்ப்படிக்க வேணும். காலம் ஒரு நாள் உமக்குச்சாதகமாகக் கனிந்து வரும்போது, நீர் உம்முடைய இலட்சியப்பயணத்தை எங்களோடு தொடரலாம்."

அவ சொன்னதைக்கேட்டு எனக்கு அழுகை அழுகையாய் வந்தது. "நான் என்ன சின்னப்பிள்ளையே எதையும் சாதிக்கும் மனப் பக்குவம் எனக்கும் இருக்குது" சொல்லத்தான் நினைத்தேன். ஆனால் அந்த அக்காலை மீறிக்கதைக்கும் மனோவலிமை எனக்கிருக்க வில்லை.

மறுநாள் பாடசாலையில் வைத்து அப்பாவிடம் என்னை ஒப்படைத்து விட்டு எனக்கு அனுசரணையாக முதுகில் தடவி விட்டுப்போனா அந்த பொறுப்பாளர் அக்கா.

ஏனோ அவவின் செய்கை எனக்கு ஆறுதலைத் தந்தது.

வீட்டிற்குப் போகும் வழியில் அப்பா என்னிடம் கேட்டார்.

"கவிதா! ஏன் பிள்ளை இப்படியொரு முடிவு எடுத்த நீ"

"அப்பா! என்னுடைய அம்மாவுக்கு நடந்த சுதி இனிமேலும் இந்த மண்ணில நடக்கக்கூடாது. இதுதான் என்னுடைய இலட்சியம். இப்ப நடந்த இந்தச்சம்பவம் எனது இலட்சியப் பயணத்துக்கு ஒரு தடைக்கல் ஆகி விட்டது என்று மட்டும் நினைக் காதையுங்கோ. நிச்சயமாக இது ஒரு படிக்கல் தான். என்னுடைய இலட்சியம் ஈடேறும் வரை இப்படியான படிக்கற்களை நிதானத்துடன் நான் தாண்டிக் கொண்டேயிருப்பன்."

அப்பா பதிலெதுவும் சொல்லாமல் நடந்து கொண்டிருந்தார். அவரது முகத்தைத் திரும்பிப்பார்த்தேன். கண்கள் கலங்கியிருந்தன.

# முளைவிடும் உணர்வுகள்

பாடசாலை மணி அடித்து ஓய்ந்தது தான் தாமதம். மாணவ, மாணவிகளின் கலகலப்பும் ஆரவாரமும் பாடசாலையையும் சுற்றுப்புறத்தையும் இரண்டு படுத்தின.

வெள்ளைச் சீருடையில் பாடசாலையை விட்டுக் கலைந்துபோய்க் கொண்டிருந்த மாணவர் கூட்டம் சோளகக் காற்றில் அள்ளுண்டு போகும் மல்லிகை மலர்களை என் நினைவில் நிறுத்த, என் கால்களோ அவசரமாக "சைக்கிள் பார்க்கை" நோக்கி நடைபோட்டன.

கால்சட்டைப் பையில் கையை விட்டுத் துழாவி திறப்பைத் தேடியெடுத்து, எனது "சைக்கிளை" இனங்கண்டு எடுத்துக்கொண்டு வெளியே வந்து கொண்டிருந்தேன்.

"என்ன "மாஸ்டர்" அவசரமாய் வெளிக்கிட்டிட்டியள்?"

சகாதேவன் "மாஸ்டரின்" கேள்வி எனக்குள் எரிச்சலைத் தோற்றுவித்தது.

"பிள்ளைகள் என்ன பாடோ தெரியேல்ல, அம்மாவும் வயதுபோன நேரத்திலை... பாவம்"

மனதில் உள்ளதை வெளிப்படையாகச் சொல்லிவிட்டு அவசரமாகச் "சைக்கிளில்" ஏறி மிதிக்கத் தொடங்கினேன். சுமார் பன்னிரண்டு கிலோ மீற்றர் தொலைவில்தான் எனது தற்போதைய வதிவிடம் அமைந்திருக்கிறது.

*எனது "சைக்கிள்" வீடு நோக்கி முன்னேறிச் செல்ல, என் சிந்தனையோ பின் நோக்கிப் பாயத்தொடங்கியது.*

*தேவகி, ஆறு வருடங்களின் முன் காதலித்துக் கைப்பிடித்த என் "சகதர்மினி" சகல சௌகரியங்களிலும் என்னுடன் சமமாகப் பங்கேற்றவளை நான் வேறு எப்படித்தான் வர்ணிப்பது? எங்கள் தாம்பத்திய வாழ்க்கையின் சின்னங்களாய் ரவியும் ராகினியுமாய் இரு செல்வங்களுடன் அமைதியாகப் போய்க் கொண்டிருந்தது வாழ்க்கை.*

*தென்றல் தவழ்ந்த எம்மண்ணில் ஆக்கிரமிப்புப் புயல் அனலாய்க் கிளம்பி அழிவை ஏற்படுத்த முயன்ற வேளையில், நாங்கள் எம் இருப்பிடங்களைத் துறந்து கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டோம்.*

*தேவகிக்கோ, எனக்கோ வீட்டை விட்டுப்புறப்படுவதில் துளிகூட இஷ்ட மிருக்கவில்லை. எங்கள் வீடும், வீட்டைச் சுற்றியுள்ள தென்னை மரங்களும், வீட்டு முற்றத்திலே இதமான நிழலைத் தரும் வேப்பமரமும், அந்த மரத்தில் ஓடியாடிக்கொண்டிருக்கும். அணிற் பிள்ளைகளும், வேப்பங் கிளையிலிருந்து தலையைப் பக்கமாகச் சரித்துக் கரைந்துகொண்டிருக்கும் காகங்களும், வளவின் வலது புறத்தில் அமைந்திருந்த கிணறும் கிணற்றைச் சுற்றிப் பசுமையாக வளர்ந்திருந்த வாழைகளும், தென்னஞ் சோலையுமாக விளங்கிய அந்த அழகிய நந்தவனத்தைவிட்டுப் பிரிய யாருக்குத்தான் மனம் வரும்.*

*நாங்கள் கிளாலிக் கடலைக் கடந்த அந்த இரவு இன்றும் என் நெஞ்சைவிட்டகலா நினைவாக உறைந்து போய்க்கிடக்கிறது.*

*கிளாலிக் கடலில் நாங்கள் பயணித்த அந்தப் படகு, தத்தளித்து மேலும் கீழுமாய் ஆடிக்கொண்டே நகர்கிறது. அலை களின் ஒவ்வொரு மோதலும் படகை உலுப்பி அசைத்தபோது எங்கள் படகில் இருந்தவர்கள் பயத்தினால் ஒருவரை ஒருவர் பிடித்துக் கொண்டார்கள். ரவி பயம் மேலிட என் நெஞ்சில் சாய்ந்து கொண்டான். நான் அவனை இறுக அணைத்துக் கொண்டவனாய் அருகிலிருந்த தேவகியைப் பார்த்தேன். அவள் கைக்குழந்தை ராகினியை அணைத்தவாறு சிலையாக இருந்தாள். இருளில் அவளது கண்களை ஊடுருவிப் பார்க்க முயன்று நான் தோற்றுப்போனேன்.*

*கடலின் அலைகள் சிதறி உவர் நீர் துள்ளியெழுந்து படகிலுள்ளவர்களை நனைத்தது. நான் துவாயினால் ரவியைப் போர்த்தி விட்டேன். தேவகி, ராகினியைத் தனது நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். திடீரென அலைகளின் இரைச்சலையும்*

மிஞ்சியதாய் ஓர் பேரிரைச்சல் வான் பரப்பை நிறைத்தது. இப்போது படகிலிருந்த அத்தனை பேரின் கவனமும் அதை நோக்கித் திரும்பியது.

இராட்சத பறவையொன்று தொடர் சங்கிலியாக நகர்ந்து கொண்டிருந்த எமது படகுகளைக் குறிவைத்துப் பறந்து வருவதைக் கண்டு படகுகளில் பயணித்தவர்கள் அனைவருமே நிலை குலைந்து போயினர். அவலக்குரல்களினால் அல்லோல கல்லோலப்பட்டது படகு.

“எல்லோரும் விழுந்து படுங்கோ”

படகோட்டியின் எச்சரிப்புக் குரல் கேட்டு அனைவரும் உசாராகினர். நான் தேவகியை எச்சரித்துவிட்டு ரவியைக் கீழே படுக்கவைத்து அவன் மேல் போர்வையாகக் கவிழ்ந்து கொள்கிறேன். தேவகி ராகினியை அணைத்தவாறே கீழே சரிந்துகொள்கிறாள்.

மின்னல் வேகத்தில் யாவும் நடைபெறுகின்றன. இதற்கிடையில் எமது வள்ளத்தையே குறியாகக் கொண்டு இராட்சதப்பறவை “றொக்கட்டுகளை” ஏவ, பெரும் வெடிச்சத்தங்களுடன் தீப்பொறிகளாக அவை காற்றினூடு இருளினுள் சிவந்து, நெளிந்து எம் சுற்றாடலைத் தாக்குகின்றன. எங்கும் நெருப்புச் சுவாலைகள். என் இதயத்தின் படபடப்பு துல்லியமாகச் செவிகளுக்குக் கேட்டவாறிருக்க எதுவுமே பேசத் திராணியற்றவனாக அப்படியே செயலற்றுக் கிடக்கிறேன்.

இத்தனை அவலத்தினூடும் படகோட்டி படகினைச் செலுத்திக்கொண்டே இருந்தான். குண்டுச் சத்தங்கள் ஓய்ந்துபோன பின்னர்தான் அலைகளின் பேரிரைச்சல் எம் செவிகளைத் தீண்டுகின்றன.

“அவன் போயிட்டான் எல்லாரும் எழும்புங்கோ”

குரல்கேட்டு ஒவ்வொருவராக எழுந்து தம்மைச் சுதாகரித்துக் கொள்ளுகின்றனர். நானும் மெதுவாக எழுந்து ரவியையும் தூக்கி விடுகிறேன். தேவகி இன்னமும் எழும்பவில்லை. தேவகியைத் திரும்பிப் பார்த்துக்கூறினேன்.

“தேவகி! பிள்ளையை என்னட்டைத் தந்திட்டு நீர் எழும்பும்” அவளோ வாயடைத்துக் கண்கள் குத்திட்ட நிலையில் அப்படியே சரிந்து கிடந்தாள். நான் குழந்தையைத் தூக்கிக்கொண்டு அவளது தோளைப்பற்றி உலுப்பினேன்.

அவளது அமைதி எனதுள்ளத்தில் கிலியை ஏற்படுத்தவே, மெதுவாகத் தலையைத் தொட்டுத் திருப்பினேன். கையில் எதுவோ

பிசுபிசுத்தது. குனிந்து பார்த்தேன்.

ஆ!... இரத்தம்

தேவகி..!

எனது அவலக்குரல் ஆழ்கடலின் நடுவே பேரொலியை எழுப்பி ஓய்ந்துபோனது. அவ்வளவுதான். தேவகி என்னைவிட்டுப் பிரிந்துவிட்டாள்.

சடுதியாக எனது கண்களை நீர்த்திரை மறைக்கிறது. ஒரு கையால் "ஹான்டிலைப்" பிடித்துக்கொண்டு வலது கையினால் "ஜீன்ஸ்" பையில் இருந்த கைக்குட்டையை எடுத்துக்கண்களை அழுந்தத் துடைத்துக்கொள்கிறேன். தெருவில் செல்பவர்களது கண் கள் என்னையே மொய்ப்பதாக ஒரு பிரமை என்னுள் ஏற்படுகிறது.

அப்படியே கைக்குட்டையால் முகம், கழுத்து என வியர்வை யைத் துடைக்கிறேன். ஆனால் கட்டுக் கடங்காத என் கவலை... அது துடைத்துப் போக்கக் கூடியதொன்றா?

வீட்டு வாசலிலேயே அம்மா எனக்காகக் காத்திருந்தாள். அவளது கைகளில் இருந்த ராகினி, என்னைக் கண்டுவிட்டாள்.

"அ...ப்...பா!"

அவளது மழலையில் எனது கவலை மறைந்துபோனது. "சைக்கிளை" உருட்டிப் போய் வீட்டுத் தாழ்வாரத்தில் நிறுத்திவிட்டு, ராகினியை நோக்கிக் கைகளை நீட்டினேன். பிஞ்சுக் கரங்களை நீட்டி, என்னிடம் தாவினாள் ராகினி. அவளது உச்சியில் முத்தமிட்ட நான், தலைக்கு மேல் அவளை உயர்த்தி, ஒரு சுற்றுச் சுற்றி விட்டு அம்மாவிடம் நீட்டினேன். அவளிடம் போக மறுத்து. ராகினி என்னைக் கட்டிக் கொண்டாள். அம்மா அவளைச் சமாதானப் படுத்தினாள். "

"ராகினி அப்பம்மாட்டை வாங்கோ குஞ்சு அப்பா பாவம் பசி போய் முகம்கழுவி சாப்பிட்டிட்டு வந்து பிள்ளையோட விளையாடுவார்"

ஒருவாறு மனமில்லாமல் அப்பம்மாவிடம் போனாள் ராகினி. எனது கண்கள் ரவியைத் தேடிச் சுழன்றன. அம்மா அதைப் புரிந்துகொண்டாள்.

"தம்பி! ரவி நித்திரையாய்ப் போனான். கொஞ்ச நேரமாய் அவன் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி என்னைப் படாதபாடு படுத்திப்போட்டான்"

"ஏனம்மா அழுதவன் பிள்ளை..."

"அதையேன் ராசா கேட்கிறாய், என்னவென்று வாயைத் திறந்து சொன்னாத்தானே. நானும் என்னவோ ஏதோ வென்று பயந்துபோனன். அப்படியே களைச்சுப் போய் நித்திரையாய்ப் போயிட்டான் பிள்ளை"

தாயை இழந்தபின் ரவியின் போக்கில் இப்படியான சில மாற்றங்கள் தென்படுவதை நான் பல தடவைகள் அவதானித்திருக் கிறேன். அசட்டுப் பிடிவாதமும் அடங்காத சுபாவமுமாய், மூர்க்கத் தனமாக அவன் முரண்டு பிடிக்கும்போது, சில வேளைகளில் என்னையே நான் இழந்துவிடுவதுமுண்டு. ஆக்ரோஷமாய்க் கொதித்தெழுந்து அவனைத் தண்டித்து விட்டுப் பிறகு வேதனைத் தீயினால் வெந்துபோவேன்.

எனக்கு நன்கு பரிச்சயமான ஒரு "டாக்டரிடம்" கலந்தா லோசித்தபோது அவர் சொன்னார்:

"குழந்தையின் மனதில் ஏதோ ஒரு பாரிய நமைச்சல் இருக்கிறது. அவனோடு அனுசரித்துப்போய் அவனது மனதிலுள் ளதை அவன் மூலமாகவே அறிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். இதுதான் சிறந்த வழி. அவனை அன்போடு அணுகி அதற்கான பரிகாரத்தைத் தேடலாம்."

"டாக்டர் சொன்னவற்றை நினைவு படுத்திக்கொண்டே, முகம் கழுவுவதற்காக கிணற்றடியை நோக்கி நடந்தேன். சாப் பாட்டை முடித்துக்கொண்டு ஆறுதலாய் நான் வந்து விறாந்தையில் இருக்கவும், அடுத்த வீட்டு நண்பர் சாரங்கன் பத்திரிகையும் கையுமாக வரவும் சரியாக இருந்தது.

"மாஸ்டர்! இன்றைக்குப் பேப்பர் பார்த்தனீங்களே?"

"இல்லை அண்ணை என்ன ஏதும் புதினம் விசேஷமாய் இருக்குதே?

"ஓம் மாஸ்டர். பைற்றர் ஹெலி ஒன்று எரிஞ்சு கொண்டே கடலுக்கை விழுந்திட்டுதாம். நீங்கள் கேள்விப்படேல்லையே?"

நான் ஆர்வத்துடன் அவரது கையிலிருந்த பத்திரிகையையை வாங்கி வாசித்துக் கொண்டிருந்தேன். அம்மா ஏதோ ஞாபகம் வரப்பெற்றவளாய் என்னிடம் அவசரமாக வந்தாள்.

"தம்பி! அப்போதை கீதா வந்து "ஹெலி" விழுந்த புதினத்தைச் சொல்லிக் கொண்டிருக்கத்தான் ரவி வீரிட்டுக்கத்தத் துவங்கினவன். என்ன ஏதோ என்று கேட்டு நாங்களும் அலுத்துப்போனோம். அவனைச் சமாதானப்படுத்த கீதாவும் நானுமாய்ப் பட்டபாடு.

அப்பப்பா போதுமென்று போச்சுது”

கீதா, சாரங்கனின் மனைவி.

இதற்கிடையில் அறைக்குள்ளிருந்து ரவியின் அழுகுரல் கேட்டது. அவனைச் சமாதானப்படுத்தும் நோக்கத்துடன் எழுந்து நான் அவனிடம் போனேன். என்னைக் கண்டதுதான் தாமதம் பெரிதாகக் குரலெடுத்து ஓ!... வென்று அழத் தொடங்கிவிட்டான்.

அவனை அணுகிய நான் அவனது முதுகைத் தடவியவாறு சமாதானப்படுத்த முயன்றேன்.

“ரவிக்குஞ்சு ஏன் ராசா அழுகிறாய்? பிள்ளைக்கு என்ன செய்யுது?” கேவலுடன் வந்தது பதில்,

“அப்பா! அம்மாவைச் சுட்ட ஹெலி விழுந்து போச்சுதாம்.”

“பிள்ளைக்கு ஆர் சொன்னது?”

நான் எதுவுமே தெரியாததுபோல் நாசூக்காக அவனிடம் கேள்வி தொடுத்தேன். அவனது மனதில் உள்ளதை வெளிக்கொணரத் தான் இந்த முயற்சி.

“கீதா அன்ரி சொன்னவ.”

“ஹெலி விழுந்து அழிஞ்சு போகட்டும். அதைப்பற்றி எங்களுக் கென்ன?” நான் அக்கறை இல்லாதவன்போல் கதை விட்டேன்.

“அப்பா! எங்கடை அம்மாவைச் சுட்டது பைற்றர் தானே?”

எனக்கு எல்லாமே புரிந்துவிட்டது.

“ஓம் ராசா, அதுவும் பைற்றர்தான் அது வேறை ஹெலி”

எனது கழுத்தை இறுகக் கட்டியவாறு ரவி கூறினான்.

“அப்பா அம்மாவைச் கட்ட பைற்றரை நான் தான் சுடுவேன்”

இப்போது நான் அவனது முதுகைத் தட்டிக் கொடுத்தேன்.

“அதுக்கென்ன ரவி! நீ பெரிசாக வளர்ந்து அதைச் சுடலாம் சரிதானே.”

ரவி, கண்களை அகல விரித்துக் கைகளால் சுடுவது போன்று பாசாங்கு செய்தான்.

“டுஷ்!... டுஷ்!!”

அவனது வாய் சுட்டுக்கொண்டிருந்தது. நான் அவனை இறுக கட்டி அணைத்துக் கொண்டேன்.

ரவியின் கலகலப்பைக் கண்டு அறைக்குள் வந்த அம்மா, வியந்துபோய் நின்றாள்.

# பக்கங்கள் இரண்டு

*காலை வேளை, எனது மிதிவண்டி மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது.*

*7.09*

*அப்பாடா... இன்னும் ஏறக்குறைய ஒரு மணித்தியால இடைவெளிக்குள் எத்தனை வேலைகளை முடித்து... 8.15க்கு நான் பாடசாலையில் நிற்க வேண்டும்.*

*என்னையறியாமலே கால்கள் வேகமாகச் செயற்பட, மூச்சுச் சற்று இரைக்குமாப் போல் இருந்தது.*

*வீட்டை அடைந்த போது, அம்மா அப்போது தேங்காய் துருவிக்கொண்டிருந்தாள்.*

*"ஏனம்மா இன்னும் சமையல் முடியேல்லையே?*

*"கறியெல்லாம் வைச்சிட்டன் பிள்ளை, இனி பிட்டுத் தான் போட்டு இறக்க வேணும். அடுத்த அடுப்பில சோறு வேகுது."*

*பிரபலமான கல்லூரி ஒன்றில், அறுபதுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கும், ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கும் அதிபராக நின்று செயலாற்றும் இந்த அம்மா, எங்கள் வீட்டுச் சமையலைச் சமாளிக்கப்படும் அவஸ்த்தையை எண்ணி என் மனம் ஒரு கணம் சஞ்சலப்படுகிறது.*

*"விடுங்கோ அம்மா. நான் பிட்டைப்*

போட்டு இறக்கிறன். நீங்கள் போய் வேற வேலையைப் பாருங்கோ."

அம்மாவிடமிருந்து பிட்டு அவிக்கும் வேலை கைமாறுகிறது. நான் குழலில் பிட்டைப் போட்டுவிட்டு ஆவி மேலோங்கி வருகிறதா என்பதை அவதானிக்கின்றேன்.

அந்தக் கணத்தில் என் மனம் அப்பாவை ஒரு தரம் எடை போடுகிறது. அவருக்கு குழலில் தான் பிட்டு அவிக்க வேணும். அல்லது அவருக்குச் சாப்பாடு பிடிக்கவில்லை என்று சொல்ல மாட்டார். "பசிக்கேல்ல" சுருக்கமாய் ஒரே சொல்லில் கத்தரித்துக் கொள்ளுவார். அம்மாவும் குறிப்பிட்ட நேரத்தில் வேலைக்குப் புறப்பட்டுப் போக வேண்டுமென்ற ஆதங்கம், அவரிடம் துளியும் இருப்பதாக எனக்கு நினைவில் இல்லை.

ஒருவாறாக வேலையை முடித்துக் கொண்டு நான் குளிப்பதற்குப் புறப்பட்டேன். அம்மா, பாத்திரங்களை அலம்பிக் கொண்டு வந்து வைத்தாள்.

"என்னம்மா தைலம் மணக்குது போட்டனீங்களோ?"

"ஓம் பிள்ளை. என்னவோ காலையில் எழும்பினதில இருந்து ஒரே தலையிடியாய்க் கிடக்கு."

"அப்படியெண்டால்... அம்மா நீங்கள் இண்டைக்கு லீவைப் போட்டிருக்கலாமே..." "இல்லையம்மா சிந்து இண்டைக்கு வலயத் தில... அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இருக்குது. கட்டாயம் நான் அதில கலந்து கொள்ள வேணும். ஏனெண்டால் முக்கியமான சில கருத்துக்களை நான் முன் வைச்சால்தான் சில பிரச்சனைகளை சுமூகமாய்த் தீர்க்கலாம். எல்லோரும் என்னை எதிர்பார்த்திருப்பினம்."

அம்மாவின் நிர்வாகத் திறமையை பலரும் போற்றிப் புகழ்வதை என் காதார கேட்டிருக்கின்றேன். இன்று... அவளது கடமையுணர்வு என்னை மெய் சிலிர்க்க வைக்கிறது இலேசாகத் தலை வலித்தாலே போதும், அன்று நான் பாடசாலைக்கு மட்டம் போட்டு விட்டு நிம்மதியாகப் படுத்துத் தூங்கி விடுவேன்.

இப்போது... இந்த வேளையில் அம்மாவுக்கு எதுவிதத்தி லாவது உதவவேண்டும் என என் மனம் விழைகிறது.

அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த வெந்நீரில் கோப்பி தயாரித்து, இரண்டு "பனடோல்" வில்லைகளுடன் அம்மாவுக்குக்

கொடுத்தேன்.

ஆர்வத்துடன் அவள் அதை வாங்கிக் குடித்த போது, என் மனம் பரிவுணர்வால் நிறைந்திருந்தது.

"பத்மா! பத்மா!!"

அப்பாவின் குரல் கேட்டு கோப்பியை பாதியில் வைத்து விட்டு அம்மா அவரிடம் ஓடினாள்.

"ஏனப்பா கூப்பிட்டனீங்கள்?"

"இஞ்ச பாரும். "சேட்"டைப் போடுவம் எண்டு எடுத்தால் "பட்டன்" அறுந்து போய்க் கிடக்கு. நீர்தான் தோய்க்கேக்கை விழுத்திப் போட்டீர். எனக்குத் தெரியாது நான் சாப்பிட்டு வாறதுக்குள்ள தைச்சுப் போடும். ம்!"

அப்பா, கொக்கரித்து விட்டுப் போய் விட்டார். எனக்கு அம்மாவின் மீது கோபமாய் வந்தது. ஏன் இன்னுமொரு "சேட்"டை எடுத்துப் போடுமாறு சொல்லியிருக்கலாமே.

அம்மா "பட்டன்" தேடியெடுத்து தைத்து வைத்தாள். அவளுக்கு நான் போட்டுக் கொடுத்த கோப்பியிலிருந்து ஆவி யனைத்தும் வெளியேறிவிட்டிருந்ததால் கோப்பி சில்லிட்டிருந்தது.

நான் குளித்துவிட்டு வரும் போது கவனித்தேன் அம்மா குளிர்ந்த காப்பியை வாயில் ஊற்றிக் கொண்டு கிணற்றடியை நோக்கி விரைந்தாள். அப்பா வேலைக்குப் புறப்பட்டுப் போய் விட்டார் என்பது சொல்லாமலே புரிந்தது.

நான் பாடசாலைக்குப் புறப்பட்டு வெளியே வந்து மிதி வண்டியை எடுத்த போது... என்ன ஆச்சரியம்.

அம்மா முன்னால் போய்க்கொண்டிருந்தாள். அவளது தோளில் கைப்பை- வாய்மட்டும் வார்த்தைகளை வீசிக் கொண்டி ருந்தது.

"சங்கர்! போகேக்கை வீட்டைக் கவனமாகப் பூட்டிக் கொண்டு போ என்ன!"

நல்ல வேளை. இன்று நான் முந்திய படியால் அண்ணா விடம் வீட்டைப் பூட்டும் வேலை பொறுத்துப் போயிற்று.

அண்ணா, இவ்வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதப் போகிறான்.

எனக்கு அடுத்த வருடம் தான் பரீட்சை.

நேரத்தைக் கவனித்தேன் 8.05

இருந்தாலும் அம்மா கெட்டிக்காரிதான். இதற்கிடையில் சமைத்து அப்பாவிற்கு மதிய உணவும் கட்டிக் கொடுத்து, வேலைக்கு அனுப்பி தானும் நேரம் பிந்தாமல் கடமைக்குப் புறப்பட்டுப் போய் விட்டாள்.

அ... அப்பாவைப் பற்றிச் சொல்ல மறந்து விட்டேன். அவர், அரச வங்கியொன்றில் கிளை முகாமையாளராகக் கடமையாற்று கின்றார். காலையில் புறப்பட்டுப் போனால் வீடு வந்து சேர மாலையாகிவிடும்.

நானும், அம்மாவும், அண்ணாவும் பாடசாலை முடிந்து வந்ததும் எல்லோரும் ஒன்றாகவே சாப்பிடுவோம்.

அன்று அம்மா வீட்டிற்கு வந்து சேர சற்றுத் தாமதமாயிற்று. நானும் அண்ணாவும் அம்மாவுக்காகக் காத்திருந்தோம். அண்ணா, அடிக்கொருதரம் வாசலைப் போய் எட்டிப் பார்த்துவிட்டு வந்தான்.

“சிந்து ஏன் இன்னும் அம்மாவைக் காணேல்ல?”

எனக்கு அண்ணாவைப் பார்க்க பாவமாய் இருந்தது.

“அண்ணா! உனக்குப் பசிக்கிதே, நான் சாப்பாட்டைப் போட்டு தரட்டே?”

“சீ! மண்டு, பொறு அம்மா வரட்டுக்கும்.”

வாசலில் நுழையும் போதே அம்மா குரல் கொடுத்தாள்.

“சங்கர்! சிந்து! ஒரு சந்தோசமான செய்தி”

“என்னம்மா!”

அண்ணாவும் நானும் ஏக காலத்தில் குரல் கொடுத்தோம்.

“எஸ்.எல்.ஈ.ஏ.எஸ் பரீட்சையில நான் சித்தியடைஞ்சிட்டன்” அம்மாவின் முகத்தில் என்றுமில்லாத மகிழ்ச்சி.

அண்ணா பாய்ந்து சென்று அம்மாவின் கைகளைப் பிடித்துக்குலுக்கினான்.

நான் அம்மாவைக் கட்டிப்பிடித்து இருகன்னங்களிலும் முத்தமிட்டேன்.

மொத்தத்தில் மகிழ்ச்சிப் பிரவாகத்தில் மூவரும் திளைத்துப் போனோம்.

அம்மாவுக்குக் கிடைத்த இந்த வெற்றி மகத்தானது. கல்வி நிர்வாகச் சேவை நடாத்திய இப்பரீட்சையில் இந்த வன்னி மாவட்டத்திலேயே அம்மா மட்டும்தான் தேறியிருந்தாள்.

அறிந்தவர்கள், தெரிந்தவர்கள், உறவினர்கள் என பலரும் வந்து அம்மாவைப் பாராட்டிப் போனார்கள். ஆனால் அம்மாவின் இதயம் மட்டும் நிறைவடையவில்லை என்பதை என்னால் உணர முடிந்தது.

உந்துருளியின் இரைச்சல் கேட்கும் போதெல்லாம் அம்மா வாசலுக்கு விரைவதும் ஏமாறுவதுமாய் இருந்தாள்.

"அம்மா! நீங்கள் அவசரப்படாதையுங்கோ அப்பா வந்தவுடனே நான்தான் முதல் போய் இந்தச் சந்தோசமான செய்தியை அவருக்குச் சொல்லுவன்."

சங்கர் பதுங்கிப் பதுங்கி அம்மாவிடம் வந்தான்.

"அம்மா! நான் இண்டைக்கு ரீயூசனுக்குப் போகவில்லை"

"ஏன்"

"அப்பா வந்தவுடனே அவரோட சேர்ந்து இந்தச் சந்தோசத்தைப் பகிர்ந்து கொள்ள வேணும் போல இருக்கம்மா."

"சும்மா விசர்க்கதையை விட்டிட்டு உடனே நீ ரியூசனுக்கு வெளிக்கிடுறாய் சொல்லிப் போட்டன்."

அம்மாவின் கண்டிப்பான உத்தரவை அண்ணாவால் மீற முடியவில்லை. முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு போய் விட்டான்.

அப்பா வீட்டிற்கு வந்து சேர ஆறு மணியாகி விட்டது. நான்தான் அவரிடம் ஓடிப்போய் விசயத்தைச் சென்னேன்.

"ம்..." அப்பாவின் முகத்தில எந்தவித மாற்றமும் தென்படவில்லை. எனக்கு என்னவோ போலிருந்தது.

என் மனதை இனம் புரியாத வேதனை குடைந்து கொண்டிருந்தது. அம்மாவைத் தேடிப்போனேன்.

குசினியில் அவள் அப்பாவிற்காக தேநீர் கலந்து கொண்டிருந்தாள். மேசையில் ஒரு தட்டில் மைசூர்பாகு கிடந்தது. தேநீரை ஒரு

கையிலும் தட்டை மறு கையிலுமாக அம்மா எடுத்துக் கொண்டு அப்பாவிடம் போனாள். நான் அவளை மௌனமாக பின் தொடர்ந்தேன்.

அப்பா எதுவும் பேசாமல் தட்டிலிருந்த மைசூர்பாகை ஒவ்வொன்றாக எடுத்து வாயில் போட்டு காலி பண்ணிக்கொண்டிருந்தார். பின்னர் தேநீரை எடுத்துப் பருகிவிட்டு கோப்பையை மேசை மீது வைத்தார்.

அம்மா காலியான தட்டையும், கோப்பையையும் எடுத்துக் கொண்டு குசினிக்குத் திரும்பினாள். நான் அவளைக் கூர்ந்து அவதானித்தேன்.

அவளது கண்களிலிருந்து நீர்முத்துக்கள் கன்னம் வழியே ஓடி நிலத்தில் விழுந்து கொண்டிருந்தன.

என் இதயத்துள் இடி விழுந்தாற் போல் ஓர் வலி.

கவிஞரின் பாடல் வரிகள் சில என் இதயத்துள் ஒலித்துக் கொண்டிருந்தது.

“இன்பத்தில் துன்பம் - துன்பத்தில் இன்பம் - இது இறைவன் வகுத்த நியதி“

அன்றைய இரவு மௌனமாய் கலைந்த போதும் ஒவ்வொரு இதயங்களும் தனிமையெனும் திரையினுள் மூழ்கிக் கிடந்து குமுறுவதாய் என்னுள் ஓர் பிரமை.

ஏன்...? ஏன்...? ஏன்...?

உள்ளத்திலிருந்து புறப்பட்ட புதிர் உதடுகளுக்குள் அமிழ்ந்து போனது. அன்று வெள்ளிக்கிழமை. அம்மா நேரத்தோடு எழுந்து சமயலை முடித்திருந்தாள். அவளுக்குச் சமையல் வேலையில் எந்தவித ஒத்தாசையும் என்னால் செய்ய முடியவில்லை. மலேரியாவின் ஆதிக்கத்தினால் என் உடல் நிலை மிகவும் பாதிப்படைந்து இருந்ததுவே காரணம்.

முகத்தைக் குளிர் நீரினால் கழுவினாலாவது சிறிது தென்பு பிறக்கும் என்ற நப்பாசையோடு எழுந்து வந்தேன். அப்பா காலை உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அம்மா அவருக்குத் தேநீர் தயாரித்து எடுத்து வந்து கொடுத்தாள்.

“இண்டைக்கு... கொஞ்சம் நேரத்தோட வாருங்கோப்பா. நான் கோயிலுக்குப்பூசைக்குக் கொடுத்தனான். ஒருக்கா எல்லோரும்

கோயிலுக்குப் போட்டு வருவம்.”

அம்மா தலையிலிருந்து நீர் சொட்டச் சொட்ட நின்று கொண்டிருந்தாள். அவளுக்கு அன்று விரதநாள். அப்பா அவளை நிமிர்ந்து பார்த்தார்.

“அங்கை... நீர் பள்ளிக்கூடத்தில் காட்டுற ஆதிக்கத்தை இஞ்சையும் காட்டலாமென்று நினைக்கிறீரோ. அது சரிவராது. ஆரைக் கேட்டுப் பூசைக்குக் குடுத்தனீர்? எல்லாம் உம்முடைய இஸ்டத்துக்கு நடத்தலாம் எண்டு ஒரு நினைப்பு... இருந்தா... அதை இப்பவே மறந்திடும். உமக்கு ஒரு விசயம் தெரியுமோ? பெட்டைக் கோழி கூவி பொழுது விடியிறதில்லை.”

அப்பாவின் கொக்கரிப்பை என்னால் தாங்க முடிய வில்லை.

“அப்பா! உங்களுக்கு இது தெரியுமோ? சேவல் கூவுறதும், பெட்டைக் கோழி முட்டை இடுறதும் இயற்கையின்ர நியதி. அது... அவரவர் கெட்டித்தனமில்லை.”

“ஏய் சிந்து! என்ன கதைக்கிறாய்?”

அம்மா என்னை அதட்டினாள். அப்பா எதுவும் பேசாமல் வேலைக்குப் புறப்பட்டுப் போய்விட்டார்.

அம்மா மெல்லவும் முடியாமல். விழுங்கவும் முடியாமல் அவஸ்த்தைப்படுவதாக எனக்குத் தோன்றிற்று. பேசாமல் போய்ப் படுக்கையில் விழுந்தேன். எனது கண்கள் தானாக மூடிக் கொண்டன.

நான் கண் விழித்துப் பார்த்த போது நேரம் பதினொன்றைத் தாண்டியிருந்தது. எழுந்து போய் மேசையைப் பார்த்தேன். அம்மா எனக்காக தோடம்பழம் கரைத்து வைத்திருந்தாள். எடுத்துச் சிறிது சிறிதாக பருகினேன். என் உடலில் தென்பும் சிறிது சிறிதாக ஏறியது.

குசினிக்குள் எட்டிப் பார்த்தேன். அங்கே... அம்மா தனக் கெனத் தயாரித்துவைத்த கோப்பி ஆடை பிடித்து ஆறிப் போய்க் கிடந்தது. எனக்கு விசயம் புரிந்துவிட்டது.

அம்மா, தனக்கேற்பட்ட மனக்கசப்பினால் கோப்பியை வேண்டுமென்றே நிராகரித்துவிட்டுப் போயிருக்கிறாள். பாவம்... இன்று விரத நாளும் அதுவுமாக கோப்பி கூடப் பருகாமல் களைத்துப் போயிருப்பாள்.

“பளிச்”சென என் மனதில் ஓர் எண்ணம் தோன்றியது. பத்தே நிமிடத்தில் நான் பாடசாலையில் போய் நின்றேன். உத்தரவு பெற்று

*அதிபரின் அறையினுள் நுழைந்தேன்.*

*என்னைக் கண்டதும் அம்மா துணுக்குற்றுப் போனாள்.*

*"என்ன! என்ன சிந்து!!"*

*"அதுவந்து ஒண்டுமில்லையம்மா நீங்கள் கோப்பி கூட குடிக்காமல் வெறுவயித்தோடு வந்துவிட்டீங்கள் அதுதான்... இந்தாங்கோ பிளாஸ்கில இருக்கு எடுத்துக்குடியுங்கோ"*

*அம்மாவின் முகத்தில் ஏற்பட்ட மாற்றம் என்னைத் திடுக்கிட வைத்தது.*

*"இஞ்சபார் சிந்து! கடமை நேரத்தில ஆரும் வந்து எனக்கு தொந்தரவு கொடுப்பதை என்னால் ஏற்கவே முடியாது. இதுதான் முதலும், கடைசியுமாய் இருக்கட்டும். இனி மேல் இப்படி நடந்து கொள்ளாதை."*

*அம்மாவின் கண்டிப்பு நிறைந்த வார்த்தைகள் என்னை நிலைகுலைய வைத்தது.*

*"சட்"டெனத் திரும்பி விட்டேன்.*

*அம்மாவின் வாழ்க்கையெனும் ஏட்டில் இருக்கும் பக்கங்கள் இரண்டையும் மாறிமாறிப் புரட்டி எடை போட எத்தனிக்கிறது என் மனம்.*

# இலை மறைகாய்

*அன்றைய காலைப் பொழுது மப்பும் மந்தாரமுமாக இருந்தது. கதிரவனின் கதிர்களைக் காணக் கிடைக்கவில்லை. காலையில் இதமாக வீசித் தழுவும் இளந்தென்றல் அன்று வீச மறந்து விட்டதால் மரம் செடிகள் எல்லாம் துக்கம் அனுஷ்டிப்பவை போல் ஆட்டம் அசைவின்றி மௌனமாய் நின்றன.*

*அந்த வீட்டு முற்றத்தில் சுருண்டு படுத்திருந்த நாய் ஒன்று தலையை உயர்த்தி படலையைப் பார்த்து உறுமி விட்டு மீண்டும் சுருண்டு விட்டது. அடுக்களைக்குள் இருந்து எட்டிப் பார்த்த தங்கம்மா, “சனியன் பிடிச்ச நாய். இரவு முழுவதும் ஊளையிட்டு மனிதரை ஒருகண் தூங்கவிடவில்லை. இப்ப பார்! சுருண்டு கொண்டு கிடக்கிறதை என்ன அழிவுக்குத் தான் நாய் இப்பிடி ஊளையிட்டுதோ என்று புறு புறுத்தவாறு, ம்!... என்ற நீண்ட பெருமூச்சை வெளிப்படுத்தினாள்.*

*எங்கேயோ தொலை தூரத்தில் நாய்கள் குரைக்கும் சத்தம் அவளது காதில் விழுந்தது. உடனே அவள் பதற்றத்துடன் வீட்டு முற்றத்துக்கு விரைந்து வந்து நின்றவள், சுற்றுமுற்றும் திரும்பி எத்திசையிலிருந்து சத்தங் கேட்கிறதென உன்னிப் பாகக் கவனித்தாள்.*

*“அது எங்கையோ தூர வாய்க் கேக்குது. நான் நினைச்சன் “துலைவான்கள்” எங்கடை ஒழுங்கையால தான் வாறாங்களாக்கும் எண்டு.”*

சொல்லியவாறே பின் வாங்கித் தனது அலுவல்களைக் கவனிக்கலானாள். ("துலைவான்கள்", தங்கம்மாவினால் அமைதி காக்கவென வந்த அந்நியப் படையினருக்கு சூட்டப்பட்ட நாமம்.)

"அம்மா!"

அவளது மகள் சாந்தி அழைத்தாள். "நான் இண்டைக்கு ரியூசனுக்குப் போகேல்ல, ஸ்கூலுக்குத் தான் போகவேணும். அவசரமில்லை. நீங்கள் ஆறுதலாய்ச் சாப்பாடு செய்யுங்கோ."

மகளைத் திரும்பிப் பார்த்த தங்கம்மா, "ஏன்டி சாந்தி! ஏன் இண்டைக்கு ரியூசன் இல்லையே!"

"எனக்குத் தலையிடிக்குது அம்மா. அதுதான் போகாமல் விடப்போறன். "பனடோல்" போட்டுப் பாப்பம். சுகமாயிருந்தால் பாத்துப் பள்ளிக்குப் போவம் எண்டு நினைக்கிறன்."

"தலையிடிச்சால் சுடச் சுடக் கோப்பி ஒண்டு போட்டுத் தாறன் குடிச்சிட்டுக் கொஞ்ச நேரம் படுத்திரடி பிள்ளை. தலையிடி சுகமாய்ப் போயிடும்."

சொல்லிக் கொண்டே கோப்பியைக் கலந்து மகளிடம் கொடுத்தாள். சாந்தி கோப்பியைக் கையில் வாங்கிக் கொண்டே "பன்டோல்" தேடிப் போனாள்.

தங்கம்மா குடத்தை எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குப் போனாள். தண்ணீரை அள்ளிக் குடத்தினுள் நிரப்பிக்கொண்டிருந்த வேளை, அடுத்த வீட்டுக் கோழிகள் கொக்கரித்துக் கொண்டே வெருண்டோடி வந்தன. அவளுக்கு மனதுக்குள் "திக்" என்றது. கோழி யளைப் பிடிக்கிற "துலைவான்கள்" உங்கினைக்க நிக்கிறான்களோ என எண்ணியவாறு திரும்பித் திரும்பிப் பார்த்தாள். ஒருவரையும் காணவில்லை. இருந்தாலும் திடுக்கிட்ட அவளது இருதயம் வேகமாக அடித்தது. மளமள வென்று நீரை நிரப்பிக் குடத்தை எடுத்து இடுப்பில் வைத்தபடி அடுக்களைக்கு நுழைந்தாள்.

முற்றத்தில் சுருண்டு படுத்திருந்த அவர்களது நாய் இருந்தாற் போல் அவலமாகக் குரைக்கத் தொடங்கியது. யன்னலினுடாக எட்டிப் பார்த்தவள், படலைக்கு மேலால் தெரிந்த தலைப் பாகையைக் கண்டு விட்டாள். அவளுக்கு விஷயம் புரிய வெகுநேரம் பிடிக்கவில்லை. தங்கம்மா மகளிடம் ஓடிப்போய்விட நினைத்தாள். அதற்கு அவகாசமில்லாமல் ஒரு இராணுவத்தினன் வீட்டுக்குள் நுழைந்திருந்தாள்.

“எல். ரி. ரி” என்று கூறி விளங்காத பாஷையில் கத்தினான். தங்கம்மா “இல்லை” என்பதற்கு அடையாளமாகக் கையை விரித்துக் காட்டினாள்.

வீட்டைச் சோதனையிடப் போவதாகச் சைகை மூலம் காட்டி ஏதோ கத்தினான் அவ்வன்னியன். தங்கம்மா அச்சத்துடன் மிரண்டுபோய் நின்றாள்.

ஆரவாரங் கேட்டுச் சாந்தி தாயிடம் ஓடி வந்தாள். அவளுக்கு ஓரளவு நிலைமை புரிந்து விட்டது. தன்னைச் சுதாகரித்துக்கொண்டு துணிவை வரவழைத்துக் கொண்டாள்.

“அம்மா! பயப்பீடாதையுங்கோ. அவை வீட்டைப் பார்க்கிற தெண்டால் பார்க்கட்டுமன்” என்று கூறியவள், தாய்க்குக் கிட்டப் போய் அவளுடன் நெருங்கி நின்று கொண்டாள்.

அதற்குள் இன்னொரு குள்ளமான இராணுவத்தினன் கோடிப்புறத்திலிருந்து வீட்டிற்குள் புகுந்தான். அவன் இரைந்து ஏதோ சொல்லவே, தலைப் பாகை அணிந்த அந்த இராணுவத்தினன் அடுக்களைப் பக்கமாகப் போனான். குள்ளமானவன் அறைக்குள் புகுந்து எதையெதையோ புரட்டி, உருட்டும் சத்தம் கேட்டது.

இவ்வளவிற்கும், தாயும் மகளும் நின்ற இடத்தை விட்டு நகரவில்லை. தேடி முடிக்கட்டும் என்ற நோக்கத்தோடு இருவரும் மௌனமாக நின்று கொண்டிருந்தனர். அவர்களுக்குப் பேசிக் கொள்ள நாவெழுந்தால்த்தானே. மௌனமே அங்கு பாஷை யாயிற்று.

மறு வினாடி குள்ளனான இராணுவத்தினன் வெளியே வந்து சாந்தியைப் பார்த்து பல்லை இளித்தான். சாந்தி முறைத்துப் பார்த்தவாறு பேசாமல் நின்றாள்.

வோட்டர்! வோட்டர்! என்று சத்தமிட்டவன், குடிப்பது போல் சைகை காட்டினான். சாந்திக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. கிணற்றடியைச் சுட்டிக் காட்டினாள்.

இராணுவத்தினன், “நோ! நோ! டீ... டீ ...” என்று இளித்தான். சாந்தி “இல்லை” என்பது போல் சைகை காட்டினாள். அவளது துணிவான போக்கு அவனுக்குச் சீற்றத்தை ஏற்படுத்தியது போலும். அவர்களை நெருங்கியவன், கையில் வைத்திருந்த தடியினால் தங்கம்மாவின் முதுகில் ஓங்கி அடித்தான்.

"ஐயோ!......"

என்ற அலறலுடன் தங்கம்மா நிலத்தில் சுருண்டு விழுந்தாள். முதுகில் பட்ட அடியின் தாக்கத்தினால் அவளுக்கு நெஞ்சை வலித்தது, பேதை அப்படியே மயங்கிப் போனாள்.

இதைக் கண்ணுற்ற சாந்திக்கு இரத்தம் கொதித்தது. ஆத்திரத்தில் கை கால் வெடவெடுத்தது. எதற்கும் துணிந்து விட்ட நிலையில் அவள் நின்று கொண்டிருந்தாள்.

திடீரென அவளை நெருங்கிய அவன், அவளது கையைப் பிடித்துத் தரதரவென இழுத்தான். சாந்தியின்மூளையில் ஒருமின்னல் பளிச்சிட்டது. அவள் எதிர்க்க முயலாததால் அவனது உற்சாகம் கரை புரண்டோடியது. அவனது முகத்தில் ஒரு வித வெறி

அறைக் கதவை அண்மித்த போது சாந்தி கதவில் தடக்கிக் கீழே விழுந்து விட்டவள் போல் நடித்தாள். விழுந்தவள் தன் முழுப் பலத்துடன் அந்தக் காமுகனது கால் ஒன்றைப் பிடித்து இழுத்தாள். எதிர்பாராத இந்த நிகழ்வால் அந்தக் காமுகன் நிலை தடுமாறிக் கிடக்கையில், அவனது தோளில் மாட்டப்பட்டிருந்த ஆயுதம் சற்றுத் தள்ளிப் போய்க் கிடந்தது. இந்தக் குறுகிய நேரத்தில் தன் மதி நுட்பத்தைப் பயன்படுத்திய சாந்தி, மின்னல் வேகத்தில் எழுந்தாள். இந்நேரம் அவளுக்கு கதவின் பின் சாத்தி வைக்கப்பட்டிருந்த "பார் தடி கைகொடுத்தது. எடுத்தவள் தன் பலமனைத்தையும் ஒன்று திரட்டி, அவன் எழ முயற்சிக்கையில் ஓங்கி ஒன்று மண்டையில் போட்டாள்.

"படீர்!......"

அடுத்த கணம், ஆ!... என்றொரு அலறல், மண்டை நொருங்கி இரத்த வெள்ளத்தில் நீந்தினான் அவ்வன்னியன். அவனது உடல் ஒருமுறை துடிதுடித்துத் தணிந்து போனது.

சத்தங் கேட்டுத் தலைப் பாகை அணிந்த இராணுவத்தினன் தனது துப்பாக்கியைத் தயார் நிலையில் வைத்தபடியே அவ்விடத் திற்கு விரைந்து வந்தான். நிலைமையை அவதானித்த அவனது கை துவக்கின் விசையை அழுத்தியது.

டுமீல் !....... டுமீல்!.......

அவனது துப்பாக்கி கக்கிய சன்னங்கள் சாந்தியின் நெஞ்சை ஊடுருவின. சாந்தி துவண்டு விழுந்தாள். அவளது நெஞ்சிலிருந்து

இரத்த அருவி பெருக்கெடுத்தது.

அந்த இராணுவத்தினன் ஏதோ பேயைக் கண்டு மிரண்டவன் போல் கத்திக் கொண்டே ஓட்டமெடுத்தான்.

அம்மா... அம்மா!... தண்ணீ!... என அனுங்கினாள். விழுந்து கிடந்த தங்கம்மாவின் மயக்கம் தெளிகையில் சாந்தியின் குரல் அவளது காதுக்கு எட்டியது.

தங்கம்மாவிற்கு அசாத்தியமான துணிச்சல் ஒன்று ஏற்பட்டது. மெல்ல எழுந்தாள். அடுக்களைக்குல் போய்த் தண்ணீரை டம்ளர் ஒன்றில் வார்த்து வந்தாள். மகளை நெருங்கித் தண்ணீரை மெல்ல வாய்க்குள் ஊற்றினாள்.

தண்ணீர் உள்ளே போனதும் சாந்திக்குச் சிறிது தென்பு ஏற்பட்டது. சாந்தி மிகவும் சிரமப்பட்டுத் தனது உதடுகளைச் சேர்த்துத் திக்கித்திணறி வார்த்தைதினை வெளியிட்டாள்.

“அ...ம்...மா... க...வ...லை...ப்... ப...டா...தை... யு...ங்கோ. நா...ன்... கோ...ழை...யா...ய்...சா.. கெ...ல்...ல.... அ...ம்...மா...” தொடர்ந்து பேசமுடியாமல் மூச்சுத் திணறியது.

ஒரு விக்கலுடன் சாந்தியின் தலை சரிந்தது. கண்கள் குத்திட்டு நின்றுவிட்டன. தங்கம்மா, ஐயோ! சாந்தி! என்று கதற வாயெடுத்த வள் அப்படியே மகளின் பிணத்தின் மீது மயங்கிச் சாய்ந்தாள்.

பேரிரைச்சலுடன் வாகன அணி ஒன்று அந்த ஒழுங்கைக்குள் வந்து நின்றது. திமுதிமுவென பல பூட்ஸ் அணிந்த கால்கள் அவ் வாகனங்களிலிருந்து குதித்தன. ஆர்ப்பரித்த வண்ணம் அங்குமிங்கும் சிதறி ஓடித்தங்கம்மாவில் வீட்டை முற்றுகையிட்டன. அவற்றுள் சில வீட்டினுள்ளும் புகுந்து அங்குள்ள பொருட்களை வேட்டை யாடின.

சில பெறுமதி வாய்ந்த பொருட்கள் அவர்களது பைகளுக்குட் போயின,

முன்னர் வந்து போன தலைப்பாகை அணிந்த இராணுவத் தினன் மட்டும் உடல்கள் கிடந்த அறைக்குள் நுழைந்தான். சாந்தியின் உடலின் முன் மண்டுயிட்டான். அவனுக்கு மட்டுமே தெரித்திருந்த அப் பேதையின் வீரத்தை மதிக்க அவன் தவறவில்லை. பின்னர் அவன் தனது சகா ஒருவனை அழைத்து வீழ்ந்து கிடந்த இராணுவத்தினனின் உடலைத் தூக்கிக் கொண்டு போய் டிறக் வண்டில் ஏற்றினர்

இதற்குள் தங்கம்மாவின் வீட்டு வேலிகள் யாவும் தீயிட்டுக்

*கொளுத்தப்பட்டன. இருவர் சேர்ந்து ஒரு பொதியைச் சுமந்து வந்து வீட்டின் மையத்தில் வைத்தனர். அதிலிருந்து நீண்ட வயர்கள் பொருத்தப்பாட்டு அவை தொலை தூரத்திற்கு இழுத்துச் செல்லப் பட்டன. உயரமான தோற்றத்தையுடைய ஒருவன் ஏதோ பெரிய குரலில் உத்தரவு பிறப்பித்தான். அனைவரும் ஓடிவத்து ஒழுங்கைக்குச் சற்றுத் தொலைவில் நின்று கொண்டனர். விசில் சத்தத்தைத் தொடர்ந்து,*

*"டுமீல்...."*

*அந்த ஊரே அதிர்ந்தது. தங்கம்மாவின் வீடு இப்போது தரைமட்டமாகி இருந்தது. கூரையிலிருந்த மரங்களும், ஓடுகளும் பிற பொட்களும் சலசலவென்ற இரைச்சலுடன் சுற்றுமுற்றும் தூக்கி வீசப் பட்டன. வீடு மட்டுமா தகர்க்கப்பட்டது? தங்கம்மாவின் உயிருள்ள உடலுமல்லவா உருக்குலைந்து சின்னாபின்னமாகியது. அந்நியப் பேய்களின் வெறியாட்டம் அத்துடன் அடங்கிப் போயிற்று*

*தங்கம்மாவின் உடமை என்றுமிஞ்சியதெல்லாம் அவள் வளர்த்த நாய் ஒன்று தான். அது தான்இன்னமும் ஊளையிட்டவாறு வளவிற்குள் வளைய வருகிறது.*

*நாயின் ஊளைச் சத்தத்தைக் கேட்டு யாரோ ஒருவர் கூறினார். "இன்னும் உந்தப் பக்கத்திலை நாய் ஊளையிடுகின்றது. ஒன்றுமே அறியாத் தங்கம்மா குடும்பத்தை வீட்டோடை சேர்த்து எல்.ரி.ரி" எண்டு அழிச்ச மாதிரி, இன்னும் ஆர் ஆருக்கு அழிவு நெருங்குதோ! ஆர் கண்டது"*

*இலைமறை காயாகிவிட்ட சாந்தியின் வீரச் செயலால் ஏற்பட்ட விளைவு தான் அது ...............*

# நிமிர்வு

"டமார்!"

காரிருளின் அமைதியைக் குலைத்த அந்தச் சத்தம் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த அமுதாவை விழிப்படையச் செய்து விட்டது.

தொடர்ந்து விசும்பல் ஒலி.

படுக்கையில் எழும்பி இருந்தவள், ஒலி வரும் திசையை உன்னிப்பாகக் கவனித்தாள்.

"இதென்ன அம்மாவின்ரை குரல் மாதிரிக் கிடக்கு. அம்மா குசினிக்கை இந்த நேரத்திலை என்ன செய்யிறா"

எண்ணமிட்டவள் எழும்பி வந்து குசினியை எட்டிப் பார்த்தாள்.

அங்கே....

ஜாம்போத்தல் விளக்கின் ஒளியில், அம்மா கைகளால் நெற்றியைப் பொத்திப் பிடித்தவாறு. விசும்பிக் கொண்டிருந்தாள்.

தன்னை நெருங்கி வந்த அமுதாவை அடையாளங் கண்டுவிட்ட அம்மா விசும்பலை நிறுத்தி விட்டு,

"அதொண்டுமில்லைப் பிள்ளை. நீ போய்ப்படு" சமாளிக்க முயன்றவளின் மீது படர்ந்த பார்வையைச்சற்றுத் திருப்பினாள் அமுதா.

நிலமெங்கும் சோற்றுப் பருக்கைகள்

சிதறிக்கிடந்தன. அம்மியின் விளிம்பை முத்த மிட்டவாறு தவழ்ந்து கிடந்த தட்டையும் நோட்டமிட்ட அமுதா நிலைமையை ஒருவாறு ஊகித்துக்கொண்டாள்.

பொங்கியெழுந்த சினத்தை மிகவும் பிரயத்தனப்பட்டு, அடக்கிக் கொண்டாள். எத்தனை இரவுகள் ஒரு பிடி சோற்றுக்கு வழியற்றுப்பட்டினியுடன் படுக்கையில் சுருண்டிருக்கிறாள் அவள். ஏன் அவள் மட்டுமா? குடும்பத்தில் அத்தனை பேருந்தான்.

இப்போது இங்கே சிந்திக்கிடந்த சோற்றைக் கண்ணுற்ற வளின் வயிறு பற்றி எரிவது போன்ற உணர்வு ஏற்படவே, இந்தச் செய்கைக்குக் காரணமாகியவரைத்தேடி அவளது கண்கள் சுழன்றன.

வாசற்பக்கமாக அவரது குரல் கேட்டது. வார்த்தை கள் தெளிவில்லாமல் வெளி வந்தன.

“எளிய நாய், ஒருமுட்டையெண்டாலும் அவிச்சு வைப்ப மெண்டில்லை. வெறும் முருங்கையிலையை வறுத்து வச்சிருக்கிறாள். உவளைச்சும்மா விடக்குடாது”

சொல்லிக்கொண்டே, தடுமாறிய வண்ணம் அடி எடுத்து வைத்து அம்மாவை நோக்கி முன்னேறினார். அமுதாவால் இனியும் பார்த்துக் கொண்டு பேசாமல் இருக்க முடியவில்லை பொறுமையின் எல்லைக்குத் தள்ளப்பட்டவள்,

“அப்பா! நிறுத்துங்கோ உங்கடை அட்டூழியத்தை நீங்கள் காசு சைக்குக்கிடைச்ச உடன குடிச்சுப்போட்டு வந்து நிண்டால், அம்மா என்னெண்டு கறி வாங்கிற தெண்டு நினைப்பு.”

சற்று அதட்டலாகவே நியாயத்தைத் தட்டிக்கேட்டு விட்டாள். “பொத்தடி வாயை. ஆரோடை கதைக்கிற தெண்டில்லா மல் வாய்காட்டுகிறாய் என்ன”

ஓடிவந்த அம்மா, தனது கையில் வைத்திருந்த அகப்பையின் காம்பினால் அமுதாவின் மேனியெங்கும் விளாசித் தள்ளினாள்.

ஒரு கணம் அமுதா நிமிர்ந்து அம்மாவையும், அப்பாவையும் பார்த்தாள்.

அம்மாவின் முகத்தில் விரக்தி

அப்பாவின் முகத்தில் திருப்தி.

மௌனம் அவளைத் தழுவ, கால்கள் படுக்கையை நோக்கி

நடந்தன. அம்மாவின் குரல் அவளுக்குத் தெளிவாகக் கேட்டது.

“மாடு மாதிரி வளர்ந்திருக்கிறாள். அடக்கமெண்டது கிடையாது. திமிர் பிடிச்சவள்”

அமுதா, தன்னையே கேட்டுக் கொண்டாள்.

“உண்மையைக் கேக்கிறவை எல்லாம் திமிர் பிடிச்சவையோ?“

அமுதாவுக்கு அம்மா மீது கோபம் ஏற்படவில்லை. மாறாக, அவளது பேதமையை எண்ணி பச்சாத் தாபமே ஏற்பட்டது. அம்மம்மா, அம்மாவுக்கு இப்படித்தான் நடந்திருப்பாள். அம்மாவும் அதையே பின்பற்றி நடக்கிறாள். ஆனால் என்னால இப்பிடி ஒரு வாழ்க்சை யை கற்பனை கூடப் பண்ண முடியாது.

நெற்றியைத் தடவிச் கொண்டாள் அமுதா. நெற்றியிலிருந்த தழும்பு அவளுக்கு எதையோ ஞாபகப்படுத்தியது.

அமுதா அந்தக் குடும்பத்தின் மூத்த வாரிசு. அவளுக்குப் பின் நான்கு பெண்களும் இரண்டு ஆண்களுமாய் நீண்டு போய்க் கொண்டிருக்கும் குடும்பம் அது. பாடசாலைக்குப் போய்வரும் நாட்களில் அவள் ஒரு சிட்டுக்குருவி. சிறகடித்துப் பறந்துதிரிந்த அந்த நாட்கள் தான் எத்தனை இனிமையானவை. பசுமையான அந்த நினைவுகள் இப்போதும் அமுதாவின் நெஞ்சில் பசுமரத்தாணியாய் நிலைத்திருந்தன.

பாடசாலையில் இடை வேளை நேரம். பாடசாலை அமைந்திருந்த வளவின் ஓர் மூலையில் பெருவிருட்சமாக ஒரு மாமரம் கிளை பரப்பி நின்றது. அமுதாவுக்கும் அவளது தோழியருக்கும் அந்த மரத்திலிருந்து மாங்காய் பறித்து உண்பதில் தனி இன்பம்.

அன்றும் அப்படித்தான். மரத்தின் உச்சக் கிளையொன்றில், சோளகக் காற்றின் இதமான தழுவலுக்கேற்ப ஆடி அசைந்து கொண்டிருந்த இரு மாங்காய்கள் அவர்களது கண்களில் பட்டு விட்டன. மாங்காய்களைக் கண்டதுமே அவர்களது நாவில் நீர் சுரக்கத் தொடங்கிவிட்டது. அதைப் பறித்துவிட முயன்றனர். கற் களையும், தடிகளையும் பொறுக்கி அவற்றுக்குக் குறிபார்த்து எறிந்தனர். ஒரு கிளையின் மறைவில் இருந்த மாங்காய்களை, அவை அணுக மறுத்தன.

முயற்சி பலிக்காமல் போகவே, திடீரென அமுதாவின் மூளையில் ஒரு மின்னல் பளிச்சிட்டது. தோழியின் காதுக்குள்

எதையோ கிசு கிசுத்தாள். மகிழ்ச்சியுடன் அவர்களும் தலையை அசைத்தனர்.

அமுதா ஒருமுறை சுற்று முற்றும் பார்த்துவிட்டு, மெதுவாகப் பூனையைப் போல் பதுங்கிப் பதுங்கி மரத்தில் ஏறத்தொடங்கினாள். கிளைகளைப் பற்றித் தாவித்தாவி உச்சத்தை அடைந்தவள், மாங்காய் களைப் பறித்து கீழே போட்டான். மெல்ல மரத்தினின்றும் இறங்கத் தொடங்கினாள்.

பெண்கள் சிலர் மரத்தையே அண்ணாந்து பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்ணுற்ற ஒரு மாணவன் அருகில் வந்து பார்த்தான். அடுத்த நிமிடம்,

"மரத்திலை ஒரு குரங்கு. எல்லாரும் ஓடியாங்கோ"

பெரிதாக அழைப்பு விடுத்தான். மாணவர் கூட்டம் வந்து கூடுவதற்குள் அவசரமாக இறங்க எத்தனித்த அமுதா, கால் வழுக்கிவிடக் கீழே வந்து விழுந்தாள். விழுந்தவளின் நெற்றியிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

அவ்விடத்திற்கு விரைந்து வந்த ஆசிரியர் ஒருவர், நிலைமையை விசாரித்து அறிந்து கொண்டார்.

"ஏன் மேனே மரத்திலை ஏறினனீ. நீ பொம்பிளைப் பிள்ளையெல்லே?"

அமுதாவுக்கு ஆசிரியரின் அந்தக்கூற்று புரியாத புதிராகத் தோன்றியது. அன்று வீட்டிற்குத் திரும்பிய அமுதாவுக்கு அம்மா அமளியான விருந்தளித்தாள்.

"தரிசு கெட்ட நாய். ஏனடி மரத்திலை ஏறினனீ. மானங் கெட்ட கழுதை"

அம்மாவின் அடிகள் அவளுக்கு நோவை ஏற்படுத்த வில்லை. மாறாக, அவளது பிஞ்சு மனத்தில் ஒரு வன்மத்தை விதைத்து விட்டது.

அன்றே அந்த சிட்டுக் குருவியின் சிறகுகள் கத்தரிக்கப்பட்டு, வீட்டிற்குள் முடக்கி வைக்கப்பட்டாள். வீட்டுக்குள்ளேயே வளைய வந்து கொண்டிருந்தாலும்கூட, அவளது சிந்தனைகள் வெளி உலகை வலம் வரத்தொடங்கின. அவளது சிறகுகள் கூட மெது மெதுவாக முளைவிடத் தொடங்கின.

அமுதாவிடம் அடுத்த வீட்டு ரம்யா அடிக்கடி வருவாள்.

“அமுதாக்கா, இந்த மாலையை ஒருக்கால் வடி வாய்க்கட்டி விடுங்கோ”

கனகாம்பர மாலையை அமுதாவின் கையில் தந்து விட்டு, தலையைக் குனிந்து கட்டுவதற்கு ஏதுவாக முழந்தாளில் நின்று கொள்வாள் ரம்யா. அமுதா பூச்சரத்தின் இருமுனைகளையும் தூங்க விட்டுச் சரத்தை வளைத்து கூந்தலில் சொருகி விடுவாள். ரம்யா பூரிப்புடன் அசைந்து அன்ன நடையுடன் போவதை இவளால் ரசிக்க முடிவ தில்லை. மாறாக, இவளது சிந்தையில், சென்ற மாவீரர் நாளில் அணிவகுத்துச் சென்ற பெண் போராளிகளின் நிமிர்ந்த தோற்றம் அலையென வந்து மோதும்.

“ம்....”

நீண்ட பெருமூச்சொன்று அவளிடமிருந்து வெளிப்பட்டது. அம்மாவின் நிலையை நினைக்க அவளுக்கு வெறுப்பு ஏற்பட்டது. இந்த அம்மா ஏன் இப்படிக் கோழையாக குனித்து போகிறாள்? நியாத்தைக்கூடக் கதைக்க முடியாமல், அந்தத் தோல்விகளை மறைத்துக் கொள்ள எனக்குத் தண்டனை வழங்க முயல்கிறாள், ஏன் இப்படி? அந்த இருண்ட பாதாளத்துக்குள் தன்னையே புதைத்துக் கொள்ள எத்தனிக்கிறாள்.

“இந்தப் பரந்த ஆகாயவெளி, அவளது கண்களுக்குத் தெரிவதில்லையா? ஓ... இந்தப் பரந்த வெளியில் நான் சிறகடித்துப் பறக்கவேண்டும். ஆனால் இந்த வான்பரப்பில் இன்னும் ஆதிக்க வல்லூறுகளின் நடமாட்டம் தெரிகிறதே..... அப்படியானால் நாம் அணிதிரண்டு ஆதிக்கச் சிறையுடைக்க முனைவது தான் ஒரே வழி. அப்போது தான் எதிர் காலத்திலாவது நாம் சுதந்திரமாய்க் கீதமிசைத்து இந்த வான் பரப்பில் வலம் வர முடியும். தீர்மானத்துடன் அமுதா நிமிர்ந்த போது...

யாரோ ஓங்காளித்து வாந்தியெடுக்கும் ஒலி அவளது சிந்தனைத் தொடரைக் கலைத்தது. திடுக்கிட்டவள், உண்மையைப் புரித்து கொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை. “அம்மா” என்ற “இயந்திரம்” மீண்டும் ஒரு தரம் தனது பணியைத் தொடங்கி விட்டதன் பிரதிபலிப்பல்லவா அது.

# பயன்தரு மாமரங்கள்

தமிழீழ வரலாற்றின் முக்கியத்துவம் வாய்ந்த பூநகரிச்சமர் தொடங்கிய மறுநாட்காலை இருளகலா அந்த வேளையில் வாகனம் ஒன்று யாழ்.போதனா வைத்தியசாலையை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது. வாகனத்தின் உள்ளே களத்தில் விழுப்புண் ஏற்ற போராளிகள் முதலுதவி அளிக்கப்பட்ட நிலையில் மேலதிக வைத்திய சேவையை நாடி, கொண்டு செல்லப் படுகின்றனர்.

அவர்களது முகங்களிலோ வேதனையின் சாயல் படர்ந்திருக்கிறது. அது அவர்களது உடலில் ஏற்பட்ட விழுப்புண்கள் தோற்றுவித்த வேதனையல்ல என்பதை அவர்களில் சிலரது வாய்மொழிகள் பறைசாற்றிக் கொண்டிருந்தன. அப்படியானால் அவர்களது வேதனைக்குக் காரணம்? களத்தை விட்டுப் பின்வாங்கிப் போய்க் கொண்டிருக்கிறோமே, எதிரியின் ஆயுதங்களை வாரி அள்ளும் போது கிடைக்கும் அந்த இன்ப ஸ்பரிசம் கிடைக்காமற் போயிற்றே என்ற ஆதங்கம் அவர்களுக்கு அதிக வேதனையைத்தந்து கொண்டிருக்கிறது.

வாகனம் வைத்தியசாலை முன்றலில் நுழைந்ததுதான் தாமதம், அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த அனைவரது ஒத்துழைப்புடனும் துரித கதியில் உயிர்காக்கும் பணி அங்கு தொடர் கிறது. அவசர அவசரமாகச் சத்திர சிகிச்சைக்குரிய

*ஆயத்தங்கள் செய்யப்பட்டு நோயாளர்கள் சத்திர சிகிச்சைக் கூடத்துக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். அங்கே அறுவைச் சிகிச்சை முடிந்ததும் உடனுக்குடன் நோயாளர் தங்கும் பகுதிக்கு மாற்றப்படுகிறார்கள். அப்படி மாற்றப்பட்ட நோயாளர்களில் ஒருவனாய் தாக்குதற் பிரிவு அணி ஒன்றின்பொறுப்பாளனான லியோ, பின் கழுத்தில் சத்திரசிகிச்சை செய்யப்பட்டு மயக்க நிலையில் கிடந்தான். இந்தப்பகுதிக்கு பொறுப்பானவர்கள் அடிக்கடி வந்து அவனது நாடித்துடிப்பு, இரத்த அமுக்கம் முதலியவற்றைப் பரிசீலிக்கிறார்கள். அவனைப் பராமரிப்பதற்கென அருகில் நின்றிருந்த ராஜன் அவனது அங்க அசைவுகளையே கவனித்தவாறிருந்தான்.*

*லியோவின் தலை சிறிது அசைவதைக் கண்ணுற்ற ராஜன் அவனது முகத்தை நோக்கிக் குனிந்தான். அவனது வாயிலிருந்து வார்த்தைகள் ஈனஸ்வரத்தில் வெளிப்பட்டன.*

*“என்ரை எவ்.என்.சி எங்கை”*

*மயக்க நிலையிலும் தனது ஆயுதத்தைப்பற்றியே சிந்தித்திருக்கும் அந்த உன்னத இலட்சியவாதியைக் கண்டு ராஜனது மேனி ஒரு கணம் சிலிர்த்தது. அவனுக்கு ஆறுதல் தரும் நோக்கத்துடன் மெதுவாக அவனது தலையைத் தடவியவன் கூறினான்:*

*“மச்சான் லியோ! உன்ரை எவ்.என்.சியை நான்தான் எடுத்துப் பக்குவமாய் வைச்சிருக்கிறன். உன்ரை கழுத்தில சின்னக்காயம் பட்டுமருந்து கட்டியிருக்கினம். நீ தலையை அசைக்காமல் பேசாமல் படுத்திரு என்ன?”*

*ராஜனின் வார்த்தைகள் லியோவிற்கு எரிச்சலை ஏற்படுத்தியது. மெதுவாகக் கண்களைத் திறந்து சூழலை அவதானித்தவன், தான் வைத்தியசாலைக் கட்டிலில் கிடப்பதை ஒரு நொடியில் புரிந்து கொண்டான்.*

*“சின்னக்காயமெண்டால் மருந்தைக் கட்டிப் போட்டு அடி படவிடாமல் என்னை ஆர் இஞ்சை கொண்டந்தது?”*

*“மச்சான்! நீ மயங்கிப் போனாய் பேந்தென்னெண்டு அடிபடுகிறது?”*

*லியோவின் எண்ணத்தில் சிறிது சிறிதாக முன்னைய நாளில் நடந்த கள நிகழ்வுகள் நிழலாகத் தோன்றி மறைந்தன.*

*“என்ரை பெடியங்கள் எல்லாம் பிரச்சினையில்லாமல் வந்திட்டாங்களே? ஆயுதங்களைக் “கிளியர்” பண்ணிக் கொண்டி*

ருந்தவங்கள். அப்பதான் எனக்குக் காயம் பட்டிருக்கவேணும்"

"ஓ... எல்லாரும் வந்திட்டினம். நீ அலட்டாமல் கொஞ்ச நேரம் படுத்திரு பாப்பம். வைத்தியர் உன்னைப் படுக்கையை விட்டு எழும்பக்கூடாதெண்டுசொன்னவர்" தலையை நிமிர்த்தி எழும்ப முயன்றவனை ராஜன் தனது கைகளினால் அமர்த்திப் பிடித்துக் கொண்டான். கால்களை அசைத்துப் பார்த்த லியோ அவை இயங்க மறுத்த போது ஆத்திரத்துடன்கத்தினான்.

"டேய்! என்ரை காலை ஏன் கட்டி வைச்சிருக்கிறியள்"

தாதி ஒருவர் அருகே வந்தபோது லியோ அமைதியைத் தழுவிக் கொண்டான். அவனது கையில் ஊசி மருந்தை ஏற்றிவிட்டு தாதி அப்பால் போனதும், மீண்டும் லியோவின் புலம்பல் அந்த அறையை அதிரவைத்தது. சிறிது சிறிதாக அவனது புலம்பலின் தொனி குறைந்து சற்று நேரத்தில் அவன் நித்திரையில் மூழ்கிப் போனான்.

***

இரத்மலானை விமானத் தளத்தை நோக்கிப் பதிகிறது ஓர் உலங்கு வானூர்தி. தரையிறங்கிய வானூர்தியை நோக்கிச் சிப்பாய்கள் "ஸ்ரெச்சர்" சகிதம் விரைகிறார்கள். மயங்கிய நிலையில் இருந்த பூநகரிக் கூட்டுப் படைத்தளத்தின் அதிகாரியை "ஸ்ரெச்சர்", சுமந்து வருகிறது. அங்கு தயாராக இருந்த "அம்புலன்ஸ்" வண்டியில் அவரை ஏற்றுகின்றனர். வேறும் சில காயமுற்ற சிப்பாய்களை ஏற்றிக்கொண்டு அந்த வண்டி ஒலி எழுப்பியவாறு மின்னல் வேகத்தில் பறக்கிறது.

முன்னரே கிடைத்த தகவலின்படி சிறீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் மருந்துவர்கள் "அம்புலன்ஸ்" வருகைக்காகக் காத்திருந்தனர். வண்டி வந்ததும் அங்கே துரிதகதியில் கருமங்கள் நடைபெறுகின்றன. அவசர அவசரமாக மருத்துவர்கள் அந்த அதி காரியின் உடல் நிலையைப் பரிசோதித்துவிட்டு சத்திரசிகிச்சைக்கான ஆயத்தங்களில் ஈடுபடுகின்றார்கள்.

நரம்பியல் நிபுணரான வைத்தியர் சிவசங்கரன் வீட்டில் தொலைபேசி மணி கிணுகிணுக்கிறது. தனது ஒரே மகனின் பிறந்த நாள் விருந்தில் களிப்புற்றிருந்த சிவசங்கரன் தொலைபேசியைக் கையிலெடுக்கிறார். கடமையின் அழைப்பு அவரை உசாராக்குகிறது.

"ஐ வில் பி தெயர் இன்பைவ் மினிற்ஸ். ஓ.கே!"

சொல்லியவாறே தொலைபேசியைக் கீழேவைக்கிறார். இத்தனை நேரமும் அவரை அவதானித்துக்கொண்டிருந்த அவரது

மனைவியின் முகம் களையிழந்து போகிறது. தந்தையின் கார்வீட்டின் எல்லையைத் தாண்டிப் போய்க் கொண்டிருப்பதை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்த அவரது மகனை நண்பர்கள் சிலர் குறும்பு பேசி அங்கே கலகலப்பினை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள்.

சிறீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக் கூடத்தில் தொடர்ந்து மூன்று மணித்தியாலங்கள் அறுவைச் சிகிச்சை நடந்து கொண்டிருக்கிறது. அங்கே வைத்தியர் சிவா முன்னின்று நெறிப்படுத்திச் சத்திர சிகிச்சையைக் கையாளுகின்றார்.

நீண்ட நேரப் பகீரதப் பிரயத்தனத்தின் பின்னர், வைத்தியர் சிவாவின் உதவியாளர்கள் அந்த அதிகாரியின் மண்டையை மூடிக் கட்டுப் போடுகிறார்கள். வைத்தியர் சிவாவின் முகத்தில் நம்பிக்கை யின் ஒளி படருகிறது. அவரது வாய் முணுமுணுக்கிறது.

"கிரேட்சக்சஸ்"

கைகளைத் தண்ணீரில் கழுவிக் கொண்டவர் கையுறைகளைக் கழற்றிவிட்டுத் துடைத்துக் கொள்ளுகிறார். அவரை நோக்கி நீண்ட கைகளை பற்றிக் குலுக்கிறார்.

"வெல்டன்சிவா"

"மார்வலஸ்விக்ரறி"

"யூஆர்கிரேட்"

பாராட்டுக்கள் அவரை நெகிழ வைக்கின்றன. புகழ்ச்சியினால் ஏற்பட்ட பரவசம் அவரை மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்க வைக்கிறது.

***

யாழ் போதனா வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவு. கிளினிக் நடந்து கொண்டிருக்கிறது. இங்கு வரிசையாக போடப் பட்டிருந்த வாங்கு ஒன்றில் சிவசம்பு நெருங்கியவாறு அமர்ந்திருக் கிறார். இரத்த அழுத்த நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் அவரைப் பற்றிய மருத்துவக் குறிப்புக்கள் அடங்கிய அப்பியாசக் கொப்பி ஒன்று அவரது கையில் இருக்கிறது. ஒவ்வொருவராக நோயாளர்கள் வைத்தியரின் அறைக்குப் போய்த் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். தனது முறை வரும்வரையும் அவர் அங்கு காத்திருக்கிறார். அவரது பார்வை சட்டெனத் திரும்புகிறது.

சக்கர நாற்காலியில் வைத்து ஒரு இளைஞனைத் தள்ளிக்

கொண்டு வருகின்றார்கள். அந்த இளைஞனையே வைத்த கண் வாங்காது அவர் பார்த்துக் கொண்டிருந்தார். நல்ல வாட்ட சாட்டமான முகம் அரும்பு மீசை வேறு. திடகாத்திரமான தேகத்தையுடைய அவனது கால்களை ஒரு தரம் உன்னிப்பாக ஆராய்ந்தார். அதில் எதுவிதமான ஊனமுமிருப்பதாகத் தெரியவில்லை. அப்படியானால்... அவரது மனம் அவனைப் பற்றிய தகவல்களை அறியத் துடிக்கிறது.

அவரது ஆவலைப் புரிந்து கொண்டவராய் அவருக்கருகில் இருந்தவர் விளக்கினார்.

"எனக்கு உந்தப் பெடியனைக் கனநாளாய்த் தெரியும் பாருங்கோ. மட்டக்களப்புப் பெடியன். பூநகரிச் சண்டையில ஒரு எறிகணைத்துண்டு பெடியன்ரை பிடரியில் பட்டதாம். அதுக்குப் பிறகுதான் பிள்ளையின்ரை கால் இயங்காமல் போயிட்டுதாம். ம்... நல்ல சூட்டிகையான பெடியன். கொஞ்ச நேரம் ஒரு இடத்தில நிக்கமாட்டான். ஓடிஓடித்திரிவான்.

சொன்னவர் தனது துயரத்தை ஒரு நீண்ட பெருமூச்சாக வெளிப்படுத்தினார்.

"அப்பிடியெண்டால்... கால் இனி இயங்காதோ"

விபரம் புரியாதவராய் சிவசம்பு அவரிடம் கேள்வி தொடுத்தார்.

"இஞ்சை நரம்பியல் நிபுணர் ஒருத்தரும் இல்லைப் பாருங்கோ. இருந்திருந்தால் ஒருவேளை உடனேயே "ஒப்பரேற்" பண்ணி ஏதும் செய்திருக்கலாமென்று நினைக்கிறன்"

நரம்பியல் நிபுணர் என்ற வார்த்தை அவரையறியாமலே அவரது இதயத்தில் புகுந்து அவரை ஒரு உலுப்பு உலுப்பிலிட்டது. அவர் தன்னை ஒருகணம் சுதாகரித்துக் கொள்ளமுற்பட்டபோது...

கீச்! கீச்!

ஒலி எழுப்பியவாறு சக்கர நாற்காலியை உருட்டிக்கொண்டு போனார்கள். அதே இளைஞன் சிரித்தவாறே தன்னுடன் கூட வருபவரிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். அவனது முகத்தை ஊடுருவி அதில் எதையோ தேட முற்பட்டார் சிவசம்பு. அதில் எது வித சலனத்தையும் அவரால் அவதானிக்க முடியவில்லை. அவனது பார்வையில் ஒரு தீட்சண்யம் தோன்றுவதாக அவருக்குப்பட்டது. அவனது உருவம் போய் மறையும் வரை அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

*மாலை வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பிய பின் சிவசம்புவின் மனம் அன்று "கிளினிக்கில்" சந்தித்த அந்த இளை ஞனைப் பற்றிய சிந்தனையில் சிக்கித்தவித்துக் கொண்டிருந்தது. அவரது மனப் புழுக்கத்திற்கேற்ப உடலும் வெயிலின் புழுக்கத்தினால் தவித்தபோது, அவர் சாய்வு நாற்காலியை எடுத்து வந்து மாமரத்தின் கீழ் போட்டு, அதில் சாய்ந்து கொண்டார். அவரது சிந்தனைக் குதிரை தனது வாழ்க்கையின் வாலிபப் பருவத்தை இரைமீட்டு அசை போடத்துவங்கியது.*

*அப்போது அவருக்கு அந்த இளைஞனை ஒத்த வயதிருக்கும். அவருக்குத் தான், தனது எதிர்கால வாழ்க்கையைப் பற்றி எத்தனை இதமான கனவுகள். தன் முறைப்பெண்ணான சிவகாமியை மணந்து கொண்டதும், எட்டு ஆண்டுகளாகியும் குழந்தைப் பேறில்லாமை யால் மனம் நொந்து விரதங்கள் பல அனுட்டித்து, அதன் பலனாக மகவொன்று பிறந்ததும், அந்தக் குழந்தைக்குச் சிவனது நாமத்தையே "சிவசங்கரன்" என்று சூட்டியதும் குழந்தையின் வளர்ச்சியிலும், மழலை மொழியிலும் தானும் சிவகாமியும் மெய்மறந்து நின்ற நாட்களும் அவனை வளர்த்து ஒரு வைத்தியனாகக் கண்டு இன்புற்றது மாகக் காலத்தின் சுழற்சியில் இன்று தானும் சிவகாமியும் தனித்து விடப்பட்டு விட்டதாக ஒரு பிரமை அவருள் தோன்றியபோது...*

*"தொப்"*

*சத்தங் கேட்டுத் திரும்பிப் பார்த்தார் அவர். அவரது வளர்ப்பு நாயான பப்பி குரைத்துக் கொண்டே வேலியருகில் ஓடி, வேலிக்குக் கீழால் அடுத்த வீட்டைப் பார்த்து உறுமியது. கீழே விழுந்த மாம்பழத்தை எடுப்பதற்காக வேலிக்கருகில் வந்த அடுத்த வீட்டுக்குழந்தை நாய் உறுமியதைக் கண்டு பயந்து "அம்மா!" என்று வீரிட்டலறியவாறு ஓடியது.*

*இதனைக் கண்ணுற்ற சிவசம்புவின் மனத்தினுள் ஏதோ ஒன்று உறைத்தது. தான் பாடுபட்டு வளர்த்துவிட்டிருந்த அந்த மாமரம் தனது கிளைகளில் பெரும்பகுதியை அடுத்த வளவிற்குள் பரப்பி விட்டிருந்ததை முதன்முறையாக அவர் அவதானித்தார். வெளிச்ச வசதியைத் தேடி அடுத்த வளவிற்குள் கிளைகளைப் பரப்பியது மல்லாமல், பயனையும் அதுதான் வேரூன்றி இருந்த மண்ணைமறந்து அயலவர்களுக்கே அளித்துக் கொண்டிருப்பதை அவரது உணர்வு ஜீரணிக்க மறுத்த போது...*

*இருதயத்தில் ஏற்பட்ட வலியினால் துடித்துப் போய்த் துவண்டு சரிந்தார் அவர்.*

# சுய நிர்ணயம்

*அந்த அதிகாலை வேளையில் வான் பரப்பை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த கரு மேகங்கள் மெல்லெனெ விலகிப் போய்க் கொண்டிருந்தன. கருமேகங்கள் விலகியதால் களிப்புற்ற கதிரவன், பூமாதேவியைத் தன் ஒளிக்கதிர்களால் தழுவிக் கொண்டிருந்தான்.*

*கதிரவனின் வரவு கண்டு காகம் ஒன்று தன் இருப்பிடம் விட்டுக் கிளம்பி, அந்த அடர்ந்த வேப்பமரத்துக் கிளையொன்றில் வந்தமர்ந்தவாறு தன்னினத்திற்கு அழைப்பு விடுத்தது.*

*"கா! கா!! கா! கா!!"*

*அந்த மரத்தில் பழுத்திருந்த வேப்பம் பழங்களை நோட்டமிட்டவாறே தனியாய் அவற்றைப் புசித்துப் பசியாற விரும்பாமல், தன்னினத்தைக் கூவி அழைத்துக் கொண்டிருந்த அந்தக் காகத்தின் குரல் கேட்டு, அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த முத்துவேலர் துயிலெழுந்தார். முதுமையால் நலிவுற்றிருந்த அவர் தனக்கு உறுதுணையாயிருந்த ஊன்று கோலைக் கைகளால் தடவி எடுத்துக் கொண்டார். ஊன்றுகோல் கையில் கிடைத்ததும் உஷாரடைந்தவராய்ப் பின்புறம் நோக்கித் தனது நடையைத் துரிதப்படுத்தினார். அவரது காதுகளில் தர்சன் சினத்துடன் கூறியவார்த்தைகள் வந்து விழுந்தன.*

*"சே! இந்தவேப்பமரத்தை அடியோடை தறிக்க வேணும். விடிஞ்சிட்டால் போதும்,*

காகங்கள் வந்து அதிலை இருந்து கொண்டு கத்தத் துவங்கினால், இஞ்சை படிச்சாலும் ஒண்டும் ஏறாது"

கல்விப் பொது சாதாரணதர பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் அவரது பேரனான தர்சனுக்குத் தான் மனனம் செய்த வரிகள் மனத்தில் பதிய மறுத்ததால் ஏற்பட்ட எரிச்சல் வார்த்தைகளாய் வெளிவந்தன.

முத்துவேலருக்கு "சுருக்"கென்றது. பேரன் ஒருவேளை சொன்னதை செயலிலும் காட்டி விடுவானோ என்றொரு சந்தேகம் அவருள் முளைத்தது. தனது இளமைப்பருவத்தை ஒரு தரம் நினைவில் மீட்டுக் கொண்டார். அப்போது அவருக்கு தர்சனின் வயது தானிருக்கும். இந்த வளவு அந்நாளில் வெறும் கட்டாந்தரையாக இருந்தது. அவரது தந்தை இந்த வளவிற்குள் ஆட்டுப்பட்டி அடைந்திருந்தார். எதேச்சையாக அந்த வளவிற்குள் ஒரு வேப்பங்கன்று முளைத்து விட்டது. அதனைக் கண்ணுற்ற முத்துவேலர் அந்தக் கன்றினைச் சுற்றிக்கூடொன்று அமைத்து விட்டார். அது வளர்ந்து பெரிய கன்றாக முளைவிட்டபோது தான் அவரது தந்தையாருக்கு அந்த வளவிற்குள் வீடுகட்டிக் குடியேற வேண்டும் என்ற எண்ணமே ஏற்பட்டது. அந்த வேப்பங்கன்றின் மீது முத்துவேலருக்கு மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டதில் வியப்பில்லைத் தான். தன்னை ஒத்த ஒரு ஜீவனாகவே அதைக் கருதி வந்தவருக்குப் பேரனின் வார்த்தைகள் முள்ளாய்க் குத்தி வேதனையைத் தந்தது இளமைப் பருவத்தில் முரடனாகவே வாழ்ந்து பழக்கப்பட்ட அவருக்கு அவ்வூர் மக்கள் "முரடன் முத்து" என்று நாமம் சூட்டியிருந்தனர். தன்னுடைய முரட்டுப் போக்கு பேரனிடமும் இருக்குமோ? என ஒரு கணம் யோசித்தவரது மனக்கண் முன் தர்சன் வேம்பைத் தறிக்கும் காட்சி தோன்றி மறைந்தது. மறுகணமே, தன்னச் சாந்தப் படுத்திக் கொள்ள முனைந்தார்.

"நான் இப்பவோ, பின்னையோ போறதுக் கெண்டு இருக்கிறன். நான் ஏன் உதைப்பற்றி யோசிச்சு வீணாய்க் கவலைப்படுறன்"

அவரது முதுமை அனுபவம் தோற்றுவித்திருந்த பொறுமை உணர்வு அவருக்குக் கைகொடுத்தது மௌனமாக முகத்தைக் கழுவிக் கொண்டு வந்தவர். மருமகள் நீட்டிய கோப்பியை வாங்கிப் பருகத் தொடங்கினார்.

அறைக்குள்ளிருந்து மருமகளின் குரல் அவரது காதுகளில் தெளிவாக விழுந்தது,

"இஞ்சாருங்கோப்பா உந்தப் பக்கத்து வீட்டிற்குப் புதுசாய்க்

குடி வந்திருக்கிற சனத்தால நெடுகக் கரைச்சலாய் கிடக்குது. எங்கடை வேலியில கிடக்கிற குழைகளை யெல்லாம் உடைக்குதுகள் எண்டு பாத்தால் நேற்றைக்கு வந்து எங்கடை வளவுக்கை கிடந்த முருங்கைக் காய்களையும் பிடுங்கிக் கொண்டு போட்டுதுகள். உப்பிடியே விட்டால், அதுகள் எங்கடை வளவுக்குள்ளையே வந்துகுடி இருந்திடுங்கள் போல கிடக்கு"

"ஓ!... நீர் சொல்லுறது சரிதான். உதைநெடுக உப்பிடியே விடுறது பிழை. பொறும் இண்டைக்கு நான் போய் நல்லாய் (Warn) வோன் பண்ணிப் போட்டு வாறன். எங்கடை வேலியைத் தாண்டி இஞ்சாலை ஒரு சோலிக்கும் வரக் கூடாதெண்டு"

"ஓம் அப்பா. நீங்கள் ஒருக்கால் சொன்னாத்தான் அவை கொஞ்சம் பயப்பிடுவினம் நான் ஏதும் வாய்திறக்க முந்திச் சண்டைக்கு வருதுகள்"

"பொறும் வாறன் வேலியால கூப்பிட்டுக் கதைப்பம்" என்று சொல்லிக் கொண்டு புறப்பட்ட மகனை முத்துவேலர் தடுத்து நிறுத்தினார்.

"தம்பி உந்த அற்பவிசயத்தைப் பெரிசு படுத்தாமல் விட்டுத் தள்ளு. இப்ப நீ போய் அவையைக் கூப்பிட்டுக் கேக்க அவை தாங்கள் பிடுங்கயில்லை எண்டு சொல்லிச் சண்டைக்கு வர, எல்லாம் பெரிய சோலியாய்ப்போயிடும். எதுக்கும் கொஞ்சம் பொறுத்திருந்து பாப்பம்"

தந்தையின் கூற்றில் நியாயமிருப்பதாகச் சுந்தரத்திற்குக் தோன்றியது. அத்துடன் தந்தையின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு வளர்ந்திட்ட அவனால், அவரது சொல்லைத் தட்ட முடியவில்லை. அத்துடன் அவ்விடயத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, வேலைக்குப் புறப்பட்டுவிட்டான்.

சுந்தரத்தின் மீது அவனது மனைவி சரசுவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது அத்துடன் அவனைத் தடுத்து நிறுத்திய மாமனார் மீதும் சினம் பொங்கியது. எனினும் பொறுமையைக் கடைப்பிடித்து அமைதியைத் தழுவிக் கொண்டாள். பக்கத்து வீட்டுக்காரர்களின் அத்துமீறலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்ற எண்ணம் அவளையறியாமலே அவளது மனதில் வேரூன்றிக் கொண்டது.

அன்று மாலை பொழுது கருகிக் கொண்டிருந்தவேளை, அப்போது தான் ரியூசனிலிருந்து தர்சன் வீட்டிக்குத் திரும்பியிருந் தான். களைத்துப்போய் வந்திருக்கும் மகனுக்கு சரசு தேநீர்

தயாரித்துக் கொண்டிருந்தாள்.

டொக்! டொக்!

வீட்டின் பின் புறமாக இருந்து வந்தது. அந்தச் சத்தம். திடுக் கிட்ட சரசு உசாரடைந்தவளாய் பின் பக்கம் விரைந்தாள். அங்கு... ஆளரவத்தையே காணவில்லை. சுற்று முற்றும் ஒரு தரம் பார்த்து விட்டுப் பக்கத்து வீட்டு வேலியைப் பார்வையினால் துழாவினாள். வேலியில் சில கதியால்கள் வெட்டப்பட்டு பாதையாக அதை யாரோ உபயோகித்த அடையாளம் அவள் கண்ணில் பட்டது.

அவ்விடத்திலேயே சிறிது நேரம் தாமதித்தவளது காதுகளில் மீண்டும் வெட்டும் சத்தம் கேட்டது. வேப்ப மரத்தை அண்ணாந்து பார்த்தாள். மரத்திலிருந்து ஒருவன் கத்தியும் கையுமாகக் கொப்பு களை வெட்டிக் கொண்டிருந்தான்.

சரசுவுக்கு இப்போது ஆத்திரத்தினால் நெஞ்சு படபடத்தது. "எங்கட வளவுக்குள்ள வந்து மரத்தில் ஏறி இருந்து கொண்டு குழை வெட்ட எவ்வளவு துணிவிருக்க வேணும்"

மனதுக்குள் கறுவிக் கொண்டே போய் மாமனாரிடம் முறையிட்டாள்.

"பொறு புள்ள நான் போய் அவனிட்டை நயமாக் கேக்கிறன்"

கைத்தடியை ஊன்றியவாறு கிழவர் புறப்பட்டார். வேம்பின் கீழே போய் நின்று கொண்டவர், மரத்தில் இருந்தவனைப் பார்த்து,

"தம்பி! ஏன்ரா மேனை சொல்லாமல் கொள்ளாமல் வந்து மரத்தில ஏறினநீ? நீ செய்யிறவேலை சரியே?

முத்துவேலரின் சமாதான வார்த்தைகளை அலட்சியப் படுத்தினான், அந்த அடாவடித்தனத்துக்குப் பேர் போன இளைஞன்.

"என்ரை வளவுக்கை வாற கொப்புக்களைத்தான் நான் வெட்டுறன். நீ உன்ரை வேலையைப் பார் கிழவா"

முத்துவேலருக்கு இப்போது என்ன செய்வதென்று புரிய வில்லை. அவரது மனதில் பலவிதமான எண்ணங்கள் ஒரே சமயத்தில் தோன்றியஅந்தக் கணத்தில்... அவரை உரசிக் கொண்டு முன்னால் போய்க் கொண்டிருந்தான் தர்சன். அவனது கையில் கோடரி,

முத்துவேலருக்கு நிலைமை புரியச் சில கணங்கள் சென்றன. அவருக்குத் தலையை விறைத்துக் கொண்டு வந்தது கால்கள் நடுங்கத் தொடங்கின. கைத்தடியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்.

“இந்தப் பெடியன் காலையிலும் சொல்லிக் கொண்டிருந்த வன், உந்த வேம்பை அடியோட தறிக்க வேணுமெண்டு ஒரு வேளை தறிச்சு விழுத்தப் பொறானோ?”

வேம்பைத் தறிப்பதென்பது அவருக்குத் தன்னையே புதை குழியில் தள்ளவிடுவதுபோன்றதொரு வேதனையை நெஞ்சில் தோற்றுவிக்கத் தட்டுத் தடுமாறிக் கைத்தடியை ஊன்றிக் கொண்டே போய் வேம்பின் அடி மரத்தில் சாய்ந்து கொண்டார்.

எவருக்கும் அடங்காத முரட்டுக் காளையாக கையில் கோடரி யுடன் தர்சன் அங்கு நின்று கொண்டிருந்தான். அடங்காத சினத் துடன் அவனது வாயிலிருந்து வார்த்தைகள் புறப்பட்டன.

“என்ன துணிச்சல் இருந்தால் எங்கட வளவுக்கை காலடி எடுத்து வைத்திருப்பாய்? மரியாதையாய் வளவை விட்டு வெளி யாலை போ. அல்லது வீண் பிரச்சினை நடக்கும்”

முத்துவேலர் திகைத்து நின்றார், “என்ன! பதினான்கு வயதுப் பாலகனுக்கு எங்கிருந்து இவ்வளவு துணிச்சல் வந்தது, இது தான் தலைமுறை மாற்றமோ?” அவரது திகைப்பு அடங்க முன்பே இன்னொரு காரியம் அங்கு நடந்தது.

மரத்திலிருந்து குதித்து இறங்கிய பக்கத்து வீட்டுக்காரன் இரண்டே எட்டில் அவர்களது வளவை விட்டு வெளியேறியது மல்லாமல் தான் வெட்டிய கதியால்களையும் எடுத்து ஊன்றி வேலியையும் சீராக்கி விட்டுத் திரும்பிப் பார்க்காமல் நடந்து போய் விட்டான்.

தன்னை நோக்கி வந்த தாத்தாவிடம் தர்சன் சொன்னான். “தாத்தா! நீங்கள் தானே அடிக்கடி சொல்லுவியள், முள்ளை முள்ளால தான் எடுக்க வேணுமெண்டு”

முத்துவேலர் தனது பேரனை இறுக அணைத்துக் கொண்டார்.

“லொள்!

லொள்!!”

அவர்களது வளர்ப்பு நாய்க் குட்டியான பப்பியின் குரல் கேட்டுத் தாத்தாவும், பேரனும் ஒரே சமயத்தில் திரும்பிப் பார்த்தனர். கதியால்களின் இடைவெளிக்குள்ளால் அவர்களது வளவுக்குள் அத்துமீறிப் பிரவேசிக்க முயன்ற பெரிய நாயொன்றைப் பப்பி பாய்ந்து போய்க் கலைத்து விரட்டி விட்டு கர்!... கர்!... என்ற உறுமலுடன் தனது சுயநிர்ணத்தை நிலை நிறுத்திக் கொண்டிருந்தது.

# கோடாரி காம்பு

ஒவ்வொரு நாட்களையும் போலவே அன்றைய காலையும் விடிந்தது. நீண்ட இடைவெளியின் பின்னர் மழை தூறல்போடத் தொடங்கியிருந்தது. கோடைவெயிலால் காய்ந்து போன நிலம் குளிர்ந்து போனதால் ஈரமண்ணின் வாசனை படுக்கையிலிருந்த ஜீவாவின் மூக்கை நெருடியது.

"இப்ப என்ன நேரம் இருக்கும்" என்று எண்ணியவாறே ஜீவா படுக்கையை விட்டு எழுந்தான். வழமைபோல் காலைக்கடன்களை முடித்து, உணவையும் முடித்துக்கொண்டு தனது கடமைக்குப் புறப்பட ஆயத்தமானான். ஏதோ ஒன்றை தவறவிட்டதாக அவனது புலன்கள் உணர்த்தவே, மளமளவென்று விடுதிக்குள் சென்று சிகரெட் பக்கெற் ஒன்றை எடுத்து பொக்கற்றுக்குள் திணித்துக் கொண்டான். காற் சட்டை பைக்குள் கையைநுளைத்து துழாவியவன் அங்கே "லைட்டர்" இருப்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டான். தனது கடமைக்குரிய "பொயின்ரை" நோக்கி நடந்தான்.

நேரம் சரியாக ஒன்பதுமணி இனி தடை முகாமிற்குள் வடக்கே இருந்து வரும் மக்கள் பிரவேசிக்கும் நேரம் நெருங்கிவிட்டது. சாக்கு மூடைகளால் அடுக்கப்பட்டிருந்த பொயின்ருக் குள் கடமையிலிருந்த சிறீலங்காச்சிப்பாய் இவனைக்கண்டதும் என்ன ஐசே! இம்புட்டு

நேரங்! என்று கூறி முகம்மலர வரவேற்றான். தனக்குப் பேச்சுத் துணைக்கு ஆள் கிடைத்துவிட்ட திருப்தி அவனுக்கு, பதிலுக்கு ஒரு புன்சிரிப்பை முகத்தில் தவழவிட்டான் ஜீவா.

சாரிசாரியாக மக்கள் தத்தம் பொதிகளுடன் வரிசைக்கிரம மாக நுழைந்து கொண்டிருந்தார்கள். ஜீவா, சாக்குமூடைகளின் மத்தியிலிருந்த துவாரத்தினூடாக பார்வையைச் செலுத்தினான். ஒரு குறிப்பிட்ட தொகையினர் உள்நுழைந்ததும் மிகுதிப்பேர் வெளி யிலேயே தடுத்து நிறுத்தப்பட்டனர். உள்ளே வந்தவர்களின் பொதி கள் ஒவ்வொன்றாக பரிசோதிக்கப்பட்டன. பரிசீலித்து முடிந்ததுதான் தாமதம், சிப்பாய்கள் மக்களை "போ! போ!" என்று விரட்டத் தொடங்கினர். மக்கள் தத்தம் உடைமைகளை அவசர அவசரமாக பொதிகளுள் திணித்துக்கொண்டு போயினர்.

அடுத்து மறுதொகுதியினர் தடைமுகாம் பகுதியினுள் அழைக்கப்பட்டனர். ஜீவா ஒவ்வொருவராக துவாரத்தினூடாக அவதானித்துக் கொண்டிருந்தான். அவற்றுள் நீலநிற ரீசேட் அணிந்த ஒருவனைக்கண்டதும் அவனது மூளையில் பளிச்சென்றொரு மின்னல் தாக்கியது. மறுகணம் அவனது கையிலிருந்த வோக்கி இயங்கியது "புளூ கலர் ரீசேட்" பிளக் ரவுசர், அங்கே! ரவலிங் பாக்குடன் வரிசையில் போய்க்கொண்டிருந்த மனோகரனை இராணுவச்சிப்பாய் ஒருவன் அடோ! நில்லு என்று தடுத்து வைத்தான். படபடக்கும் இதயத்துடன் நின்றுகொண்டிருந்தான். மனோகரன், பயம் அவனை முற்றாக ஆட்கொள்ள மெதுவாகத் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தான். அவனது மேனி எங்கும் நடுங்கத் தொடங்கியிருந்தது. "என்ன அடோ முறைச்சுப்பாக்கிறது போடா அங்கே" ஒரு உலுக்கு உலுக்கி அவனைப்பிடித்துத்தள்ளி விட்டான், அந்தச் சிங்களச் சிப்பாய், விழப்போனவன் ஒருவாறு சமாளித்துக் கொண்ட பொழுது மற்றொருவன் வந்து அவனை இழுத்துக்கொண்டு உள்ளே போனான். அங்கு நான்கைந்து சிப்பாய்கள் கண்கள் சிவக்க நிறை போதையில் அமர்ந்திருந்தனர்.

மனோகரனைக் கண்டதும் ஒருவன் மிக உற்சாகமாக ஓடிவந்து "அடோ கொட்டியா" என்று சொல்லித்தன் கையில் வைத்திருந்த துப்பாக்கியின் பட்டினால் அவனைத்தாக்கினான். இன்னொருவன் வந்து அவனது தோளிலிருந்த பாக்கை பிடுங்கி கீழே எறிந்தான் பாக் போய் ஒரு மூலையில் விழுந்தது. "ஐயோ! நான் கொட்டியா இல்லை என்னை அடிக்காதையுங்கோ"

கெஞ்சிமண்டாடி அபயக்குரல் எழுப்பினான் மனோகரன். அதற்குள் இருந்த அத்தனை காமுகர்களும் ஒன்று திரண்டு அவனை அடித்தும், உதைத்தும் துன்புறுத்தினர். மனோகரன் மயங்கித் துவண்டு விழுந்தான் அவனது உதட்டில் இருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. தனதுகடமை நேரம் முடிந்ததும் ஜீவா அவ்விடத் திற்கு வந்தான். மயங்கிய நிலையில் மனோகரனின் வாய் "தண்ணீ தண்ணீ" என முணுமுணுத்தது, தாய்மொழியில் அரற்றிய அவன்மீது எள்ளளவும் இரக்கம் பிறக்கவில்லை. மாறாக அவனைப்பழிவாங்கி விட்டோம் என்ற திருப்தியுடன் அவனை எட்டி உதைத்துவிட்டுப் போனான்.

"டேய்! மனோகரா நீ சந்தியிலை வைச்சு என்ரை மரி யாதையை வாங்கினதுக்குப் பழிவாங்கிவிட்டன்" பழிவாங்கிவிட்ட திருப்தியுடன் வார்த்தைகள் ஜீவாவின் வாயிலிருந்து புறப்பட்டன. அன்று இரவு ஆழ்ந்த உறக்கத்தில் இனிமையான கனவொன்றில் மூழ்கியிருந்த ஜீவாவை சிப்பாய் ஒருவன் தட்டியெழுப்பினான்.

"ஐசே அந்த ஆளுகுளோஸ்", நிம்மள் போயி புதைச் சிட்டுவாரது தானே"

சர்வசாதாரணமாகச் சொன்னான் அவன். ஜீவாவுக்கும் அச்செய்தி ஒன்றும் வியப்பைத் தரவில்லை. இவையெல்லாம் அங்கு சாதாரண விடயங்களே நேரத்தைப் பார்த்தான் சரியாக 2.35, விடிவதற்கிடையில் கிடங்குவெட்டிப் புதைத்துவிட வேண்டுமென்ற அவசரத்துடன் தனது சகதோழர்களான பாபுவையும், முரளியையும் எழுப்பினான்.

அதிகாலை நேரம் ஐந்துமணியாவதற்கு முன் கச்சிதமாகத் தங்கள் வேலையை முடித்துவிட்டு விடுதிக்குத் திரும்பினர் ஜீவா குழுவினர். ஜீவாவின் கைவிரலில் புதிதாக ஒரு மோதிரம் "கே" என்ற எழுத்து அதில் பொறிக்கப்பட்டிருந்தது. பாபுவின் இடதுகை மணிக்கட்டில் ஒரு "சீக்கோ"

மீண்டும் படுக்கையில் விழுந்தபோது ஜீவாவின் மனதில் ஏதோ இனம்புரியாத நெருடல். அவனது மனச்சாட்சி விழிப்புற்று அவனை உலுப்பத்தொடங்கியது. ஜீவா எழுந்து வெளியே வந்தான் "சிகரெட்" ஒன்றை எடுத்து பற்ற வைத்துக்கொண்டவன், படியில் அமர்ந்துகொண்டான். சிகரெட்டின்புகையால் தனது மனச்சாட்சி எழுப்பும் குரலை அமுக்கிவிடலாம் என்று நினைத்தானோ என்னவோ புகையை உள்ளிழுத்து சிறிது நேரம் தங்க வைத்து பின் இரு

நாசித்துவாரங்களாலும் வெளிவிட்டுக்கொண்டிருந்தான். அவனது சிந்தனை அலைகள் அவனது கடந்தகால வாழ்க்கையில் நடந்த சில சம்பவங்களை நோக்கிப் பாய்ந்தன.

ஜீவா படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுச் சிறிது ஹாயாக இருந்த நாட்கள் அவை. அந்த நாட்கள்தான் எவ்வளவு இனிமையானவை, மாலை ஐந்து மணியானதும் அவனும் சில நண்பர்களுமாக வாசிகசாலை அமைந்திருக்கும் முச்சந்தியில் கூடு வார்கள். வீதியால் போவோர் வருவோரைப் பார்த்துக் கிண்டலாக எதும் சொல்லிக்கொள்வார்கள், மாலை ஆறுமணியாகியதும் அருகிலிருந்த "டியூட்டறியில்" பயிலும் மாணவர்கள் அந்தச்சந்தியைக் கடந்துபோவது வழக்கம். சைக்கிள்களில் போகிறவர்கள் நேரத்துடன் போய்விடுவார்கள் இவர்கள் போனபின்னர்தான் சிலமாணவிகள் நடந்து போய்க்கொண்டிருப்பார்கள். சந்தியை அவர்கள் அண்மித்த தும், விசில் அடிப்பதில் தனித்துவம் வாய்ந்த ஜீவா முதலில் துவக்கி வைப்பான். மற்றவன் ஏதும் கேலியாய் கதைக்க எல்லோருமே சேர்ந்து "கொல்" என்று சிரிப்பார்கள். இப்படியே நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

மனோகரன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் "எஞ்சினி யரிங்" படித்துக்கொண்டிருந்தான்.

விடுமுறையில் ஊருக்கு வந்திருந்தான். தங்களுக்குத் தினமும் ஜீவா குழுவினர் செய்து வரும் சேட்டைகளை, அந்த மாணவிகளில் ஒருத்தியான ராதா, தனது அண்ணாவிடம் முறையிட்டாள்.

இதனைக்கேட்டு ஆத்திரம் அடைந்த மனோகரன் தனது நண்பர்கள் சிலரையும் சேர்த்துக்கொண்டான். ஜீவா குழுவினரை கையும் மெய்யுமாகப் பிடித்து நல்ல பாடம் புகட்டத் திட்ட மிட்டான்.

அன்று மாலை வழமை போலவே எல்லாம் நடந்து கொண்டிருந்தன. "டியூட்டறி முடிந்து மாணவர்கள் சைக்கிள்களில் முன்னால் போய் விட்டனர். அவர்கள் பின்னால் மாணவிகள் வந்து கொண்டிருந்தனர்.

வாசிகசாலைக்குள் பெரியஅமர்க்களம் செய்து கொண்டிருந் தனர் ஜீவா குழுவினர். மாணவிகளைக்கண்டதும் ஜீவா பாய்ந்து முன்னால் வந்து, தன்னிரு கைகளின் ஆட்காட்டி விரல்களையும் வாய்க்குள் வைத்து நைசாக விசில் அடித்தான்.

"ஊய்ங்! ஊய்ங்!"

வாசிகசாலைக் கட்டிடத்திற்குப் பின்னால் மறைந்து நின்ற மனோகரன் ஓடிவந்து ஒரே தாவலில் எட்டிப்பிடித்தான். ஜீவா அணிந்திருந்த சேட்டின் ஒருபகுதி மனோகரனின் கையோடு வந்து விட்டது. மனோகரன் மாறி மாறி அவனது முகத்தில் அறைந்தான். அரவங்கேட்டு பெரிய கூட்டமே அங்கு கூடிவிட்டது. கிழிந்த சேட்டுடன் தலை குனிந்து நின்றான் ஜீவா. இந்த நிகழ்வு அவனது மனதில் ஆழமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது.

அதன் விளைவு - இன்றைய நிகழ்வுகள் யாவும் சங்கிலித் தொடராய் - அவனது எண்ண அலைகளில் மோதி மறைந்தது.

“ம்”

நீண்ட பெருமூச்சொன்று அவனது அடி நெஞ்சிலிருந்து வெளிப்பட்டது. “பழிக்குப்பழி” சொல்லிக் கொண்டவன் பற்களை நறநறவெனக் கடித்தான்.

“என்ர மானத்தை வாங்கிய மனோகரன் எங்கை! மண்ணுக்கை தான் நின்மதியாய்க் கிடக்கட்டும். நானும் நின்மதியாய் கிடப்ப மெண்டால் நித்திரை வருகுதில்லையே” மீண்டும் ஒரு சிகரட்டை எடுத்து பற்ற வைத்தான். புகையை நன்கு உள்ளிழுத்து ஊதித் தள்ளினான் வளையங்களாகப் போய்க் கலைந்துபோகும் புகையை உற்று நோக்கியவாறே அமர்ந்திருந்தான் ஜீவா,

அன்றைய கடமை நேரம் அவன் பயணிகளை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த போதும், அவனது புலன் அவர்கள் மீது செல்லவில்லை. ஒருவாறு கடமையை முடித்துக்கொண்டு விடுதிக்குத் திரும்பும் போது அவனுக்கு நேற்றைய நினைவுகள் தலை தூக்கவே மனோகரன் மயங்கிக்கிடந்த அறையை ஒருமுறை எட்டிப்பார்த்தான். அங்கே மனோகரனது ரவலிங்பாக் அநாதரவாகக் கிடந்தது. என்ன நினைத்தானோ! ஜீவா குவிந்து அந்த பாக்கை எடுத்துக் கொண்டு தனது விடுதியை நோக்கி நடந்தான்.

பாக்கைத் திறந்து ஒவ்வொன்றாக ஆராய்ந்தான் ஜீவா, புத்தம் புதிய ரீசேட் ஒன்று தட்டுப்பட்டது. அதை எடுத்து ஒரு பக்கம் வைத்துக் கொண்டு மிகுதியை ஆராயத் தொடங்கினான். அதற்குள் வடிவாக பாக்பண்ணிய ஒரு மிக்சர் பாசல் இருந்தது. அவனுக்குத் திடீரென்று அம்மாவின் ஞாபகம் வந்தது. அம்மாவும் இப்படித்தான் மிக்சர் பைக்பண்ணி கொழும்பில் இருக்கும் மாமாவுக்கு குடுத்து விடுகிறவ, பார்சலைப்பிரித்து கொஞ்சத்தை கையில் கொட்டி வாய்க்குள் போட்டுக் கொண்டான்.

*“சரியாய் எங்கட வீட்டில சாப்பிட்ட மாதிரி இருக்கு“ சொல்லிக் கொண்டே இன்னும் கொஞ்சத்தை கொட்டிச் சாப்பிட்டான்.*

*அடி பாக்கிற்குள் கையைவிட்டு துழாவிய போது அங்கே அல்பம் ஒன்று கிடந்தது. ஆர்வத்துடன் அதை எடுத்துப்பிரித்தான். பிரித்துப்பார்த்தவனது கண்கள் அப்படியே நிலை குத்தி நின்றன.*

*அவனுக்கு மண்டைக்குள் எரிவது போன்ற உணர்வு தலையைச் சுற்றுமாப்போல் இருந்தது. தேகமெங்கும் வியர்வையால் நனைந்தது. அவனது உதடுகள் மெல்லத்திறந்தன.*

*“ஐயோ கலா உன்ர வாழ்க்கையை நாசமாக்கிப் போட்டேனே. உன்ரை அண்ணன் நான் உன்னைப்பழி வாங்கிப் போட்டேனே! ஐயோ! எனக்கு இனி எங்கு மன ஆறுதல் கிடைக்கப் போகுது”*

- களத்தில் - 1995

## நூலாசிரியரின் ஏனைய நூல்கள்

1. வேர் பதிக்கும் விழுதுகள் - சிறுகதைகள் (2015)
2.மறையாத சூரியன் - நாவல்  (2016)
3.கீறல் - சிறுகதைகள் (2016)
4.மௌனத்தின் சிறகுகள் - நாவல் (2017)
5.அனலிடைப்புழு - சிறுகதைகள் (2017)
6.மலைச்சாரலின் தூவல் - நாவல் (2018)
7. காகிதப்படகு - 3 குறுநாவல்கள்(2018)
8.அப்பாவின் தேட்டம் - சிறுகதைகள்(2019)
9. பாலைவனத்து புஷ்பங்கள் - நாவல் (2019)
10 உயிர் சுமந்த கூடு - சிறுகதைகள் (2020)
11. அசை - சிறகதைகள் ( 2021)
12.ஒரு பிடி சாம்பல் - சிறுகதைகள் - (2021)
13. மன ஊஞ்சல் – நாவல் (2022)
14. மீளும் இராகங்கள் – நாவல் (2023)



மலரன்னையவர்கள் தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருக்கும் படைப்பாளி. சீரழிந்து வருகின்ற சமூகத்துக்கு தன் எழுத்துக்கள் வாயிலாக நற் கருத்துக்களையும் வழிகாட்டலையும் மேற்கொண்டு வருபவர். மலரன்னையின் கதைகள் அனைத்தும் நல்லதொரு சமுதாயத்தை காண விளையும் கதைகளாக சமுதாய விழிப்புணர்வு கதைகளாக இருப்பது சிறப்பு. முதுமை, இடர்களை கொடுத்துக் கொண்டிருக்கின்ற போதிலும் தன்னாலான எழுத்துச் செயற்பாட்டை தொடர்ச்சியாக மேற்கொண்டு சமூகத்திற்கு வேண்டிய நற்கருத்துக்களை வழங்கி வருகின்றார். மலரன்னையின் கதைகள் இலகுவில் வாசகர்கள் மனங்களில் பதிந்து விடும் தன்மை வாய்ந்தவை. மாற்றங்களை ஏற்படுத்தும் சிந்தனை களை மனித மனங்களில் தோற்றுவிக்கக் கூடிய இவரது எழுத்துகள் காலத்தின் நிஜதரிசனமாக அமைபவை.

- பரணீ

ISBN 955524963-6
9789555249638